மகாராஷ்டிர ஜீவன் உதயம்

ஆசிரியர் :
ரமேச சந்திர தத்தர், ஐ. ஸி. எஸ்.

தமிழாக்கம் :
அ. கி. ஜயராமன்

நவயுகப் பிரசுராலயம்
காரைக்குடி :: சென்னை

முதற் பதிப்பு 1941
இரண்டாம் பதிப்பு 1947

விலை ரூ 4-0-0

Printed at KABEER PRINTING WORKS, Madras. Ms. 524
Published by Navayuga Prachuralayam, Karaikudi R.68-A

‘தினமணி’யின் மதிப்புரை

‘மகாராஷ்டிர ஜீவன் உதயம்’ என்ற இந்த நவீனத்தை எழுதிய ஸ்ரீ. ரமேச சந்திர தத்தர் சிறந்த சரித்திராசிரியர் என்பது எல்லோரும் அறிந்த விஷயம்.

நமது நாட்டின் சரித்திரத்தில் நெருக்கடியான ஒரு சமயத்தில், ஹிந்து சமூகமே ஒடுங்கிப்போயிருக்குமோ என்று எண்ணக்கூடிய நிலைமையில், அவதார புருஷன் போலத் தோன்றி, நமது நாகரிகம் தலை தூக்கி நிற்கும்படி செய்த மகா வீரர் சிவாஜியின் சரித்திரத்தைச் சரிவரக் கையாள, வெறும் சரித்திர ஞானம் மட்டும் போதவே போதாது. ஆழ்ந்த தேசபக்தி, நமது கலைஞானத்திலும், நமது நாகரிகத்தின் விசேஷ அம்சங்களிலும் நுட்பமான தேர்ச்சி - இவை உள்ளவர்தான் அதைச் செவ்வனே செய்ய முடியும். ரமேச சந்திரர் எப்பேர்ப்பட்ட தேச பக்தர் என்பது நமக்குத் தெரியும். ஹிந்து தர்மத்தின் கொள்கைகளையும், பழக்க வழக்கங்களையும் எவ்வளவு அனுதாபத்துடனும் அறிவுடனும் கதைக்கு ஆதாரமாகத் தம்மால் அமைக்க முடியும் என்பதையும் ஆசிரியர் இந்த நவீனத்தில் ஆச்சரியகரமான முறையில் காட்டிவிட்டார்.

சரித்திர ஞானம், தேச பக்தி, நமது கலைப் பண்பில் தேர்ச்சி ஆகிய மூன்று இன்றியமையாத குணங்களும் அவரிடத்தில் ஒன்று சேர்ந்ததின் பலனாகத் தோன்றிய இந்த நவீனம் இந்திய இலக்கியத்திலேயே நிகரற்றதாக ஆகிவிட்டது. இதைப் போன்ற உருக்கமான சரித்திர நவீனத்தை இதுவரையில் யாருமே எழுதவில்லை என்று சொல்லும்படியாக இருக்கிறது.

யது நாத ஸர்க்கார் என்ற வங்காளி சரித்திராசிரியர் சிவாஜியின் ஜீவிய சரித்திரத்தை எழுதியிருக்கிறார்.

'சரித்திர நோக்கு' என்ற சாக்குடன், சிவாஜியின் உன்னத விக்கிரகத்தை அதன் ஸ்தானத்திலிருந்து அவர் கீழே இறக்கிவிட்டார். சிவாஜி லட்சிய புருஷர் அல்லர் என்றும், வெறும் கீர்த்தி வேட்டை ஆடின சூழ்ச்சிக்காரர் என்றும் எழுதிவிட்டார். அதற்காக ஏதேதோ ஆதாரங்கள் கூடக் கூறுகிறுர். அவை திருப்திகரமாகவே இல்லை. அவருடைய புஸ்தகத்தைப் படித்து முடித்தவுடன், அவர் நமது சரித்திரத்தின் சிறப்பைக் குலைத்துவிட்டார் என்ற எண்ணம்தான் ஏற்படுகிறது. அவருடைய 'நோக்கு' உண்மையான சரித்திர நோக்கே அல்ல என்பது அவர் எழுத்திலிருந்தே தெளிவாகிறது.

ரமேச சந்திர தத்தருடைய இந்த நவீனத்தைப் படிக்கும் பொழுது, நம்முடைய ராஷ்டிர ஜீவனத்தின் இடைக் காலத்தை நாம் கண் முன்பு காண்கிருேம்; சிவாஜியின் ஆசைகளிலும் லட்சியங்களிலும் நாமும் பங்கெடுத்துக்கொண்டு உணர்ச்சிப் போரில் ஈடுபடுகிருேம்; டில்லி பாதுஷா ஔரங்கஸீபை எதிர்த்து மொகலாய ஆதிக்கத்தைத் தகர்க்க சிவாஜி செய்த எல்லாப் பிரயத்தனங்களையும் நாம் மனமார ஆதரிக்கிருேம். அந்த லயிப்பில், மொகலாய சக்கரவர்த்தியின் ராஜதந்திரத்திற்கும் சூழ்ச்சிகளுக்கும் எதிரிடையாக சிவாஜி செய்யும் சூழ்ச்சிகளையும்கூட நாம் அர்த்தம் செய்துகொள்ளுகிருேம். அந்த நிலைமையில் அவர் செய்தவை எல்லாம் சரி, சமயோசிதமானவை என்றே தோன்றுகின்றன.

ஆனுல், சிவாஜிக்குக் குரு போல விளங்கி, அவர் உள்ளத்தை உருக்கிய மற்றெரு லட்சிய புருஷரையும் ரமேசர் உணர்ச்சியுடன் சித்திரிக்கிருர். அந்த வீரர்தான் சிவாஜியின் விரோதி ஔரங்கஸீபின் சேனுதிபதி ராஜா ஜயஸிம்ஹர் என்ற ரஜபுத்திர வீரர். ஜயஸிம்ஹர் சத்தியவாதி, தீர்க்கதரிசி - சமயோசிதவாதி யல்லர். எப்பேர்ப்

பட்ட ஆபத்து வந்தாலும், நாகரிகமே நசித்துப் போவ தானுலும், ஒரு சமூகத்திற்குத் தலைவனுய் இருப்பவன் கடைப்பிடிக்க வேண்டிய வழி சத்தியம் ஒன்றுதான் - அதுதான் ஹிந்து தர்மம் - என்று ஜயஸிம்ஹர் போராடு கிறுர். யஜமானனே தம்மை ஏமாற்றி, அவமதித்து, மனது உடைந்து சாகச் செய்த தருணத்திலும், ஜயஸிம்ஹர், 'ஸத்யமேவஜயதி' - 'நிச்சயம் என்றைக்கும் சத்தியத்திற்குத்தான் வெற்றி' - என்று திடமாகச் சொல்லுகிறுர். பதிலுக்குப் பதிலாகக்கூட, சமயோசிதம் என்றும் உதவாது என்று அவர் சிவாஜிக்கு உபதேசம் செய்கிறுர். தீமைக்குப் பதிலாகத் தீமை செய்வது உண்மைக்கு விரோதம் என்று நம் காலத்தில் காந்திஜி சொல்லுவதை அன்றே ஜயஸிம்ஹர் சொன்னுர்.

பவானியின் ஆணைக்கு உட்பட்டுச் செயல் புரிந்த சிவாஜியின் உள்ளத்தில் அவர் ஆயுள் பூராவும் ஒரே போர்தான். பழைய ஹிந்து சக்தியின் வாக்கு, அவர் உள்ளக் கிளர்ச்சியான பவானியின் வாக்கு ஆகிய இரண் டுக்கும் நிகழ்ந்த அந்தரங்கப் போர் அதுதான். அவருடைய யுக்தி வாதம் ஒரு புறமும், உணர்ச்சி வாதம் ஒரு புறமுமாக அவரை ஆட்கொண்டு வாட்டின. அந்தப் போரின் இறுதியில் அவர் எப்படி வெளி வந்திருப்பாரோ?— அதற்குள் அவர் அகால மரணமடைந்தார். இல்லா விட்டால், நமது சரித்திரமே எப்படி மாறியிருக்குமோ, யார் கண்டார்கள் ?

அவர் தலை மறைந்ததும் சமயோசித வாதம்தான் வெற்றி பெற்றது. மகாராஷ்டிரர்கள் சிவாஜி சிருஷ்டித்த பலத்தின் வேகத்தைக் கொண்டு, ஹிந்துஸ்தானம் பூராவும் புல்லரிக்கும்படியான அசுர காரியங்களைச் சாதித்தார்கள் என்பது பின் சரித்திரம்.

காதலர்கள் ரகுநாதனும் ஸரயூபாலாவும், இந்த வீர நாடகத்தில் இடையிடையே தோன்றி, நமது ஆவேசத்தை மேன்மைப் படுத்துகிறார்கள். ரகுநாதன் கதைக் கோவைக்கு ஒரு பொன் சரடு போல நின்று, சிவாஜிக்குப் பல சந்தர்ப்பங்களில் முக்கியமான உதவி செய்கிறான்.

ரகுநாதனுடைய சகோதரி லக்ஷ்மி பதிவிரதை. உடன் பிறந்த வாஞ்சையின் வெள்ளப் பெருக்கையும் உறுதி யுடன் ஒதுக்கிவிட்டு, புருஷன் இறந்ததும், அவள் உடன் கட்டை ஏறுகிறாள்.

இந்த நவீனத்தில் வர்ணிக்கப்படும் பாத்திரங்களில், சந்திரராவ் ஒருவர்தான் துரோகி - பசுமரத்தில் பாய்ந்த புல்லுருவி.

துரோகிகளின் சிறுமையை யெல்லாம் மகாராஷ்டிர ஜீவனம் உதயம் ஆகும் அமர்க்களத்தில் நாம் மறந்துவிடு கிறோம். அது பாரத வர்ஷமே புத்துயிர் பெற்றுத் துள்ளி யெழுந்த புனித வேளை. அந்நிய ஆதிக்கியத்தின் அடக்கு முறையில் பெட்டிப் பாம்பாக அடங்கிக் கிடந்த ஹிந்து நாகரிகம், சிவாஜி முழக்கிய மகிடியைக் கேட்டுச் சீறிப் படம் விரித்து ஆட ஆரம்பித்தது.

அந்த உயர் நாதத்தை எழுப்பிய சிவாஜி எழுத்தறி வில்லாதவர் என்ற கதை வெகு நாளாகச் சரித்திரத்தில் வழங்கி வருகிறது. ரமேசர்கூட அதை நம்பிவிட்டார். ஆனால், பின்னால் வந்த ஆராய்ச்சியாளர் அது சுத்த அபத்தம் என்று நிரூபித்துவிட்டார்கள்.

மொழிபெயர்ப்பைப் பற்றி ஒரு வார்த்தை. ஸ்ரீ. ஜய ராமன் மூலத்தின் சொல் வேகமும் பொருட் பொலிவும் கொஞ்சங்கூடக் குன்றாமல், தம் வேலையைத் திறமை யுடன் செய்து முடித்திருக்கிறார்.

கு. ப. ராஜகோபாலன்.

ஸ்ரீ. ரமேச சந்திர தத்தர், ஐ. ஸி. எஸ்.

ஸ்ரீ. ரமேச சந்திர தத்தர் கல்கத்தாவில், சிறந்த குலீன குடும்பத்தில், 1848-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 13-ம் தேதி பிறந்தார். அவருடைய தந்தையின் பெயர் ஈசான சந்திர தத்தர். அவர் ஒரு டிப்டி கலெக்டராக இருந்தார்.

சிறு வயதில் தம் தாய் தந்தையரை இழந்ததால், ரமேசர் தமது சிறிய தகப்பனார் சசீ சந்திர தத்தரின் சம்ரக்ஷணையில் இருந்தார்.

பிரவேசப் பரீட்சை தேறு முன்பே அவருக்கு விவாக மாகிவிட்டது. ஏம். ஏ. தேறியதும் ஸிவில் ஸர்விஸ் (ஐ. ஸி. எஸ்.) பரீட்சை கொடுக்கவேண்டு மென்று அவருக்கு அவா உண்டாயிற்று. ஆனால் சீமை செல்ல அவருடைய சிறிய தந்தை உடன்படவில்லை. ஆகையால் அவருக்குத் தெரியாமல் பம்பாய் வந்து கப்பலேறி விட்டார். அதே கப்பலில்தான் சுரேந்திரநாத் பானர்ஜி யும் ஐ. ஸி எஸ். பரீட்சைக்காக இங்கிலாந்துக்குச் சென்றுகொண்டிருந்தார். ஐ. ஸி. எஸ். பாஸ் செய்து விட்டு, 1871-ம் வருஷம் ரமேசர் இந்தியா திரும்பி வந்தார்.

1871 லிருந்து 1892 வரை வங்காளத்தில் பற்பல ஜில்லாக்களில் பற்பல உத்தியோகங்களை அவர் வகித்து வந்தார். பதவியிலிருந்துகொண்டே ஜனங்களுக்குத் தம்மாலான சேவை செய்ய முயற்சித்தார். பிறகு, சிறிது காலம் பொறுத்து, ஓய்வெடுத்துக் கொண்டு சீமை சென்று, 1894-ம் ஆண்டு இந்தியா திரும்பி வந்ததும், அவர் பரத்வான் டிவிஷன் கமிஷனராக நியமிக்கப் பட்டார். அந்தச் சமயம் அந்த வேலையில் முதல் முதல்

நியமிக்கப்பட்ட இந்தியர் அவர்தான். பிறகு, அவர் ஒரிஸ்ஸா கமிஷனராக நியமிக்கப்பட்டார்.

அதன் பின் அவர் மனம் ஏகாதிபத்தியத் தூணுக இருக்க விரும்பவில்லே. தேசத்தில் அந்தச் சமயம் எழுந் திருந்த சுதந்திர தாகம் அவரையும் பற்றியது. சுரேந்திர நாத் பனர்ஜியும், திலகரும், தேசம் முழுதும் பிரசங்கமாரி பொழிந்து, மக்களிடையே சுதந்திர உணர்ச்சியை ஊட்டிக்கொண்டிருந்தனர். ரமேச சந்திர தத்தரும் சுதந்திரப் பித்துக்கொண்டார். 1897-ம் ஆண்டு தாம் ஏகாதுபத்தியத் தூண் அல்லர் என்பதைக் காட்டித் தமது பதவியை உதறித் தள்ளி, தம்மைத் தேசத்திற்கு அர்ப் பணம் செய்துகொண்டார். அவருக்கு இரண்டே லக்ஷி யங்கள்தான். ஒன்று தேச சேவை; மற்ருென்று இலக்கிய சேவை. மீண்டும் அவர் லண்டன் செல்ல நேர்ந்தது. லண்டன் சர்வகலாசாலேயில் சிறிது காலம் இந்திய சரித் திர ஆசிரியராக இருந்துவிட்டு இந்தியா திரும்பினர்.

மீண்டும் தேச சேவையை மேற்கொண்டார். பொரு ளாதாரத் துறையில் நமது நாடு ரொம்ப க்ஷீணித்திருக் கிறது, அதைச் சீர்திருத்தவேண்டும் என்று பிரசாரம் செய்தார். அவருடைய தேச சேவையைப் பாராட்டிப் பாரத மக்கள் அவரைக் காங்கிரஸின் ராஷ்டிரபதியாக 1899-ம் வருஷம் தேர்ந்தெடுத்தனர்.

அந்த வருஷம் காங்கிரஸ் லக்நௌவில் கூடிற்று. அப்பொழுது அவர் தமது தலைமைப் பிரசங்கத்தில், 'குடி யானவர்களிடம் வரி அதிகம் வசூலிக்கப்படுகிறது. ஆனுல் அவர்களுக்குப் போதுமான வசதி யளிக்கப்படவில்லே. இந்தியக் கிராமங்கள் 3000 வருஷங்களுக்கு முன்பே பஞ் சாயத்துக்கள் மூலம் நிர்வகிக்கப்பட்டு அமைதியுற் றிருந்தன. இன்று ஜில்லா உத்யோகஸ்தர்களாலும் போலீஸாராலும் பிணிக்கப்பட்டு ஆளப்படுகின்றன.

ஆங்கிலக் கைத்தொழில்தான் இந்தியக் கிராமங்களை நாசம் செய்துவிட்டது. இந்த நிலைமை மாறவேண்டும். கிராமங்கள் சுபிக்ஷமடைந்தால்தான் தேசம் பொருளாதாரத் துறையில் தலை நிமிர்ந்து நிற்க முடியும்' என்று கூறினர்.

இந்த விஷயமாக அவர் லார்ட் கர்ஸானுடன் விவாதித்தார். இவருடைய ஆலோசனையின்மேல் குடியானவர்கள் விஷயங்கள் சில கவர்ண்மெண்டாரால் கவனிக்கப்பட்டன. இங்கிலாந்திலிருக்கும் போதே தாதாபாய் நௌரோஜியுடனும், சுரேந்திரநாத் பானர்ஜியுடனும் தேச முன்னேற்றத்திற்கு வேண்டிய பல காரியங்களை அவர் செய்து வந்தார்.

இளவயதிலிருந்தே அவருக்கு இலக்கியத்தில் அளவற்ற ஆசை. அவருக்கு ஆங்கிலம், சமஸ்கிருதம், வங்காளி மூன்று பாஷைகளில் நல்ல பாண்டித்தியம் உண்டு. அவர் பொருளாதார விஷயத்தை நன்றாக ஆராய்ச்சி செய்தவர். 'இந்தியப் பொருளாதாரம்' என்று ஒரு நூல்கூட எழுதியிருக்கிறார். இதைத் தவிர நமது பாரத தேசத்தின் மாபெரும் இதிஹாஸங்களான ராமாயணம், மஹா பாரதம் இரண்டையும் ஆங்கிலத்தில் கவிதையாக மொழி பெயர்த்து உலகிற் களித்திருக்கிறார். ருக் வேதத்தை வங்காளியில் எழுதியிருக்கிறார். புராதன இந்தியா என்று ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறார். இதைத் தவிர பல நாவல்களும் எழுதியிருக்கிறார்.

இம்மாதிரி, இலக்கிய சேவையிலும், தேச சேவையிலும் ஈடுபட்டு மனங் குன்றாது உழைத்து வந்து, 1904-லிருந்து 1907 வரை பரோடா சமஸ்தானத்து ரெவினியூ மந்திரியாக இருந்தார். அப்பொழுது ஏழைகளுக்குப் பல செயற்கரிய நிரந்தரமான நன்மைகளைப் புரிந்தார். 1908ம் வருஷம் ராயல் கமிஷனில் அவர் அங்கத்தினராக இருந்-

தார். 1909-ம் வருஷம் அவர் பரோடாவின் பிரதம மந்திரி யானுர். ஆனுல் இந்தப் பதவியை அதிகக் காலம் அவர் வகிக்கவில்லை. ஹிருதய நோயால் பீடிக்கப்பட்டு, 1909-ம் வருஷம் நவம்பர் மாதம் 20-ம் தேதி, அவர் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

அந்த வருஷம் தேசம் ஓர் உத்தம தேசபக்தரை இழந்தது. அவருடைய உடல் மறைந்தது. ஆனுல் அவருடைய சேவை பாரத மக்களின் மனத்தினின்றும் அகலவே முடியாது.

வந்தே மாதரம்!

பொருளடக்கம்

மகாராஷ்டிர ஜீவன் உதயம்

அத்தியாயம் 1

ஜீவன் உதயம்

கிறிஸ்து சகாப்தம் பன்னிரண்டாம் நூற்றுண்டின் இறுதியிலேயே மகமது கோரி ஆரியாவர்த்தத்தை ஜயித்து விட்டான். அகண்டதும், செல்வம் கொழித்தது மான இம்மாதிரியான ராஜ்யத்தை அடைந்த பின்னரும் கூட முஸ்லிம்கள் நூறு வருஷம் வரைதான் சாந்தமாக இருக்க முடிந்தது. அவர்கள், விந்திய மலை, நர்மதை நதி போன்ற விசாலமான மலை நதிகளைக் கடக்கச் சட்டென்று பிரயத்தனம் செய்யவில்லை. இதே காரணத்தால்தான் தென் இந்தியா அவர்கள் ஆதிக்கத்திற் குட்படாமல் தப்பியது. ஆனால், பன்னிரண்டாம் நூற்றுண்டின் இறுதியில் டில்லி யுவராஜன் அல்லாவுத்தீன் கில்ஜி எண்ணுயிரம் சேனைகளைக் கூட்டிக் கொண்டு, ஒரே தடவையாக ஹிந்து ராஜதானியான தேவகிரியின் மேல் படையெடுத்தான். தேவகட்டின் ரஜபுத்திரர்கள் பெருஞ் சமர் செய்தனர். ஆயினும் தோல்வியடையும்படி ஏற்பட்டு விட்டதோடு நில்லாமல், எதிரிக்கு ஏராளமான பொருளை யும் இலிசபூரையும் கொடுத்து அவனுடன் சமாதானம் செய்து கொள்ளும்படி ஏற்பட்டது.

அல்லாவுத்தீன் டில்லிக்குப் பாதுஷா ஆன பிறகு, அவனுடைய பிரதம சேனாதிபதியான மலிக்கபூர், மூன்று முறை தென் பிரதேசங்களை ஆக்கிரமித்து, நர்மதை நதி தீரத்திலிருந்து குமரி முனைவரை, எல்லாத் தேசங்களையும் நாசம் செய்தான். தேவகிரி முதலிய தக்ஷிண ஹிந்து ராஜ்யங்கள் டில்லி பாதுஷாவின் ஆதீனத்தை ஒப்புக் கொண்டன.

பதினான்காம் நூற்றாண்டில் முகம்மத் துக்லக் டில்லி சிம்மாசனத்தில் பாதுஷாவாக அமர்ந்த போது, அவர் தேவகிரியின் பெயரை தௌலதாபாத் என்று மாற்றி, டில்லியிலுள்ளவர்களை தௌலதாபாத் சென்று வசிக்கும் படியும் கட்டளையிட்டார். ஆனால் இந்தக் கட்டாய உத்தரவை ஜனங்கள் ஒருமுகமாக எதிர்த்தனர். இந்த விதமாக தௌலதாபாத் ஜன சங்கியை அற்றது. ஆனால் டில்லியும் வீழ்ச்சியடைந்தது. ஹிந்துக்களுக்கும் முகம்மதியர்களுக்கும் விரோத பாவம் அதிகரித்துக்கொண்டே வந்தது. ஆகையால் ஹிந்துக்கள் விஜயநகரம் என்று ஒரு புதிய ராஜதானியை நிர்மாணம் செய்து, ஒரு பெரிய சாம்ராஜ்யத்திற்கு அடிகோலினார்கள். வடக்கே மொகலாயர்களும் தௌலதாபாத்தை டில்லியிலிருந்து பிரித்துச் சுதந்திரமாக்கினர். சமயம் வந்ததும், தக்ஷிணத்தில் விஜயநகரமும் தௌலதாபாத்தும் முக்கிய ராஜ்யங்களாயின.

ஏறக்குறைய முந்நூறு வருஷங்கள் வரை டில்லியை ஆண்ட பாதுஷாக்கள் தக்ஷிணத்திலிருந்த தேசங்களைக் கைப்பற்ற எந்த விசேஷமான முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் இந்த ஆபத்திலிருந்து தப்பினாலும், தக்ஷிணத்து ஹிந்து ராஜ்யங்கள் விபத்தின்றி இருக்கவில்லை. ஏனென்றால், ஹிந்துக்கள் தங்கள் வீட்டுக்குள்ளேயே, 'தௌலதாபாத்' போன்ற முஸல்மான் ராஜ்யத்திற்கு இடமளித்திருந்தார்கள். அந்தச் சமயம் வெற்றி

கொண்ட முஸல்மான் ஜாதியாரின் முன்னிலையில் ஹிந்துக்களின் 'ஜாதிய ஜீவன்' வருந்தத்தக்க நிலையில் இருந்தது. இதே காரணத்தால்தான் ஒருவருக்கொருவர் மனக்கசப்புற்றனர்.

கால வேறுபாட்டினால் தெளலதாபாத்தின் விசால ராஜ்யம் பல பாகங்களாகப் பிரிந்தது. அதனுடைய இடத்தில் விஜயபூர், கோல்கொண்டா, அகமத்நகர் ஆகிய மூன்று மொகலாய ராஜ்யங்கள் ஸ்தாபிதமாயின. பிறகு மொகலாய ராஜ கணங்கள் ஒன்று சேர்ந்து, கி. பி. 1504-ம் ஆண்டில், தலைக்கோட்டை யுத்தத்தில் விஜயநகரத்தை யும் ஹிந்து சைனியங்களிடமிருந்து ஜயித்தார்கள். இந்த விதமாக விஜயநகரத்தின் ஹிந்து ராஜ்யமும், பாரத வர்ஷத்திலிருந்த ஹிந்துக்கள் சுதந்திரமும் மறைந் தொழிந்தன.

விஜயபூர், கோல்கொண்டா, அகமத்நகர் ஆகிய மூன்று ராஜ்யங்களும் பிரபலமடைந்து சக்தியையும் அடைந்தன. கி. பி. 1580-ம் வருஷம் அக்பர் பாதுஷா தக்ஷிண பாரதம் பூராவையும் டில்லி ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவர விரும்பினார். அதன் பலனாக அவருடைய காலத்திலேயே தேசம் முழுவதும், அகமத்நகரின் சில பாகமும் டில்லி சிம்மாசனத்தின் ஆதிக்கத்திற்கு உட் பட்டன. அக்பரின் பேரர் ஷாஜஹான், கி. பி. 1636-ம் வருஷத்தில், அகமத்நகரின் மீதமிருந்த பாகத்தையும் தம் அதிகாரத்திற்கு உட்படுத்திக்கொண்டார். அவ்வளவு தான்! எந்தக் காலத்தின் விருத்தாந்தத்தை நாம் எழுத ஆரம்பித்தோமோ, அந்தச் சமயம் தக்ஷிண தேசத்தில், விஜயபூரும்,கோல்கொண்டாவும் தான் சுதந்திரமும் பராக் கிரமும் பொருந்திய முஸல்மான் ராஜ்யங்கள்.

இந்த மாதிரி நாடுபிடிக்கும் சமயங்களிலெல்லாம், தேசியர்கள் அதாவது மஹாராஷ்டிரர்களின் நிலைமை

எப்படியிருந்தது? அதை நமது தேசத்தார் அறிய வேண்டியது அவசியமேயாகும். மொகலாய ஆதிக்கத்தின் கீழ் இருந்த போதிலும், ஹிந்துக்களின் நிலைமை மோசமாகவே இருந்து விடவில்லை. மொகலாயர்களின் ராஜரீகம், மற்றும் இதர காரியங்கள் யாவும், அநேகமாக மஹாராஷ்டிரர்களின் புத்தி, பலம் இவைகளைப் பொறுத்தே இருந்தன. ஒவ்வொரு சர்க்காரும் பல தாசில்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இந்தத் தாசில்களுக்கும் சர்க்கார்களுக்கும் முகம்மதிய அதிகாரி ஒருவர் இருப்பார். விசேஷமாக மஹாராஷ்டிர உத்தியோகஸ்தர்கள்தான் வரிவசூல் செய்து, சர்க்கார் கஜானுவுக்குக் கொண்டு போய்ச் சேர்த்துக்கொண்டிருந்தனர்.

மஹாராஷ்டிர தேசத்தில் மலைப் பிரதேசம் அதிகமாக இருந்ததன் காரணமாக, அவைகளில் கட்டியிருந்த கோட்டைகளின் எண்ணிக்கையும் அதிகமாக இருந்தது. அந்தக் கோட்டைகளுக்கு முகம்மதியர்கள் எஜமானர்களாக இருந்தபோதிலும், அந்தக் கோட்டைகளை மஹாராஷ்டிரர்களின் ஆதிக்கத்தில் விட்டு வைக்கச் சற்றும் பின்வாங்கவில்லை. இதே காரணத்தால் மஹாராஷ்டிரக் கோட்டைக்காரர்கள், அநேகமாக ஜாகீர்தார்களாக இருந்து வந்தார்கள். அந்தந்த ஜாகீரின் வருவாயிலிருந்துதான், அந்தந்தக் கோட்டைக்கும் சைனியங்களுக்கும் செலவு செய்தார்கள். இவர்கள் எல்லோரும், யுத்த காலத்தில், அவரவர்கள் சக்திக்குத் தக்கபடி நூறு, இருநூறு, ஆயிரம் என்று குதிரைப் படைகளை அனுப்ப வேண்டியவர்களாக இருந்தார்கள். இந்தச் செலவுக்காகவே இவர்கள் ஒவ்வொரு ஜாகீருக்கும் எஜமானர்களாக இருந்தனர். இந்தவிதமாக, ராஜ்யத்தில் பல ஹிந்துக்கள் அதிகாரிகளாகவும் இருந்து வந்தனர்.

விஜயபூர் சுல்தானின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த

சந்திரராவ் மோர் பன்னிரண்டாயிரம் வீரர்கள் கொண்ட ஒரு படைக்குத் தலைவராக இருந்தார். மொகலாயர்களின் கட்டளைப்படி சந்திரராவ் மோர் நீராவுக்கும், வர்ணு நதிக்கும் மத்தியிலுள்ள பிரதேசத்தை யெல்லாம் ஜயித்தார். அதனால் சுல்தான் சந்தோஷமடைந்து அந்தப் பிரதேசத்திற்கு அவரைப் பெயரளவில் மாத்திரம் சிறிது வரி கட்டி வரும் ஜாகீர்தாராக ஆக்கினான். அவருடைய மோரின் வம்சத்தார் அதை ஏழு தலைமுறை வரையில் பரிபாலித்து வந்தனர். ஜனங்கள் அவர்களை ராஜாவைப் போலவே எண்ணி வந்தார்கள். உண்மையில் அவர்கள் சுதந்திர அரசர்களும் கூட.

கொஞ்ச காலத்திற்குப் பிறகு இந்தப் பிரதேசங்கள் நிபால்கர் வம்சத்தில் உதித்த ராவ் நாயகர் என்பவர் ஆதீனத்திற்கு வந்தன. இந்த விதமாக மலபார் பிரதேசத்தில் காட்கி வம்சமும், முச்வர் பிரதேசத்தில் மனய வம்சமும், சஸி, முதோல தேசம் ஆகிய பிரதேசங்களில் கரபுரி வம்சமும் ஆட்சி புரிந்துவந்தன. இவைகளெல்லாம், படிப்படியாக விஜயபூர் சுல்தான் கீழ் அடங்கியிருந்தன. சிற்சில சமயம் தங்களுக்குள்ளேயே பயங்கரமாகச் சண்டையிட்டும் வந்தன. இவைகளுக்குள் ஜாதீயச் சண்டையைவிடப் பெரிய விரோதம் ஒன்றும் கிடையாது. இதன் காரணமாக, மலைப் பிரதேசங்கள் நிறைந்த, கொங்கண, மஹாராஷ்டிரப் பிரதேசங்களில் வகுப்புச் சண்டையின் அனல் கொழுந்துவிட் டெரிந்துகொண்டிருந்தது. ரத்த வெள்ளம் பெருகினாலும், அதை அப் பிரதேசத்தார்கள் வெறுக்காமல் வரவேற்றார்கள். ஏனென்றால், எப்படி ஓடியாடி வேலைசெய்வதால் உடல் உறுதி கொள்ளுகிறதோ, அம்மாதிரியே, செய்கைகளாலும் உபத்திரவங்களாலும், ஜாதீய பலம் - ‘ ஜாதீய

ஜீவன்'—எப்பொழுதும் ரக்ஷிக்கப்பட்டு பலம் கொள்கிறது என்பதே அவர்களுடைய சித்தாந்தம்.

பாரத நாட்டின் ஆகாயத்தில், மஹாராஷ்டிரர்களுடைய வாழ்க்கையில் உஷா காலம், சிவாஜி வருவதற்கு முன்பே தோன்றி மின்னியது. இது நமது விருத்தாந்தத்திற்கு ஒரு சிறந்த உதாரணத்தின் ஒளியாகும்.

அகமத்நகரத்து சுல்தானின் ஆதீனத்தின் கீழிருந்த யாதவராவ், போன்ஸ்லே, என்ற பெயருள்ள இருவரும் மஹாராஷ்டிர வம்சத்தில் முக்கியமானவர்கள். மஹாராஷ்டிர தேசத்தில் ஸிந்துக்ஷீர யாதவராவுக்குச் சமமான பராக்கிரமமுள்ளவர்கள் யாருமில்லை. உட்புகுந்து ஆராய்ந்தால், யாதவராவ் தேவகிரியைச் சேர்ந்த அரச பரம்பரையில் உதித்தவர் என்பதும் புலனாகும். போன்ஸ்லே வம்சம் யாதவராவின் வம்சத்தைப் போல் அவ்வளவு பிரசித்தமானதாக இல்லாவிட்டாலும், அதனுடைய உற்பத்தியும் ஒரு பெருமையான வம்சத்திலிருந்துதான் என்று கூறலாம். இந்த இடத்தில், யாதவராவ் வம்சத்தில்தான் சிவாஜியின் தாய் உதித்தாள் என்பதையும், போன்ஸ்லே வம்சத்தில்தான் சிவாஜியின் தந்தை உதித்தார் என்பதையும் சொல்ல வேண்டியது அவசியம்.



அத்தியாயம் 2

ரகுநாதஜீ ஹவல்தார்

கொங்கண தேசத்தில் மழை காலங்களில் இயற்கையின் தோற்றம் அதிபயங்கரமாகிறது. கி. பி. 1663-ம் ஆண்டில், ஒரு நாள் சாயங்காலம், மேகம் வானத்தில் கோரமாகப் பரவியிருந்தது. சூரியதேவன், சரியாக மேல் திசைக்குக் கூடப் போய்ச் சேரவில்லை. ஆயினும், அந்தச் சமயம் வானத்தில் திரண்டிருந்த கரு மேகத்தின் இருளினால் கைக்குக் கை கூடக் காணமுடியாதபடி இருந்தது. அக்கம் பக்கங்களிலிருந்த காட்டிலும் மலைகளிலும் மழையின் சாரல்கள் காணப்பட்டன. பூமி, நதி, வனம், பர்வதம், குகைகள் எங்கும் ஒரே காரிருள் மூடியிருந்தது. வானமும் பூமியும் சலனமின்றி, சப்த சூனியமாய் இருந்தன. ஆயினும், மலையிலிருந்து பெருகும் அருவிகள் அங்கங்கு வெள்ளித் தகட்டைப் போல் தென்பட்டுக் கொண்டிருந்தன. சிற்சில இடங்களில் அந்தகாரத்தில் மறைந்து வெறும் சப்தம் மாத்திரம் செய்து தம்மை அறிமுகப்படுத்திக்கொண் டிருந்தன.

அந்த மலையின் மேல் உள்ள ஒரு பாதையில் ஒருவன் தன் குதிரையை வேகமாக நடத்திச் சென்றுகொண்டிருந்தான். குதிரையின் உடல் முழுதும் வேர்வை தோன்றி ஒழுகிக்கொண்டிருந்தது. அதன் மேலிருந்தவனும் புழுதி

யுடனும், சேற்றுடனும் காணப்பட்டதிலிருந்து அவன் வெகு தூரத்திலிருந்து வந்துகொண்டிருந்தான் என்பது தெரிந்தது. அவன் இடையில் வாளும், வலது கையில் ஈட்டியும், இடது கையில் கட்டாரியும் குதிரையின் லகானும் இருந்தன. முதுகில் கேடயமும் இருந்தது. தலையிலிருந்து கால்வரை இரும்புக் கவசம் அணிந்திருந்தான். தலையில் சிவப்பு வர்ணத் தலைப்பாகை. இதிலிருந்தே அவன் ஒரு மஹாராஷ்டிர வீரன் என்று தெரியவந்தது. அவனுடைய வயதெல்லாம் இருபத்தெட்டுக்கு மேல் இரா . நல்ல திடமான சரீரம், அகன்ற நெற்றி, ஒளி மிகுந்த கண்கள், கம்பீரமும் பாவமும் பொருந்திய முக மண்டலம்.

சிரமத்தினால் களைப்படைந்த அவன், குதிரையிலிருந்து கீழே இறங்கி, குதிரையின் லகானை மரத்தில் மாட்டி, ஈட்டியை மரக் கிளையில் சாத்திவிட்டு, கையினால் நெற்றியிலிருந்த வேர்வையைத் துடைத்து, முன்னுக்கு வந்திருந்த தன் கறுத்த சிகையைப் பின்னுக்குத் தள்ளி விட்டுக் கொண்டு, சிறிது நேரம் ஆகாயத்தை நோக்கினான். வானத்தின் தோற்றம் அதிபயங்கரமாக இருந்தது. இன்னும் சற்று நேரத்திற்கெல்லாம் ஒரு பெரும் புயல் வரும் என்பதைத் தெளிவாக அறிவுறுத்தியது. காற்று மெள்ள மெள்ள வீச ஆரம்பித்ததால், பர்வதங்களிலும் மரங்களிலும் சப்தம் உண்டாகத் தொடங்கியது. கிடு கிடென்று மேகங்கள் கர்ஜிக்க ஆரம்பித்தன. அவனுடைய உலர்ந்த உதடுகளில் இரண்டொரு மழைத் துளியும் விழுந்தது. அப்பொழுது எங்கும் போகச் சமய மில்லை. வானம் நிர்மலமாகும் வரை எங்காவது தங்குவதே உசிதம். ஆனால் அந்த யுவனுக்கு இதை யோசிக்கச் சமய மில்லை. ஏனென்றால், அவன் வேலை பார்த்து வந்த எஜமானன், தாமதம் தடை என்ற சாக்குகளொன்றையும்

கேட்கமாட்டான், ஆகவே, இந்த யுவனுக்கு, தாமதம், தடை முதலியவைகளின் அப்பியாசமே கிடையாது.

அவன் சட்டென்று தன் குதிரை மீதேறி அமர்ந்தான். சிறிது நேரம் ஆகாயத்தைப் பார்த்துவிட்டு, குதிரையை அம்பு போல் செலுத்தலானுன். போகும் போது அவனுடைய ஆயுதங்களால் உண்டான சப்தம், தூங்கிக்கொண்டிருக்கும் அந்தப் பர்வதப் பிரதேசத்தைத் தன் எதிரொலியால் எழுப்புவதைப் போல் இருந்தது.

சிறிது நேரத்திற்கெல்லாம் காற்றின் வேகம் அதிகரித்தது. ஆகாயத்தின் ஒருகோடியிலிருந்து மறுகோடிவரை, மின்னற் கொடிகள் பாயலாயின. மேக கர்ஜனையால் மலைக்கூட்டங்கள் நடுங்கின. காற்றின் வேகம் பர்வதங்களைப் பிடுங்கி எறிந்துவிடும் போல் தோன்றியது. அதன் சப்தம் பயங்கரமாக இருந்தது. மழைத் துளிகள் கோர ரூபம் கொள்ளலாயின. நீர் வீழ்ச்சிகளின் பெருக்குகள் காதைப் பிளக்கும் சப்தத்துடன் பெருகி ஓடின. கணத்திற்குக் கணம் வீசும் மின்னெளி, வெகு தூரம் வரை கோரமான காட்சிகளைக் காட்டிற்று. நடுநடுவே மேக கர்ஜனைகள், புவியைக் கலக்கி நடுநடுங்கச் செய்தன. மழை உக்கிர உருவம் கொண்டதனுல், நதிகளிலும் நீர்வீழ்ச்சிகளிலும் தண்ணீர் அமோகமாகப் பெருகலாயிற்று.

குதிரை வீரன் அந்த ஆபத்துக்களை யெல்லாம் திரணமாக மதித்து முன்னேறிக் கொண்டிருந்தான். ஆனுல் சிற்சில சமயங்களில், காற்றின் வேகத்தால் கீழே விழுந்துவிடுவான் போல் தோன்றினுன். திடீரென்று காற்றினுல் முறிக்கப்பட்ட மரக்கிளை யொன்று அவன்மேல் சாய்ந்தது. அவன் தலைப்பாகை தெறித்து விழுந்தோடியது. அவன் தலையிலிருந்து இரண்டு துளி ரத்தமும் வெளிவந்தது. ஆயினும், அந்த வீரனின் காரிய விரதத்தை அது தடை

செய்ய முடியவில்லை. இதன் காரணமாக, அவனுக்குச் சிரம பரிகாரம் செய்துகொள்ளத் துளிகூட அவகாசம் கிடைக்கவில்லை. அவன் இதனுடனேயே முன்னேற லானுன். இரண்டொரு மணி நேரம் கோரமான மழைக் குப் பிறகு, மெள்ள மெள்ள வானம் மேகக் கூட்டத்தி னின்றும் விடுபட ஆரம்பித்தது. தாற்காலிகமாக மழையும் நின்றது.

அஸ்தமன கிரியின் சிகரத்திலிருந்த சூரியனின் பிரகாசம், அந்தப் பர்வதங்களையும், மரக்கூட்டங்களையும் ஒளி மயமாக்குவதைக் கண்டான் அந்த யுவன். அவன் குதிரையை நிறுத்தித் தன் முகத்தில் பறந்திருந்த தலை மயிரை ஒதுக்கிக் கீழே பார்க்கலானுன். கண்ணுக் கெட்டிய தூரம்வரை எண்ணிக்கையற்ற மலைத் தொடர்களே நிறைந்திருப்பது தென்பட்டது. அந்தப் பர்வத சிகரங்களில் உள்ள மரங்களின் அழகு பன் மடங்கு அதிகச் சோபையுடன் திகழ்ந்துகொண்டிருந்தது. நடுநடுவே நீர்வீழ்ச்சிகளின் பெருக்கு, சிகரங்களில் நடன மாடுவது போல் தோன்றியது. கதிரவன் ஒளியால் அதனுடைய வனப்பும் பன்மடங்கு அதிகரித்தது. மலைச் சிகரங்களில், சூரியனின் கிரணங்கள், பல வர்ணக் கோடுகளை வாரி வீசின. எங்கும் தோற்றம், வானவில்லைப் போல், பல வர்ணங்களாகத் திகழ்ந்தது. மேகங்களிடம் வேகமில்லை; வாயுதேவனின் விரட்டலால் களைப்படைந்து மெள்ளச் சென்றுகொண்டிருந்தன. ஆனுல் இயற்கையின் இந்த அழகு அந்த யுவனின் மனத்தை ஒரு கணம்தான் தன்னிடம் இழுக்க முடிந்தது. அவன் சூரியன் இருக்கும் திசையை நோக்கிவிட்டு, மலைப் பாதையிலேயே குதிரை யைச் செலுத்தலானுன். சிறிது நேரத்திற்கெல்லாம், கோட்டையை அடைந்து, தன்னை இன்னுனென்று அறிவித்து உள்ளே பிரவேசித்தான். சூரியன் முழுவதும்

அஸ்தமனமாகிவிட்டான். கணகண வென்ற சப்தத்துடன் கோட்டையின் கதவுகள் சாத்தப்பட்டன.

துவாரபாலகர்கள் கதவைச் சாத்திவிட்டு, யுவனை நோக்கி, 'தாங்கள் இன்னும் சிறிது தாமதம் செய்து வந்திருந்தால் இன்றிரவு பூராவும் கோட்டைக்கு வெளியிலேயே கழிக்கவேண்டி நேர்ந்திருக்கும்' என்றார்கள்.

'தாமதமாகாதது நல்லதாயிற்று. ஏனெனில், நான் புறப்படும்போது என் பிரபுவிடம் அப்படித்தான் சொல்லி விட்டு வந்தேன். பவானியின் கிருபை! நான் உள்ளே சென்று ஜாகீர்தாரிடம் என் பிரபுவின் விஷயத்தைச் சொல்லுகிறேன்!' என்றான் யுவன்.

'ஜாகீர்தாரும் தங்களைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்' என்றார்கள் காவலர்கள்.

வாலிபன் ஜாகீர்தாரின் இருப்பிடம் சென்று, அவரை வணங்கி, தன் கச்சையை அவிழ்த்து, அதிலிருந்து சில கடிதங்களை எடுத்து அவரிடம் கொடுத்தான்.

ஜாகீர்தார் சிவாஜியின் நம்பிக்கைக்குப் பாத்திரரான ஒரு வீரர். அவரும் செய்தி அறியவேண்டும் என்ற ஆவலில் தான் இருந்தார். அதனால்தான் அவர் தூதனைக் கவனிக்காமல், சட்டென்று கடிதங்களைப் பிரித்துப் படிப்பதில் ஆழ்ந்தார். கடிதத்தைப் படித்ததிலிருந்து, டில்லி பாதுஷாவுடன் யுத்தம் ஆரம்பமாவதைப் பற்றியும், அந்த வாலிபனின் தற்காலத்தைப் பற்றியும், எந்தெந்த விஷயங்களில் சிவாஜிக்கு ஜாகீர்தார் உபயோகமாவார் என்பது போன்ற இன்னும் இதர விஷயங்களில் அவருடைய ஆலோசனைகள் என்ன என்பதைப் பற்றியும் பல விஷயங்கள் வெளியாயின.

ஜாகீர்தார் கடிதம் கொண்டுவந்த பையன் பக்கம் பார்த்தார். எதிரே பதினெட்டு வயது என்று மதிக்கத் தகுந்த அந்த வாலிபன் நின்றிருந்தான். அவனுடைய கருங்

கூந்தல் அவனுடைய சிவந்த நெற்றியில் படிந்திருந்தது. நல்ல திடமான சரீரக்கட்டு; நெற்றியும், மார்பும் விரிந்து கிடந்தன. ஜாகீர்தார் ஆச்சரியமடைந்து, கடிதத்தை ஒரு முறை பார்த்து, யுவனை உள்ளத்தைத் துளைக்கும் தம் பார்வையினுல் ஒரு முறை நிதானித்து, 'ஹவல்தார்! உன் பெயர் ரகுநாத்ஜீயா? நீ ரஜபுத்திரஞ?' என்று கேட்டார்.

ரகுநாதன் அடக்கத்துடன் தலைவணங்கி, 'ஆமாம்!' என்ருன்.

'நீ தோற்றத்திலும் வயதிலும் சிறியவஞகக் காணப் பட்டபோதிலும் காரியத்தில் அதி சமர்த்தஞகக் காணப் படுகிருய்' என்ருர் ஜாகீர்தார்.

'முயற்சியும் செய்கையும் மனிதரின் ஆதீனத்தில் இருக்கின்றன. ஆஞல், அவற்றின் பலனும், வெற்றி தோல்வியும் துர்க்கையின் கையில் இருக்கின்றன' என்ருன் ரகுநாதன்.

'நீ சிம்ஹகட்டிலிருந்து, இந்தத் தோரண துர்க்கத் திற்கு இவ்வளவு சீக்கிரம் எப்படி வந்து சேர்ந்தாய்?'

'பிரபுவினிடம் நான் அம்மாதிரி பிரதிக்ஞை செய்தேன்.'

இந்தப் பதிலைக் கேட்டு ஜாகீர்தார் சந்தோஷ மடைந்தார். 'நீ சொல்வது உண்மை! உன் தோற்றத்தி லிருந்தே நீ உறுதியுள்ளவனென்று புலப்படுகிறது!' என்று சொல்லி, பிறகு, சிம்ஹகட் புஞ இவைகளின் நிலைமை, மஹாராஷ்டிரர்கள் மொகலாயர்கள் இருவ ருடைய சைனிய விபரம் ஆகியவைகளை ஒவ்வொன்ருகக் கேட்கலாஞர். ரகுநாதன், தனக்குத் தெரிந்தவரை பதிலளித்து வந்தான்.

ஜாகீர்தார் மீண்டும், 'நாளைக் காலையிலேயே நீ என் னிடம் வா! நான் கடிதங்கள் எழுதி வைக்கிறேன். சிவாஜி யிடம் நான் சொன்னதாகச் சொல், "தாங்கள் இந்தக்

கடினமான காரியத்தில் நியமித்த ஹவல்தார் சரியான சமர்த்தன் " என்று.

இந்தப் புகழ் வார்த்தைகளைக் கேட்டு ரகுநாதன் தலை குனிந்து நன்றியுடன் ஏற்றுக்கொண்டான்.

ரகுநாதன் விடைபெற்றுச் சென்றான். ஜாகீர்தாரின் இந்தப் பரீக்ஷையின் தாத்பரியம் இதுதான். அவர் சிவாஜி மகாராஜாவின் அந்தரங்க ராஜ காரியங்களைப் பற்றி ரகசியமாகவே செய்திகள் சொல்லி அனுப்புகிறவர், அவைகளைக் கடித மூலம் எழுதுவது நீதிக்கு விருத்த மானது. ஆகையால்தான் அவர், ரகுநாதனை, அவன் காசு பண ஆசையால் சத்துரு வசமாகாமல் இருக்கும்பொருட்டு, ஒரு வார்த்தை போட்டுப் புகழ்ந்து வைத்தார். ஆனால். சிவாஜியின் தூதன் சமர்த்தன் என்பது சந்தோஷப்படக் கூடிய விஷயம். ரகுநாதன் தலை மறைந்ததும், ஜாகீர்தார் தமக்குள், 'மஹாராஜா சிவாஜி இந்த விஷயங்களில் அதிசமர்த்தர். ஏனென்றால் அவர் எந்த மாதிரிக் காரியம் செய்கிறாரோ அந்த மாதிரி ஆளைப் பார்த்துப் பிடித்திருக் கிறார்!' என்று சொல்லிக் கொண்டார்.



அத்தியாயம் 3

ஸரயூபாலா

ஜாகிர்தாரிடமிருந்து விடை பெற்றுக்கொண்டு ரகுநாதன் பவானி தேவியின் கோயிலின் பக்கம் சென்றான். அந்தக் கோட்டையை ஜயித்த சில நாட்களுக்கெல்லாம் சிவாஜி அங்கே தேவியின் சிலை ஒன்றைப் பிரதிஷ்டை செய்தார். அம்பர தேசத்து குலீன பிராமணன் ஒருவனை, தேவிக்கு பூஜை செய்யும் பொருட்டு ஏற்பாடு செய்திருந்தார். யுத்த காலங்களில் தேவிக்குப் பூஜை செய்யாமல் சிவாஜி எந்தக் காரியத்தையும் ஆரம்பிப்பதில்லை.

இளமையில் பொங்கி எழும் ஆர்வத்தின் மிகுதியால் ரகுநாதன் ஆனந்தமடைந்து, தன் தலைமயிரைச் சரிப்படுத்திய வண்ணம், ஒரு போர்க் கீதத்தைப் பாடிக்கொண்டே சென்றான். தேவியின் கோயிலருகே சென்றதும் அவனுடைய பார்வை சட்டென்று பக்கத்திலிருந்த உப்பரிகையில் விழுந்தது. மேற்றிசையில் மறையும் சூரியன் வர்ண விசித்திரங்கள் செய்துகொண்டிருந்தான். பக்ஷிகள் தங்கள் கூடுகளைத் தேடிச் சென்றன. ரகுநாதன் ரொம்பவும் களைத்துப் போயிருந்தான். ஆகையால் அந்த உப்பரிகையின் பக்கம் பார்த்துக்கொண்டே அருகிலிருந்த ஒரு மேடையில் உட்கார்ந்தான்.

சற்று இருண்டதும் அதைச் சுற்றியிருந்த உத்தி

யானத்தில், புஷ்பங்களைக் கொய்துகொண்டே ஒரு பெண் வந்து நின்றாள். ரகுநாதன் அவளைக் கண்டு ஆச்சரியமடைந்தான். அங்கு யாரும் இருந்ததாகத் தெரியவில்லை. அந்தப் பெண் இந்திர லோகத்திலிருந்து வந்தவளா? அவளைப்பார்த்தால் ரஜபுத்ர நங்கையைப் போல் தோன்றிற்று. வெகுநாட்களுக்குப் பிறகு தன் நாட்டு மங்கை ஒருத்தியைப் பார்த்ததும் ரகுநாதனின் ஹிருதயம் மலரலாயிற்று. அருகே சென்று யார் என்றறிய ஆவல் எழுந்தது. ஆனால் அவன் தன் ஆவலை அடக்கிக்கொண்டு, பேசாமல் அங்கேயே உட்கார்ந்து பார்த்துக்கொண் டிருந்தான்.

அந்தப் பெண் பார்ப்பதற்குப் பதின்மூன்று வயது உடையவளாகக் காணப்பட்டாள். பட்டுப் போன்ற அவளுடைய மென்மையான கூந்தல் நீண்டு தொங்கி அவளுடைய முகமண்டலத்தையும் வண்டு விழிகளையும் சற்றே மறைத்துக்கொண்டிருந்தது. அவளுடைய புருவங்கள் நெற்றியின் அழகை அதிகரித்தன. அவள் மெல்லிய கரங்களில் அணிந்திருந்த வளையல்கள் அவள் கைகளால் அழகு செய்யப்பட்டன போல் தோன்றின. கழுத்தில் ஒரு ஸ்வர்ணமாலை அணிந்திருந்தாள். நெற்றியில் பளிச்சென்று மின்னும் திலகம்.

யௌவனத்தின் தடுக்க முடியாத காதல் வேகம் ரகுநாதனின் உடலை ஒரு குலுக்குக் குலுக்கியது. அவன் பார்த்த கண் கொட்டாமல் அப்படியே அந்தப் பிரதிமையைப் பார்த்துக்கொண்டிருந்தான். வானம் இன்னும் சற்று இருண்டது. ஆயினும் ரகுநாதன் தன் நினைவை அடையவில்லை. பிறகு தான் மெள்ளக் கோயிலுக்குச் சென்று அர்ச்சகரைப் பார்க்கலாம் என்ற எண்ணத்துடன் திரும்பினான்.

அர்ச்சகர் ஓர் அம்பர தேசத்துப் பிராமணர் என்று முன்பே கூறியிருக்கிறோம். அவர் ராஜவாடியைச் சேர்ந்த

உயர் குலத்துதித்தவர். அவருடைய பெயர் ஜனார்த்தன தேவர். அவர் அம்பர தேசத்தரசன் ஜயசிங் சபையில் இருந்தவர். சிவாஜியின் வற்புறுத்தலின் மேல் ஜயசிங் அவரைத் தோரண துர்க்கத்திற்கு அனுப்பிவைக்க இசைந்தான். ஆனால் அவர் அந்தத் தேசத்தை விட்டுப் புறப்படு முன்பே ஒரு க்ஷத்திரிய கன்னிகையை வளர்க்கும் பொறுப்பைத் தம் தலைமேல் சுமத்திக்கொண் டிருந்தார். பெண்ணின் தந்தை ஜனார்த்தன தேவரின் பாலிய நண்பர். அவளுடைய தாயும் ஜனார்த்தன தேவரின் மனைவிக்குப் பிரியமான தோழி. ஒருவருக்கொருவர் அக்கா தங்கை என்று தான் அழைத்துக் கொள்வது வழக்கம்.

வெகு நாட்களாகக் குழந்தை இல்லாததால் ஜனார்த் தனரின் மனைவி அந்தப் பெண்ணைத் தன் குழந்தையைப் போலவே வளர்த்துவந்தாள். அதனால் தான் அவர் அம்பர தேசத்தை விட்டு வரும்போதுகூட அந்தப் பெண் கூடவே இருந்தாள்.

சில நாட்களுக்குப் பிறகு ஜனார்த்தனரின் மனைவி இவ்வுலகத்தினிடம் விடைபெற்றாள். இப்பொழுது இவ் வுலகில் அவருக்கு இந்த ஸரயூபாலாவைத் தவிர வேறு யாரும் கிடையாது. ஸரயூபாலாவும், அவரைத் தன் தந்தையைப் போல் பாவித்து, அதிக அன்புடன் நடந்து வந்தாள். வயதாக ஆக, அவளுடைய அழகும் அதிகரித்து வந்தது. கோட்டையில் இருந்த இதர பிராமணர்கள், ஜனார்த்தனரைக் கண்வரிஷி என்றும், ஸரயூபாலாவை சகுந்தலை என்றும், விளையாட்டாகச் சொல்வது வழக்கம். ஜனார்த்தனரும் தம் மகளின் அழகையும், குணத்தையும் கண்டு, ஊரை விட்டு வந்த வருத்தத்தை மறந்திருந்தார்.

கோயிலுக்குச் சென்று ரகுநாதன் சிறிது தாமதிக்க வேண்டியிருந்தது. அதற்குள் ஜனார்த்தன தேவரும் வந்து சேர்ந்தார். அவருடைய வயது ஐம்பது இருக்கலாம். ஆயி

னும் நல்ல திடகாத்திரமும் பலமும் உள்ளவராகவே காணப்பட்டார். சிவந்த மேனி, அகன்ற மார்பு, அதில் பூணூல், நல்ல தேஜஸுள்ள முகமண்டலம், முகத்தைக் கண்டாலே மனத்திற்கு ஒரு சாந்தி உண்டாகும்.

ரகுநாதன் அவரைக் கண்டதும் எழுந்து நின்றான். பரஸ்பரம் வந்தனமும், ஆசீர்வாதமும் முடிந்த பிறகு, இருவரும் அமர்ந்தனர். ரகுநாதன் சிவாஜியின் சார்பாகவும் வந்தனமளித்து சில பொன் மோகராக்களை அவருக்குக் காணிக்கையாக அளித்தான்.

ஜனார்த்தனர் சிவாஜியின் க்ஷேம சமாசாரங்களை வினவினார். ரகுநாதன் யாவற்றையும் சொல்லிக் கடைசியில், 'ஸ்வாமி! இந்தச் சமயம் சிவாஜி மன்னர் மொகலாயர்களுடன் போர்புரிந்துகொண்டிருக்கிறார். அவர் வெற்றி பெறுமாறு தாங்கள் தேவியை ஸ்தோத்தரியுங்கள். தேவியின் அருளின்றி மனிதர் செய்யும் முயற்சி வீண்தான்!' என்றான்.

ஜனார்த்தன தேவர் கம்பீரமாக, 'ஸனாதன தர்மத்தை ரக்ஷிக்க மனிதர் இம்மாதிரியான முயற்சிகளைச் செய்வது உசிதம்தான். நான் சிவாஜி மகாராஜாவின் வெற்றிக்காகப் பூஜை செய்கிறேன். இந்த விஷயத்தில் யாதொரு தவறும் வராதென்று மகாராஜாவிடம் சொல்லிவிடுங்கள்' என்றார்.

'தேவியின் சரணங்களுக்கு மற்றொரு விக்ஞாபனத்தையும் அரசர் தந்திருக்கிறார். நாங்கள் யுத்தத்தில் கலந்து கொள்ள, பலாபலத்தை அறிந்துகொள்ள விரும்புகிறோம். தங்களைப் போன்ற பெரியோர்கள், இந்த விஷயங்களை எங்களுக்கு விளக்கவேண்டும்!' என்றான் ரகுநாதன்.

ஜனார்த்தனர் கண நேரம் தம் கண்களை மூடி, பிறகு கம்பீரமான குரலுடன், 'நீ இப்பொழுதுதான் முதன்

முதல் இந்தத் துர்க்கத்திற்கு வருகிறுயா? இதற்கு முன் வந்ததில்லையா ?' என்று கேட்டார்.

'ஆம், இன்றுதான் வந்தேன் !'

'துர்க்கத்தில் யாராவது அறிமுகமானவர்கள் இருக்கிருர்களா ? தங்குவதற்கு ஏற்பாடு செய்துவிட்டாயா ?'

'யாரையும் தெரியாது. ஆனல் எப்படியாவது இரவைக் கழித்தால், விடிந்ததும் செல்லவேண்டியதுதானே !'

'அதற்காக வீண் கஷ்டம் எடுத்துக் கொள்வதா, என்ன ?'

'மஹாராஜாவின் கிருபையால் யாதொரு கஷ்டமும் இல்லை. நாங்கள் எப்பொழுதுமே இரவை இம்மாதிரி தான் கழிக்கவேண்டி யிருக்கிறது.'

'வத்ஸா! யுத்த காலங்களில் கஷ்டப்பட வேண்டியது தவிர்க்க முடியாதது. ஆனல் இப்பொழுது கஷ்டத்தை ஏற்றுக்கொள்வது அனாவசியம். நீ இந்த ஆலயத்திலேயே தங்கலாம். என் மகள் உனக்கு வேண்டிய போஜன வகைகளை ஏற்பாடு செய்வாள். இரவு நீ சிரம பரிகாரம் செய்து கொண்டு, காலை, தேவியின் ஆக்ஞைப்படி சிவாஜியிடம் செல்லலாம்.'

ரகுநாதனின் உள்ளம் துடிக்கலாயிற்று. அவன் ஹிருதயத்தில் ஒரு புத்துணர்ச்சி! அது என்ன துன்பமா? இல்லை! ஆனந்தத்தின் பெருக்கு! அந்தக் கன்னிகை யார்? பூந்தோட்டத்தில் கண்ட பேரழகியான அந்த ரஜபுத்திரப் பெண்தாஞ? அந்த மோஹினி யார் ?

அத்தியாயம் 4

ரத்தின மாலை

தந்தையின் கட்டளைப்படி ஸரயூபாலா அதிதிக்கு வேண்டிய போஜனுதிகளைத் தயாரித்து வைத்தாள். ரகுநாதன் ஆசனத்தில் அமர்ந்தான். ஆனால் அவன் சித்தம் நிலையிலில்லை. அவன் கண்கள் சுழல ஆரம்பித்தன.

ஸரயூபாலா பரிமாறினாள். ஆனால் ரகுநாதனுக்குதான் எதைச் சாப்பிடுகிறான் என்பது புரியவில்லை. ஜனார்த்தன தேவர் அவனுக்கு ரஜபுத்திரக் கதைகளைச் சொல்லிக்கொண்டிருந்தார். ரகுநாதன் சில சமயம் 'உம்' கொட்டினான். சில சமயம் அதையும் மறந்துவிட்டான்.

ரகுநாதன் ஒருவிதமாகச் சாப்பாட்டை முடித்துக் கொண்டான். ஸரயூபாலா ஒரு லோட்டாவில் பழரஸத்தை எடுத்து வந்தாள். ரகுநாதன் கண் கொட்டாமல் அவளையே பார்க்கலானான். ஸரயூவின் பார்வையும் அவன் பக்கம் திரும்பியது. இருவர் கண்களும் சந்தித்தன. ஸரயூவின் முகம் வெட்கத்தால் சிவந்தது. அவள் தலையைக் குனிந்துகொண்டு மெள்ள மெள்ளச் செல்லலானாள். ரகுநாதனும் வெட்கத்தால் மௌனமானான்.

ரகுநாதனுக்காகப் படுக்கையொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவனுக்குத் தூக்கம் வரவில்லை. அவன் எழுந்து வெளியே வந்து, உலாவிக்கொண்டே வானத்திலுள்ள நக்ஷத்திரங்களை எண்ணலானான்.

அந்த அடர்ந்த இருளில் ஜ்வலிக்கும் தாரகைக் கணங்களைப் பார்த்து அந்த வாலிப வீரன் என்ன யோசித்தான்? இருள் இன்னும் குவிந்தது. எங்கும் மோனம் நிலவியது. கோட்டையிலும் நிசப்தம். நடுநடுவே பாராக்காரன் 'உஷார், உஷார்' என்று கூவிக்கொண்டிருந்தான். மணிக்கொரு தரம் அடிக்கும் மணிச் சப்தம் பர்வதங்களில் எதிரொலித்துக்கொண்டிருந்தது. அந்தக் குவிந்த இருளில் ரகுநாதன் என்ன யோசித்தான்? அந்தத் தோட்டத்தில், நடு நடுவே யாரோ நடமாடும் சப்தம் கேட்டது. ஆனால் அது யார்? ரகுநாதனுக்கு அது தெரியாது. அதுவரை அவன் சிறுவனாக இருந்தான். அவனுடைய சுத்தமான உள்ளத்தில் முதல் காதற் கிளர்ச்சி அதுதான்! அவனுடைய உள்ளத்தின் சுத்தமான வானில் ஒளி பொருந்திய தாரகை மின்னுகிறது! அந்த மோகன ரூபம் ஆயிரம் ஆயிரம் தடவை அவன் மனக் கோயிலில் வந்து உலவுகிறது. அந்த ஸௌந்தரிய சித்திரம், ஜ்வலிக்கும் கருவிழிகள், மலரிதழ் போன்ற உதடுகள், கருங் கூந்தல் கட்டு! வாஞ்சைப் பெருக்குற்ற பார்வை! லாவண்யத்தின் அந்தப் பிரதிமை! 'ரகுநாதா! அந்த அழகி உன்னுடையவள் ஆவாளா? நீ ஒரு சாதாரண ஹவல்தார்தானே! ஜனார்த்தன தேவர் குலீன பிராமணராயிற்றே! அவரால் வளர்க்கப் பெற்ற பெண்ணை அரசபுத்திரர் விரும்பலாமா? வீணான ஆசையால் உள்ளத்தைத் துடிக்க விடலாமா? நான் மீண்டும் சொல்லுகிறேன்! ரகுநாதா, வீணாக உள்ளத்தைச் சுட்டுக் கொள்ளுகிறாயா?' என்றது அவன் உள்ளம்.

ஆனால் வாலிபத்தில் ஆசைதான் பலம் பெற்று நிற்கிறது. நாம் சட்டென்று நிராசை அடையக் கூடாது. நாம் சாத்தியமற்றதை சாத்தியமென்றும், நடக்கக்கூடா

தை நடக்கக்கூடியதென்றும் எண்ணுகிறோம். ரகுநாதா! வானத்தைப் பார்த்துவிட்டு என்ன யோசனை செய்கிறாய்?

ரகுநாதன் எழுந்து நின்று, 'கடவுளே! தங்கள் கருணையால் நான் எடுத்த காரியத்தை முடிப்பேன்! கீர்த்தி, மரியாதை பொன், பெண் - யாவும் மனிதன் வசம்தான் இருக்கின்றன. பின் ஏன் எனக்கு இது கிட்டாது? நான் மற்றவர்களைவிடக் குறைந்தவனல்லவே! என் புஜங்களில் பலமில்லையா? தேவகணங்கள் எனக்கு உதவி புரியட்டும். நான் போர் முனையில் வீரம் விளை விக்கிறேன். என் தந்தையின் புகழை இன்னும் அதி கரிக்கச் செய்கிறேன். நான் அப்படிச்செய்யும் பக்ஷத்தில், ஸரயூ! நான் உனக்குத் தகுதி யற்றவனாகவா ஆகி விடுவேன்? இல்லை! ஒருபோதும் இல்லை. உன் மலர்க் கரங்கள், என் துடிக்கும் ஹிருதயத்தை ஸ்திரப்படுத் தட்டும்! சுந்தரி, உன்னை அடைந்து......உன் மலரிதழ்களை ....ரகுநாதா.........! ரகுநாதா! மயக்கமடையாதே! பைத்தியமாகாதே!'— இவ்விதம் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

அவன் சிறிது நேரத்திற்கெல்லாம் தன்னைச் சமாளித் துக்கொள்ளப் படுக்கைக்குச் சென்றான். சட்டென்று அவன் கண்களுக்கு ஏதோ தென்பட்டது. ஸரயூபாலா அன்று மாலையில் அமர்ந்திருந்த இடத்தில், ஒரு ரத்தினமாலை கிடந்தது. ரகுநாதன் அதைக் கையில் எடுத்தான். அதே ஹாரத்தை அன்று சாயங்காலம் ஸரயூ தன் கழுத்தில் அணிந்திருந்தது அவனுக்கு ஞாபகம் வந்தது. தவறிக் கீழே விழுந்துவிட்டதோ என்னவோ!

ரகுநாதன் ஆகாயத்தை நோக்கி, 'கடவுளே! என் எண்ணம் பூர்த்தியாக இதுதான் முதல் அறிகுறியா?' என்று சொல்லி, அந்த மாலையைத் திருப்பித் திருப்பிப் பார்த்து, தன் கழுத்தில் அணிந்துகொண்டான்.

மறுநாட் காலை அவன் எழுந்து நேரே ஜனார்த்தன தேவரிடம் சென்றான்.

முதல் நாள் அவன் கேட்ட கேள்விகளுக்கு ஜனார்த்தனர், 'மிலேச்சர்களுடன் நடக்கும் போரில் வெற்றியும், ஸ்வதர்மிகளிடம் நடக்கும் போரில் தோல்வியும் ஏற்படும்' என்று விடையளித்தார்.

அவ்விடத்தை விட்டு விடைபெற்றுச் செல்லுமுன் ரகுநாதனுக்கு ஸரயூவைக் காணவேண்டுமென்ற ஆவல். ஸரயூ அந்தச் சமயம் தோட்டத்தில் மலர் கொய்துகொண்டிருந்தாள். ரகுநாதன் மெள்ள அங்கு வந்து சேர்ந்தான்.

தன் கையிலிருந்த ஹாரத்தைக் காட்டி, நடுங்கும் குரலில், 'பத்ரே! நேற்றிரவு இது எனக்கு இங்கே கிடந்து அகப்பட்டது! இதை உன்னிடம் கொடுக்கவே வந்தேன். முன்பின் அறியாத என்னுடைய இந்தச் செய்கைக்காக என்னை மன்னித்துக்கொள்!' என்றான்.

அந்த மரியாதையான வார்த்தைகளைக் கேட்டு ஸரயூ திரும்பினாள். எதிரே அழகிய வாலிப வீரன் நின்றிருந்தான். ரமணியின் முகம் வெட்கத்தால் சிவந்தது.

ரகுநாதன் மீண்டும் மெள்ள மெள்ள, 'அனுமதி கிடைத்தால், இந்த ஹாரத்தை உனக்கு அணிவித்து, என் வாழ்க்கையைச் சாபல்யமாக்கிக்கொள்வேன்' என்றான்.

ஸரயூபாலா வெட்கம் நிறைந்த தன் பார்வையால் ரகுநாதனின் பக்கம் பார்த்தாள். அந்தப் பார்வையில் நிறைந்திருந்த அன்பு, ரகுநாதனை வெறியடையச் செய்தது. இது சம்மதத்தின் அறிகுறி என்பதை அறிந்ததும், ரகுநாதன், மெள்ள அந்த ரத்தின மாலையை ஸரயூபாலாவின் கழுத்தில் அணிவித்தான். ஆனால் அவளுடைய பவித்திரமான வதனத்தைத் தீண்டவில்லை.

சிறிது நேரம் பொறுத்து, 'இனி அதிதிக்கு விடையளிக்கலாம்!' என்றான் ரகுநாதன்.

இந்தத் தடவை ஸரயூபாலா வெட்கத்தையும் உள்ளக் கிளர்ச்சியையும் அடக்கிக்கொண்டு, ரகுநாதனை ஒரு முறை பார்த்துவிட்டு, பிறகு நிலத்தைப் பார்க்கலானுள். பிறகு, மெள்ள மெள்ளத் தலை நிமிர்ந்து, 'தாங்கள் என் பேரில் பெரிய கிருபை செய்தீர்கள். அடிக்கடி இங்கு வந்து போய்க் கொண்டிருக்கவேண்டும்!' என்ருள்.

இருளில் திண்டாடியவனுக்கு ஒரு ஜோதி கிடைத்ததைப் போல, ஸரயூவின் வாயினின்றும் வெளிவந்த இந்த வார்த்தைகள் ரகுநாதனின் ஹிருதய சாகரத்தில் அலை மோதலாயின. 'சுந்தரி! நான் பிறருடைய ஊழியன். யுத்தம் செய்வது எனது வேலை! நான் வர முடியும் முடியாது என்று சொல்வதற்கில்லை. ஆனுல், இந்த உடலில் உயிருள்ளவரை உன் உருவம் என் உள்ளக் கோயிலினின்றும் அகலாது!' என்ருன்.

ஸரயூபாலாவால் ஒன்றும் பதில் சொல்ல முடியவில்லை. அவளின் இருவிழிகளிலும் கண்ணீர் பெருகுவதை ரகுநாதன் கண்டான். அவன் கண்களினின்றும் உதிர்ந்த கண்ணீரைத் தடுக்க அவனுல் முடியவில்லை.



அத்தியாயம் 5

ஷாயிஸ்தாகான்

சிவாஜியின் ராஜ்யமும் மலைக் கோட்டைகளும் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வந்தன. கி. பி. 1662-ம் வருஷத்திற்கு முன்பு டில்லி பாதுஷாவுக்கு சிவாஜியைத் தன் வசப்படுத்தவேண்டுமென்ற எண்ணம் உண்டாக வில்லை. ஆனால் அந்த வருஷம் ஷாயிஸ்தாகான் டில்லி சக்கரவர்த்தியிடமிருந்து உத்தரவு பெற்று சிவாஜியை ஜயிக்க எண்ணினான்.

அதே வருஷம் ஷாயிஸ்தாகான், புனா, சாகன் துர்க்கம், இன்னும் சில இடங்களைக் கைப்பற்றிக்கொண்டான். அடுத்த வருஷம், அதாவது 1663-ல், ஷாயிஸ்தாகான் சிவாஜியைப் பூராவும் வென்றுவிடவேண்டுமென்ற நோக்கத்துடன், வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலானான். பாதுஷாவின் ஆக்கினைப்படி மார்வார் தேசத்து அரசன் யசவந்தசிங், தன்னுடைய படைகளுடன் ஷாயிஸ்தாகானுக்கு உதவி செய்ய வந்தான்.

சிவாஜிக்கு நாற்புறங்களிலும் எதிர்ப்பு கடுமையாக இருந்தது. மொகலாய சேனையும், ரஜபுத்திர சைனியமும் புனாவுக்கு அருகில் வந்து குவிந்தன. ஷாயிஸ்தாகான், தாதாஜி கன்ஹ தேவர் என்ற பிரசித்திபெற்ற மஹாராஷ்டிர வீரர் இருந்த வீட்டில் தங்கினான். அந்த

வீட்டில்தான் சிவாஜி தம் குழந்தைப் பருவம் முழு வதையும் கழித்தார். ஷாயிஸ்தாகானுக்கு சிவாஜியின் தந்திரங்களெல்லாம் நன்ருகத் தெரியும். ஆகையால் அவன் தன் உத்தரவின்றி மஹாராஷ்டிர தேசீயர்களில் யாரும் புஞு நகரத்திற்குள் பிரவேசிக்கக் கூடாதென்று ஏற்பாடு செய்திருந்தான். அருகே இருந்த சிம்ஹகட் (கட் - கோட்டை) டில்தான் சிவாஜி தம் சைனியத்துடன் இருந் தார். அதுவரை மஹாராஷ்டிர வீரர்கள் யுத்தத்தில் அவ்வளவு சமர்த்தராக இல்லை. ஆகையால் டில்லி பாது ஷாவை இந்தச் சமயம் எதிர்த்துச் சமர் செய்ய முடியா தென்பதை சிவாஜி உணர்ந்தார். ஏதாவது வேறு உபாயம் செய்து, அதனுல் ஹிந்து சாம்ராஜ்யத்தைப் பெருக்க வேண்டுமே தவிர வேறு வழி கிடையாதென்பதையும் கண்டார்.

சித்திரை மாதக் கடைசியில் ஒரு நாள் மாலை ஷாயிஸ் தாகான் தன் மித்திரர்களையும் மந்திரிகளையும் கூப்பிட் டனுப்பினுன். எல்லோரும் ஒன்றுசேர்ந்து தாதாஜி கன்ஹதேவரின் மாளிகையில் சபை கூடினுர்கள். அங்கே சிவாஜியை எந்த உபாயத்தால் ஜயிக்கலாம் என்ற யோசனை நடந்தது. நாற்புறமும் தீபங்கள் ஒளி வீசிக் கொண்டிருந்தன. தோட்டத்தில் இனிய காற்று வீசிக் கொண்டிருந்தது. ஆகாயம் இருண்டிருந்த தென்ருலும், இரண்டு தாரகைகள் சுடர் வீசிக்கொண்டிருந்தன.

ஷாயிஸ்தாகானின் சபையோரில் ஒருவனுன அன்வரி என்பவன், 'ஜஹாம்பநாஹ்! நான் சொல்கிறேன்! இந்த டில்லிச் சேனையின் முன் மராட்டியர் என்ன செய்ய முடியும்? புயல், தூசியை லக்ஷியம் செய்கிறதா? நமது சேனை முன் அவர்கள் நிற்க முடியாமல் துவம்சம் ஆகி விடுவார்கள்! இதில் சந்தேகமே இல்லை!' என்ருன்.

சாந்த்கான் என்ற பெயருள்ள ஒரு வயதான

வீரனும் இதைக் கேட்டுக்கொண்டிருந்தான். அவன் வாழ் நாள் முழுவதும் மகா ராஷ்டிரர்களுடன் போரிடுவதிலேயே கழித்தவன். அவனுக்கு மஹாராஷ்டிரர்களின் பலம் எவ்வள வென்பது நன்ருகத் தெரியும். அவன் மெதுவாக, 'நான் நன்ருக அறிவேன். அவர்களிடம் பலம், தந்திரம், இவைகளைத் தவிர புத்தி சாதுரியமும் இருக்கிறது' என்ருன்.

'யாரிடம்?' என்ருன் ஷாயிஸ்தாகான்.

'ஜஹாம்பநாஹ்! மராட்டியர்களிடம்தான்! சென்ற வருஷம சில மராட்டியர்கள் சாகன் கோட்டையில் புகுந்து விட்ட பொழுது, நமது வீரர்கள் எவ்வளவு கஷ்டத்துடன் வெளியேறிஞர்கள் என்பது தங்களுக்கு ஞாபகம் இருக்கும்! ஒரு கோட்டையைப் பிடித்து வெற்றியடைய நமது வீரர்களில் எவ்வளவு பேர் நஷ்டமடைந்தார்கள்! ஆயினும் கூட மராட்டியர்கள் நிதாயிஜியையும் அகமத்நகரையும், ஔரங்காபாத்தையும் படுசூனியமாக்கிவிட்டார்கள். நாம் அவர்களை ஏதாவது செய்ய முடிந்ததா?' என்ருன் சாந்த்கான்.

'சாந்த்கான் விருத்தாப்பியனுகிவிட்டான். ஆகையால் தான் அந்த மலை எலியிடம் இம்மாதிரி பயமடைகிருன். இதற்குமுன் இம்மாதிரி பயந்ததில்லை!' என்ருன் ஷாயிஸ்தாகான்.

சாந்த்கானின் முகம் ரத்த வர்ணமாக மாறியது. ஆயினும் அவன் பதிலொன்றும் கூறவில்லை.

மஹாராஷ்டிரர்களிடம் அநேக ரகசிய விஷயங்கள் இருந்தன. ஆகையால் அவர்களிடம் எப்படிப் போரிடுவது என்ற விஷயம் ஊர்ஜிதமாக ஆரம்பமாயிற்று. சாகன் துர்க்கத்தைக் கைப்பற்றும் சமயமே மற்றக் கோட்டைகளை ஜயிப்பது கடினம் என்பதை ஷாயிஸ்தா

கான் நிச்சயம் செய்துகொண்டான். 'இங்கே மலைக்கு மலை கோட்டைகள் இருக்கின்றன. இவைகளை எதுவரை பிடித்துக்கொண்டே இருப்பது? இதற்கு எவ்வளவு நாள் ஆகும் என்பதும் தெரியவில்லை. பாதுஷாவின் உத்தரவு நிறைவேறுவது அசாத்தியமானது. இதற்கு என்னதான் முடிவு? கோட்டைகள் மெள்ளக் கைக்கு வந்துகொண்டிருக்கட்டும்!' என்றான் ஷாயிஸ்தாகான்.

இதைக் கேட்ட சாந்த்கான், 'ஜஹாம்பனாஹ்! கோட்டைகள்தான் மஹாராஷ்டிரர்களின் பலம்! போரிடுவது, போரில் வெல்வது இவை மஹாராஷ்டிரர் களிடம் ஒரு பெரிய விஷயமல்ல. ஏனென்றால் இது மலைப் பிரதேசம். இங்குள்ள ஒவ்வோர் இடமும் அவர் களுக்கு நன்றாகப் பரிசயமானது. ஓர் இடத்தில் தோற்று ஓடி விடுவார்கள். மற்றோர் இடத்தில் ஒன்றுகூடி மறு படியும் உபத்திரவம் செய்ய ஆரம்பித்து விடுவார்கள்! இந்த விஷயம் நமக்கு எட்டுமா? ஆனால், ஒவ்வொன்றாகக் கோட்டைகளை நம் வசப்படுத்திக்கொண்டு வந்தால், அவர்கள் கஷ்டமடைந்து, செயலற்றுத் தோல்வியடைய நேரிடும். அப்பொழுது அவர்கள் டில்லி அரசாட்சியை ஒப்புக்கொள்வார்கள்' என்றான்.

'மராட்டியர் போரிட்டுவிட்டு ஓடும்போது நாம் அவர்களைப் பின்தொடர முடியாதா? அவர்களைத் தடுத்துக் கொன்று குவிக்க நம்மிடம் குதிரை வீரர்கள் இல்லையா?' என்றான் ஷாயிஸ்தாகான்.

சாந்த்கான் மறுபடியும், 'ஜஹாம்பனாஹ்! வாஸ்தவம்! மொகலாயருக்கு வெற்றி கிடைத்து, அவர்களைப் பிடித்தும் விட்டால், நாம் மராட்டியர்களைக் கொன்று குவித்து விடலாம். ஆனால் இந்த மலைப் பிரதேசத்தி லுள்ள மஹாராஷ்டிரக் குதிரை வீரர்களைத் தடுத்துப் பிடிக்கக்கூடியவர்கள் இந்த ஹிந்துஸ்தானத்திலேயே

யாரும் கிடையாது. நமது குதிரைகளெல்லாம் பெரியவை. இவ்விடத்திய மலைப் பிரதேசப் பாதைகள் நமது வீரர்களை வழியில் கல்மேடுகளால் தடுத்து விடுகின்றன. இவ்விடத்திய சிறு குதிரைகள் தவளையைப் போல் தத்தி ஓடுவதிலும், மானைப் போல் வேகமாகச் செல்வதிலும் நிகரற்று விளங்குகின்றன. நிமிஷத்திற்கு நிமிஷம் நூறு ஆயிரமாகப் பெருகி விடுகிறது படை. ஆகையால் ஜஹாம்பனாஹ், என் வார்த்தையைக் கேளுங்கள்! சிவாஜி சிம்ஹகட்டில் இருக்கிறார். ஒரேயடியாக அதன் பேரில் படையெடுங்கள். ஒரு மாதத்திலோ, அல்லது இரண்டு மாதத்திலோ, கோட்டையை நாம் பிடித்து வெற்றி கொண்டுவிடலாம். சிவாஜியும் கைதாகி விடுவார். பிறகு டில்லிச் சக்கரவர்த்திக்கு வெற்றிதான். இதல்லாமல் அவர்களை எதிர்பார்ப்பதில் என்ன ஆகப்போகிறது? தவிர, ஒரு சேனையே அவர்களைப் பின் தொடர்ந்தால்கூட நம்முடைய எந்த உத்தேசம் பூர்த்தியாகப் போகிறது? யோசித்துப் பாருங்கள். நிதாயிஜியை என்னவோ நம் மிடம் சும்மா விட்டுவிட்டார்கள்! ஆனால் ஔரங்க பாத்தையும், அகமத் நகரத்தையும் என்ன பாடு படுத்தி விட்டார்கள்! ருஸ்தமே ஜமான் கூடப் பின்தொடர்ந்து என்ன செய்தார்?' என்றான்.

ஷாயிஸ்தாகான் கோபமடைந்து, 'ருஸ்தமேஜமான் துரோகம் செய்தான்! அவன் நிதாயிஜியிலிருந்து அவர்களை ஓடும்படி விட்டுவிட்டான். அதற்குத் தகுந்த தண்டனை அளிக்கிறேன். சாந்த்கான்! எதிர்த்துச் சண்டை போடுவதை நீ எதிர்க்கிறாயா? டில்லி பாதுஷா வின் சைனியத்தில் வாலிப வீரர்களே இல்லையா?' என்றான்.

பழம்பெரும் வீரனான சாந்த்கானின் முகம் இன்னும் ரத்த வர்ணமாகச் சிவந்தது. பின்புறம் திரும்பித் தன்

கண்களிலிருந்து துளித்த இரண்டு சொட்டுக் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, சேனாதிபதியின் பக்கம் பார்த்து, 'என்னிடம் ஆலோசனை கூற யாதொரு சக்தியும் இல்லை. ஹுஜுர்! தாங்களே சண்டையைப் பற்றிய உபாயங்களை யோசியுங்கள். பிறகு என்ன உத்தரவோ அதை நிறைவேற்ற நான் பின்வாங்கமாட்டேன்!' என்றான்.

இதற்குள் காவலாளி ஒருவன் வந்து சிம்ஹகட்டிலிருந்து மஹாதேவ நியாய சாஸ்திரி என்ற பிராமண தூதர் ஒருவர் வந்திருப்பதாகவும், வெளியே நின்றிருப்பதாகவும் தெரிவித்தான். ஷாயிஸ்தாகான் அவரைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். ஆகையால் அவரை சபைக்குக் கொண்டுவரும்படி ஆக்ஞாபித்தான். சகல சபா ஜனங்களும் அந்தத் தூதரைக் காண ஆவலாக இருந்தனர்.

ஒரு நிமிஷத்திற்கெல்லாம், மஹாதேவ நியாய சாஸ்திரி சபைக்கு வந்து சேர்ந்தார். சாஸ்திரிக்கு வயது நாற்பதுக்கு மேல் இராது. மஹாராஷ்டிரர்களைப் போலவே நல்ல ஆகிருதி, சிவந்த மேனி. முகம் அழகாக இருந்தது. அகன்ற மார்பு, நீண்ட கைகள், அகன்ற கண்கள், கம்பீரமான பார்வை, நன்றாக ஆலோசிக்கும் தன்மை பெற்றவர்! நெற்றியில் சந்தனத் திலகம். மார்பில் பூணூல் இருந்தது. ஒரு முரட்டுச் சட்டை அணிந்திருந்தார். ஷாயிஸ்தாகான் உள்ளே வந்த தூதரை மரியாதையுடன் உட்கார வைத்தான்.

'சிம்ஹகட்டின் நிலைமை எப்படி இருக்கிறது?' என்று கேட்டான் ஷாயிஸ்தாகான்.

மஹாதேவஜீ ஒரு சுலோகத்தைப் படித்து அதற்குப் பதில் சொன்னார்:

'ஸந்தி நத்யோ தண்டகேஷு ததா பஞ்சவடிவனே।
ஸரயூவிச்சேதஜம் சோகம் ராகவஸ்து கதம் ஸஹேத்॥'

[அர்த்தம் :—தண்டகாரண்யத்திலும் பஞ்சவடியி லும் நூற்றுக்கணக்கான நதிகள் இருக்கின்றன. ஆனால் அவற்றைக் கண்டு ஸ்ரீராமன் சரயூ நதியை இழந்த துக்கத்தை மறக்க முடியுமா? சிம்ஹகட் முதலான அநேகம் கோட்டைகள் தற்போது சிவாஜியின் கையில் இருந்தபோதிலும், புணா தங்களிடம் இருக்கிறது. இந்த வருத்தத்தை அவரால் மறக்க முடியுமா?]

ஷாயிஸ்தாகான் சந்தோஷமடைந்து, 'ஆமாம், நீங்கள் உங்கள் தலைவனிடம், முக்கியமான கோட்டை எங்கள் கையில் இருக்கும் போது இனிப் போர்புரிவது வியர்த்தம் என்று சொல்லிவிடுங்கள். தவிர, பாதுஷாவின் ஆதீனத்தை ஒப்புக்கொண்டால் இன்னும் நம்பிக்கை இருக்கிறது!' என்றான்.

பிராமணர் சிறிது சிரித்துவிட்டு, மீண்டும் ஒரு சுலோகத்தைப் பாடினார்:

'நசக்நோஹி ஸ்வாபிலாஷம் கிரா வக்த்துஞ்ச சாதக:|
ஞாதா தயாலுர்மேகஸ்து ஸந்தோஷயதி யாசகம்||'

[அர்த்தம் :—சாதக பக்ஷி தன் வார்த்தைகளால் தன் அபிலாஷைகளை மேகத்திற்கு ஞாபகப்படுத்த முடியாது. ஆனால் மேகம் தானே தயை வைத்து வசமானால் அது அபிலாஷையைப் பூர்த்தி செய்துகொள்ள முடியும்.]

'யாசகர்களுக்குக் கொடுப்பதில் பெரியோர்கள் இந்த ரீதியைத்தான் கைக்கொண்டார்கள். புணாவும் சாகன துர்க்கமும் போன பிறகு சிவாஜி சமாதானம் செய்து கொள்ளவும் வெட்கப்படுகிறார். ஆனால் தங்களைப் போன்ற கனவான்களின் அனுக்கிரஹத்தால் எது தான மாகிறதோ அது சிவாஜிக்கு உயர்வானது!'

இந்தத் தடவை ஷாயிஸ்தாகானுக்கு சந்தோஷம் கட்டுக் கடங்கவில்லை. அவன், 'பண்டித்ஜீ! தங்கள்

பாண்டித்தியத்தில் நான் அளவற்ற சந்தோஷம் அடைந்தேன்! உங்களுடைய இந்த ஸம்ஸ்கிருத் பாஷை ரொம்ப இனிப்பாகவும் பொருள் நிறைந்ததாகவும் இருக்கிறது. ஆமாம், உண்மையாக சிவாஜி ராஜி செய்துகொள்ள விரும்புகிறாரா?' என்று கேட்டான்.

மஹாதேவர் மீண்டும் ஒரு சுலோகத்தைச் சொன்னார்:

'கேசரிண: பிரதாபேன பயஸந்தக்தசேதஸ:|
த்ராஹி தேவ! த்ராஹி ராஜன்! இதி ச்ருண்வந்தி பூசரா:||'

[அர்த்தம்:—டில்லீச்வரனின் சைனியத்தின் அபரிமித மான பராக்கிரமத்தைக் கேட்டுப் பயந்து நாங்கள் 'ரக்ஷி! ரக்ஷி!' என்று உச்சரித்துக்கொண்டிருக்கிறோம்.]

இந்தத் தடவையும் ஷாயிஸ்தாகான் ஆனந்த மிகுதி யால், பிராமணரிடம், 'பண்டித்ஜீ! உங்கள் சாஸ்திரத்தில் நமக்கு ரொம்ப ரொம்பக் குஷி ஏற்படுகிறது! தாங்கள் ராஜி செய்துகொள்ளவேண்டுமென்ற சேதி கொண்டு வந்திருந்தால், உண்மையாக சிவாஜி தங்களை இந்த இடத்திற்குத் தோதாகப் பொறுக்கியிருக்கிறார் என்று தான் சொல்லவேண்டும். ஆனால் இதற்கு அத்தாட்சி என்ன?' என்றான்.

பிராமணர் கம்பீரமாகத் தம் வஸ்திரத்திற்குள் ளிருந்து ஓர் அத்தாட்சிப் பத்திரத்தை வெளியே எடுத்தார். ஷாயிஸ்தாகான் வெகு நேரம்வரை அதைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, 'சரி! நான் இந்த ஆக்ஞா பத்திரத்தைப் பார்வையிட்டுவிட்டேன்! உண்மையிலேயே எனக்கு மெத்த சந்தோஷம்! ஆனால் அவசியமாக என்னென்ன நிச்சயம் செய்துகொள்ள வேண்டும்?' என்று கேட்டான்.

'எங்கள் பிரபு, எப்பொழுது யுத்தத்தில் நீங்கள்

முதலில் வெற்றி யடைந்துவிட்டீர்களோ பிறகு யுத்தம் செய்வது வீண் என்றார்' என்று சொன்னார் மஹாதேவர்.

'சந்தேகமின்றி வாஸ்தவம் தான்!'

'இப்பொழுது மஹாராஜா சமாதானம் செய்து கொள்ள விரும்புகிறார். ஆனால் டில்லி அதிபரும் ராஜி செய்துகொள்ள இச்சைப்படுகிறாரா என்று அறிய விரும்புகிறார்! அப்படியானால் சிவாஜி என்னென்ன நியமங்களைப் பாலனம் செய்யவேண்டு மென்பதையும் அறிய விரும்புகிறார்' என்றார் மஹாதேவர்.

'முதலில் பாதுஷாவின் ஆதீனத்தை ஒப்புக்கொள்ள வேண்டும்! அதற்கு உங்கள் அரசர் தயார்தானா?' என்று கேட்டான் ஷாயிஸ்தாகான்.

'அவருடைய சம்மதத்தையோ சம்மதமில்லாமை யையோ வெளியிட எனக்கு அதிகாரம் கிடையாது. தாங்கள் என்னிடம் என்னென்ன சொல்லுகிறீர்களோ, நான் அவைகளை அப்படியே சிவாஜி மஹாராஜாவிடம் சொல்லிவிடுவேன்! அவ்வளவுதான்—' என்றார் மஹா தேவர்.

'முதல் ஷரத்து, டில்லி பாதுஷாவின் அதிகாரத்தை ஒப்புக்கொள்ள வேண்டும். இரண்டாவது, பாதுஷா ஜயித்த கோட்டைகள் யாவும் அவரிடம் இருக்க வேண்டும். மூன்றாவது, சிம்ஹகட் முதலிய இதர கோட்டைகளையும் விட்டுவிட வேண்டும்.'

'அவைகள் யாவை?'

'அது இன்னும் இரண்டு தினங்களுக்குப் பிறகு கடித மூலம் தெரிவிக்கப்படும். நான்காவது, இவைகளைத் தவிர சிவாஜியிடம் இருக்கும் கோட்டைகளுக்கும் ஜாகீர்களுக்கும் அவர் கப்பம் கொடுக்கவேண்டும். இவைகளை உங்கள் அரசரிடம் சொல்லி, சீக்கிரம் எங்களுக்குப் பதில் தெரிவியுங்கள்!'

'தங்கள் உத்தரவு எதுவோ அப்படியே செய்கிறேன். ஆனால் சமாதானப் பிரச்னை முடிவுறும்வரை சண்டை நின்றிருக்க வேண்டியதுதானே!'

'அவசியமில்லை! மஹாராஷ்டிரர்களுடைய பித்தலாட்டம், சூது! இவைகளை நான் நம்பமாட்டேன்! மராட்டியர்கள் செய்யாத சூது இனி என்ன இருக்கிறது? சமாதானம் சரியானபடி முடிவாகி ஊர்ஜிதமாகும்வரை, நஷ்டத்தை உண்டாக்காமல் சண்டையை நிறுத்த முடியும் என்ற நம்பிக்கையை நீங்கள் எதிர்பார்க்க முடியாது.'

'அப்படியே நடக்கட்டும்' என்று சொல்லி பிராமணர் விடைபெற்றுக்கொண்டார். ஆனால், அவர் கண்களில் கேலிப் பார்வை ஜ்வலித்தது. அவர் மெள்ள மெள்ள வெளியே வந்து, ஒவ்வொரு வாசலையும், ஜன்னலையும், மூலை முடுக்குகளையும் பார்த்துக்கொண்டே சென்றார்.

ஒரு மொகலாயக் காவலாளி சற்று ஆச்சரியத்துடன், 'ஜனாப், தாங்கள் என்ன பார்க்கிறீர்கள்?' என்று கேட்டான்.

'சிவாஜி சிறுவனாக இருந்தபோது இங்கெல்லாம் விளையாடுவது வழக்கம். அது எனக்கு ஞாபகம் வந்தது. ஆனால் அது இப்போது உங்கள் ஆதீனத்தில் இருக்கிறது. தவிர, இம்மாதிரியே ஒவ்வொன்றும் உங்கள் கைவசமாகி விடுமென்று தெரிகிறது. நல்லது! கடவுளே!' என்றார் மஹாதேவர்.

காவலாளி சிரித்துக்கொண்டே, 'உண்மைதான்! இனும் கிடைப்பதில் இரக்கம் கொள்ளாதே! உன் வேலையைப் பார்த்துக்கொண்டு போ!' என்றான்.

பிராமணர் வெளியே வந்து, கூட்டத்துடன் கூட்டமாக, புனாவின் கடைவீதி ஜனங்களுடன் கலந்துவிட்டார்.

762—3

அத்தியாயம் 6

சுப காரியத்தின் புரோகிதர்

பிராமணர் ஒவ்வொன்ருக, புனு நகரத்தின் பல வீதிகளைப் பார்வையிட்டார். எங்கெந்த வழியாக அவர் சென்ருரோ அதை யெல்லாம் நன்ருக அறிந்து கொண்டார். சாமான் வாங்குபவரைப் போல், கடைக் காரர்களிடம் பல விஷயங்களைத் தெரிந்துகொண்டார். பிறகு கடைத் தெருவிலிருந்து வெளியேறி அகன்ற சாலையின் வழியாக முன்னே செல்லலாஞர். இரவு ஆகி விட்டபடியால் ஜனங்கள் கதவைத் தாளிட்டுக்கொண்டு வீடுகளுக்குள் இருந்தனர். தீபங்கள் மாத்திரம் எரிந்து கொண்டிருந்தன.

பிராமணர் ஒரேயடியாக வெளியே வெகு தூரம் வரை வந்துவிட்டார். வானத்தில் இருள் குவிந்திருந்தது. ஒன்றிரண்டு விண் மீன்கள் மாத்திரம் சுடர் விட்டுக் கொண்டிருந்தன. உலகம் சந்தடியற்று மௌனமாய் இருந்தது. அங்கே பிராமணர், தமக்குப் பின்னுல் யாரோ வரும் காலடிச் சப்தம் கேட்கவே, அப்படியே நின்ருர். ஆனுல் சற்று நேரத்திற்கெல்லாம் அந்தச் சப்தம் நின்றுவிட்டது.

பிராமணர் மறுபடியும் நடக்கலாஞர். ஆனுல் மீண்டும் பின்னுல் யாரோ வருவதைப் போல் தோன்றி

யது. அந்தத் தடவை பிராமணரின் ஹிருதயம் சஞ்சல மடையலாயிற்று. 'இந்த இரவில் யார் என்னைப் பின் தொடர்கிறார்கள், தெரியவில்லையே! இவர்கள் சத்துருக் களா? இல்லை, மித்திரர்களா? சத்துருக்கள் என்னை அறிந்துவிட்டனரோ?— இந்த விதமான தயக்கத்திலேயே சற்று நேரம் யோசித்துக்கொண்டே நின்றார். பிறகு, 'சத்துருவாக இருக்கும் பக்ஷத்தில் இப்பொழுது இவனை முடிவு செய்துவிட வேண்டும்' என்ற எண்ணத்துடன் தம் இடையில் மறைத்து வைத்திருந்த ஒரு கத்தியை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு சாலையோரம் நின்றார். ஆனால் சப்தம் ஒன்றும் கேட்கவில்லை. நாற் புறமும் பாதை, சந்து பொந்துகள், குடிசைகள் எதிலும் யாதொரு சலனமோ சப்தமோ கேட்கவில்லை. வானம் தன் இருள் போர்வையால் வையத்தை மூடிக்கொண் டிருந்தது. கணத்திற்குள் ஒரு சப்தம்! பிராமணரின் உள்ளம் நடுங்கியது. மீண்டும் அந்தக் கத்தியைக் கையில் வைத்துக்கொண்டு ஜாக்கிரதையாக நின்றார்.

சில நிமிஷங்களுக்குப் பிறகு மீண்டும் அதே சப்தம் கேட்டது. ஆனால் இந்தத் தடவை மஹாதேவருடைய சம்சயம் தீர்ந்துவிட்டது. ஏனென்றால் அது பாராக்காரன் குரல். ஆனால் துரதிர்ஷ்டவசமாக மஹாதேவர் எந்தச் சந்தில் சென்றாரோ அதே சந்தில்தான் அவனும் வந்து கொண்டிருந்தான். அந்தச் சந்து மிகவும் குறுகலாக இருந்தது. மஹாதேவர் கையில் கத்தியுடன் தயாராக நின்றார்.

காவலாளி இங்குமங்கும் பார்த்துவிட்டு, மஹாதேவர் நின்றிருந்த இடத்திற்கே வந்து சேர்ந்தான். அதே இருளின் காரணமாக அவனுக்கு எதிரே இருப்பது ஒன்றும் விளங்கவில்லை. ஆகையால் அவன் தன் வழியே போகலானான். மஹாதேவரும் அங்கிருந்து தப்பி, நெற்றி

யில் துளித்த வேர்வையைத் துடைத்துக்கொண்டு, அருகே இருந்த ஒரு வீட்டின் கதவைத் தட்டினார். கதவைத் திறந்துகொண்டு ஷாயிஸ்தாகானின் தக்ஷிண தேசத்துப் போர்வீரன் ஒருவன் வெளியே வந்தான். இருவரும் சேர்ந்து ரகசியமாக நகரத்தின் மத்திய பாகத்தின் வழியாகச் சென்று, சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு ரகசிய ஸ்தானத்திற்கு வந்து சேர்ந்தனர்.

'எல்லாம் சரியாயிற்று?' என்றார் பிராமணர்.

'ஆமாம்! எல்லாம் சரியாக இருக்கிறது!' என்றான் அந்த வீரன்.

'உத்தரவு கிடைத்துவிட்டதா?'

'கிடைத்துவிட்டது!'

இதற்குள் அருகே சிறிது சப்தம் கேட்டது. மஹாதேவர் கத்தியை எடுத்துத் தயாராகிக்கொண்டார். இந்தத் தடவை அவருக்குக் கோபம் வந்துவிட்டது. ஆனால் வெகுநேரம் வரை எதிர்பார்த்தும் யாரும் எதிர்ப்படவில்லை. அவர் மீண்டும் அந்த வீரனிடம், 'வெறும் கையுடன் வந்திருக்க மாட்டாயல்லவா?' என்று கேட்டார்.

வீரன் தன் இடையிலிருந்து கத்தியை எடுத்துக் காண்பித்தான்.

'சரி, ஜாக்கிரதையாக இரு! கலியாணம் எப்பொழுது?' என்றார் பிராமணர்.

'நாளைக்கு?'

'உத்தரவு கிடைத்துவிட்டதா?'

'ஆமாம்!'

'எத்தனை பேருக்கு?'

'பத்து வாத்தியக்காரர்கள்! ஆயுதபாணிகளில் முப்பது பேர்! அவ்வளவுதான். இதற்கு மேல் உத்தரவு கிடையாது'!

'அதுவே போதும்! ஆனால் சமயம் எப்பொழுது?'

'இரவு ஒரு ஜமாம் கழிந்த பிறகு!'

'சரிதான். ஆனால் ஊர்வலம் இங்கிருந்துதான் புறப்பட வேண்டும்.'

'ஞாபகம் இருக்கிறது!'

'வாத்தியக்காரர்கள் வாத்தியங்களை நன்றாக வாசிப்பார்களல்லவா?'

'நன்றாக!'

'எவ்வளவு சாத்தியமோ, குடும்பத்தாரை ஒன்று சேர்க்கவேண்டும்!'

'தெரிந்தது!'

பிராமணர் சிறிது நகைத்துக்கொண்டு, 'நாம் அந்தச் சுப காரியத்திற்குப் புரோகிதர்கள். அந்தச் சுப காரியத்தின் சாயை இந்தப் பாரத வர்ஷம் முழுமைக்கும் பரவும்' என்றார்.

திடீரென்று ஓர் அம்பு பிராமணரின் மார்பில் வந்து தைத்தது. பாணம் என்னவோ உயிரைப் போக்கக்கூடியதுதான். ஆனால் பிராமணரின் மேற்சட்டைக்குள் அணிந்திருந்த கவசத்தில் தாக்கி அது கீழே விழுந்தது. மீண்டும் ஓர் அம்பு பிராமணர் மேல் விழுந்தது. பிராமணர் அதைத் தாங்காமல் கீழே சாய்ந்தார். ஆயினும் உடைக்க முடியாத அந்தக் கவசம் அந்தப் பாணத்திற்கும் உடையவில்லை. கணத்திற்குள் மஹாதேவர் தம்மைச் சமாளித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்து நிமிர்ந்து பார்த்தார். ஆனால் எதிரே எதைக் கண்டார்? மொகலாயர்கள் சேனைத் தலைவன் ஒருவன் ஆயுதபாணியாக நின்றான்! ஓஹோ! அவன்தான் சாந்த்கான்!

ஷாயிஸ்தாகான், சாந்த்கானைச் சபையில் கோழையென்றும் வயதானவனென்றும் சொன்னதால், அவன் மனம் கோபத்தாலும் வெட்கத்தாலும் துடித்துக்கொண்டிருந்தது. ஒன்று, தன் கோழைத்தனத்தைத் காட்டுவது

அல்லது இந்த யுத்தத்திலேயே தன் உயிரை இழப்பது என்று தீர்மானம் செய்தான்.

பிராமணருடைய நடவடிக்கைகளைப் பார்த்து சாந்த்கானுக்குச் சந்தேக முண்டாயிற்று. அவன் சிவாஜியை நன்ருக அறிவான். அவருடைய அசாதாரணமான பொறுமை, அளவற்ற கோட்டைகள், அற்புதமாகவும் வேகமாகவும் செல்லக்கூடிய அவருடைய குதிரைப் படை, அவருக்கு ஹிந்து தர்மத்தில் இருக்கும் பற்றுதல், ஹிந்து ராஜ்யத்தை ஸ்தாபிக்கவேண்டு மென்ற ஆவல், ஹிந்துக்களின் சுதந்திரத்திற்காக அவர் எடுத்துக்கொண்ட பிரதிக்ஞை —யாவற்றையும் சாந்த்கான் அறியாதவனல்ல.

முகம்மதியர்கள் போர் தொடங்கியவுடனேயே சிவாஜி தோல்வியை ஒப்புக்கொண்டுவிடுவார் என்பது நடக்கக்கூடியதல்ல என்பதை அவன் பல தடவை எண்ணியிருக்கிருன். ஆனுல் இந்தப் பிராமணர் சிவாஜியின் சமாதான பத்திரத்தை எடுத்து வந்திருக்கிருரே, இவர் யார்? இதை ரகசியமாக அறியவேண்டும் என்று எண்ணினுன். பிராமணருடைய பேச்சு வார்த்தைகளிலேயே சாந்த்கானுக்குச் சம்சயம் உண்டாயிற்று. மஹாராஷ்டிரர்களை நிந்தனையாகப் பேசும்போதெல்லாம் அவர் முகம் கோபத்தால் சிவந்ததையும் சாந்த்கான் கவனிக்காமலில்லை. ஆனுல் இவைகளை யெல்லாம் அவன் ஷாயிஸ்தாகானிடம் சொல்லவில்லை. ஏனென்ருல், உண்மையைச் சொல்லி ஆபத்தை யார் விலைக்கு வாங்கிக் கொள்வார்கள்? ஆனுல் தன் மனத்திற்குள் மாத்திரம் இந்தத் தூதனைக் கட்டாயம் பிடித்துவிடவேண்டும் என்று தீர்மானம் செய்துகொண்டான். ஆகையால்தான் அவன் இவனைப் பின்தொடரலானுன். ஒரு நிமிஷம்கூட அந்தப் பிராமணர் தன் பார்வையினின்றும் தப்பாமல் பார்த்துக்கொண்டு வந்தான். போர் வீரனுடன் பிராமணர் பேசிய யாவற்

றையும் சாந்த்கான் மறைந்திருந்து கேட்டான். புத்தி மானுன சாந்த்கான் அதே நிமிஷம் அந்தத் தூதனைக் கொன்றுவிடுவதே சாலச் சிறந்தது என்று எண்ணினுன். தவிர, இந்த விஷயத்தை ஷாயிஸ்தாகான் கேட்டால், 'சாந்த்கான் கோழையல்ல, டில்லி அதிபதிக்குக் கேடு விளைவிப்பவனும் அல்ல' என்று அவன் குற்றங்களையும் மன்னிப்பான். இந்தச் சூழ்ச்சியைக் கண்டுபிடித்து வெளி யாக்கிவிட்டால், பிறகு, சாந்த்கான் வார்த்தை புறக் கணிக்கக் கூடியதல்ல என்பதையும் ஷாயிஸ்தாகான் ஒப்புக்கொள்வான். இந்தக் காரணத்தால்தான் அவன் மறைந்து அம்பு எய்தான்.

ஆனுல் அந்த ஆசை நிராசையாயிற்று. வெறும் கன வாயிற்று. மஹாதேவர் எழுந்திருப்பதைக் கண்ட சாந்த் கான் தன் கணைகள் நிஷ்பலனுயின என்பதை அறிந்து கொண்டான். ஆகையால், உடனே அவன் தன் வாளை உருவி மஹாதேவர் மேல் வீசினுன். ஆனுல் ஆச்சரியகர மாக வாள் மஹாதேவரின் கவசத்தில் தாக்கி, தூள் தூளாயிற்று.

'ஆகாத காலத்தில் என்னைப் பின் தொடர்ந்தாய்!' என்று சொல்லிக்கொண்டே மஹாதேவர் தம் உறையி லிருந்த ஓர் உடைவாளை எடுத்து மேலே தூக்கினுர். கண் இமைப்பதற்குள் அது சாந்த்கானின் உடலில் பாய்ந்தது. சாந்த்கானின் உடல் கீழே சாய்ந்தது.

பிராமணர் உதடுகளைக் கடித்துக்கொண்டார். அவர் கண்களில் ஓர் அலட்சியப் பார்வை ஜ்வலித்தது. பிறகு மெள்ள அந்த உடைவாளை எடுத்து மறைத்துக்கொண்டே 'ஷாயிஸ்தாகான் மஹாராஷ்டிரர்களை நிந்தித்ததின் முதல் பலன் இது! பவானி தேவியின் கிருபையின் இரண்டாவது பலன் நாளையே கிட்டிவிடும்!' என்ருர்.

வீரம் பொருந்திய காரியத்தைச் செய்துகொண்டே

சாந்த்கான் தன் உயிரைத் தியாகம் செய்தான். ஆனல் அதே சமயம் ஷாயிஸ்தாகான் சுகமாகத் தூங்கிக் கனவு கண்டு கொண்டிருந்தான்: 'சிவாஜி! அவன் கைதியாகி வந்து கொண்டிருக்கிருன்!' இன்னும் இத்யாதி கனவுகள்—

அருகே இருந்த மஹாராஷ்டிர வீரன் இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு பிராமணரிடம், 'மஹராஜ், இப்பொழுது என்ன செய்வது? நாளை இந்த விஷயம் வெளிப்பட்டுவிடுமாளுல் நமது ஏற்பாடுகள் யாவும் நஷ்டமாகி விடுமே?' என்ருன்.

'இல்லை ஒன்றும் கெட்டுவிடாது. எனக்குத் தெரியும். சாந்த்கான் இன்று சபையில் அவமானப்படுத்தப் பட்டான். இன்னும் சில நாள்வரை அவன் சபைக்குச் செல்லாவிட்டால் யாரும் சந்தேகிக்க மாட்டார்கள். இந்த உடலை இதோ அருகே இருக்கும் கிணற்றில் போட்டுவிடு. நாளை இரவு ஒரு ஜாமம் கழிந்த பிறகு ஞாபகம் இருக்கட்டும்!' என்ருர் பிராமணர்.

'ஆஹா! ஞாபகம் இருக்கும்!' என்ருன் அந்த வீரன்.

பிராமணர் பேசாமல் புனு நகரிலிருந்து புறப்பட்டார். நாலைந்து இடங்களில் காவலாளிகள் தடுத்தனர். அவர்களுக்கு ஷாயிஸ்தாகானின் கையெழுத்திட்ட கடிதத்தைக் காட்டிவிட்டு, அவர் சந்தோஷமாகப் புனுவை விட்டு வெளியேறினர்.

அத்தியாயம் 7

ராஜா யசவந்த ஸிம்ஹன்

நடுநிசி யாகிவிட்டது. ராஜா யசவந்தசிங் கோட்டையில் தனியாக உட்கார்ந்திருந்தார். கைகளைக் கன்னத்தில் வைத்துக்கொண்டு, அந்த நிசி வேளையில் என்ன யோசனை செய்துகொண்டிருந்தாரோ தெரியாது. வெளியே யிருந்து ஒரு வீரன் உள்ளே வந்து, 'மஹா ராஷ்டிர தூதன் தங்களைச் சந்திக்க விரும்புகிறான்' என்றான்.

'அவரைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்! உள்ளே அனுப்பு!' என்று ஆக்ஞாபித்தார் அரசர்.

மஹாதேவ நியாய சாஸ்திரி உள்ளே வந்தார். மஹா ராஜா யசவந்தசிங் மௌனமாக இருந்தார். ஏதாவது யோசித்தாரோ என்னவோ? ஆனால் அதே சமயம் மஹா தேவ நியாய சாஸ்திரி யசவந்த ஸிம்ஹரைக் கூர்ந்து கவனிக்கலானார். அதற்குள் யசவந்தசிங் நியாய சாஸ்திரி யிடம், 'தங்கள் அரசரின் கடிதத்தைப் படித்தோம். அதைச் சரியானபடி அர்த்தமும் செய்துகொண்டோம். அதைத் தவிர வேறு ஏதாவது சொல்லவேண்டுமா?' என்றார்.

'எங்கள் அரசர் எந்தப் பிரஸ்தாபமும் சொல்லி

அனுப்பவில்லை. வருத்தம் தெரிவித்துவிட்டு வரத்தான் அனுப்பினார்!' என்றார் மஹாதேவர்.

'புனாவும், சாகன துர்க்கமும் நமது கையைவிட்டுப் போய்விட்டதற்காகவே உங்கள் அரசர் வருத்தம் தெரிவிக்கும்படி உங்களை அனுப்பினாரா?'

'கோட்டைகள் போனதற்காக அவர் வருந்தவில்லை. அவரிடம் கணக்கற்ற கோட்டைகள் இருக்கின்றன!'

'பின்னே என்ன? மொகலாயரிடம் யுத்த விபத்தில் அகப்பட்டுக்கொண்டு வருந்துகிறாரா?'

'ஆபத்தில் சிக்கி வருந்தும் பழக்கமே அவருக்குக் கிடையாது.'

'பிறகு எதற்காக வருத்தம்?'

'ஹிந்து ராஜ திலகரும், க்ஷத்திரிய குலத்தில் பிறந்தவரும், ஸநாதன தர்ம ரக்ஷகருமான ஒருவர், கேவலம் மிலேச்சருக்கு ஊழியராக இருப்பதைக் கண்டுதான் எங்கள் பிரபு வருந்துகிறார்!'

யசவந்த ஸிம்ஹரின் முகம் சிவந்தது. மஹாதேவர் அதைப் பார்த்தும் பாராதவர் போல் இருந்துவிட்டு, மீண்டும் கம்பீரமான குரலில் சொல்லலானார்:

'உதயபுரத்து அரசரான ராணா பிரதாப ஸிம்ஹரின் வம்சத்தில் விவாகம் செய்துகொண்டவரும், ராஜஸ்தானம் பூராவும் கியாதி பெற்றவரும், மார்வாரின் குடையைத் தம் சிரமேல் வகிப்பவரும், ஸிப்ரா நதி தீரத்தில் அவுரங்கஸீப் தம்மைக் கண்டு பயந்து நடுங்கும்படி செய்தவரும், ஹிந்து தர்மத்தின் ஸ்தம்பம் என்று கிராமத்துக்குக் கிராமம் கோயில்களில் வெற்றி கொண்டாடப் பெற்றவருமான அவர், மொகலாயரின் பக்கம் சேர்ந்து ஹிந்துக்களுடன் சண்டையிடவேண்டுமென்று அபிப்பிராயம் கொண்டிருக்கிறாரா?

'க்ஷத்திரிய குல ரிஷப! நான் ஒரு சாதாரணப் பிரா

மணன். தூது வேலை செய்பவன். எனக்கு அதிக ஞானம் இல்லை. என்னிடமிருந்து ஏதாவது தவறான வார்த்தை வருமானால் அதை மன்னித்துக்கொள்ளுங்கள். ஆனால் தங்களுடைய இந்த முயற்சிகள் யாவும் ஹிந்துக்களின் சுதந்திரத்திற்குத்தானா? இந்த வெற்றிக் கொடிகள் யாவும் ஹிந்து ஸ்வராஜ்யத்திற்காகத்தான் பறக்கின்றனவா? அரசே! தாங்களே ஆலோசியுங்கள்! நான் ஒன்றும் அறியேன்.'

யசவந்த சிங் குனிந்த தலை நிமிராமலேயே இருந்தார். மஹாதேவர் மீண்டும், 'தாங்கள் ரஜபுத்திரர்! மஹாராஷ்டிரரும் ரஜபுத்திரர்கள்! தந்தைக்கும் மகனுக்கும் சண்டை என்பது அசம்பவம்! பவானி தேவியே இந்த யுத்தத்தைத் தடுத்திருக்கிருள். ரஜபுத்திரர்களுடைய கௌரவம் ஒன்று தான் பாரத வர்ஷத்தின் கௌரவம். ரஜபுத்திரர்களின் வெற்றிக் கீதத்தை இன்றும் நமது பெண்மணிகள் பாடுகின்றனர். ரஜபுத்திரர்கள் லக்ஷியத்தை ஒட்டித்தான் நாங்கள் எங்கள் சிறுவர்களுக்குக் கல்வி யளிக்கிறோம். க்ஷத்திரியகுல திலகமே! ரஜபுத்திரர்களின் ரத்தத்தால் எங்கள் வாட்கள் நனைந்து போகுமுன் மஹாராஷ்டிரர்களின் பெயரே மறைந்து போகும். ராஜ்யத்தை விட்டொழித்துவிட்டு நாங்கள் மீண்டும் பயிர்த் தொழிலைக் கற்றுக்கொள்வோம், அரசே! ஆனால் நாங்கள் உங்களுடன் யுத்தம் செய்ய மாட்டோம்!' என்றார்.

யசவந்த ஸிம்ஹர் தலை நிமிர்ந்து மெள்ள மெள்ள, 'பிரதான தூதரே! நீர் சொல்லியது முற்றிலும் சரியான விஷயம்தான்! ஆனால் நான் டில்லி பாதுஷாவுக்கு உட்பட்டவன். மஹாராஷ்டிரர்களுடன் யுத்தம் செய்கிறேன் என்று சொல்லிவிட்டும் வந்திருக்கிறேன்! ஆகையால் யுத்தம் செய்யத்தானே வேண்டும்!' என்றார்.

'ஆனல் இதனல் ஆயிரக்கணக்கான சுதர்மிகள் நாசமாவார்கள்! ஹிந்துவே ஹிந்துவின் தலையைச் சீவுவான். பிராமணன் பிராமணனுடைய ஹிருதயத்தில் கத்தியைப் பாய்ச்சுவான்! க்ஷத்திரியன் க்ஷத்திரியனுடைய சரீரத்திலிருந்து ரத்தத்தைப் பெருக்கி, மிலேச்சர்களின் வெற்றியையும் கீர்த்தியையும் விஸ்தரிப்பான் அல்லவா?' என்ருர் மஹாதேவர்.

யசவந்த ஸிம்ஹரின் முகம் ரத்த வர்ணமாக மாறியது. ஆனல் ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு, தடைபடும் குரலில், 'டில்லி அதிபதியின் வெற்றிக்காக மாத்திரம் யுத்தமல்ல. நான் உங்கள் அரசரிடம் எவ்விதம் நட்புக் கொள்வேன்? சிவாஜி ஒரு புரட்சிக்காரர்! அவர் இன்று எந்த விஷயத்தை ஒப்புக்கொள்கிருரோ நாளை அதைப் பங்கப்படுத்தி விடுகிருர்!' என்ருர்.

உடனே பிராமணரின் கண்கள் பிரகாசிக்கலாயின. அவர் கூறலானர்: 'அரசே! பொறுமை கொள்ளுங்கள்! பொய் நிந்தை செய்வது தங்களுக்கு அழகல்ல! சிவாஜி மகாராஜா ஹிந்துக்களிடம் வாக்குக் கொடுத்து அதை என்று மீறியிருக்கிருர்? க்ஷத்திரியரிடம் பிரதிக்ஞை செய்து அதை எப்பொழுது மறந்திருக்கிருர்? பிராமணர்களிடம் சபதம் செய்து எப்பொழுது அதைப் பிரதிபாலனம் செய்யவில்லை? தேசத்தில் கணக்கற்ற கிராமங்கள் இருக்கின்றன! அங்கே ஆயிரக் கணக்கான தேவாலயங்கள் இருக்கின்றன. தாங்கள் விசாரித்துப் பாருங்கள், சிவாஜி சத்தியபாலனம் செய்கிருரா இல்லையா என்று. அவர் பிராமணர்களுக்கு ஆச்ரயமளிக்கிருரா இல்லையா? கோக்களை அவர் ரக்ஷிக்கிருரா இல்லையா? பின் தேவ பூஜையில் பராமுகமாக இருந்திருக்கிருரா? மொகலாயருடன் யுத்தம் எதற்கு? ஜயித்தவனுக்கும் ஜயிக்கப்பட்டவனுக்கும் பரஸ்பர நட்பு எந்தத் தேசத்தில்

இருக்கிறது? சிம்மம் தன் வஜ்ரம் போன்ற நகங்களால், சர்ப்பத்தை ஆக்கிரமித்து, அதை ஹிம்சித்து, இறந்து விட்டதென்று விட்டுவிட்டால், சர்ப்பத்திற்குச் சந்தர்ப்பம் கிடைத்தபோது, அது பழி தீர்த்துக்கொள்வது துரோகமாகுமா?

'இதுதான் சுபாவமான ரீதி. வேட்டை நாய் முயலைப் பிடிக்க முயலுகிறது. அதுதன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள இங்குமங்கும் பற்பல தந்திரங்களைக் கைக் கொண்டு ஓடினால் அது அராஜகமாகுமா? ஒரு பொழுதும் இல்லை. இது சுயமரியாதையும் தற்காப்பும் ஆகும். கடவுள் பிராணிகளுக்குத்தான் தற்காப்பை அளித்திருக் கிறாரா? மனிதர் அதினின்றும் வஞ்சிக்கப்பட்டனரா? எங்களுக்கு உயிருக்கும் உயிரான பிராணாதாரகம் சுதந் திரம் தான். பல வருடங்களாக முயன்று அதை முகம் மதியர்கள் ஒடுக்குவதை நாங்கள் சகித்துக்கொண் டிருக்க முடியுமா? ஹிந்துக்களின் உயிரை ரக்ஷிக்கும் ஒரே உபா யத்தை நிந்தனை செய்யாதீர்கள்! குறிப்பாக சிவாஜி மகா ராஜாவை நிந்திக்காதீர்கள்!' இதைச் சொல்லியவுடன் மஹாதேவரின் ஒளி பெற்ற கண்களினின்றும் கண்ணீர் பெருகலாயிற்று.

பிராமணரின் கண்களில் கண்ணீரைக் கண்டதும் யசவந்த ஸிம்ஹரின் உள்ளத்தில் வேதனை உண்டாயிற்று. அவர் மஹாதேவரை நோக்கி, 'பிராமண சிரேஷ்டரே! என்னுடைய வார்த்தைகளில் ஏதாவது கடுமையாக வெளிப்பட்டிருந்தால் அதற்காகத் தயை செய்து என்னை மன்னித்துக்கொள்ளுங்கள்! நாங்கள் சொல்வதின் தாத் பரியமும் அதுதான்! ரஜபுத்திரர்களும் சுதந்திர வேட் கையினால்தான் யுத்தத்தைத் தவிர்த்து வேறொன்றையும் அறியவில்லை. மஹாராஷ்டிரர்களும் அதே வழியை

அவலம்பித்துத்தான் ரண க்ஷேத்திரத்தில் வெற்றி பெற முடியும்' 'என்றார்.

'அரசே! ரஜபுத்திரர்களுக்குப் பழமையான சுதந்திரம் இருக்கிறது. அவர்கள் அளவற்ற தனமும் வைத்திருக்கின்றனர். அவர்களிடம் மலைகளும், கோட்டைகளும், சமவெளிகளும் ஏராளமாக இருக்கின்றன. அவர்களிடம் ஆயிரக்கணக்கான வருஷங்களில் பெற்ற யுத்த சாதுரியம் இருக்கிறது. ஆனால் மஹாராஷ்டிரர்களிடம் இவைகளில் எது இருக்கிறது? அவர்கள் தரித்திரர்கள். வெகுநாள் அடிமைப்பட்டவர்கள்! இதைத் தவிர இதுதான் அவர்களுடைய முதல் யுத்தப் பரீக்ஷை! உங்கள் தேசம் ஆக்கிரமிக்கப்பட்டால், நீங்கள் உங்கள் புராதனமான யுத்த முறைகளைக் கொண்டும், உங்களுடைய கணக்கற்ற ரஜபுத்திர சைனியங்களைக் கொண்டும் ரஜபுத்திரர்களை எதிர்க்க முடியும்! ஆனால் எங்கள் தேசத்தை ஆக்கிரமித்தால், நாங்கள் என்ன செய்ய முடியும்? எங்களிடம் பழமையான போர் முறைகள் கிடையாது. அதிக சைனியமும் இல்லை, இருக்கும் சைனியமும் இதற்கு முன் யுத்தத்தைக் கண்டதில்லை. பின் அவர்களுக்கு யுத்த அனுபவம் ஏது? டில்லி பாதுஷாவின் சைனியம், காபூல், பஞ்சாப், அயோத்தி, பீஹார், மாளவம் வீரம் விளைவிக்கும் ராஜஸ்தானம் முதலிய சேனைகளுடன் அனுபவம் அடைந்திருக்கிறது. அதன் முன் இந்தத் தரித்திர மஹாராஷ்டிர சைனியம் என்ன செய்யமுடியும்? எங்களிடம் குதிரை வீரரும் அதிகம் இல்லை. காலாட் படைகளும் இல்லை. நாங்கள் எப்படி அவர்களுடைய சதக்கினி, அஸ்திரங்கள், வெடி மருந்து, பணம், காசு இவைகளின் முன்பு ஈடுகட்டி நிற்க முடியும்? வேந்தே! வாழ்க்கையின் ஆரம்பத்தில் தரித்திர ஜாதி இந்த முறையைத் தவிர வேறு எதைக் கைக்கொள்ள முடியும்?

தாங்கள் தயை செய்யுங்கள். மஹாராஷ்டிர ஜாதி ஜீவித்திருக்கட்டும். இருநூறு வருஷங்களுக்குப் பிறகு, தம் போர்த் திறமையாலும், அசாதாரணமான யோக்கிதையினாலும் தங்களைப் பிரகாசப்படுத்திக் கொள்வார்கள். அப்பொழுது இன்றைத் துக்கத்திற்குப் பிரதி பலன் கிடைக்கும்!' என்றார் மஹாதேவர்.

இவை யாவையும் கேட்டு யசவந்த ஸிம்ஹர் யோசனையிலாழ்ந்தார். நெற்றியைக் கையால் பிடித்துக்கொண்டு யோசிக்கலானார். தம்முடைய வார்த்தைகள் பலனற்றுப்போகவில்லை என்பதை மஹாதேவர் கண்டுகொண்டார். ஆகையால் அவர் மீண்டும் மெதுவாக, 'தாங்கள் ஹிந்துக்களில் சிரேஷ்டர். தங்களுக்குத்தானா இந்த ஹிந்து கௌரவ சாதனத்தில் சந்தேகம் ஏற்பட வேண்டும்? ஹிந்து தர்மம் வெற்றி பெறத் தாங்கள் கட்டாயம் ஆசைப்படுகிறீர்கள். சிவாஜியின் ஆசையும் வேறல்ல. முகம்மதியரின் ஆட்சியைத் துவம்சம் செய்து, ஒவ்வோரிடத்திலும், தேவாலயத்தை நிர்மாணித்தல், ஹிந்து சாஸ்திரங்களைப் புனருத்தாரணம் செய்தல், பிராமணர்களுக்கு ஆச்ரய மளித்தல், பசுக்களை ரக்ஷித்தல்-இதுதான் ஹிந்து ஜாதிக்குக் கௌரவம்-இதுதான் சிவாஜியின் ஆவல். இந்தக் காரியங்களில் தாங்கள் சிவாஜிக்கு உதவி புரிய இஷ்டப்படாவிட்டால் தாங்களே இதை நடத்துங்கள். தாங்கள் இந்தத் தேசத்தின் அரசாட்சியை ஏற்றுக்கொள்ளுங்கள்! மொகலாயர்களிடம் வெற்றி கொள்ளுங்கள்! ஹிந்துக்களின் சுதந்திரத்தை மீண்டும் நிலைநாட்டுங்கள்! தாங்கள் ஒப்புக்கொண்டால் இப்பொழுதே கோட்டைகளைத் திறந்துவிடத் தயார்! பிரஜைகள் வரி கொடுப்பார்கள்! சிவாஜியைப் போலவே தங்களையும் ஆயிரம் மடங்கு

அதிகமாகவும் மதிப்பார்கள். சிவாஜியும் சந்தோஷ மடைந்து; ஒரு போர்வீரனுகி, முஸல்மான்களைத் துவம்சம் செய்வதில் உங்களுடன் தோளோடு தோள் கொடுத்து நிற்பார்!' என்ருர்.

இந்தப் பிரஸ்தாபத்தைக் கேட்டு யசவந்த ஸிம்ஹரின் கண்கள் ஆனந்தத்தால் மலர்ந்தன. பல நிமிஷம் யோசனை செய்த பிறகு, 'ஆனுல் மார்வாரும், மஹாராஷ்டிரமும் சமீபமாக இல்லை. ஆகையால் இவை ஓர் அரசனின் ஆளுகைக்கு உட்படுவது அசம்பவம்!' என்ருர்.

'அப்படியானுல் தங்கள் புத்திரரிடம் இந்த ராஜ்யத்தை ஒப்புவியுங்கள். இல்லாவிட்டால் தங்களுக்கு நம்பிக்கையுள்ள ஒருவரிடம் இதை ஒப்புவியுங்கள்! சிவாஜி க்ஷத்திரிய அரசரிடம் வேலை பார்க்க முடியும். ஆனுல் க்ஷத்திரியர்களுடன் ஒருபோதும் யுத்தம் செய்யமாட்டார்! என்ருர் மஹாதேவர்.

'இந்த ஆபத்துக் காலத்தில், ஔரங்கஸீப்பை எதிர்த்துத் தேசத்தைக் காக்கக்கூடிய அவ்வளவு நம்பிக்கை யுள்ளவர்களாக யாரும் காணப்படவில்லையே.'

'பிறகு யாராவது ஒரு க்ஷத்திரிய சேனுதிபதியை யாவது நியமியுங்கள்! ஹிந்து தர்மமும் ஹிந்துக்களின் சுதந்திரமும் காக்கப்பட்டுவிட்டால், சிவாஜி சந்தோஷத்துடன் ராஜ்யத்தைத் தியாகம் செய்து துறவு பூண்டு விடத் தயார்!'

'அம்மாதிரி ஒரு சேனுதிபதி இருப்பதாகவும் தெரியவில்லை!'

'ஆனுல் இந்த மாதிரியான ஒரு மகத்தான காரியத்தைச் செய்பவருக்குத் தாங்கள் ஒத்தாசை செய்யுங்கள்! தங்களுடைய உதவியாலும் ஆசீர்வாதத்தாலும் சிவாஜி தம்முடைய ஸ்வதேச ஸ்வதர்ம காரியத்தில் வெற்றி பெறுவார். அவருக்கு உதவி செய்யுங்கள். பூமண்டலத்திலுள்ள

ஹிந்துக்களும், விண்ணிலுள்ள தேவர்களும் தங்களைப் போற்றுவார்கள் !'

'பிராமணோத்தமரே ! தங்கள் விவாதம் புறக்கணிக்கக் கூடாததாக இருக்கிறது. ஆனால் டில்லி பாதுஷா என்னிடம் சிநேகமாக இருக்கிறார். அதன் காரணமாகவே என்னை இந்தக் காரியத்திற்கு நியமித்திருக்கிறார். பின்னே அவரிடம் நம்பிக்கைத் துரோகமாக எப்படி நடந்துகொள்வேன் ? அது கண்ணியமாகுமா ?'

'ஹிந்துக்களை அதர்மிகள் என்று கூறி, அவர்கள் காபிர்கள் என்று அவர்களிடம் அதிக வரி வசூலிக்கும் டில்லி அதிபரிடம் இந்தக் காரியம் கண்யமற்றதா ? காசியைப் போன்ற புனிதமான க்ஷேத்திரங்களில் விச்வநாதர் ஆலயத்தை இடித்து, அந்தக் கற்களால் மசூதி கட்டுவது கண்யமான காரியமா ?' என்றார் மஹாதேவர்.

கோபமும் துடிப்பும் கொண்ட குரலில், யசவந்தர், 'துவிஜ சிரேஷ்டரே! மேற்கொண்டு ஒன்றும் சொல்ல வேண்டாம். இன்றிருந்து சிவாஜி எனது மித்திரர் ! நான் சிவாஜியின் மித்திரன். இந்தச் சமயம் எங்கள் பிரதிக்ஞை சிவாஜியின் பிரதிக்ஞையைப் போலத்தான். எங்களுடைய செய்கையும் அவருடைய செய்கையும் வேறுபட்டதல்ல ! இந்தச் சமயம்வரை ஹிந்து தர்மத்திற்கு விரோதியான டில்லி பாதுஷாவுடன் போர் புரிந்த அந்த மஹானுபாவர் எங்கே ? ஒரு முறை அவரை ஆலிங்கனம் செய்துகொண்டு என் ஹிருதயத்தின் ஆவலைச் சாந்தமாக்கிக்கொள்கிறேன்!' என்றார்.

பிராமண வேஷதாரி தம் வேஷத்தைக் களைந்தார். தூதராக வந்து நின்றவர் திடகாத்திரரான ஒரு வீரராக மாறினார். சட்டைக்குள்ளே உடைவாள் காணப்பட்டது. மஹாராஷ்டிர வீரர் மெள்ள மெள்ள, 'அடியேன்

பிராமணனல்ல - மஹாராஷ்டிர க்ஷத்திரியன்! பெயரும் மஹாதேவரல்ல - சிவாஜி!' என்ருர்.

ராஜா யசவந்த ஸிம்ஹர் ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்தவராய், ஆவல் பொங்கும் கண்களுடன், மஹாராஷ்டிர வீரனைப் பார்க்கலானுர். ஆஹா! டில்லி அதிபனுக்குச் சரிசமானமாய்ப் போரிடும் வீரன் இவன்தானு? ராஜா யசவந்த ஸிம்ஹர் துடிக்கும் ஹிருதயத்துடன் சிவாஜியை ஆலிங்கனம் செய்துகொண்டார்.

இரவு முழுவதும் பேச்சு வார்த்தைகளிலேயே கழிந்தது. யுத்தத்தைப் பற்றிய சகல விஷயங்களும் நிச்சயமாயிற்று. இதன் பின் சிவாஜி விடைபெற்றுக்கொண்டார். புறப்படும் பொழுது, 'மஹாராஜ்! அனுக்கிரஹம் செய்யுங்கள்! நாளை புனுவிலிருந்து நாலைந்து குரோச தூரத்தில் இருப்பது நன்மை!' என்ருர்.

'ஏன், புனுவைக் கைப்பற்ற நாளைக்கு நீங்கள் முயற்சி செய்கிறீர்களா?' என்று கேட்டார் யசவந்தர்.

சிவாஜி சிரித்துக்கொண்டே, 'இல்லை! ஒரு கலியாண காரியம் நடத்தவேண்டியிருக்கிறது. தாங்கள் இருப்பதால் ஏதாவது விக்கினம் ஏற்படலாம் என்ற அபிப்பிராயம்!' என்ருர்.

'நல்லது, விலகியே இருக்கிறேன்! விவாக காரியத்திற்கு வேண்டிய மந்திரங்கள் நியாய சாஸ்திரி மஹாசயருக்கு இப்பொழுது ஞாபகம் இருக்கிறதா?'

'ஞாபகம் என்ன? என்னுடைய சாஸ்திர வித்தையைக் கண்டு டில்லி சேனுபதி ஷாயிஸ்தாகானே பிரமித்துப் போய்விட்டான்! நாளைய தினம் விடைபெற்றுக் கொள்வதைக்கூட நன்ருக அறிந்துகொள்வான்!'

நியாய சாஸ்திரி விடைபெற்றுக்கொள்ளும் போது யசவந்த ஸிம்ஹர் அவரை வாசல் வரை கொண்டுவந்துவிட்டு, புறப்படும் சமயம், 'யுத்த விஷயத்தில் எப்படிப்

பேச்சு வார்த்தை நடந்ததோ காரியம் நடத்தும் போதும் அதையே அனுசரிக்கவேண்டும்' என்ருர்.

'ஆம், அதே மாதிரி எங்கள் எஜமானர் சிவாஜியிடம் சொல்லிவிடுகிறேன் !' என்ருர் சிவாஜி.

'ஆமாம்! நான் மறந்துவிட்டேன்! அம் மாதிரியே காரியத்தை நடத்தும்படி உங்கள் பிரபுவிடம் சொல்லி விடுங்கள் !' என்று சொல்லிச் சிரித்துக்கொண்டே யசவந்த ஸிம்ஹர் கோட்டைக்குள் செல்லலானுர்.



அத்தியாயம் 8

சிவாஜி

கீழ்த்திசை வானம் பொன்னொளி காட்டிக்கொண்டிருந்தது. அதே சமயம் பிராமண வேஷதாரியான சிவாஜி ஸிம்ஹகட்டில் பிரவேசித்தார். மாறு வேஷ உடைகளைக் களைந்து எறிந்தார். காலைக் கதிரவனின் ஒளியில் சிவாஜியின் சரீரம் ஜாஜ்வல்யமாகத் திகழ்ந்தது. இடுப்பில் கூர்மையான உடைவாளும், பவானி என்ற பெயருள்ள அவருடைய வாளும் தொங்கின. பேஷ்வா மோரேசுவர் திரிசூல் இருவரும் சிவாஜியைக் கண்டதும், ஆனந்த மிகுதியால், 'பவானிக்கு ஜே! இவ்வளவு நேரம் பொறுத்துத் தாங்கள் சௌக்கியமாக வந்து சேர்ந்தீர்களே!' என்றார்கள்.

'தங்கள் புண்ணியத்தால் எந்த விபத்திலிருந்துதான் தப்ப முடியாது?' என்றார் சிவாஜி.

'எல்லாம் சரிவர நடந்ததா?'

'ஆமாம்! எல்லாம்!'

'இன்று இரவுதானே விவாகம்?'

'இன்றுதான்!'

'ஷாயிஸ்தாகான் ஒன்றும் அறிந்துகொள்ளவில்லையல்லவா? புத்திசாலியான சாந்தத்கான் கூட—?'

'வீரன் சாந்த்கான் மீளா நித்திரையில் ஆழ்ந்து விட்டான்!'

'ராஜா யசவந்த ஸிம்ஹர்?'

'தாங்கள் என்னிடம் சொன்ன யுக்தியினால் யசவந்த ஸிம்ஹர் பேதலித்துவிட்டார்! நான் சென்று பார்க்கும் போது அவர் செயலற்று உட்கார்ந்திருந்தார். அனு யாசமாக நமது காரியம் வெற்றி யடைந்தது!'

'பவானிக்கு ஜே! ஓர் இரவில் தனியாகத் தாங்கள் எவ்வளவு காரியங்களைச் சாதித்தீர்கள்! இந்தத் துணிகர மான செயல்களை நினைக்கும்போது என் ஹிருதயம் நடுங்குகிறது.'

'மோரேசுவர்! விபத்துக்களுக்குப் பயப்படுவதானால் அதே சாதாரண ஜாகீர்தாராக இருக்கலாமே! ஆபத் திற்குப் பயப்பட்டால் இந்த மகத்தான காரியம் எப்படி ஸித்தியாகும்? வாழ்நாள் பூராவும் ஆபத்துக்களே தான் நிரம்பி இருக்கின்றன. ஆனால் நாம் செய்யவேண்டிய தெல்லாம் மஹா ராஷ்டிரத்தின் விடுதலைக்குத்தான்!'

'வீரசிரேஷ்ட! தங்களுக்கு வெற்றி நிச்சயம். பவானி துணை செய்வாள்! ஆனாலும் நடு இரவில் சத்துருவின் கூண்டுக்குள் தனியாக மாறு வேஷத் தில்............'

'இது சிவாஜிக்குப் பழக்கமான காரியம்! ஆனால் உண்மையாக இன்று ஒரு பெரிய விபத்தில் சிக்கிக் கொண்டேன்.

'எதில்?'

'இம்மாதிரி முட்டாளுக்குத் தாங்கள் ஸம்ஸ்கிருத சுலோகம் கற்றுக் கொடுத்தீர்கள். தன் பெயரை எழுதத் தெரியாதவனுக்கு இந்த சுலோகங்கள் எங்கே ஞாபகம் இருக்கப் போகின்றன?'

'ஏன், என்ன ஆயிற்று?'

'வேறென்றுமில்லை! ஷாயிஸ்தாகானின் சபையில் நியாய சாஸ்திரி மஹாசயர் அநேகமாக எல்லா சுலோகங்களையும் மறந்துவிட்டார். ஆனால் ஏதோ ஒன்றிரண்டு நினைவிருந்தது. அதனாலே காரியம் பூர்த்தியாகிவிட்டது!'

சிவாஜியுடன் இதுதான் நமது முதல் பரிசயம். ஆகையால் அவருடைய நிலைமையைச் சற்று எழுதுகிறோம். சரித்திரம் படித்தவர்கள் வேண்டுமானால் இதை விட்டுவிடலாம்.

சிவாஜி கி. பி. 1627-ம் ஆண்டு அவதரித்தார். இந்தக் கதை நிகழும் சமயம் அவருக்கு வயது முப்பத்தாறு. அவருடைய தந்தையின் பெயர் ஷாஹஜி. அவருடைய பாட்டனாரின் பெயர் மாலோஜி. நாம் முதல் அத்தியாயத்திலேயே பிரசித்திபெற்ற நிம்பால்கர் வம்சத்தைப் பற்றிக் கூறியிருக்கிறோம். அதே வம்சத்தில் யோகபால நாயகரின் சகோதரி தீபா பாயியை மல்லஜி என்பவர் மணந்தார். வெகு நாட்கள் வரை அவருக்குச் சந்தானம் ஒன்றும் ஏற்படவில்லை. அகமத் நகரத்தில் இருந்த ஷாஹ்ஷரீப் என்ற பெயருள்ள ஒரு முகம்மதியப் பக்கிரி அவருக்கு நண்பராக இருந்தார். அவர் தமது நண்பரின் சுகத்திற்காகக் கடவுளைத் தியானித்தார். சில நாட்களுக்குப் பிறகு தீபா பாயி ஓர் ஆண் மகவை ஈன்றாள். அந்தக் குழந்தைக்கு மல்லஜி ஷாஹஜி என்று பெயரிட்டனர்.

யாதவராவ் அகமத்நகரத்தில் பிரசித்தி பெற்ற சேனாபதி. இருபதினாயிரம் குதிரைப் படைக்குத் தலைவராகவும் பெரிய ஜாகீர்தாராகவும் இருந்தார். கி பி. 1566-ம் ஆண்டு ஹோலி தினத்தன்று மல்லஜி தம் மகனை அழைத்துக்கொண்டு யாதவராவிடம் சென்றார். அந்தச் சமயம் ஷாஹஜியின் வயது ஐந்திருக்கும். யாதவராவின் புத்திரி ஜீஜா பாயிக்கு மூன்று அல்லது நான்கு வயதிருக்கும். இருவரும் சிறு வயதிலேயே சேர்ந்து விளையாடினார்கள்

இதைக் கண்டு யாதவராவ், வேடிக்கையாகத் தம் மகள் ஜீஜாபாயியை அழைத்து, 'நீ இந்தப் பையனை மணம் செய்துகொள்ள விரும்புகிருயா?' என்று கேட்டார். ஷாஹஜியைப் பார்த்து 'தம்பீ! நீங்கள் இருவரும் நல்ல அழகான ஜோடிதான்!' என்று மெச்சினுர். அதே சமயம் மல்லஜி எழுந்திருந்து, அங்கிருந்தவர்களிடம் 'என் தோழர்களே! நீங்கள் சாக்ஷி! நாமும் யாதவராவும் சம்பந்திகளாக விரும்புகிறோம்!' என்ருர்.

எல்லோரும் அதை ஆமோதித்தனர். யாதவராவ் உயர்ந்த வம்சத்தவர். ஆகையால் அவர் தம் மகளை மல்லஜி வீட்டில் கொடுக்க ஒரு பொழுதும் எண்ணியதில்லை. ஆனல் மல்லஜியின் இந்தச் சாதுரியத்தைக் கண்டு அவர் ஆச்சரியமடைந்து போனுர்.

மறுநாள் யாதவராவ் மல்லஜியை விருந்துக்கு அழைத்தார். ஆனல் மல்லஜி, 'விவாக விஷயம் ஊர்ஜிதமாகும் வரை நாம் உங்கள் வீட்டில் சாப்பிடமாட்டோம்' என்று சொல்லி விட்டார். ஆனல் இந்தப் பிரஸ்தாபத்தை யாதவராவ் ஏற்றுக்கொள்ளவில்லை. மல்லஜி விருந்துக்கு வரவில்லை. யாதவராவின் மனைவி தன் கணவனைவிட குல மரியாதையைப் பார்ப்பவள். ஒரு நாள் யாதவராவ் சிரித்துக்கொண்டே அவளிடம், 'ஜீஜாபாயை ஷாஹ ஜிக்குக் கலியாணம் செய்து கொடுக்கப் போகிறேன்'! என்ருர்.

இதைக் கேட்டு அவள் கோபமுற்று இரண்டொரு கடுமையான வார்த்தைகளைக்கூடச் சொல்லிவிட்டாள். மல்லஜி இவைகளை யெல்லாம் கேட்டுக் கோபமடைந்து, ஒரு கிராமத்திற்குச் சென்று அங்கிருந்துகொண்டு, 'பவானி தேவியே நேரில் பிரசன்னமாகி எங்களுக்கு நிறையத் தனங்களைத் தந்தாள்!' என்று ஒரு செய்தியைப் பரப்பினுர்.

பவானி மல்லஜியிடம், 'உன் வம்சத்தில் சிவனைப் போன்ற பிரபாவமுடையவனும், சத்துருக்களை அழிப்ப வனுமான ஒரு வீரப் புதல்வன் பிறப்பான்! அவன் மஹா ராஜனாக மஹாராஷ்டிரத்தில் மீண்டும் ஸ்வராஜ்யத்தை ஸ்தாபிப்பான். பிராமணர்களையும், தேவாலயங்களையும் புனருத்தாரணம் செய்வான்! அவனுடைய வம்சத்தார் இருபத்தேழு தலைமுறை வரை ராஜ்யபாரம் செய்வார்கள். அவன் பெயரால் ஒரு சகாப்தமே ஆரம்பமாகும்' என்று சொன்னதாக இன்றுவரை மஹராஷ்டிரத்தில் ஒரு வரலாறு பிரசித்தமாக இருக்கிறது.

உண்மையில் அப்படித்தான் நடந்தது. மல்லஜி கணக்கற்ற ஐசுவரியம் பெற்று அதன்மூலம் முன்னேற்ற மடைய முயற்சிகளைச் செய்தார். இந்த மகத்தான காரியத்தில் அவருடைய மைத்துனர் போகபாலர் வேண்டிய உதவிகளைச் செய்தார். இந்த விதமாக மல்லஜி அகமத்நகரத்தின் மொகலாய அரசனுடைய ஆதீனத்தில் ஐயாயிரம் குதிரைவீரர்களுக்குத் தலைவரானார். ராஜா வால் பெரிதும் போற்றப்பட்டார். சில தினங்களுக்குப் பிறகு சுவர்ணிக்கும், சாகன துர்க்கத்திற்கும், அதைச் சார்ந்த பிரதேசங்களுக்கும் அவர் எஜமானரானார். புனாவும் ஸோபா நகரமும் அவருக்கு ஜாகீராகக் கிடைத்தன. அப்பொழுது யாதவராவுக்கு யாதொரு பயமும் இல்லை. ஆகையால் 1604-ம் ஆண்டு ஷாஹ ஜிக்குத் தம் மகளைக் கலியாணம் செய்து கொடுத்தார்.

இந்த விவாகத்தின்போது அகமத் நகரத்தின் சுல்தா னும் நேரே வந்திருந்தார். அந்தச் சமயம் ஷாஹஜியின் வயது பத்து இருக்கும். உலக வழக்கப்படி மல்லஜியின் ஆயுளுக்குப் பிறகு ஷாஹஜிக்குப் பிதிரார்ஜிதமான ஜாகீரும் பதவியும் கிடைத்தன.

அந்தச் சமயம் டில்லி அதிபதியான அக்பர் பாதுஷா

அகமதுநகரைத் தம் ஆதீனத்திற்குள் கொண்டுவர வேண்டுமென்று யுத்தம் செய்துகொண்டிருந்தார்; அநேகமாக ஜயித்தும் விட்டார். ஆனால் இதனிடையிலேயே அவர் இறந்து விட்டார். ஆயினும் அவருக்குப் பின் பட்டத்திற்கு வந்த ஜஹாங்கீர் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தினர். இந்த யுத்தகாலத்தில் ஷாஹஜி உறங்கிக் கொண்டிருக்கவில்லை. 1620-ம் வருஷத்தில் அகமத்நகரத்தின் பிரதான சேனாதிபதி மலிக் அம்பரின் ஆதீனத்தின் கீழ் அவர் பெருங் கீர்த்தி பெற்றார். தம்முடைய பராக்கிரமத்தைப் பிரகாசிக்கச் செய்து எல்லோரிடமும் ஆதரவும் மரியாதையும் பெற்றார்.

ஜஹாங்கீர் இறந்த பிறகு, ஷாஜஹான் சக்கரவர்த்தி ஷாஹஜியை ஐயாயிரம் குதிரை வீரர்களுக்குத் தலைவராக நியமித்து, சில ஜாகீர்களையும் கொடுத்தார். ஆனால் இந்த ஆதரவு நீடித்திருக்கவில்லை. மூன்று வருஷங்களுக்கெல்லாம் ஜாகீரை யெல்லாம் ஷாஜஹான் பிடுங்கிக் கொண்டார். அப்பொழுது ஷாஹஜி வியப்படைந்து டில்லி பாதுஷாவை விட்டுவிட்டு அகமத்நகர் மொகலாயருடன் சேர்ந்து கொண்டார். பிறகு தம் வாழ்நாள் பூராவும் அவர்கள் சார்பாகவே வேலை செய்துவந்தார்,

நாளுக்குநாள் வீழ்ச்சியின் பக்கம் செல்லும் அகமத்நகர ராஜ்யத்தின் சுதந்திரத்திற்காக டில்லிச் சேனையுடன் கூட ஷாஹஜி யுத்தம் செய்தார். சுல்தான் சத்துருக்களால் கொல்லப்பட்டார். ஆனால் ஷாஹஜி அதே வம்சத்தைச்சேர்ந்த மற்றொருவரை சுல்தானாக்கிச் சிம்மாதனமேற்றி, அநேக புத்திசாலிகளான பிராமணர்களால் ராஜ்ய காரியம் செவ்வனே நடைபெற ஏற்பாடு செய்தார். சுல்தான் சார்பாகப் பல கோட்டைகளைப் பிடித்தார். ஒரு பெரும் சேனையையும் திரட்டினர்.

ஷாஜஹான் இந்த ஏற்பாடுகளை யெல்லாம் கேட்டுச்

சீறி எழுந்தான். ஷாஹஜியையும் அவருடைய சுல்தானை யும் அடக்க ஒரு சேனையை அனுப்பிவைத்தான். டில்லி பாதுஷாவுடன் யுத்தம் செய்வதென்பது சுல்தான், ஷாஹஜி இருவராலும் முடியாததாக இருந்தது. பல வருஷங் களுக்குப் பிறகு சமாதானம் ஏற்பட்டது. அகமத்நகரத் தின் ராஜ்ய விளக்கும் அவிந்தது. 1631-ல் ஷாஹஜி விஜயபுர ஆதினத்தின் கீழ் ஜாகீர்தாரராகவும் சேனாதி பதியாகவும் இருந்தார். சுல்தானின் கட்டளைப்படி அவர் கர்நாடக தேசத்தின் பல பகுதிகளைப் பற்றிக்கொண்டார். விஜயபுரத்திற்கு வடக்கே புனாவுக்கருகில் அவருக்கு ஜாகீர்கள் எத்தனை இருந்தனவோ அத்தனை கர்நாடகத் தின் தென்பாகத்திலும் கிடைத்தன.

ஜீஜா பாயியின் கர்ப்பத்தில் சம்புஜி, சிவாஜி ஆகிய இரு புத்திரர்கள் பிறந்தார்கள். ஜீஜா பாயியின் தந்தை தேவகிரியைச் சேர்ந்த ஹிந்து ராஜ வம்சத்தில் உதித்தவர் என்று எழுதியிருக்கிறது. இது உண்மையாக இருந்தால், சிவாஜி அந்தப் புராதன ராஜ வம்சத்தைச் சேர்ந்தவர் என்பதில் சந்தேகமே இல்லை. கி. பி. 1630-ல் ஷாஹஜி துர்க்கா பாயி என்ற பெண்ணை மணந்து கொண்டார்.

ஜீஜா பாயிக்கு இதனால் கோபம் ஏற்பட்டது. அவள் ஷாஹஜியை விட்டுவிட்டுத் தன் மகன் சிவாஜியைக் கூட அழைத்துக்கொண்டு புனாவின் ஜாகீரில் வந்து வசிக்க லானாள். ஷாஹஜி துர்க்காபாயியுடன் கர்நாடக ஜாகீரில் இருந்து வரலானார். அங்கே துர்க்காபாயியின் வயிற்றில் வெங்காஜி என்ற மகன் பிறந்தான்.

ஷாஹஜிக்கு நம்பிக்கையான இரண்டு பிராமண மந்திரிகள் இருந்தார்கள். அவர்களில் தாதாஜி கன்ஹ தேவர் புனாவின் ஜாகீரையும் ஜீஜா பாயியின் குழந்தை சிவாஜியையும் பார்த்து வந்தார்.

கி. பி. 1627-ல் ஸ்வர்ண துர்க்கத்தில் சிவாஜி பிறந்தார்.

இந்த இடம் புனாவுக்கு வடக்கே இருபத்து நான்கு மைல் தூரத்தில் இருக்கிறது. சிவாஜி மூன்று வயதுப் பாலகனாக இருக்கும்போது ஷாஹஜி துர்க்காபாயை மணந்தார். தம் தந்தையை விட்டுப் பிரிந்து சிவாஜி தாயுடன் வசித்தார். சிவாஜி இருப்பதற்காகத் தாதாஜி புனா நகரத்தில் ஒரு மாளிகையை நிர்மாணித்தார். நமது வாசகர்கள் ஷாயிஸ்தாகானை அங்கேதான் சந்தித்தார்கள்.

தாயும் மகனும் அங்கே இருந்து வரலானார்கள். சிறு வயதில் சிவாஜி தாதாஜியிடம் படிக்கலானார். ஆனால் படிப்புக்கும் அவர் பெயருக்கும் வெகுதூரம். தம் பெயரைக் கூட அவருக்கு எழுதத் தெரியாது. ஆனால் சிறு வயதிலிருந்தே, வில் வளைப்பது, ஈட்டியை எறிவது, குதிரை சவாரி செய்வது, இவைகளில் சமர்த்தராக விளங்கினார். தினசரி தேகாப்பியாசமும் யுத்த சிக்ஷையும் சிறுவன் சிவாஜியின் சரீரத்தை விரைவில் திடமாக ஆக்கின.

சிவாஜி வெறும் ஆயுதப் பயிற்சி மாத்திரம் பெறவில்லை. ஒழிந்த நேரத்திலெல்லாம் தாதாஜியிடம் உட்கார்ந்து ராமாயணம், பாரதம், இன்னும் இதர நூல்களைக் கேட்பார். மகான்கள், வீரர்கள் இவர்கள் சரிதத்தைக் கேட்க அவருக்கு ரொம்ப ஆசை. இதன் காரணமாகவே அவர் மனம் ஹிந்து தர்மத்தை மீண்டும் ஸ்தாபனம் செய்ய வேண்டும் என்ற உறுதியை அடைந்தது. கதை கேட்பதில் இருந்த அவருடைய அளவற்ற ஆசை, பல வருஷங்களுக்குப் பிறகு அவர் சத்ரபதியான பிறகுகூட, பல கஷ்டங்களையும், இடர்களையும் சமாளித்துக்கொண்டு அங்கே சென்று கதை கேட்க அவரைத் தூண்டியது

இந்த விதமாக தாதாஜியின் முயற்சியால் சிவாஜி சிறு வயதிலேயே ஸ்வதர்மப் பற்றுள்ளவராகவும் முஸல்மான்களுக்கு நிகரற்ற விரோதியாகவும் ஆனார். பதினான்காவது

வயதிலேயே அவர் சுதந்திரமடையப் பல உபாயங்களை யோசிக்கலானார். தம்மைப்போன்ற ஊக்கமுள்ள வாலிபர்களைத் திரட்டலானார். மலைப் பிரதேசமான கொங்கண தேசத்திற்குத் தம் தோழர்களுடன் சென்று வரலானார். அந்த மலைகளை எப்படிக் கடக்கவேண்டும், எந்த வழியாகச்செல்கிறது, எங்கெந்த வழியில் எங்கெந்தக் கோட்டைகள் இருக்கின்றன, எங்கெந்தக் கோட்டைகளின் வழி கஷ்டமான வழி, எப்படி அவைகளை ஆக்கிரமிப்பது. எப்படி அவைகளை ரட்சிப்பது ஆகிய இந்த யோசனைகளே அவர் மனத்தில் உருவாகிக்கொண்டு வந்தன. கடைசியில் எப்படியாவது இரண்டு கோட்டைகளைப் பிடித்தே தீருவதென்று முடிவு செய்துவிட்டார்.

சிவாஜியின் இந்த யோசனையைக் கேட்டு தாதாஜி பயந்துவிட்டார். அவர் சிவாஜிக்கு அநேக சமாதானங்களைச் சொல்லலானார். இந்த ஜாகீர் நிரந்தரமாக ஆபத்து இல்லாமல் இருக்கட்டும் என்பது தாதாஜியின் கருத்து. ஆனால் சிவாஜியின் ஹிருதயத்தில் வீரத்தின் முளை கிளம்பி விட்டது. இந்தச் சமாதானம் ஒன்றும் பலனளிக்கவில்லை.

மாவலி ஜாதியாரின் சகிப்புத் தன்மையும், நம்பிக்கையும் சிவாஜியைப் பெரிதும் கவர்ந்தன. அவர்களில் யசாஜீ கங்கர், தானாஜி மால்சுரே, பாஜி பஸல்கர், ஆகியவர்கள் அவருக்கு நெருங்கிய மித்திரர்கள் ஆனார்கள். கடைசியில் அவர்களுடைய சகாயத்தினாலேயே கி. பி. 1646-ம் வருஷம் எப்படியோ தோரண துர்க்கத்தின் கோட்டையாளனைத் தம் வசம் செய்துகொண்டு சிவாஜி அதைத் தம் கீழ்க்கொண்டுவந்தார். இம்முதல் வெற்றியின் போது சிவாஜியின் வயது பத்தொன்பது. மறு வருஷம் இந்தக் கோட்டைக்குத் தென்மேற்கில் குரோச தூரத்திலுள்ள

துங்ககிரி சிகரத்தில் ராஜகட் என்ற கோட்டையை நிறுவினார்.

விஜயபுரத்து சுல்தான் இந்த விஷயங்களைக் கேள்விப்பட்டவுடன், சிவாஜியின் தந்தையான ஷாஹஜியை அழைத்து, அவரை வெறுத்து, இந்த உபத்திரவங்களுக்கெல்லாம் காரணங் கேட்கவேண்டி சிவாஜியிடம் அவரை அனுப்புவித்தான். விஜயபுரத்தின் நம்பிக்கையான உத்தியோகஸ்தரான ஷாஹஜிக்கு இதன் விஷயம் ஒன்றும் தெரியாது. ஆகையால் அவர் தாதாஜியிடம் கேட்டார். தாதாஜி சிவாஜியை அழைத்து மீண்டும் சமாதானம் சொல்லலானார்.

'உன் தந்தை விஜயபுரத்தின் ஆதிக்கத்தின் கீழேயிருந்தே இவ்வளவு ஜாகீரையும், கீர்த்தியையும் பெற்றார்' என்று எடுத்துக் காட்டினார்.

சிவாஜி தம் பாட்டனார் போன்ற தாதாஜியிடம் ஏதோ மரியாதையாகப் பதிலளித்தார். ஆனால் தம் கொள்கையினின்றும் விலகவே இல்லை. இதற்குச் சில நாட்களுக்கெல்லாம் தாதாஜி இவ்வுலக வாழ்வை நீத்தார்.

இறக்கு முன் அவர் சிவாஜியைக் கூப்பிட்டனுப்பினார். இன்னொரு முறையும் ஏதாவது சமாதானம் சொல்வார் என்றுதான் நினைத்து சிவாஜியும் வந்தார். ஆனால் இந்தத் தடவை அவர் சொன்னதைக் கேட்டு சிவாஜி ஆச்சரியமடைந்து போனார். மரணப் படுக்கையில் இருந்த தாதாஜி, தம் அறிவுப் பொக்கிஷத்தைச் சிவாஜியின் முன் திறந்துவிட்டு, 'வத்ஸ! நீ எந்த லக்ஷியத்தைக் கடைப்பிடித்திருக்கிறாயோ அதிலும் மேலானது ஒன்றும் இல்லை. இந்த வழியையே அனுசரித்துத் தேசத்தைக் காப்பாற்று. பிராமணர்கள், பசுக்கள் கிருஷிகர்கள் இவர்களைக் காப்பதில் கண்ணாக இரு! தேவாலயங்களுக்கு விரோதிகளாய் இருப்பவர்களுக்குச் சரியான தண்டனை அளி. ஈசுவரி

உன்னை எந்த ஸ்வராஜ்யத்தை ஸ்தாபிக்கும்படி ஆக்ஞாபித்திருக்கிருளோ அதில் நீ நிபுணனுக இரு' என்று சொல்லி அவர் மீளா நித்திரையி லாழ்ந்தார். இந்த உபதேசத்தைக் கேட்டு சிவாஜியின் ஹிருதயம் உற்சாகத்தால் பன் மடங்கு விகாசமடைந்தது. அந்தச் சமயம் சிவாஜிக்கு வயது இருபது.

அதே வருஷம் சிவாஜி சாகன், காந்தானு ஆகிய துர்க்கங்களின் கோட்டைக்காரர்களைப் பண ஆசை காட்டித் தம் வசப்படுத்திக்கொண்டு, கோட்டைகளைக் கைப்பற்றி, காந்தானு கோட்டைக்கு சிம்ஹகட் என்று பெயரை மாற்றி வைத்தார்.

சிவாஜியின் மாற்றுந் தாயின் சகோதரரான பாஜி ஸோபா என்பவரிடம்தான் இந்தக் கோட்டையின் நிர்வாகம் இருந்தது. ஒருநாள் நடு இரவு சிவாஜி தம் மாவலி வீரர்களுடன் இந்தக் கோட்டையை ஆக்கிரமித்து, தம் மாமாவை யாதொரு உபத்திரவமும் செய்யாமல் அவரை நேரே தம் தந்தையிடம் கர்நாடகத்திற்கு அனுப்பிவிட்டார். இந்த விதமாக இந்தக் கோட்டை அவர் வசமாயிற்று. சில தினங்களுக்கெல்லாம் புரந்தர துர்க்கத்தின் சொந்தக்காரர் இறந்துவிட்டார். அவருடைய பிள்ளைகளுக்குள் சண்டை ஏற்பட்டுவிட்டது. சிவாஜி சமயமறிந்து இரண்டு சிறிய பையன்களின் சார்பாகக் கோட்டையைத் தம் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவந்தார். இந்தக் காரியத்தால் அந்தச் சகோதரர் அனைவரும் சிவாஜியின்மேல் கோபமடைந்தனர். ஆனால் அவர்களிடம் தேசத்தின் சுதந்திரத்திற்காக உதவிகோரியபோது அவர்களும் சாந்தமடைந்து போயினர். சிவாஜி தம் வாக்குச் சாதுரியத்தால் அவர்களைத் தம் வசப்படுத்திக் கொண்டார். அவர்களும் சிவாஜியின் ஆதிக்கத்திலேயே காரியம் செய்ய ஒப்புக்கொண்டனர்.

இந்த விதமாக சிவாஜி ஒவ்வொன்ருகப் பல கோட்டைகளைத் தம் அதிகாரத்திற்குள் கொண்டுவந்தார். அந்தக் கோட்டைகளின் விவரங்களை எழுதி இந்தக் கதையை வளர்க்கவேண்டியதில்லை. ஆகையால் அதை இம்மட்டோடு நிறுத்துவோம். கி. பி. 1646-ம் வருஷம் சிவாஜியின் ஒரு தளகர்த்தர் ஆபாஜி ஸ்வர்ண தேவர் கல்யாண துர்க்கத்தையும் அதைச் சேர்ந்த பிரதேசங்களையும் ஜயித்தார். இதனுல் விஜயபுர சுல்தானுக்குக் கோபம் வந்துவிட்டது. அவன் சிவாஜியின் தந்தை ஷாஹஜியைக் கைது செய்து, 'குறிப்பிட்ட தேதிக்குள் நமது ஆதிக்கத்தை ஒப்புக் கொள்ளாவிட்டால் தந்தையைச் சிறைவைத்திருக்கும் சிறையின் கதவு சதா மூடியே விடப்படும்' என்று மகனுக்குத் தகவல் சொல்லி அனுப்பி வைத்தான்,

சிவாஜி டில்லி அதிபரிடம் பிரார்த்தித்து, தம் தந்தையின் உயிரைக் காப்பாற்றினுர். ஆயினும் நான்கு வருஷம் வரை ஷாஹஜி கண்காணிப்பிலேயே இருந்தார்.

ஜௌலி அரசர் ராஜா சந்திரராவ் தம் பக்கம் சேர்ந்து மொகலாய ஆதிக்கத்தின் விலங்கை உடைக்க வேண்டிப் பல முயற்சிகளைச் செய்தார். ஆனுல் சந்திரராவ் மோர் இதை மறுக்கவே, சிவாஜி அவருடைய சகோதரரைக் கொன்று வீழ்த்தி, திடீரென அவருடைய கோட்டையின் மேல் படையெடுத்து, அந்தப் பிரதேசம் முழுவதையும் தம் ஆதிக்கத்தில் கொண்டு வந்தார். அதே வருஷத்திலேயே சிவாஜி பிரதாபகட் என்ற பெயருள்ள ஒரு பெரிய கோட்டையை நிர்மாணம் செய்தார். இதற்கு இரண்டு வருஷங்களுக்குப் பிறகு மோரேசுவர், திருமூல பிங்கலி இருவரையும் பேஷ்வாக்களாக ஆக்கி, கொங்கணத்தை வெற்றிகொள்ள ஒரு பெருஞ் சேனையைத் திரட்டினுர்.

இந்தத் தடவை விஜயபுர சுல்தான் சிவாஜியை ஒரேயடியாய் நிர்மூல மாக்கி விடுவதென்று நிச்சயம் செய்து கொண்டான். கி. பி. 1659-ம் வருஷம், அப்ஜல்கான் என்ற பெயருள்ள ஒரு யுத்த வீரன் ஐயாயிரம் குதிரை வீரர், ஏழாயிரம் காலாட்படை, அநேக பீரங்கிகள் இவைகளுடன் புறப்பட்டு, 'சிவாஜியைப் பிடித்து விலங்கிட்டுக் கொண்டு வந்து சுல்தான் முன் நிறுத்துவேன்!' என்று கர்வத்துடன் மார்பு தட்டினன்.

இவ்வளவு பெரிய சைனியத்துடன் யுத்தம் செய்வது உசிதமல்ல என்பதை உணர்ந்த சிவாஜி சமாதானம் செய்து கொள்ளத் தயாரானர். அப்ஜல்கான் கோபிநாதர் என்ற பிராமணரை சிவாஜியிடம் அனுப்பிவைத்தான். பிரதாப கட்டில், நிறைந்த சபையில், கோபிநாதர் சிவாஜியைச் சந்தித்தார். பரஸ்பரப் பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு இரவைக் கழிக்க கோபிநாதரை ஒரு வீட்டில் தங்கவைத்தார்.

இரவு சிவாஜி கோபிநாதரைச் சந்திக்க வந்தார். வார்த்தையாடுவதில் சிவாஜி பலே நிபுணர். அவர் கோபிநாதரைச் சமாதானம் செய்யவேண்டி, 'தாங்கள் பிராமணர்! எங்களைவிடச் சிரேஷ்டமானவர்! ஆயினும் எங்கள் வார்த்தையைச் சற்றே கேளுங்கள். ஏதோ நாங்கள் செய்வதெல்லாம் ஹிந்து ஜாதியின் நலத்திற்காகத்தான். பவானி தேவியே எங்களைப் பிராமணரையும் பசுக்களையும் காக்கும்படி கட்டளையிட்டிருக்கிருள். ஹிந்து தேவாலயங்களை அழிப்பவர்களுக்குத் தண்டனை அளிக்கும்படி கட்டளையிட்டிருக்கிருள். ஹிந்து தர்மத்தின் சத்துருக்களுடன் எதிர்த்து நிற்கும்படி ஆக்ஞையிட்டிருக்கிருள். தாங்கள் பிராமணர்! பவானி தேவியின் ஆக்ஞையை உணருங்கள்! நமது ஜாதீய தர்ம ராஜ்யத்தில் இருந்து சுதந்திரமாக வாழுங்கள்!' என்ருர்.

கோபிநாதர் சிவாஜியின் கதைகளைக் கேட்டு, அவருக்கு உதவி செய்வதாக வாக்களித்தார். காரியத்தைப் பூர்த்தி செய்வதற்காக எப்படியாவது சிவாஜி அப்ஜல் கானைச் சந்திக்க வேண்டுமென்று முடிவாயிற்று.

சில தினங்களுக்குப் பிறகு பிரதாபகட் துர்க்கத்திற்கு அருகில் சந்திப்பு ஏற்பட்டது. அப்ஜல்கான் 2,500 குதிரை வீரர்களைக் கோட்டை யருகில் நிற்க வைத்து விட்டுத் தான் பல்லக்கில் அமர்ந்து ஒரே ஒரு வேலைக்காரனுடன் சிவாஜியைச் சந்திக்க வந்தான். சிவாஜி அன்று தினம் பவானியின் பூஜையை முடித்துக்கொண்டு, குறிப்பிட்ட இடத்திற்கு அப்ஜல்கானைச் சந்திக்க வந்தார். வரும்போது தம் தாயின் பாதங்களுக்கு நமஸ்கரித்து அவருடைய ஆசிர்வாதத்தைப் பெற்று வந்தார். சட்டையும் மேல் அங்கியும் அணிந்து அவைகளுக்குள் கூர்மையான புலிநகத்தையும் மறைத்து வைத்துக் கொண்டார். பிறகு தம் பால்ய நண்பனான தாஞ்ஜியுடன் அப்ஜல்கானைச் சந்திக்கப் புறப்பட்டார். சந்திக்கும் சமயம் அப்ஜல்கானை ஆலிங்கனம் செய்துகொள்வது போல் பாவனை செய்து, தம் புலி நகத்தால் அவனைப் பிளந்து கீழே தள்ளினார். அதன்பின் சிவாஜியின் சேனை சுல்தானின் சேனையை வெருட்டியது. அந்தச் சமயம் பல கோட்டைகள் அவர் வசமாயின.

விஜயபுரத்துடன் மூன்று வருஷம் வரை போர் நடந்தது. எந்தத் தரப்பாருக்கும் வெற்றி கிட்டவில்லை. கி. பி. 1662-ம் வருஷம் ஷாஹஜி மத்யஸ்தம் செய்து சிவாஜிக்கும் விஜயபூர் சுல்தானுக்கு மிடையே பரஸ்பர சமாதானம் ஏற்பட்டது. ஷாஹஜி சிவாஜியைக் காண வந்த போது சிவாஜி தம் குதிரையினின்று இறங்கி, அவரை நமஸ்கரித்து, அவருடைய பல்லக்கின் கூடவே நடந்து வந்தார். மகனுடன் வெகுநாள் இருந்துவிட்டு, ஷாஹஜி ஆனந்தத்

துடன் விஜயபுரம் சென்று இருவருக்கும் சமாதானம் செய்துவைத்தார். தம் தந்தை செய்துவைத்த ராஜிக்கு விரோதமாய் சிவாஜி ஒருபோதும் நடந்ததேயில்லை. அவருடைய ஆயுள்வரை பிறகு விஜயபுரத்துடன் யுத்தமும் செய்யவில்லை. ஆனால் ஷாஹஜி இறந்த பிறகும் விஜய புரத்தில் நடந்த யுத்தத்தில் சிவாஜி பங்கெடுத்துக் கொள்ளவில்லை.

1662-ம் வருஷம் சமாதானம் நிறுவப்பட்டது. அந்த வருஷம்தான் மொகலாயர்களுடன் யுத்தம் ஆரம்பமான தென்று முதலிலேயே சொல்லியிருக்கிறோம். நமது கதையும் அங்கேதான் ஆரம்பமாகிறது. மொகலாயர்களின் சண்டை ஆரம்ப காலத்தில் சிவாஜியிடம் ஏழாயிரம் குதிரைவீரர்களும் ஐயாயிரம் காலாட்படையும் இருந்தன. அந்தச் சமயம் சிவாஜியின் வயது இருபத்தைந்து.



அத்தியாயம் 9

சுப காரியம் நடத்திவைத்தல்

மாலை நேரமாயிற்று. சிம்ஹகட் துர்க்கத்தில் சேனைகள் குவிந்தன. வெளியே உள்ளவர்களுக்குக் கோட்டைக்குள் என்ன நடக்கிறதென்ற தகவலே தெரியவில்லை. கோட்டையின் ஓர் உயர்ந்த இடத்தில் பெரிய யுத்த வீரர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். மேற்குத் திசையில் அழகிய நீரா நதி பெருகிக்கொண்டிருந்தது. அதன் கரைகளிலுள்ள விருக்ஷங்கள் வஸந்த ருதுவினால் மலர்ந்திருந்தன. நாற்புறமும் மலர்ந்திருந்த மலராலும் பசுமையாலும் இயற்கை மனோகரமாக இருந்தது. வடக்கே அகண்ட பூமியின் பசுமை சூரியனின் கிரணங்களால் அகண்ட ஒரு பசும் சமுத்திரம் போல் காட்சி யளித்தது. மகத்தான புனா நகரமும் தன் கௌரவத்தைக் காட்டிக்கொண்டிருந்தது. வீரர்களும் அந்தத் திக்கையே நோக்கி, 'இன்று இந்த நகரத்தில் என்ன சம்பவம் நடக்கப் போகிறதோ பார்ப்போம்!' என்று எண்ணினார்கள்.

தென்புறம் எங்கே பார்த்தாலும் மலைகளின் கூட்டம்! அவைகளின் சிகரங்களில் மறைந்து செல்லும் சூரியனின் கிரணங்களால் அவைகள் சோபித்துக்கொண்டிருந்தன. ஆனால் நமது வீரர்கள் இந்த இயற்கைக்

காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருக்கவில்லை. அவர்களுடைய சிந்தையே வேறு.

தைரியமான யுத்தத் தயாரிப்புகள் ஒரு மகத்தான காரியம்தான். மனிதர்கள் இம்மாதிரி மகத்தான செயல்களில் ஈடுபடும் போது, ஒன்று காரிய சித்தியாகி வாழ் நாளெல்லாம் சுதந்திரமாய் நிம்மதியாய் வாழ்கிறார்கள்; வெற்றி பெறாவிட்டால், வாழ்க்கையின் ஆசைகள் யாவுமே அடியோடு நஷ்டமாகி விடுகின்றன. அப்பொழுது தைரியவான்கள் கூடத் தம் தைரியத்தை இழந்துவிடுகிறார்கள். 'ஒன்று, இன்று தினம் ஷாயிஸ்தாகான் கொல்லப்பட்டு மொகலாய சைனியம் தோல்வியுற்று, இந்த மஹாராஷ்டிரத்தை விட்டு ஓடிவிடவேண்டும்; அல்லது மஹாராஷ்டிர ஜீவன சூரியன் நிரந்தரமாக அஸ்தமித்து, பாரத வர்ஷத்தின் சுதந்திர தாகம் வேரோடு களைந்தெறியப்படவேண்டும்.' இந்த விதமான யோசனையில்தான் இருந்தார் சிவாஜி. வீரன் வீரனைப் பார்க்கும் போது அவரவர்களுடைய அந்தரங்கம் தெரிந்து விடுகிறது. இருபது இருபத்தைந்து வீரர்களுடன் சிவாஜி சத்துருவின் சேனைக்குள் பிரவேசிக்கப் போகிறார். இது ஒரு பயங்கரமான காரியம். இம்மாதிரி காரியங்களை இதற்கு முன் சிவாஜி செய்திருக்கிறார் என்பதில் சந்தேகமே இல்லை.

அந்த வீர மாவலிச் சேனையின் மத்தியில் மோரேசுவரும், திருமூல பேஷ்வாவும் இருந்தனர். மோரேசுவர் சிறு வயதிலேயே சிவாஜியின் தந்தை ஷாஹஜியின் தலைமையின் கீழ் யுத்த காரியங்களை நிர்வகித்திருக்கிறார். அதன் பின் சிவாஜியுடன் இருந்து பிரதாபகட் போன்ற சாதுரியமான கோட்டைகளை நிர்மாணம் செய்திருக்கிறார். நாலைந்து வருஷத்திற் குள்ளாகவே பேஷ்வா பதவிக்கு வந்துவிட்டார். அதன் பின்னும் தம் காரியத்தில் அதிக வல்லமை காட்டினார். சிவாஜி அப்ஜல்கானை வீழ்த்திய

போது, மோரேசுவர் தான் அவனுடைய சேனையை ஆக்கிரமித்து அவைகளை விரட்டியடித்தார். மொகலாயர் களிடம் யுத்தம் ஆரம்பமானது முதல் அவர்தான் காலாட் படைக்குச் சேனுபதியாக இருந்தார். யுத்த காலத்தில் தைரியமாகவும், கலங்காமலும், சமயோசிதமான யோசனை கூறுவதில் மோரேசுவர் சமர்த்தர். அவரைவிடச் செய லாற்றும் சக்தியுள்ள மித்திரர் சிவாஜிக்கு யாருமே கிடையாதென்று சொல்லிவிடலாம்.

ஆவாஜி ஸ்வர்ணதேவர் சிவாஜியின் யுத்தமுறை தெரிந்த நண்பரான ஒரு பிராமணர். அவருடைய பழைய பெயர் நீலபந்த் ஸ்வர்ண தேவர். ஆனுல் அவர் ஆவாஜி என்ற பெயரிலேயே பிரசித்தமாக அழைக்கப்பட்டார்.

பிரசித்தி பெற்ற அண்ணுஜீ தத்தர் சிம்ஹகட் கோட் டையில் இருந்தார். பவனகட் என்ற கோட்டையை அவர்தான் ஜயித்தார். அவரும் சிவாஜியின் நண்பரில் கண்யமான ஒருவர்.

குதிரைப் படையின் சேனுபதி நிதாயி அன்று சிம்ஹகட்டில் இல்லை. அவன் தன் சைனியத்துடன் சென்று மொகலாய சேனையை ஔரங்காபாத்திலும் அகமத்நகரத்திலும் தாக்கியதை, சாந்த்கான், ஷாயிஸ் தாகான் மூலமாக நாம் ஏற்கெனவே படித்தோம். இந்தச் சமயம் சிம்ஹகட்டில் ஒரு சிறு தலைவனுடன் ஒரு சிறு படைதான் இருந்தது.

முந்தின அத்தியாயங்களில் சிவாஜிக்கு மாவலி ஜாதி பாலிய நண்பர்கள் மூவர் என்று கூறினோம். அவர்களில் ஒருவரான பாஜி-பஸல்கர் காலமாகி மூன்று வருஷமாகி விட்டது. மற்ற இருவரான தானுஜி மாலசுரே, யசாஜி கான்ஹ இருவரும் சிம்ஹகட்டிலேயே இருந்தனர். இவர் களுடைய பாலிய லீலைகளும், யௌவன சேஷ்டைகளும்,

விஷமத்தனமான தைரியங்களும் இன்றும் மறக்கப்படவில்லை.

நன்ருக இருட்டிவிட்டது. அந்த வீரமண்டலம் அதுவரை அந்த உயர்ந்த மேட்டிலேயே நின்றிருந்தது. இதற்குள் சிவாஜி வந்து சேர்ந்தார். அவர் முகம் உறுதியாலும் கம்பீரத்தாலும் திகழ்ந்தது. இன்றும் அவர் தம் ஆடைகளுக்குள் ஆயுதங்களைத் தரித்துக்கொண்டிருந்தார்.

'பாயி! எல்லாம் சரியாக இருக்கிறது! செல்!' என்ருர் சிவாஜி.

'ஸ்வர்ண தேவரோ, அண்ணுஜியோ, அல்லது நானே மூவரில் யாரும் இன்றிரவு கூட வரவேண்டியதில்லையா? அரசே, ஆபத்துக் காலத்தில் எப்பொழுது நாம் பிரிந்திருக்கிருேம்?' என்ருர் மோரேசுவரர்.

'பேஷ்வாஜி! மன்னியுங்கள்! மேற்கொண்டு வற்புறுத்தாதீர்கள்! தங்களுடைய சாமர்த்தியமும் பராக்கிரமமும் எனக்குத் தெரியாததல்ல. ஆனல் இன்று மன்னித்துக் கொள்ளுங்கள். பவானியின் கட்டளைப்படி நான் இன்று விஷமப் பிரதிக்ஞை செய்துகொண்டிருக்கிறேன். இன்று நானே அந்தக் காரியத்தைச் சாதிப்பேன். ஆனல் அதில் தோல்வி ஏற்பட்டாலும் அல்லது அந்த முயற்சியில் என் பிராணனே போகுமானுலும், நீங்கள் மூவரும் இருக்கும்வரை மஹாராஷ்டிர தேசத்திற்கு யாதொரு ஹானியும் வராது. நீங்களும் என்னுடன் வந்து உயிரை இழந்து விட்டால் தேசம் யாருடைய புத்தி பலத்தினுல் நிலைக்கும்? சுதந்திரத்தை யார் ஸ்தாபிப்பார்கள்? ஹிந்து தர்மத்தை யார் ரக்ஷிப்பார்கள்? தவிர, புறப்படும் போது வேறு ஒன்றும் சொல்லாதீர்கள்!' என்ருர் சிவாஜி.

மேற்கொண்டு சொல்வது வீண் என்பதை பேஷ்வா உணர்ந்தார். ஆகையால் அவர் வேருென்றும் பேசவில்லை.

சிவாஜி பேஷ்வாவை அழைத்து, 'மோரேசுவர்! தாங்கள் தந்தையிடம் காரியம் பார்த்திருக்கிறீர்கள்! என் தந்தைக்குச் சமானமானவர்கள்! என்னை ஆசீர்வதியுங்கள்! தங்கள் ஆசியால் வெற்றியே கிட்டும். பிராமணரின் ஆசி ஒரு போதும் வீணானதில்லை. ஆவாஜீ! அண்ணாஜீ! ஆசீர்வாதம் செய்யுங்கள்! நான் புறப்படவேண்டும்!' என்றார்.

மூவரும் கண்ணீர் பெருகும் கண்களுடன் ஆசீர்வாதம் செய்தனர். அதன் பின் சிவாஜி தம் பாலிய நண்பர்களான தானாஜியிடமும் யசாஜியிடமும், 'பாலியத் தோழர்களே! விடை கொடுங்கள்!' என்றார்.

'பிரபோ, எந்தக் குற்றத்திற்காக என்னை கூடச் சேர்த்துக்கொள்ளவில்லை? எந்த இரவில், எந்தக் கோட்டையை வெற்றிகொள்ள நான் தங்களுடன் வரவில்லை? ஞாபகப்படுத்திப் பாருங்கள்! கொங்கண தேசத்தில் நதிகள், காடுகள், மலைகள், குகைகள் இவைகளில் தங்களுடன் நான் சுற்றி வேட்டையாடவில்லையா? உத்தரவு கொடுங்கள்! நானும் தங்களுடன் வந்து வெற்றிகொண்டு தங்கள் ஆனந்தத்துடன் நானும் ஆனந்தமடைகிறேன்! தங்கள் பாலிய நண்பனைக் கைவிடமாட்டீர்கள் என்று நம்புகிறேன்' என்றார் தானாஜி.

சிவாஜி பார்த்தார். தானாஜியின் கண்களில் கண்ணீர் பெருகியது. உடனே சிவாஜி அன்புடன், 'சீக்கிரம் சித்தமாகுங்கள்!' என்று சொல்லித் தம் தாயின் அந்தப்புரம் சென்றார்.

தாய் ஜீஜாபாயி, தேவியின் சிலை முன் நின்று, 'ஹே! ஜகன்மாதா! என் புத்திரனை இன்றைய விபத்திலிருந்து நீதான் காப்பாற்றவேண்டும்!' என்று வேண்டிக்கொண்டிருந்தாள். அதே சமயம் சிவாஜியும் உள்ளே வந்து, 'அன்னையே எனக்கு ஆசீர்வாதம் செய்யுங்கள்! நான் போகவேண்டும்' என்றார்.

ஜீஜாபாயி அன்பு கனிந்த குரலில், 'வத்ஸ! வா, அருகில் வா! எப்பொழுது உன்னுடைய விபத்துக்கள் கழியும்? எப்பொழுது நான் கவலையினின்றும் விடுபடுவேன்?' என்ருள்.

'தங்கள் ஆசீர்வாதத்தால் எந்த ஆபத்தினின்று நான் தப்பவில்லை? எந்தப் போரில் நான் வெற்றிகொள்ளவில்லை?'

'வத்ஸ! தீர்க்காயுசாக இரு! ஈசுவரி உன்னை ரட்சிப்பாள்!' என்று சொல்லி, சிவாஜியின் தலையில் கையை வைத்து வருடினுள். அவள் கண்களினின்றும் கண்ணீர் பெருகியது.

சிவாஜி எல்லோரிடமும் விடைபெற்ருர். ஆனல் அப்பொழுதெல்லாம் அவர் கண்கள் கலங்கவில்லை. இந்தத் தடவை அவருடைய கண்களிலும் கண்ணீர் பெருகலாயிற்று. தழு தழுத்த குரலில், 'அம்மா! தாங்கள் எனக்கு ஈசுவரி! நான் பக்தியுடன் ஜன்மம் பூராவும் தங்களுக்கே சேவை செய்வேன்! தங்கள் ஆசியினுலேயே எல்லா விபத்துக்களினின்றும் தப்புவேன்!' என்ருர்.

விருத்த ஜீஜாபாயி கண்ணீருடன் சிவாஜிக்கு விடையளித்து, 'புத்திர! ஹிந்து தர்மத்தின் ஜயத்தை ஸ்தாபனம் செய்! தேவாதி தேவனுன மஹாதேவன் உன்னை ரட்சிப்பார்! நமது முன்னேர்கள் தேவகட்டின் அதிபர்களாக இருந்தார்கள்! ஹிந்து தர்மத்தை அவலம்பித்தார்கள்! நான் உனக்கு ஆசீர்வாதம் செய்கிறேன்! நீ மஹாராஷ்டிரத்தின் ராஜனுவாய்!' என்ருள்.

சேனைகள் தயாராக நின்றிருந்தன. சிவாஜி குதிரை மீதேறிக் கொண்டார். சைனியம் கோட்டைக் கதவை நோக்கிப் புறப்பட்டது.

கோட்டையை விட்டு வெளியே வரும் சமயம் ஒரு வாலிப வீரன் சிவாஜியின் முன் வந்து வணங்கி நின்ருன்.

சிவாஜி அவனை அறிந்துகொண்டு, 'ரகுநாத்ஜி ஹவல்தார்! இந்தச் சமயத்தில் உன்னுடைய வேண்டுகோள் என்ன?' என்றார்.

'பிரபோ! அன்று தோரண துர்க்கத்திலிருந்து நான் கடிதம் வாங்கிக்கொண்டுவந்து கொடுத்தபோது தாங்கள் சந்தோஷத்தினால் வெகுமதியளிக்க விரும்பினீர்கள்!' என்றான் ரகுநாத்.

'ஆமாம்! இன்று இந்தக் கடினமான காரிய ஆரம்பத்தில் வெகுமதி பெற்றுக்கொள்ள வந்தாயா?'

'நான் வேண்டுவதெல்லாம் இந்த வெகுமதிதான்! அடியேனையும் கூட அழைத்துச் செல்லுங்கள்! இருபத்தைந்து மாவலி வீரர்களுடன் தாங்கள் புனா நகரத்தில் நுழையும் போது அடியேனும் கூட இருக்கிறேன்! இது தான் என் பிரார்த்தனை!'

'ராஜபுத்திர இளைஞ! ஏன் ஆசைப்பட்டு இந்த விபத்தில் சிக்குகிறாய்? நீ சிறுவன்! உயிரை விட உனக்கு அதிகாரம் கிடையாது!'

'ராஜன்! தங்களுடன் கூடவே நானும் உயிரை விடுகிறேன்! இந்த யுத்தத்தில் நான் தங்களுக்குச் சகாயமாக இருந்து உயிரிழந்தால் அதனால் நான் அமரத்வமடைவேன்!'

வாலிப வீரனான ரகுநாதனின் கம்பீரமான முகத்தோற்றத்தையும், அவனுடைய வீரப் பார்வையையும், இந்த வீர மொழிகளையும் கேட்டு சிவாஜி சந்தோஷமடைந்தார். அவனையும் தம் சேனா தளத்துடன் சேர ஆக்ஞாபித்தார். சிவாஜியை வணங்கி ரகுநாதன் குதிரை மீது ஏறினான்.

சிம்ஹகட்டிலிருந்து புனா நகரம் வரை சிவாஜியின் சேனைகள் மறைந்திருந்தன. சிறிது வெளிச்சமோ சிறு சப்தமோ உண்டானால்கூட சகல ரகசியங்களும் வெளிப்

பட்டுவிடும். சைனியங்கள் நிசப்தமாகத் தத்தம் இடங்களில் பதுங்கின. இரவு, உலகின் மேல் தன் கரும் போர்வையை மூடி இருள்மய மாக்கினாள். தாணாஜி, யசாஜி, மற்றும் இருபத்தைந்து மாவலி வீரர்களுடன் சிவாஜி புனாவுக் கருகில் ஒரு தோட்டத்தில் ஒளிந்து கொண்டார். ரகுநாதன் நிழல்போல் சிவாஜியைத் தொடர்ந்துகொண்டிருந்தான்.

அதிக அந்தகாரத்தின் காரணமாக அந்த மாந் தோட்டம் மறைவாகவே இருந்தது. அதன்வழியாக நகரத்திற்குச் செல்லும்ஜனங்களுக்கு அந்த இருளில் கிளைகளின் சலசலப்பைத் தவிர்த்து வேறொன்றும் கேட்கவில்லை. மந்தமாருதம் வீசிக்கொண்டிருந்தது.

நாழிகை ஆக ஆக, புனா நகரம் நிசப்தமாயிற்று. வீடுகளில் விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. நடு நடுவே கேட்கும் பாராக்காரர்களின் சப்தத்தைத் தவிர்த்து வேறொன்றும் கேட்கவில்லை. எங்கும் ஓரே நிசப்தம். திடீரென்று ' சூங்! சூங்!' என்று சப்தம் கேட்டது. சிவாஜியின் ஹிருதயம் பொங்கலாயிற்று. அவர் அந்தத் திசையை நோக்கலானார். தெருவின் உட்புறம் சப்தம் கேட்டது. ஆகையால் நகரத்திற்கு வெளியே இருப்பவர்களுக்கு ஒன்றும் தெரியவில்லை.

மீண்டும் அதே சப்தம் கேட்கலாயிற்று. சிவாஜியும் அதே பக்கம் பார்க்கலானார். அநேக விளக்குகளை ஏந்திக் கொண்டு ஜனங்கள் இந்தப் பக்கமாகவே வந்து கொண்டிருந்தார்கள்! இதுதான் அந்த ஊர்வலம்!

ஊர்வலம் அருகில் வந்தது - ஸ்பஷ்டமாகத் தெரிந்தது. ஊர்வலத்தில் பலவிதமான வாத்தியங்கள் வாசிக்கப்பட்டன. சிவாஜி பேசாமல் தம் பாலிய நண்பர்களான தாணாஜியையும், யசாஜியையும் தழுவிக்கொண்டார். ஒருவருக்கொருவர் பார்த்துக்கொண்டனர். இருவர்

மனதும் ஏகபாவமாக மாறியதால், வாயினின்றும் வார்த்தைகள் வரவில்லை. கண்களில் மாத்திரம் கண்ணீர் ததும்பியது. அந்த மௌன நிலையிலேயே சிவாஜியும், அவருடைய தோழர்களும் அந்த ஊர்வலத்துடன் கலந்து கொண்டனர்.

ஊர்வலக்காரர்கள் ஷாயிஸ்தாகானின் அரண்மனையின் சமீபமாகவே செல்லலானார்கள். அந்த மஹலிலிருந்த பெண்கள் ஜன்னல் வழியாக, இந்த மேளதாள ஊர்வலத்தைப்பார்க்கலானார்கள். ஊர்வலம் மெள்ள மெள்ளச் சென்றது. மாதரும் துயிலச் சென்றனர். ஊர்வலக்காரர்களில் இருபத்தைந்து பேர் கான்ஸாஹிப்பின் வீட்டருகே யாரும் காண முடியாதபடி ஒளிந்துகொண்டனர். ஊர்வலத்தின் கோஷமும் மெள்ள மெள்ள ஒடுங்கியது.

இரவு இன்னும் கோரமாக இருண்டது. ஷாயிஸ்தாகானின் சயன அறையில் ஒரு சாளரம் இருந்தது. மெள்ள மெள்ள அதில் கொஞ்சம் சப்தம் கேட்கலாயிற்று. கான்ஸாஹிப் வீட்டுப் பெண்கள் நித்திரையில் இருந்தார்களோ விழித்திருந்தார்களோ, இந்தச் சப்தத்தில் யாரும் கவனம் செலுத்தவில்லை.

ஒரு செங்கல்! பிறகு மற்றொன்று. இதன்பின் ஒவ்வொன்றாகக் கற்கள் நழுவலாயின. திடீரென்று, 'திருடன்! திருடன்!' என்று ஸ்திரீகள் கூக்குரலிட்டனர். விளக்கைக் கொளுத்திப் பார்த்து, பிரமித்துவிட்டனர். எறும்பு வரிசை போல ஒருவர் பின் ஒருவராக வீரர்கள் வீட்டில் புகுந்துகொண்டிருந்தனர். பிறகு என்ன? ஒரு கூக்குரல்! ஷாயிஸ்தாகானும் விழித்துக்கொண்டான்! ஸ்திரீகள் விஷயத்தைச் சொன்னார்கள்!

ஷாயிஸ்தாகான் அப்பொழுதுதான் சிவாஜி கைது செய்யப்பட்டு, தன்முன் கொண்டுவந்து நிறுத்தப்பட்

டிருப்பதாகக் கனவு கண்டுகொண்டிருந்தான்! விழித்துக் கொண்டதும், சிவாஜி புனு நகரத்தை வசம் செய்து தன் வீட்டிலும் புகுந்து விட்டார் என்பதைக் கண்டான்.

ஓடுவதற்காகக் கான்ஸாஹிப் ஒரு வாசற்படியை நோக்கினான். அங்கே ஒரு வீரன் கையில் வாளுடன் நின்றான்! மற்றொரு வாசற்படியின் பக்கம் திரும்பினான். அங்கும் அதே காட்சி! வாசற்படியாவும் இம்மாதிரி தடுக்கப்பட்டதைக் கண்டு சாளரத்தைத் தேடலானான். ஆனால் அதே சமயம், 'ஹரஹர மஹாதேவ!' என்ற கோஷத்தைக் கேட்டான். அருகே இருந்த வீடும் மஹாராஷ்டிர வீரரால் நிறைந்திருந்தது.

'அட பாவமே! கான்ஸாஹிப்பின் வீடு கொள்ளை போயிற்று!' என்று கூச்சல் கிளம்பியது. அரண்மனைக் காவலாளிகள் கோபம் கொண்டு ஓடிவந்தனர். பலர் மாண்டனர். ஆயினும் தங்கள் தலைவனை ரட்சிக்க அநேகர் வந்து அந்த இருபத்தைந்து மாவலி வீரர்களையும் வளைத்துக்கொண்டனர்.

அந்த மஹலில் கோர தாண்டவம் நடந்துகொண்டிருந்தது. விளக்குகள் கொளுத்தப்பட்டன. ஆனால் மாவலி வீரர்கள் அந்த இருளிலேயே போரிட்டுக் கொண்டிருந்தனர். அந்தகாரத்தில்தான் ஹிந்துக்களும் முஸல்மான்களும் யுத்தம் புரிந்துகொண்டார்கள். கதவுகளில் கடகடவென்று சப்தம். ஆக்ரமிப்புக்காரர்களிடையே கலகலவென்ற ஓசை. எதிர்த்தவர்களின் ஓலம். இதுதான் அந்தக் கட்டிடத்தில் கேட்ட ஓசைகள். இதே சமயம் சிவாஜி கையில் வாளுடன் வீரர் மத்தியில் தோன்றினார். வீரர்கள் 'ஹரஹர மஹாதேவ!' என்று கோஷமிட்டனர். மாவலி வீரர்கள் ஹுங்காரம் செய்தனர். மொகலாயக் காவலாளிகளில் இறந்தவர் தவிர மற்றவர்

ஓட்டமெடுத்தனர். சிவாஜி கதவை உடைத்துக்கொண்டு தாமே ஷாயிஸ்தாகானின் சயன அறையில் நுழைந்தார்.

சேனுபதியை ரட்சிப்பதற்காகப் பல முகம்மதிய வீரர்கள் அங்கு வந்து சேர்ந்தனர். சிவாஜியின் கையால் உயிர் துறந்த சாந்த்கானின் மகன் ஷம்ஷேர்கான் நின்றிருந்தான். தந்தை அவமானமடைந்து உயிரைத் தியாகம் செய்து விட்டார். மகன் தலைவனின் உயிரைக் காப்பாற்றத் தன் உயிரைத் தியாகம் செய்ய வந்திருக்கிறுன். சிவாஜி ஒரு கணம் நின்ருர். உடனே வாளை உருவிக்கொண்டு, 'வாலிபா! உன் தந்தையைக் கொன்று என் கை பாபத்தை அடைந்திருக்கிறது.நான் உன்னைக் கொல்ல விரும்பவில்லை. வழியை விடு!' என்ருர்.

ஷம்ஷேர்கான் பதிலொன்றும் கூறவில்லை. அவன் கண்களில் கேலியும் கோபமும் ஜ்வலித்தன. சிவாஜிக்குத் தம்மைக் காப்பாற்றிக்கொள்ளக்கூட நேரமில்லை. ஷம்ஷேர்கானின் கூரிய வாள் அவர் தலைக்கு வந்துவிட்டது.

ஒரு கணம் சிவாஜி தம்மை மறந்து பவானியின் பெயரை நினைத்தார். திடீரென்று பின்புறமிருந்து ஒரு ஈட்டி ஷம்ஷேர்கானின் உடலில் பாய்ந்து, அவனைக் கீழே உருட்டியது. திரும்பினுர் சிவாஜி! ரகுநாத்ஜி ஹவல்தார் எதிரே நின்ருன்.

'ஹவல்தார்! உன்னுடைய இந்தக் காரியம் என் உயிருள்ளவரை மறவாது!' என்று மாத்திரம் சொல்லி விட்டு முன்னேறினுர் சிவாஜி.

ஷாயிஸ்தாகான் சாளரத்தில் கயிற்றைக் கட்டி அதன் வழியாகக் கீழே இறங்கிக்கொண்டிருந்தான். சில மாவலி வீரர்கள் சாளரத்தின் பக்கம் ஓடினர். அவர்களில் ஒருவன் வாளை வீசினுன். ஷாயிஸ்தாகானின் விரல் ஒன்று துண்டித்து விழுந்தது. ஆயினும் ஷாயிஸ்தாகான் பின்னுல் திரும்பிப் பார்க்காமல் ஓடலானுன். ஆனுல் அவனுடைய

மகன் அப்துல் பதஹ்ஹூம் மற்றக் காவலாளிகளும் கொல்லப்பட்டனர். வீடு பூராவும் ஒரே ரத்த வெள்ளம் பெருகியது. ஸ்திரீகளும் பாலர்களும் கூக்குரலிட்டனர். முகம்மதியர்களைத் துவம்சம் செய்ய மாவலி வீரர்கள் நாற்புறமும் ஓடிக்கொண்டிருந்தனர். தீவட்டிகளின் வெளிச்சத்தில் அந்தக் கோரக் காட்சிகள் நன்ருகத் தெரிந்தன.

இதைப் பார்த்து சிவாஜி மாவலி வீரர்களை அழைத்தார். சிவாஜிக்கு எந்தச் சமயத்திலும் இந்த வீரர்கள் வெற்றியைத் தேடித் தந்தனர். ஆயினும் வீணுக உயிர்கள் மடிவதை சிவாஜி விரும்பவில்லை. அவர் எல்லோரையும் அழைத்து, 'வீணுகக் கொலை புரியாதீர்கள்! ஷாயிஸ்தா கான் கோழைத்தனமாக ஓடிவிட்டான். நமது காரியம் சித்தியாகி விட்டது! இனி நம்முடன் சண்டை செய்ய முடியாது. நாம் சீக்கிரம் சிம்ஹகட்டிற்குத் திரும்ப வேண்டும்!' என்ருர்.

அந்தகாரம் சூழ்ந்த அந்த இரவில் சிவாஜி அனுயாசமாகப் புனுவை விட்டு வெளியேறி சிம்ஹகட்டை நோக்கி விரைந்தார். இரண்டு குரோச தூரம் வந்த பின் தீவட்டிகளைக் கொளுத்துமாறு கட்டளையிட்டார். பல தீவட்டிகள் கொளுத்தப்பட்டன. புனுவிலிருந்து பார்த்த ஷாயிஸ்தா கானுக்கு மஹாராஷ்டிர சேனை நிர்விக்கினமாய் சிம்ஹகட் செல்வது நன்ருகத் தெரிந்தது.

மறுநாள் முகம்மதியர்கள் சிம்ஹகட்டின் மேல் படையெடுத்தனர். ஆனுல் சண்டை யார் போட்டார்கள்? சிறு சிறு பிளவாகப் பிரிந்து ஓடலானுர்கள். கர்த்தாஜியும் அவர் ஆதீனத்திலிருந்த மஹாராஷ்டிர வீரரும் அவர்களை வெகுதூரம் பின்தொடர்ந்து விரட்டி வந்தனர். தைரியமுள்ள வீரர்களின் போர்த் தாகம் அதிகரித்தது. ஆனுல் ஷாயிஸ்தாகான் அப்படிப்பட்டவனல்ல.

அவன் அவுரங்கஸீபுக்கு ஒரு கடிதம் எழுதினான். அதில் தன் சேனைகளை நிந்தித்து, சிவாஜியுடன் யசவந்த ஸிம்ஹர் சேர்ந்ததையும் குறிப்பிட்டிருந்தான். அவுரங்கஸீப் சகல விஷயங்களையும் அறிந்தான். இரண்டு சேனாபதிகளையும் உபயோகமற்றவர்கள் என்றெண்ணி, தன் மகன் சுல்தான் முகஜ்ஜம் என்பவனைத் தென் தேசத்தின் மேல் யுத்தம் செய்யும்படி அனுப்பி, பிறகு அவனுக்கு உதவிக்காக யசவந்தரை இரண்டாம் முறை அனுப்பினான்.

இதன் பின் ஒரு வருஷம் வரை யுத்தம் ஒன்றும் நடைபெறவில்லை. கி. பி. 1644-ம் வருஷத்தின் ஆரம்பத்தில் சிவாஜியின் தந்தை தேகவியோகமானார். சிவாஜி அவருடைய அந்திமக் காரியங்களை சிம்ஹட்டிலேயே செய்து முடித்துப் பின் ராய்கட்டிற்குச் சென்று அரசை ஏற்று, தமது பெயரால் நாணயம் அச்சிட்டு வழங்கினார்.



அத்தியாயம் 10

காதல் வேட்கை

தோரண துர்க்கத்திலிருந்து திரும்பிவந்த நாள் முதலே ரகுநாதனின் உள்ளத்தில் தோன்றிய காதல் வளரலாயிற்று. அந்தக் காதற் கன்னிகை யார்? ஸரயூ பாலாதான்!

அன்று மாலை போர்க்கோலம் பூண்ட ரகுநாதனைக் கண்டதும், தன் தேசத்தானை அந்த வீரன்மேல் அவள் காதல் கொண்டாள். அவள் மனக்கண்ணினின்றும் அவன் உருவம் மறையவே இல்லை. அவளுக்குத் திரும்பத் திரும்ப அந்தச் சம்பவத்தின் நினைவே வந்துகொண் டிருந்தது.

அன்று இரவு ஸரயூபாலா அந்தத் தேசீய வாலிப வீரனுக்குப் போஜனம் செய்வித்துக் கொண்டிருக்கும் போது, அவளும் அருகிலேயே உட்கார்ந்து அவனுடைய உடலழகைப் பருகிக்கொண்டிருந்தாள். இருவர் கண் களும் சந்தித்தன. ஸரயூ வெட்கத்தினால் அதை விட்ட கன்றாள்.

செல்லத்தான் விரும்பினாள். அவள் உள்ளத்தில் மற்றொரு நூதன பாவம் எழுந்தது. 'ரகுநாதர் ஏன் என் பக்கம் அப்படிப் பார்த்தார்? அவருக்குத் தன் ஸ்வதேசக் கன்னிகையின் பேரில் அன்புகொண்டு பார்த்தாரா? அவர்

உண்மையிலேயே என்னை மதிக்கிறாரா?' என்றெல்லாம் எண்ணினாள்.

மறுநாள் அந்த வாலிப வீரனைக் கண்டாள். அவனுடைய இனிய மொழிகளைக் கேட்டு, அவன் கையினால் அணியப்பட்ட மாலையை ஏற்றுக்கொண்டதும், அவள் உள்ளம் பூரித்தாள். அவள் மனம் கட்டுக்கடங்காமல் குதூகல மடைந்தது. அவன் விடைபெற்றுக் குதிரை யேறிச் செல்லும்போது, வெகுநேரம் வரை அவன் சென்ற வழியின் மேல் விழிவைத்துப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

வெகு நேரம் வரை ஸரயூ ஜன்னலண்டை உட்கார்ந்து வெளியே பார்த்துக்கொண்டிருந்தாள். மலைச் சிகரங்களில் நீர்வீழ்ச்சிகள் கொட்டிக்கொண்டிருந்தன. கீழே கன்னங்கரே லென்றிருக்கும் பசும் பூமி! அன்று அவளுக்குப் பசிக்கவே இல்லை. மாலையானதுமே தன் தந்தைக்கு இரவு போஜனம் செய்வித்து, அவருக்குப் படுக்க ஏற்பாடும் செய்துவிட்டுத் தான் மீண்டும் ஜன்னலண்டை வந்தமர்ந்து சந்திரிகையைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.



அத்தியாயம் 11

கவலை

ஜனார்த்தன தேவர் சுபாவத்திலேயே ஸரளமான மனிதர். நாள் முழுவதும் அவருக்கு சாஸ்திர விசாரங்களிலும் தேவபூஜையிலுமே கழிந்துவிடும். காலை மாலை இரு வேளையும் கோட்டையி லிருப்பவர்களைச் சந்திப்பார். சில சமயங்களில் வீட்டிலேயே இருந்துவிடுவார். அவருக்கு ஸரயூபாலாவிடம் அளவற்ற வாஞ்சை. தாம் சாப்பிடும் சமயம் ஸரயூபாலா அங்கில்லாவிட்டால் அவர் ஆகாரம் செய்யமாட்டார். தினமும் இரவில் அவர் ஸரயூவுக்கு சாஸ்திரங்களைப் பற்றிய விஷயங்களைச் சொல்வார். அவளும் அவற்றை ஆவலுடன் கேட்பாள். ஆனால் திடீரென்று அவளுடைய உள்ளத்தில் ஒரு புதுமையான பாவம் உண்டாகிவிட்டது. பாவம் ஜனார்த்தன தேவர் அதை எப்படி அறிவார்?

ஸரயூபாலாவின் உள்ளத்தில் தோன்றிய காதல் கனிந்து கொண்டே வந்தது. பிறந்ததிலிருந்தே அவள் தனியாகவே இருந்தாள். ஜனார்த்தன தேவரைத் தவிர அவள் வேறு யாரையும் தன்னவர் என்றே எண்ணியதில்லை. வேறு அந்நியரை அவளுக்குத் தெரியவும் தெரியாது. அவளுடைய பாலிய காலம் சலனமின்றிக் கழிந்தது. அவளுடைய யௌவனத்தின் அலைகள் இப்பொழுது

பொங்கி எழலாயின. ஒரு நாள் திடீரென்று அவள் உள்ளம் அந்தக் காதலால் மலர்ந்தது. இப்பொழுது இரவு, பகல், காலை, மாலை, எந்நேரமும் அது அவள் உள்ளத்தைத் துளைக்கலாயிற்று.

கற்பனை ஒரு மாயாவினி! ஸரயூபாலா தனியாக வனத்தில் உட்கார்ந்திருக்கும் பொழுதும் இரவில் சந்திரிகையில் அமர்ந்திருக்கும் பொழுதும், அவள் உள்ளத்தில் கற்பனை எழுப்பும் அலைகள் புரள ஆரம்பிக்கும். அந்த வாலிப யுத்த வீரன்! அவனுடைய யுத்தக் கோலம், ஆர்வம்! கோட்டையைப் பிடிக்கும் அவனுடைய மித மிஞ்சிய ஆசை! சத்துருக்களை நாசம் செய்யும் எண்ணம்! —இவைகள் ஒவ்வொன்ருக அவள் மனக்கண் முன் வந்து நின்றன.

'இந்தத் தொல்லைகளிடையே அவர் என்னை எங்கே நினைக்கப் போகிருர்? என் ஞாபகம் வருமா? புருஷர்களின் உள்ளம் பல கவலைகளாலும், பல யோசனைகளாலும், பல உல்லாசங்களாலும் நிறைந்திருக்கிறது. ஜீவனுக்கு ஆதாரம் நம்பிக்கைதான். முயற்சி செய்ய வேண்டியது மனிதர்களின் கடமை. பலாபலன் அவரவர்கள் கர்மானுசாரப்படி ஆகும். அரண்மனையும், போர்க்களமும் சோகமும் இன்பமும் நாடகசாலைக் காட்சிகள் போலத்தான். சில சமயங்களில் கவலை கருணையாகிவிடுகிறது. கவலை மாத்திரமே வெகு நாள் இருக்க முடியுமா?'

'கவலை! தோரண துர்க்கத்தின் ஞாபகம் அந்த யௌவன வீரனுக்கு இருக்குமா? இந்தச் சமயத்தில் இந்த நிலைமையில் அவன் மனம் ஸ்திரமாக இருக்குமா? வெள்ளப் பெருக்கினுல் கரையில் இருக்கும் புஷ்பம் தண்ணீருடன் கலந்து ஆனந்தத்தால் நடனம் புரிகின்றது. ஆனுல் பிரவாகம் எங்கோ சென்றுகொண்டிருக்கிறது.

புஷ்பம் அங்கேயே இருந்து உலர்ந்துவிடுகிறது. ஆயினும் தண்ணீர் திரும்பி வருவதில்லை.'

மாயாவினியான ஆசை ஸரயூபாலாவுக்குச் சில சமயங்களில், 'ஒரு நாள் அந்த யௌவன வீரன் மீண்டும் தோரண துர்க்கத்திற்கு வருவான்' என்று நம்பிக்கை அளித்தது.

சிற்சில சமயங்களில், ரகுநாதன் போரில் கீர்த்தி பெற்றுப் பல விபத்துக்களையும் தாண்டிக்கொண்டு, தன்னை மறவாமல் தோரண துர்க்கத்திற்கு வருவதாகவும், தன் தந்தை ஜனார்த்தன தேவர் தன்னை அவருக்கு மணம் செய்து கொடுப்பதாகவும், இருவரும் அகண்ட மலைக் கூட்டத்தின் கீழ், ஒரு சிறு நதிக் கரையில் புல் தரையில் சந்திரிகையில் உட்கார்ந்து களிப்பதாகவும் கற்பனை செய்வாள்.

இந்த விதமாகப் பல மாதங்கள் கழிந்து வருஷமும் கழிந்தது. ஆயினும் ஸரயூவின் சிந்தனையின் அலைகள் ஓயவில்லை. தன் நாட்டு யௌவன வீரன் ஒருவன் விதேசத்தில் இருந்தாலும், அவள் அவனுக்குள்ள மரியாதையைச் செய்து வந்தாள்.

அவனுடைய அந்த உருவத்தைத் தன் மனக் கோயிலில் இருத்தி வழிபடலானாள். கனவும் நனவைப் போலவே இருக்கலாயிற்று.



அத்தியாயம் 12

மறு சந்திப்பு

கற்பனை பொய்யாக இல்லை. ஒருநாள் மாலை ஸரயூ தனது தோட்டத்தில் மலர் கொய்துகொண்டிருந்தாள். அவள் முகம் மலர்ச்சிகொண்டு இருந்தது. ஒரு வருஷத்திலேயே அவளிடம் மாறுதல் ஏற்பட்டிருந்தது. அவள் மேனியில் ஒரு புதுமை காணப்பட்டது. அவள் கண்களில் காதல் ததும்பியது. அவள் உள்ளத்திலும் ஒரு புத்துணர்ச்சி தோன்றியிருந்தது. ஸரயூபாலா இப்பொழுது பாலிகை யல்ல. யௌவனத்தின் படிகளில் ஏறிவிட்டாள். மனத்திற்குள் அந்த மாலையை எண்ணி ஏதோ சொல்லிக்கொண்டிருந்தாள். அப்பொழுது வாசலில் ஒரு யௌவன வீரன் தன் குதிரையினின்றும் கீழே இறங்கினான். மலர் கொய்துகொண்டே அவள் அவனருகில் சென்றாள். அவள் பார்வை அவன் பக்கம் சென்றது. அவள் உடல் குலுங்கியது. அவள் தலை நிமிரவில்லை.

ரஜபுத்திர வாலிபன் அதே உத்தியானத்தில் அதே கன்னிகையைக் கண்டான். ஒருநாள் இரவு அவள் முக மண்டலத்தைக் கண்டு அவள் மேல் காதல்கொண்டான். மறுநாள் காலை தன் கையினாலேயே முத்து மாலையை அவளுக்கு அணிவித்தான். போரிலும் விபத்திலும் அவன் அவள் நினைவாகவே இருந்தான். கனவிலும்

அந்தக் காரிகையின் முகம் அவன் முன் தோன்றிக் கொண்டிருந்தது. இன்று, ஒரு வருஷத்திற்குப் பிறகு, வெட்கம் தேங்கும் அந்த முகத்தைக் காண்பித்தான் ரகுநாதன். அவனுக்கு என்ன பேசுவதென்று தோன்ற வில்லை.

சாயங்காலம் ரகுநாதன் புரோகிதருடன் உட்கார்ந்து ஷாயிஸ்தாகான் தோல்வியுற்று டில்லி சென்றது, சிவாஜி ராய்கட்டில் அரச பதவி பெற்றது, முதலிய விஷயங் களைச் சொல்லி, மேலும், 'டில்லி அரசன் சிவாஜியை ஜயிக்க ஒரு பெருஞ் சேனையுடன் மஹாராஜா யசவந்த ஸிம்ஹரையும் அனுப்பியிருக்கிறார். இதைக் கேட்டு மஹாராஷ்டிர மன்னர் வருந்துகிறார். அவர் யசவந்த ஸிம்ஹருடன் ராஜி செய்துகொள்ளலாம் என்று தெரி கிறது. ஏனென்றால், அவர் அம்பர் தேச சாஸ்திரக் ஞான ஜனார்த்தன தேவரை அழைத்திருக்கிறார். அதன் காரணமாகப் பல்லக்கும் கூடவே கொண்டு வந்திருக் கிறேன். தங்களுக்கு நாலைந்து நாள் அவகாசம் இருக்கு மானால் ராய்கட் செல்லுங்கள். அரசரும் அப்படிப்பட்ட உத்தரவுதான் இட்டிருக்கிறார்' என்றான்.

ஸரயூ வீட்டின் ஒருபுறம் சமையல் செய்து கொண்டிருந்தவள் ரகுநாதன் சொன்ன யாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்தாள். தந்தை ராஜதானிக்குச் செல்லப் போகிறார்! அரசரின் கட்டளைப்படி இந்த வீரன் தங்களை அழைக்க வந்திருக்கிறான்! இதை எண்ணி அவள் மனம் மகிழ்ந்தது. அவள் மெல்ல வெளியே வந்தாள்

ரகுநாதன் ஜனார்த்தனரிடம் மெதுவாகத் தன் தேசத்திய கதைகளையும் சொல்லலானான். முதலில் தன்னுடைய தாய் தந்தையர், குலம் இவைகளைப் பற்றிய பரிசயம், பிறகு சிவாஜியுடன் தன் நட்பு—யாவற்றையும் வெளியிட்டான். ரகுநாதனின் குலத்தையும் அவனது

வீரத்தையும் குணத்தையும் கண்டு, அவனை அன்புடன் 'புத்திரா' என்று ஜனார்த்தனர் அழைக்கலானார்.

இதற்குள் சாப்பாடு தயாரென்று வந்து சொன்னாள் ஸரயூ. ஜனார்த்தனர் ரகுநாதனை ஆலிங்கனம் செய்து கொண்டு, 'ரகுநாத்! சாப்பிட வா! உன்னுடைய வரலாற்றைக் கேட்டு நான் ஆனந்தமடைந்தேன். உனது வம்சம் எங்களுக்குத் தெரியாததல்ல. நீ வம்சத்திற்கேற்ற உத்தம புத்திரன். உன்னுடைய குணமும் உன் வம்சானுசாரம் போற்றத் தக்கதாகவே இருக்கிறது. ஸரயூவை நான் மகளென்று அழைக்கிறேன். உன்னை இன்று முதல் மகனென்றே அழைப்பேன். கடவுள் கிருபையால், எதிர்காலத்தில் நடக்கும் யுத்தத்திற்குப் பிறகு, உன்னைப் போன்ற யுக்தமான பாத்திரத்தினிடம் ஸரயூவை ஸமர்ப்பித்துவிட்டு, கவலையற்றுக் கடவுள் தியானத்தில் காலத்தைக் கழிப்பேன். ஈசன் ஸரயூவையும் உன்னையும் சுகமாக வைக்கட்டும்!' என்றார்.

இந்த வார்த்தைகளைக் கேட்டு ரகுநாதனின் கண்களில் கண்ணீர் வந்துவிட்டது. அவன் ஜனார்த்தனரின் பாதங்களில் சிரம் வைத்து, 'தந்தையே, ஆசீர்வாதம் செய்யுங்கள்! இந்த ஏழை வீரன் தங்கள் ஆசையைப் பூர்த்தி செய்வான்! ரகுநாதன் ஓர் ஏழை ஹவல்தார்! இந்தச் சமயம் அவனிடம் பொருளில்லை. அவனுக்குப் பெயரில்லை! ஆனால், கடவுள் கிருபை இருக்கட்டும். தந்தையே, ஆசீர்வாதம் செய்யுங்கள்! அதன் பலத்தால் நான் இந்த விலையற்ற ரத்தினத்தை அடைகிறேன்!' என்றான்.

இந்த வார்த்தைகளை ஸரயூபாலாவும் கேட்டாள். காற்றினால் அசைக்கப்பட்ட தளிர் போல அவள் உடல் அசைந்தது. அன்று தினம் ரகுநாதனும் சரியாகச் சாப்பிடவில்லை. ஸரயூவும் அப்படியே.

அத்தியாயம் 13

ராய்கட் யாத்திரை

புறப்பட வேண்டியதற்கான ஏற்பாடுகள் செய்ய நாலைந்து நாட்கள் ஆயின. இந்தத் தினங்களில் ரகுநாதன் புரோகிதரின் வீட்டிலேதான் இருந்தான். காலை மாலை ஸரயூபாலா தோட்டத்தில் பூக்கொய்வதைப் பார்ப்பது, மத்தியானம் அவள் கைகளால் போடும் உணவைச் சாப்பிடுவது-இதிலேயே அவனுக்கு நாள் கழிவது தெரிய வில்லை. ஆயினும் இந்த நாலைந்து தினத்திற்குள் தைரியத் துடன் சென்று அவளுடன் வார்த்தையாட அவனால் முடிய வில்லை. அவளைக் கண்டவுடனேயே அவன் உள்ளம் துடிக்கும். அவளும் அவனைக் கண்டு வெட்கத்தால் நடுங்குவாள்.

தோரண துர்க்கத்திலிருந்து ராய்கட் செல்லும்போது ஸரயூபாலாவின் மேனாவுடன் ஒரு குதிரைவீரனும் வந்து கொண்டிருந்தான். மலைகள், சமதளங்கள், நதிகள், யாவற் றிலும் அந்த வீரன் அந்தச் சிவிகையைத் தொடர்ந்தே வந்தான். வழியில் தங்குமிடங்களிலும் அந்த வீரன் அவளை அடிக்கடி வந்து பார்த்துக்கொண்டிருந்தான். புரு ஷரின் முயற்சி, அவர்களுடைய செயல், அவர்களுடைய உள்ளத்தின் ஆவல் முதலியவை ஸ்திரீகளின் கண் களுக்குப் புலப்படாமல் இருப்பதில்லை. ஸரயூபாலா சிவி கையில் இருந்தபடியே குதிரை வீரனைப் பார்ப்பாள்.

இரவில் அவன் தூங்காமல் இருப்பதையும் உணர்ந்து கொண்டாள். அவனுடைய எழில் மிக்க உருவத்தைக் காணும் போதெல்லாம் கண்ணீர் அவள் கண்களை மறைக்கும். அவனுடைய இந்த ஆவலைக் கண்டு அவள் ஹிருதயம் ஆனந்தத்தால் மலரும்.

இவ்விதமாக பலநாள் பிரயாணம் செய்து ஒருவாறாக எல்லோரும் ராய்கட் வந்து சேர்ந்தனர். மாலை நேரம் ஜனார்த்தனர் மலையடிவாரத்தில் ஒரு கிராமத்தில் இருந்து கொண்டு தாம் வந்திருக்கும் விஷயத்தை மஹாராஷ்டிர மன்னருக்குச் சொல்லியனுப்பினார். மறுநாள் அரசரின் அனுமதியுடன் ஜனார்த்தனர் கோட்டைக்குள் பிரவேசித்தார்.

மற்ற நாட்களைப் போல இன்று போஜனம் முடிந்ததும், ரகுநாதன் ஸரயூபாலா உட்கார்ந்திருக்கும் இடத்திற்குச் சென்று, தன் உள்ளத்தின் வேகத்தை அடக்கிக் கொண்டு, உறுதியுடன், 'தேவி! இப்பொழுது எனக்கு விடையளியுங்கள்!' என்றான்.

ரகுநாதனின் இந்த வார்த்தைகள் காதில் விழவே ஸரயூவின் கண்கள் கலங்கின. அவள் உள்ளம் துடித்தது. தன்னுடைய சிவந்த முகத்தைக் கீழே கவிழ்த்துக் கொண்டாள்.

ரகுநாதன் மீண்டும், 'தேவி! விடையளியுங்கள்! நாளை அரசனின் சேவைக்குத் தயாராக இருக்கவேண்டும்! இந்த ஏழை வீரன் மீண்டும் தன் காரியத்திற்குச் செல்ல விரும்புகிறான்!' என்றான்.

இந்த வார்த்தைகளைக் கேட்டு ஸரயூவுக்கு வெட்கமாகப் போய்விட்டது. கண்களில் கண்ணீர் பெருக, மிருதுவான குரலில், 'தாங்கள் என்னிடமும், என் தந்தையிடமும் நடந்துகொண்டதற்குப் பதிலாகக் கடவுள் தங்களுக்கு யுத்தத்தில் வெற்றியைக் கொடுக்கட்டும்!

இதைத் தவிர நான் தங்களுக்கு வேறு என்ன கொடுக்க முடியும்?' என்றாள்.

ரகுநாதன் விநயமான குரலில், 'அரசரின் உத்தரவின்படி தங்களை ராய்கட் வரை ஆபத்தின்றிக் கொண்டு வந்து சேர்த்துவிட்டேன். இது எனது பாக்கியம்! இதில் என்னுடைய குணம் ஒன்றுமில்லை. இந்த ஏழை வீரனால் தாங்கள் சந்தோஷமடைந்தால், தங்களை அவன் என்றும் ஞாபகத்தில் வைத்துக் கொள்வான்!' என்றான்.

இந்த விஷயத்தை ஸரயூ நன்றாக அறிவாள். ஆகையால் அவள் தலையைக் குனிந்து கொண்டாள். ரகுநாதனுக்குத் தைரியமாயிற்று. 'நான் ஏதாவது மேலான அபிலாஷை வைத்திருந்தால், அதற்காக மன்னித்துக் கொள்ளுங்கள்! அதனால் தாங்களும் கோபமடைய மாட்டீர்கள்! பகவான் மனோபீஷ்டத்தைப் பூர்த்தி செய்தால், வாழ்க்கையின் முயற்சியும் ஆசையும் பலனடைந்தால், என் மனத்தின் கதையைத் தங்களிடம் கூறுகிறேன்! ஆனால் அதுவரை அடிக்கடி ஞாபகமிருக்கட்டும்!' என்றான்.

ரகுநாதன் விடைபெற்றுச் சென்றான். ஸரயூ வெகு நேரம்வரை அங்கேயே நின்றுகொண்டு மனத்திற்குள், 'ஆஹா! நிசி இரவு! வீர சிரேஷ்டனே! நீ சிலகாலம் வரை இந்தப் பேதையின் நினைவுப் பாதையில், விழித்துக் கொண்டிருப்பாயா? ஈசா! நீதான் சாக்ஷி!' என எண்ணினாள்.

அத்தியாயம் 14

ராஜா ஜயஸிம்ஹர்

ஷாயிஸ்தாகானையும் யசவந்த சிம்ஹரையும் செயலாற்றும் சக்தியற்றவரென்று அவர்களைத் திருப்பி அழைத்துவிட்டுத் தன்மகன், சுல்தான் முகஜ்ஜத்தைத் தென் பிரதேசத்திற்கு அவுரங்கஸீப் அனுப்பினனென்று முன் அத்தியாயங்களில் கூறினேமல்லவா! பிறகு ஏதோ யோசித்து யசவந்தரையும் தன் மகனின் உதவிக்காக அனுப்பிவைத்தான். ஆயினும் இவர்களிடமும் அவுரங்கஸீபுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. ஆகையால் அவன் அம்பராதிபதியான ராஜா ஜயசிம்ஹரை அவருடைய சேனையுடன் அனுப்பினன். கி. பி. 1665-ம் வருஷம் சித்திரை மாதக் கடைசியில் ஜயசிங் தம் சேனையுடன் புனு வந்து சேர்ந்தார். அவர் ஷாயிஸ்தாகானைப் போல் உற்சாகமற்றுக் கோட்டையிலேயே இருக்கவில்லை. அவர் திலாவர்கானைப் புரந்தரத்தில் நியமித்துவிட்டுத் தாம் சிம்ஹகட்டைச் சூழ்ந்துகொண்டு ராய்கட்வரை சேனையை வளைத்தார்.

சிவாஜி ஹிந்து சேனதிபதியுடன் யுத்தம் செய்வதை உசிதமாகக் கருதவில்லை. விசேஷமாக ஜயசிங்கின் கியாதி, சைனிய பலம், தீக்ஷண்யமான புத்தி, அவருடைய திறமை இவை சிவாஜிக்குத் தெரியாததல்ல. அவுரங்கஸீபிடம்

இம்மாதிரி பராக்கிரமம் பொருந்திய சேனுதிபதி வேறெருவரும் கிடையாது. அக்காலத்தில் இந்தியாவில் யாத்திரை செய்த பர்னியர் என்பார், 'ஜயசிங்கைப் போல் புத்தியும், தூரதிருஷ்டியும் வாய்ந்த சேனுதிபதி இந்தியாவில் யாரும் கிடையாது' என்று எழுதியிருக்கிருர். சிவாஜி முதலிலிருந்தே, 'சமாதானம் செய்துகொள்வோம்' என்று அடிக்கடி சொல்லிவந்தார். ஆனுல் தீக்ஷண்ய புத்தி வாய்ந்த ஜயசிங் அதில் நம்பிக்கை வைக்கவில்லை.

கடைசியில் சிவாஜி தமது நம்பிக்கை வாய்ந்த மந்திரிகளில் ஒருவரான ரகுநாத பந்த் நியாய சாஸ்திரியைத் தூதராக ஜயசிங்கிடம் அனுப்பினுர். அவர் சென்று ஜயசிங்கிடம், 'அரசே! சிவாஜி தங்களிடம் தந்திரம் செய்யவில்லை! அவரும் க்ஷத்திரியர்! க்ஷத்திரியருக்கு உசிதமானதை அவரும் அறிவார்!' என்றெல்லாம் சொல்லலானுர்.

சாஸ்திரக்ஞரான பிராமணரின் வார்த்தைகளை ஜயசிங் உண்மை என அறிந்து அவரிடம் நம்பிக்கை வைத்தார். பிறகு பிராமணரின் கைகளைப் பற்றிக் கொண்டு, 'துவிஜராஜரே! எனக்குத் தங்கள் வார்த்தைகளில் நம்பிக்கை இருக்கிறது. தாங்கள் சிவாஜியிடம் சொல்லுங்கள். அவருடைய புரட்சியை டில்லி அதிபர் மன்னித்து விடுவதாகச் சொல்லுகிருர். தவிர, அவருக்குத் தகுந்த மரியாதை செய்யவும் விரும்புகிருர். நான் இதற்குப் பிரதிக்ஞை செய்கிறேன். நானும் ரஜபுத்திரன்! ரஜபுத்திரன் வார்த்தை என்றும் மாறுபடாது!' என்ருர்.

மழை காலம். ராஜா ஜயசிங் தம் சபையில் அமர்ந்திருந்தார். காவலாளி ஒருவன் வந்து வெளியே சிவாஜி வந்திருப்பதாகத் தெரிவித்தான்.

சபையோர் யாவரும் ஆச்சரியமடைந்தனர். ராஜா ஜயசிங் சிவாஜியை அழைத்துவரத் தாமே சபையிலிருந்து

வெளியே வந்தார். மரியாதையுடன் சிவாஜியை வரவேற்றுச் சபைக்கு அழைத்துச் சென்றார். அங்கே சிவாஜியைத் தம் அரியணையிலேயே வலப்புறத்தில் அமர்த்தினார்.

இந்தவிதமான மரியாதையைக் கண்ட சிவாஜி ஆச்சரியமடைந்தார். ராஜா ஜயசிங் சிறிது நேரம் சிநேகமாகப் பேசிய பிறகு, 'ராஜன்! தாங்கள் இங்கே விஜயம் செய்து என்னைப் பெரிதும் கௌரவப்படுத்தினீர்கள்! இதைத் தாங்கள் தங்கள் வீடென்றே எண்ணிக்கொள்ளுங்கள்!' என்றார்.

'அரசே! அடியேன் எப்பொழுது தங்கள் உத்தரவுக்கு எதிராக நடந்திருக்கிறேன்? தாங்கள் ரகுநாத பந்திடம் என்னை வரச்சொல்லிக் கட்டளையிட்டீர்கள்! இதோ அடியேன் வந்திருக்கிறேன்! நானும் தங்கள் செய்கையால் கௌரவமடைந்தேன்!' என்றார் சிவாஜி.

'ஆம்! ரகுநாத சாஸ்திரியிடம் சொன்னது எனக்கு நினைவிருக்கிறது. அதையே செய்கிறேன்! டில்லி அதிபர் தங்கள் புரட்சியை மன்னித்துவிட விரும்புகிறார்! தங்களைக் காப்பாற்றவும் செய்வார்! தங்களுக்கு மகத்தான கௌரவத்தையும் அளிப்பார்! இந்த விஷயத்தில் நான் பிரதிக்ஞை செய்கிறேன்! ரஜபுத்திரர்கள் சொன்னது மாறலாகாது!' என்றார் ஜயசிங்.

இந்த விதமாகச் சிறிது நேரம் பேச்சு வார்த்தை நடந்தது. பிறகு சபை கலைந்தது. சபையில் சிவாஜியையும் ஜயசிங்கையும் தவிர வேறு யாரும் இல்லை. அந்தச் சமயம் சிவாஜி தம் பொய் ஆனந்தத்தை விட்டு, கையைத் தாடைகளில் வைத்து யோசிக்கலானார். இதைப் பார்த்து ஜயசிங்கின் கண்களில் கண்ணீர் வந்துவிட்டது!

அவர் சிவாஜியை நோக்கி, 'ராஜன்! தாங்கள் ஆத்ம சமர்ப்பணம் செய்வதில் வருத்தமடைந்தால் யாதொரு

பிரயோஜனமும் இல்லை. தாங்கள் என்னை நம்புங்கள்! என்னிடம் வாருங்கள்! ரஜபுத்திரர்கள் நம்பிக்கைத் துரோகம் செய்யமாட்டார்கள்! இப்பொழுதே தாங்கள் என் குதிரை லாயத்திலிருந்து ஒரு குதிரையை எடுத்துக் கொண்டு புனு செல்லுங்கள். எப்படித் தடையின்றி வந்தீர்களோ அதேமாதிரி விபத்தின்றிச் செல்லுங்கள்! தாங்கள் உத்தரவளியுங்கள். நான் தங்களை ஒரு பொழுதும் தடை செய்யமாட்டேன். ஆனால் யுத்த லாபம் கொண்டே தீர்வேன். அதில் குறையொன்றும் நினையேன் ஆனால் க்ஷத்திரிய தர்மத்தை ஒரு பொழுதும் மறவேன்!' என்றார்.

'எனக்குத் தங்கள் வார்த்தையில் நம்பிக்கை உண்டு!'

'ஆனால் ஏன் இந்தச் சமயம் வருந்துகிறீர்கள்?'

'நான் பாலிய காலத்தில் தங்களுடைய கௌரவ கீதத்தைப் பாடி ஆனந்தமடைந்திருக்கிறன்! இன்று அதே பிரகாரம்தான் தங்களைக் காண்கிறேன். அந்தக் கீதம் பொய்யல்ல. உலகில் சத்தியத்திற்கும் தர்மத்திற்கும் ஏதாவது தங்குமிடம் இருக்குமானால் அது ரஜபுத்திர சரீரம்தான்! ஆனால் அம்மாதிரி ரஜபுத்திரர்கள் மிலேச்சர்களின் ஆட்சியை ஒப்புக்கொள்ள முடியுமா? மஹாராஜா ஜயசிம்ஹர் உண்மையில் அவுரங்கஸீபின் சேனாதிபதியா?' என்றார் சிவாஜி.

'மஹராஜ்! இதன் காரணம் துக்ககரமானது. ஏனென்றால் ரஜபுத்திரர்கள் சகஜமாக ஆட்சியை ஒப்புக் கொண்டு விடவில்லை. முடிந்தவரை டில்லியுடன் போராடினார்கள்! ஆனால் ஈசனின் மாயையால் தேசம் பராதீனமாக ஆகும்படி இருந்தது. புகழ்பெற்ற எங்கள் பிரதாப ஸிம்ஹர் சாத்தியமற்ற சாதனங்கள் மூலம் முயற்சித்துப் பார்த்தார். ஆனால் அவருடைய சந்தானங்கள் கூட

டில்லிக்குக் கப்பம் கொடுக்கும்படி ஏற்பட்டுவிட்டது. நான் இவை யாவற்றையும் அறிவேன்!' என்றார் ஜயசிங்.

'நானும் அறிவேன்! அதனால்தான் கேட்கிறேன்! யாருடன் வைராக்கிய பாவமோ அவர்களுடைய காரிய சாதனையில் தாங்கள் முன் நிற்கிறீர்களே, ஏன்?'

'நான் என்று டில்லிச் சேனைக்குச் சேனாபதி என்பதை ஒப்புகொண்டேனோ அப்பொழுதே காரிய சாதனைக்காகச் சத்திய தானம் செய்துவிட்டேன்! ஆகையால் இன்றுவரை அதைக் கடைப்பிடித்து வருகிறேன்!'

'எல்லோரிடமும் எல்லாச் சமயத்திலும் சத்திய வாக்கைக் கடைப்பிடிக்க வேண்டுமா? நமது தேசத்தின் சத்துருக்களிடத்தும், நமது தர்மத்தின் சத்துருக்களிடத்தும் எவ்வாறு சத்திய பாலனம் செய்ய முடியும்?' என்றார் சிவாஜி.

'நல்லது! தாங்கள் க்ஷத்திரியராக இருந்தும் இம்மாதிரிப் பேசுகிறீர்களா? ரஜபுத்திரர்கள் இம்மாதிரிச் சொல்ல விரும்பலாமா? ரஜபுத்திரர்களின் சரித்திரத்தை எடுத்துப் படியுங்கள்! அவர்கள் எத்தனை நூறு வருஷங்கள் மொகலாயருடன் போர் புரிந்து வந்தார்கள்? ஆனால் சத்தியத்தை மாத்திரம் ஒருநாளும் உல்லங்கனம் செய்ததில்லை. அநேக முறை தோற்றார்கள். அநேகந் தடவை ஜயித்தார்கள். ஆனால் வெற்றி - தோல்வி இரண்டிலும் அவர்கள் சத்தியத்தைப் பரிபாலித்தார்கள். இந்தச் சமயம் நமது கௌரவம் சுதந்திரமல்ல. சத்தியத்தைக் கடைப்பிடிப்பதுதான் கௌரவம். சுதேசத்திலும் சரி விதேசத்திலும் சரி, சத்துருவினிடத்திலும் சரி மித்திரனிடத்திலும் சரி, ரஜபுத்திரர்களின் பெயருக்குக் கௌரவமுண்டு. க்ஷத்திரிய மன்னர் தோடர்மல் வங்கத்தை ஜயித்தார். ராஜா மான்சிங் காபூலிலிருந்து ஒரிஸா வரை டில்லி அதிபனின் வெற்றிக் கொடியை நாட்டினார். ஆனால்

யாரும் நம்பிக்கைக்கு விரோதமாக எதுவும் செய்யவில்லை. முஸல்மான் பாதுஷாக்களிடம் எது சொன்னார்களோ அதைத்தான் செய்தார்கள்! மஹாராஷ்டிரபதியே! ரஜபுத்திரர்களின் வார்த்தைதான் சமாதானப் பத்திரம்! பல சமாதானப் பத்திரங்கள் உல்லங்கனம் செய்யப்பட்டன. ஆனால் ரஜபுத்திரர்களின் வாக்கு ஒருபொழுதும் உல்லங்கனம் செய்யப்படவில்லை!' என்றார்.

'மஹாராஜா யசவந்த ஸிம்ஹர் ஹிந்து தர்மத்திற்கு ஒரு காவலாளி, அவர்கூட மொகலாயர்களுக்காக ஹிந்துக்களுடன் யுத்தம் செய்வதை ஒப்புக்கொள்ளவில்லை!' என்றார் சிவாஜி.

'யசவந்த ஸிம்ஹர் வீரசிரோமணி! ஹிந்து தர்மத்தை ரக்ஷிப்பவர்! இதில் எள்ளளவும் சந்தேகமில்லை! அவர் மார்வார் தேசத்தின் திலகம்! அவருடைய சேனையை எதிர்த்து நிற்கும் தைரியம் யாருக்கும் கிடையாதுதான்! யசவந்த ஸிம்ஹர் மார்வார் சைனியத்தின் மூலம் ஹிந்து தர்மத்தை ரக்ஷிப்பதற்கு முயற்சி செய்தால் நாம் கட்டாயம் அவரைப் போற்றவேண்டியதுதான். அவர் அவுரங்கஸீபைத் தோற்கடித்து வெற்றிகொண்டு டில்லியில் ஹிந்துக் கொடியைப் பறக்கவிட்டாரானால், நாம் அவரை சக்கரவர்த்தி என்று மரியாதை செய்வோம். ஒருகால் அவர் போரில் தோல்வியடைந்து, ஸ்வதர்மத்திற்காகவும் ஸ்வதேசத்திற்காகவும் தம் உயிரைத் தியாகம் செய்வாரானால், நாம் அவரைக் கடவுளுக்குச் சமமாக எண்ணிப் பூஜை செய்வோம். ஆனால் என்று அவர் டில்லி அதிபரிடம் சேனாதிபதியானாரோ அன்று முதல் அதே காரியத்தில் ஈடுபட்டு வருகிறார். ஆனால் ஒருமுறை ஒப்புக்கொண்டதை மீண்டும் உல்லங்கனம் செய்வது க்ஷத்திரிய தர்மத்திற்கு விருத்தமானது. யசவந்த ஸிம்ஹர் தம்முடைய கீர்த்தியினின்றும் களங்கமடைந்து விட்டார்.

ஸிப்ரா நதிக்கரையில் அவர் அவுரங்கஸீபினுல் தோல்வி யடைந்த உடனேயே அவர் துவேஷியாகிவிட்டார். இல்லாவிட்டால் இம்மாதிரி நிந்திக்கத் தக்க காரியங் களைச் செய்திருக்கமாட்டார்!' என்ருர் ஜயசிங்.

தந்திரசாலியான சிவாஜி பார்த்தார். ஜயசிங் யசவந்த ஸிம்ஹரல்ல என்பதைக் கண்டுகொண்டார். சிறிது மௌனமாக இருந்துவிட்டு, 'ஹிந்து தர்மத்தின் உன்ன திக்காகச் செய்யும் முயற்சிகள் நிந்திக்கத் தக்கனவா? ஹிந்துவைச் சகோதரன் என்றெண்ணி அவனுக்கு உதவி புரிவது நிந்திக்கத் தக்கதா?' என்று கேட்டார்.

'நான் இதைச் சொல்லவில்லை. யசவந்த ஸிம்ஹர் அவுரங்கஸீபின் காரியங்களை விட்டுவிட்டு ஏன் தங்கள் பக்கம் சேர்ந்துகொள்ளவில்லை? சேர்ந்துகொண்டிருந்தால் உலகத்தின் முன்னிலையிலும் கடவுளின் முன்னிலையிலும் அவர் கீர்த்தியடைந்தவராகவே ஆவார்! தாங்கள் செய்வது போன்ற சுதந்திர முயற்சியை அவர் ஏன் செய்யக் கூடாது? சக்கரவர்த்தியின் காரியத்தில் இருந்துகொண்டு ரகசியமாக எதிர்ப்புச் செய்வது கபடம்! க்ஷத்திரிய மன்ன! கபடம் செய்வது க்ஷத்திரியர்களுக்கு உசிதமான தல்ல!' என்ருர் ஜயசிங்.

'அவர் எம்முடன் வெளிப்படையாகச் சேர்ந்து விட்டால் அவுரங்கஸீப் மற்ருெரு சேனுதிபதியை அனுப்புவார்! அவருடன் யுத்தம் செய்து நாங்கள் தோல்வியடைந்து மடிய நேரிடும்!' என்ருர் சிவாஜி,

'யுத்தத்தில் உயிரிழப்பது க்ஷத்திரியர்களின் சௌ பாக்கியம்! ஆனுல் கபடம் செய்வது அவர்களுடைய தர்மத்திற்கு விருத்தம்!'

இதைக் கேட்டதும் சிவாஜியின் முகம் சிவந்தது. ரஜபுத்திர! மஹாராஷ்டிர வீரரும் மரணத்திற்குப் பயப்படவில்லை. இந்த அற்பமான உயிரைத் தானம்

செய்வதால், எங்களுடைய எண்ணம் பூர்த்தியாகி, ஹிந்து சுதந்திரம், ஹிந்து கௌரவம் மீண்டும் ஸ்தாபிதமாகு மாறுல், பவானி தேவி சாக்ஷியாகச் சொல்லுகிறேன், இந்த க்ஷணமே என் மார்பைப் பிளந்துகொள்கிறேன்! இல்லாவிட்டால் தங்கள் வாளினுல் என் ஹிருதயத்தைப் பிளந்து விடுங்கள்! நான் சந்தோஷமாய் என் உயிரைத் தியாகம் செய்கிறேன்! ஆனுல் நான் எந்த ஹிந்து சுதந் திரத்தின் கௌரவத்தைக் கனவு கண்டு இருபது வருஷ காலமாய் அல்லும் பகலும் அதே சிந்தனையில் மூழ்கி, மலை, வனம், இரவு, பகல் என்று பாராமல் போரிட்டு வருகிறேனே அந்தச் சுதந்திர இயக்கத்தின் பலன் என்ன ஆகும்? யுத்தத்தில் உயிரிழந்து விடுவதால் அது ரட்சிக் கப்பட்டுவிடுமா?' என்ருர்.

ஜயசிங் சிவாஜியின் வீரம் செறிந்த மொழிகளைக் கேட்டு, இன்னும் கோபம் கொண்ட பார்வையுடன் அவரை நோக்கி, ஆனுல் முன்போல் சாந்த பாவத்துட னேயே, 'சத்திய பாலனம் ஸநாதன ஹிந்து தர்மத்தை ரட்சிக்காவிட்டால் ஸத்திய உல்லங்கனமா ரட்சிக்கப் போகிறது? வீரர்களின் ரத்தத்தால் சுதந்திர விதை முளைக்காவிட்டால் வீரர்களின் தந்திரத்திலுலா முளைக்கப் போகிறது?' என்ருர்.

சிவாஜி தோல்வியடைந்தார். சிறிது நேரம் மௌன மாக இருந்துவிட்டு, 'அரசே, நான் தங்களை என் தந்தை யைப் போல் எண்ணுகிறேன்! தங்களைப் போன்ற புத்திக் கூர்மையும், தர்மம் அறிந்தவரையும் நான் கண்டதே இல்லை! நான் தங்கள் புத்திரனைப் போல! ஒரு விஷயம் தங்களிடம் கேட்க விரும்புகிறேன். உசிதமான யோசனை சொல்லுங்கள்! நான் சிறுவனுகக் கொங்கண தேசத்தின் மலைகளில் திரிந்த பொழுது பவானியே கனவில் தோன்றி, 'தேவாலயங்களை அதிகப்படுத்தவும் பசுக்களை ரட்சிக்க

வும், பிராமணர்களுக்குக் கௌரவமான அவர்கள் தொழிலைச் செய்யச் சொல்லவும், தர்ம விரோதிகளான முஸல்மான்களைத் தேசத்தை விட்டகற்றவும் கட்டளையிட்டாள். நான் சிறுவன். அந்தக் கனவு மறந்துவிட்டது. வாளைக் கைப்பிடித்தேன். வீரசிரோமணிகளை ஒன்று சேர்த்தேன்! இளமையில் கண்ட கனவை வாலிபத்திலும் காண்கிறேன். ஹிந்துக்களின் கௌரவம், ஹிந்து தர்மத்தின் முக்கியத்துவம், ஹிந்து சுதந்திர பரிபாலனம் யாவும் உள்ளத்தை விட்டகலவில்லை. முடிந்தவரை அவற்றிற்காக உழைத்துக்கொண்டு வருகிறேன். க்ஷத்திரிய சிரேஷ்ட! என்னுடைய இந்த எண்ணங்கள் பிற்போக்கானவைகளா? என் கனவுகள் பொய்க் கனவுகளா? இதைத் தாங்கள் விளக்க முடியுமா?' என்றார்.

தீர்க்க திருஷ்டி அபரிமிதமாகவுடைய ஜயசிங் சிறிது நேரம் சும்மா இருந்தார். பிறகு கம்பீரமான குரலில், 'ராஜன்! உங்களுடைய மகத்தான உத்தேசத்தைவிட மேலான தொன்றையும் நான் அறியேன்! உங்களுடைய கனவைக் காட்டிலும் மேலான இயற்கை வழி ஒன்றும் எனக்குத் தென்படவில்லை! சிவாஜி! தங்களுடைய இந்த மகத்தான உத்தேசம் நான் அறியாததல்ல! நான் சத்துருக்களின் முன்பும் தங்கள் லக்ஷியத்தைப் புகழ்ந்து பேசியிருக்கிறேன். என் மகன் ராமஸிம்ஹனுக்குத் தங்களை உதாரணம் வைத்தே சிக்ஷை அளித்திருக்கிறேன்! சுதந்திர கௌரவத்தை ரஜபுத்திரர்கள் இன்னும் மறக்கவில்லை! சிவாஜி! உங்கள் கனவு வெறும் கனவல்ல! என் பார்வை செல்லுமிடமெல்லாம், மொகலாய சாம்ராஜ்யம் இன்னும் அதிகக் காலம் நிலைக்காதென்பதையே காண்கிறேன். அவர்களுடைய எண்ணங்கள் யாவும் பயனற்றவைதான். முஸல்மான்களின் ராஜ்யம் களங்கத்தால் நிறைந்திருக்கிறது. விலாச போகங்களில் மூழ்கிக்

கிடக்கிறது. ஹிந்துக்களுக்குக் கொடுமை இழைத்து, அதன் சாபத்தை யடைந்திருக்கிறது. மணல் சுவர் போல் அது இனி நிற்க முடியாது! சீக்கிரமோ அல்லது சிறிது காலம் பொறுத்தோ மொகலாய சாம்ராஜ்யக் கோபுரம் இடிந்து விழுந்துவிடும்! பிறகு ஹிந்துக்களுக்குத்தான் பிராதான்யம்! மஹாராஷ்டிர ஜீவன் உதயமாகிவிட்டது! அதனுடைய ஜோதியால் பாரத வர்ஷம் பிரகாசமடையு மென்று தெரிகிறது! சிவாஜி, தங்கள் கனவு கனவல்ல! பவானி தங்களுக்குப் பொய் உணர்ச்சிகளைக் கொடுக்க வில்லை!' என்றார்.

உற்சாகத்தாலும் ஆனந்தத்தாலும் சிவாஜிக்கு மயிர்க்கூச் செறிந்தது. உடனே அவர், 'மகாராஜ், இந்த வீழ்ந்து போகும் கட்டிடத்திற்கு நீங்கள் ஏன் ஆதார ஸ்தம்பமாக நிற்கிறீர்கள்?' என்றார்.

'சத்திய பாலனம் க்ஷத்திரிய தர்மம். நான் அதைக் கடைப்பிடிக்கிறேன். ஆயினும் வீழ்ச்சியடைவது அடைந்தே தீரும்!' என்றார் ஜயசிங்.

'நல்லது. தாங்கள் சத்திய பாலனம் செய்யுங்கள்! கபடாத்மாவான அவுரங்கஸீபுடன் தர்மாத்மாவான ஜய ஸிம்ஹரைத் தேவதைகள் கூட ஆச்சரியத்துடன் புகழ் வார்கள்! ஆனால் நான் ஒரு பொழுதும் அவுரங்கஸீபுடன் சத்தியத்தைக் கடைப்பிடிக்க முடியாது! நான் அந்தத் துராசாரியரிடம் புத்தி பலத்தினாலும் கபடத்தாலும் சுதேசத்தின் உன்னதியைச் சாதிப்பதில் வெற்றியடைந் தால் ஜனங்கள் என்னை நிந்திக்கமாட்டார்கள்!' என்றார் சிவாஜி.

'க்ஷத்திரிய ராஜ! வீரன் முன் எப்பொழுதுமே தந் திரம் நிந்திக்கக்கூடியது. பெரிய லக்ஷியங்களைச் சாதிக்கக்கூடத் தந்திரம் களங்கத்தின் சின்னம்தான். மஹாராஷ்டிரம் கௌரவம் அடைந்தே தீரவேண்டும்!

அதன் பலம் நாளுக்கு நாள் பெருகும்! இந்தப் பாரத வர்ஷத்திற்கு அவர்கள் அதிபதியாகும் காலமும் அதிக தூரத்தில் இல்லை. ஆனால், சிவாஜி! தாங்கள் இன்று அளித்துவரும் படிப்பினையை ஜனங்கள் என்றும் மறக்க மாட்டார்கள். நான் சொல்வதைத் தப்பாக எண்ணுதீர்கள்! தாங்கள் இப்போது நகரங்களில் புகுந்து துவம்சம் செய்கிறீர்கள். அதன் மூலம் வெற்றியும் அடைகிறீர்கள். ஆனால் ஜனங்கள் தங்களுக்குப் பிறகு பட்டணங்களையும் நகரங்களையும் கொள்ளையிடுவதுதான் பிரதானமான காரியம் என்று எண்ணிவிடுவார்கள். பாரத வர்ஷத்தில் கொள்ளை கொலைகளைத் தவிர வேறொன்றும் இருக்காது. தாங்கள் இன்று நேருக்கு நேர் யுத்தம் செய்வதற்குப் பதில் தந்திரத்தால் வெற்றியடையக் கற்பிக்கிறீர்கள்! இதன் பலன் என்ன ஆகும் தெரியுமா? பிற்காலத்தில் எதிர் எதிர் நின்று யுத்தம் செய்யவே நம் மக்களால் முடியாமல் போகும்! தாங்கள் எந்த ஜாதிக்குத் தலைவராக இருக்கிறீர்களோ அவர்கள் பாரதத்தை ஆள்வார்கள். தாங்கள் அவர்களுக்குக் குருவைப்போல் தர்ம சிக்ஷை யளியுங்கள். அந்தச் சமயம் தாங்கள் அளிக்கும் பாடத்தின் பலன் நூறு வருஷங்களுக்குப் பின் பாரத வர்ஷத்தில் கிளைத்தெழும்! தாங்கள் ஹிந்துக்களில் சிரேஷ்டர். தங்களுடைய மகத்தான உத்தேசத்தை நான் ஆயிரம் தடவையும் புகழ்கிறேன். ஆனால் தாங்கள் இந்த விருத்தனுன ரஜபுத்திரனின் படிப்பினையை ஏற்றுக்கொள்ளுங்கள். தந்திரத்தை மறந்துவிடுங்கள். தாங்கள் தர்மத்தையும் சத்தியத்தையும் ரட்சிக்காவிட்டால் யார் ரட்சிப்பார்கள்? மகாராஷ்டிர சிக்ஷா குருவே! ஜாக்கிரதை! தங்களுடைய ஒவ்வொரு காரியமும் வெகு காலம் வரை பல தேசங்கள் வரை வியாபிக்கும்!" என்றார்.

இந்த மகத்தான வாக்கியங்களைக் கேட்டு, சிவாஜி ஒரு கணம் ஸ்தம்பித்து விட்டார். பிறகு ஜயசிங்கைப் பார்த்து, 'தாங்கள் குருவுக்கு குரு! தங்கள் உபதேசம் சிரமேற் கொள்ளத் தக்கது. ஆனால் இன்று நாம் அவுரங்கஸீபின் ஆட்சியை ஒப்புக்கொண்டுவிட்டால் பிறகு சிக்ஷை யார் அளிப்பார்கள்?' என்றார்.

'வெற்றியும் தோல்வியும் நிலையானதல்ல! இன்று எனக்கு வெற்றி, நாளை உமக்கு வெற்றி! இன்று தாங்கள் அவுரங்கஸீபின் ஆதீனமானால் நாளைச் சுதந்திரராக முடியும்!'

'ஈசன் அப்படியே செய்யட்டும்! ஆனால் தாங்கள் அவுரங்கஸீபின் சேனாபதியாக இருக்கும் வரை எனக்குச் சுதந்திரம் கிடைப்பது துர்லபம். அந்த ஆசையும் வீண். பவானி தேவியே ஹிந்து சேனாபதியிடம் யுத்தம் செய்வதை நிஷித்தமாகக் கருதுகிறாள்!'

இந்தத் தடவை ஜயசிங் சிரித்துவிட்டு, 'சரீரம் அநித்தியம்! இந்தக் கிழ சரீரம் எதுவரை இருக்கப் போகிறது? ஆனால் இருக்கும்வரை சத்தியத்தைக் கடைப் பிடித்தே தீரவேண்டும்!' என்றார்.

'தாங்கள் தீர்க்கஜீவியாக இருங்கள்!'

'சிவாஜி! இப்பொழுது விடைபெற்றுக் கொள்ளுங்கள்! நான் அவுரங்கஸீபின் தந்தையிடம் காரியம் பார்த்திருக்கிறேன். இப்பொழுது அவுரங்கஸீபிடம் ஊழியம் புரிகிறேன். ஆனால் உயிருள்ளவரை இந்த விருத்த சேனாபதி டில்லி அதிபருக்கு எதிராகச் செயல் புரியமாட்டான். ஆனால், க்ஷத்திரிய ராஜ! கவலைப்படவேண்டாம்! மஹாராஷ்டிரர்களின் கௌரவமும், ஹிந்துக்களின் பிராதான்யமும் தவிர்க்க முடியாதவை. இந்தக் கிழவனின் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளுங்கள்! மொகலாயர்களின் ராஜ்யம் அதிக நாள் நிலைக்காது! ஹிந்துக்களின் உணர்ச்சியை

அதிக நாள் பலவந்தமாக அடக்கிவைக்க முடியாது. தேச தேசாந்தரங்களில் ஹிந்து கௌரவத்துடன் தங்களுடைய கௌரவம் படைத்த பெயரின் எதிரொலியும் கேட்கும்! அவ்வளவுதான்!' என்றார்.

சிவாஜியின் கண்களில் கண்ணீர் வந்துவிட்டது. அவர் ஜயஸிம்ஹரை ஆலிங்கனம் செய்துகொண்டு, 'தர்மாத்மா! தங்கள் வார்த்தைகள் சத்தியம்! நான் ஆத்ம சமர்ப்பணம் செய்துவிட்டேன். இனி தங்களுடன் போர் புரிய மாட்டேன்! க்ஷத்திரிய சிரேஷ்ட! சுதந்திரம் கிடைத்தால் மீண்டும் தங்களை ஒருமுறை தரிசனம் செய்கிறேன்! தந்தையின் பாதங்களைச் சிரசில் தரித்து உபதேசம் பெற்றுக் கொள்கிறேன்!' என்றார்.



அத்தியாயம் 15

துர்க்க விஜயம்

சீக்கிரத்திலேயே சமாதானம் ஏற்பட்டுவிட்டது. சிவாஜி மொகலாயர்களிடமிருந்து எந்தெந்தக் கோட்டைகளை ஜயித்திருந்தாரோ அவைகளையெல்லாம் திருப்பிக் கொடுத்து விட்டார். அகமத் நகர ராஜ்யத்தில் தாம் நிர்மாணித்த முப்பத்திரண்டு கோட்டைகளில் இருபதை அவுரங்கஸீபுக்குக் கொடுத்துவிட்டார். பாக்கி பன்னிரண்டையும் ஜாகீரின்கீழ் அவுரங்கஸீப் விட்டுவிட்டார். சிவாஜி கொடுத்த பிரதேசத்திற்குப் பதிலாக டில்லி சக்ரவர்த்தி விஜயபுரத்தைச் சேர்ந்த சில ராஜ்யங்களை அவருக்குத் தந்து, அவருடைய எட்டு வயதான மகனைப் பதாதிகாரியாக நியமித்தார்.

சிவாஜியுடன் யுத்தம் முடிந்தது. பிறகு ராஜா ஜயசிங் விஜயபுர ராஜ்யத்தைத் துவம்சம் செய்து, அதை டில்லி அதிபரின் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவரப் பெருமுயற்சி செய்யலானுர். சிவாஜியின் தந்தை சிவாஜிக்கும் விஜயபுரத்திற்குமிடையே செய்துவைத்த ஒப்பந்தத்தை சிவாஜி அசட்டை செய்யவில்லை. ஆனுல் விஜயபூர் சுல்தான் சிவாஜி கஷ்டப்படும் நிலைமையைக் கண்டு அவருடைய ராஜ்யத்தின் மேல் போர் தொடுத்தான். இதன் காரணமாக சிவாஜியும் ஜயஸிம்ஹரை ஆதரித்து,

அலி ஆதில் ஷாவை முறியடிக்க ஆரம்பித்தார். தம்முடைய மாவலி சேனையின் பலத்தினல் அவனுடைய கோட்டைகளில் பலவற்றைக் கைப்பற்றிக் கொண்டார்.

மஹாராஜா ஜயஸிம்ஹருக்கும் சிவாஜிக்குமிடையே ஏற்பட்ட நட்பு நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வந்தது. இருவரும் எப்பொழுதும் ஒன்ருக இருந்து, ஒருவருக்கொருவர் போரில் சகாயம் செய்துகொண்டனர். அதிகம் சொல்லத் தேவையில்லை. சிவாஜியின் வாலிப ஹவல்தார் வீரன் ஒருவன் பிரதி தினம் ஜயஸிம்ஹரின் புரோகிதர் வீட்டுக்கு வந்து போய்க்கொண்டிருந்தான். அவன் யார் என்பதையும் சொல்லவேண்டியதில்லை.

ஸரளமான சுபாவம் வாய்ந்த ஜனர்த்தனர் ரகுநாதனைத் தம் மகன் போலவே பாவித்து, அவனை அடிக்கடி தம் வீட்டிற்கு அழைப்பார். ரகுநாதனும், சமயா சமயத்தில் அவர் இல்லம் சென்று, அவருடன் அமர்ந்து, அவர் சொல்லும் ராஜஸ்தானக் கதைகளைக் கேட்பான். சில சமயங்களில் ஜனர்த்தனர், யுத்த முறைகளையும், வீரர்களைப் பற்றிய கதைகளையும் இரவு நெடுநேரம்வரை சொல்லுவார். வீரர்களின் சரித்திரத்தைக் கேட்கும் போதெல்லாம் ரகுநாதனின் கண்கள் ஜ்வலிக்கும். அவன் உள்ளத்தில் ஒரு வேகம் எழும்பி அவனை உந்தித் தள்ளும். அவன் உடல் அவனையறியாமலே நடுங்கும்.

ஜனர்த்தனர் ரகுநாதனுக்குக் கதை சொல்லிக்கொண்டிருக்கும்போது, ஸரயூவும் அருகே உள்ள அறையில் உட்கார்ந்து கேட்டுக்கொண்டு, தனிமையில் கண்ணீர் உகுப்பாள். பிறகு ரகுநாதனைக் காக்கக் கடவுளை வேண்டுவாள். கதை முடிந்ததும் ஸரயூ ரகுநாதனுக்குப் போஜனமளிப்பாள். அப்பொழுது அவன் அவள் எழிலைப் பருகி மனங்களிப்பான். சாப்பாடு முடிந்ததும், ரகுநாதன் விடைபெற்றுக்கொள்ள இரண்டொரு

வார்த்தைகள் கூறுவான். ஆனால் அவள் பதிலொன்றும் கூறமாட்டாள். வெட்கத்தால் அவள் முகம் சிவந்து விடும். கண்களில் அன்பு பொங்கும். தன் சகியின் மூலம் பதில் சொல்லி அனுப்புவாள்.

ஆனால் பதில் சொல்லவேண்டிய அவசியம் என்ன இருந்தது? ஸரயூவின் கண்கள் பேசும் பாஷையை ரகு நாதன் நன்றாக அறிவான். ரகுநாதனின் கண்கள் பேசு வதையும் ஸரயூ நன்றாக அறிவாள். காதலினால் இருவரு டைய மனமும் உயிரும் வர்ணிக்க முடியாத ஆனந்த சாக ரத்தில் மூழ்கித் திளைத்தன. இருவருடைய உள்ளத்தி லும் அந்தக் காதல் ஒரு புத்துணர்ச்சியை உண்டாக்கி யிருந்தது.

விஜயபுரத்தின் ஆதிக்கத்திலிருந்த பல கோட்டை களைக் கைப்பற்றிய சிவாஜி பிடிக்க முடியாத மற்றொரு கோட்டையையும் கைப்பற்ற எண்ணங்கொண்டார். அவர் ஏதாவதொரு துர்க்கத்தின்பேரில் போர் தொடுக்க விரும்பினால் அது யாருக்கும் தெரிவதில்லை. அவருடைய சேனைகள்கூட அறிய முடியாது. ராஜா ஜயஸிம்ஹரின் கூடாரத்திற்குச் சமீபத்தில், சிவாஜியின் கூடாரத்தி லிருந்து ஐந்தாறு குரோச தூரத்தில் அந்தத் துர்க்கம் இருந்தது. மாலையில் ஓராயிரம் மாவலியர்களும் மஹா ராஷ்டிரர்களும் நிறைந்த சேனை ஒன்று திரட்டப்பட்டது இரவு முதல் ஜாமத்திற்குப் பிறகு, 'ருத்திர மண்டல துர்க்கத்தை ஆக்கிரமிக்க வேண்டும்!' என்றார் சிவாஜி. பேசாமல் அந்த ஆயிரம் வீரரும் அந்தத் துர்க்கத்தை நோக்கி விரைந்தனர்.

இருண்ட இரவில் சேனை துர்க்கத்தின் அடிவாரத் திற்கு வந்து சேர்ந்தது. நாற்புறமும் சமபூமி. அதன் மத்தியில் ஓர் உயர்ந்த குன்றின்மேல் ருத்திர மண்டலக் கோட்டை இருந்தது. நேரே மேல் செல்லவேண்டும்.

துர்க்கத்திற்குச் செல்ல ஒரே வழிதான் உண்டு. வேறு பக்கமாகச் செல்வது சிரம சாத்தியம். சண்டையின் காரணமாக, இருந்த வழிகளும் அடைக்கப்பட்டிருந்தன. வழி இல்லாதது மாத்திரமல்ல, காடுகளும், பாறைகளும் வழியில் நிறைந்திருந்தன. எனினும், சிவாஜி அந்த வழியே செல்லும்படி சேனைகளுக்கு உத்தரவிட்டார். வீரர்கள் மரத்திற்கு மரம் தாவி மேலே ஏறலானார்கள். நடுநடுவே தங்கி, ஏறி, இறங்கி எப்படியோ முன்னேறலானார்கள். மஹாராஷ்டிர வீரரைத் தவிர இந்த மாதிரி மலை ஏறுவதென்பது வேறு எவராலும் முடியாதென்பதில் சற்றும் சந்தேகமில்லை.

பாதி வழி சென்றதும் பார்த்தார் சிவாஜி! மேலே, கோட்டையின் சுவர்களின் மேல் தீவட்டிகள் எரிந்து கொண்டிருந்தன. அவர் கவலையும் சந்தேகமும் கொண்டு நின்றார். 'என்ன, என்னுடைய ஆக்ரமிப்பை எதிரிகள் தெரிந்து கொண்டனரா? இல்லாவிட்டால் இம்மாதிரி சுவரின்மேல் பந்தங்கள் எரியக் காரணமில்லையே!' என்று எண்ணினார். மேலிருந்து பந்தங்களின் வெளிச்சம் கீழே படிந்தது. கோட்டையிலிருந்தவர்களில் பெரும்பாலோர் சத்துருவை எதிர்நோக்கியே இருந்தார்கள் என்பது நன்றாக விளங்கியது. சிவாஜி தம் சைனியத்தைப் பாறைகளுக்கும், மரங்களுக்கும் பின்னால் ஒளிந்து செல்லுமாறு உத்தரவிட்டார். மஹாராஷ்டிர வீரர்கள் மௌனமாகச் சந்தடியின்றி மலைமேல் ஏறலானார்கள்.

சிறிது நேரத்திற் கெல்லாம் ஒரு சமவெளியான இடத்திற்கு வந்து சேர்ந்தனர். எதிரே வெளிச்சம் நன்றாகப் பரவியிருந்ததால் சேனை செல்வது தெளிவாகத் தெரிந்தது. சிவாஜி சுற்று முற்றும் பார்த்தார். நூறு கஜ தூரம் வரை மரமோ புதரோ யாதொன்றும் இல்லை. அதற்குமேல் மரங்கள் இருந்தன. ஆனால் அந்தச்

சமவெளியைத் தாண்டுவது எப்படி? வேறு வழியும் கிடையாது. கீழே இறங்கி வேறு வழியாகப் போவ தென்றால் அதற்குள் பொழுது விடிந்துவிடும். சிவாஜி சிறிது நேரம் யோசிக்கலானார். பிறகு தமது பாலிய நண்பரான தானாஜீயை அழைத்து, அவரிடம் ஏதோ இரண்டொரு வார்த்தைகளைச் சொன்னார். சிறிது நேரத் திற்கெல்லாம் தானாஜீ ஓர் ஓரமாகச் செல்லலானார். சிவாஜி நின்றுகொண்டே அவரை எதிர்பார்த்துக் கொண் டிருந்தார். சேனையும் தங்கள் தலைவனின் உத்தரவை எதிர்நோக்கி நின்றுகொண்டிருந்தது.

அரை நாழிகைக்கெல்லாம் தானாஜீ திரும்பிவந்து சிவாஜியிடம் ஏதோ சொன்னார். சிவாஜி சற்று யோசித்து விட்டு, 'ஆம்! அதுதான் சரி, வேறு வழியில்லை!' என்றார்.

மழை பெய்ததால் ஓர் இடம் தண்ணீர் தேங்கிப் பள்ள மாக இருந்தது. அதன் இரு பக்கங்களிலும் உயர்ந்த கரைகள் இருந்ததால், அதில் இறங்கிச் சென்றால் எதிரி அவர்களைக் கண்டுகொள்ள முடியாது. ஆகையால் அந்த யோசனையே ஊர்ஜிதமாயிற்று. சைனியம் அந்தப் பள்ளத்தில் இறங்கி, கோட்டையை நோக்கிச் செல்ல லாயிற்று. சிவாஜி மனத்திற்குள் பவானியைத் தியா னிக்கலானார்.

அவர் அருகில் இருந்த வீரனொருவன் திடீரென்று கீழே விழுந்தான். சிவாஜி கவனித்தார். அவன் உடலில் அம்பு பாய்ந்திருந்தது. மறுபடியும் ஒன்று வந்தது. பிறகு ஒன்றன் பின் ஒன்றாய் ஒரே அம்பு மாரி பொழிய ஆரம் பித்தது. சத்துருக்கள் விழித்துக்கொண்டனர். இவர்கள் பள்ளத்தின் வழியாக இறங்கிச் செல்லும்போது அவர்கள் சந்தேகமுற்று அம்பை வீசலானார்கள்.

சிவாஜியின் சைனியம் மரத்தோடு மரமாய் மறைந்து நின்றது. அம்பு மழை நின்றது. அந்தச் சமயம் சேனை

ஐம்பது கஜ தூரத்தில் இருந்தது. அன்று அந்தக் கோட்டையைப் பிடிக்கப் போர் புரிந்தே தீரவேண்டும் என்பதை நிச்சயம் செய்துகொண்டார் சிவாஜி. அதைத் தவிர வேறு வழியில்லை!

அந்த நிலைமையைக் கண்ட தானுஜீ, 'அரசே! இப்பொழுது கீழே திரும்பிச் செல்ல நேரமிருக்கிறது. இன்றில்லாவிட்டால் நாளை கோட்டைவசமாகிவிடும். ஆனல் இன்றைய முரட்டு தைரியத்தால் சர்வநாசம் சம்பவிக்கும்' என்ருர்.

சிவாஜி கம்பீரமான குரலில், 'ஜயஸிம்ஹரின் முன் எது சொன்னேனே அதைச் செய்வேன்! இன்று ருத்திர மண்டலத்தைப் பிடித்தே தீருவேன்! இல்லாவிட்டால் இந்தப் போரில் என் உயிரைத் தியாகம் செய்துகொள்ளுகிறேன்!' என்ருர்.

சிவாஜி மரங்களிடையே முன்னேறலானுர். எதிரியை ஏமாற்றுவதற்காக ஒரு நூறு வீரர்களை வேருெரு பக்கமாகச் சென்று சுடும்படியாக உத்தரவிட்டார். சற்று நேரத்திற்கெல்லாம் கோட்டையின் மற்ருெரு பக்கத்திலிருந்து துப்பாக்கிச் சப்தம் கேட்டது. சிவாஜி அந்தப் பக்கம் வருகிருர் என்று எதிரிகள் எல்லோரும் அந்தப் பக்கம் பாய்ந்தனர். இந்தப் புறம் எரிந்துகொண்டிருந்த இரண்டொரு தீவட்டிகளும் அவிந்தன. அந்தச் சமயம் சிவாஜி சைனியங்களை நோக்கி, 'மஹாராஷ்டிர வீரர்களே! பலதடவை உங்கள் பராக்கிரமத்தைக் காட்டிப் போர் புரிந்து என் பெயரை நிலை நாட்டியிருக்கிறீர்கள்! இன்றும் அதை நிலைநிறுத்துங்கள்! தானுஜீ! பாலிய கால சபதத்தை இன்று நிறைவேற்றுங்கள்!' என்ருர்.

சிவாஜியின் இந்த உற்சாக வார்த்தைகளைக் கேட்ட வீரர்களின் ஹிருதயம் வேகத்தால் நிரம்பியது. எல்லோரும் கம்பீரமான அந்த இரவில் கோட்டையை

அணுகினர். நடு இரவு கழிந்துவிட்டது. வானம் இருண்டிருந்தது. இரவின் பேய்க்காற்று வன விருக்ஷங்களைச் சப்திக்கச் செய்து கொண்டிருந்தது.

கோட்டைக்குப் பத்தடி தூரத்தில் செல்லும்போது, கோட்டையிலிருந்து ஒரு காவலாளி அந்தப் பக்கம் நோக்குவது தெரிந்தது. சட்டென்று மாவலி வீரன் ஒருவன் ஓர் அம்பைத் தொடுத்தான். காவலாளியின் சரீரம் கீழே சாய்ந்தது.

காவலாளி கீழே விழுந்த சப்தம் கேட்டதும், ஒன்று, இரண்டு, பத்து, நூறு, முந்நூறு என்று வீரர்கள் அரணின்மேல் வந்து கூடினார்கள். இனி ஒளிவதால் பயனில்லை என்பதை சிவாஜி உணர்ந்தார். சேனையை முன்னேமாறு ஆக்ஞாபித்தார். அடுத்த கணம் மஹாராஷ்டிரர்கள், 'ஹரஹர மஹாதேவ!' என்று வானிடியக் கோஷமிட்டார்கள். ஒரு கூட்டம் அரணின்மேல் ஏறிற்று. மற்றொன்று அரண்மேல் நிற்கும் முகம்மதியர் மேல் பாணங்களைப் பொழியலாயிற்று. முஸல்மான்களும் சத்துருவின் வருகையால் வருந்தவில்லை. அவர்களும், 'அல்லாஹோ அக்பர்!' என்று கோஷமிட்டார்கள். அவர்களில் சிலர் சுவரிலிருந்தே அம்பு பொழியலாயினர். சிலர் கீழே குதித்து மராட்டியரை எதிர்த்தனர்.

சிறிது நேரத்திற்குள் அரணுக்கும் மரங்களுக்கும் உள்ள இடைவெளியில் ஒரு பயங்கரமான போர் நடக்கலாயிற்று. பிணக்குவியலால் அரணின் பக்கம் நிரம்பிவிட்டது. வீரர்கள் இறந்த சரீரங்களின் மேல் நின்றுகொண்டு போர் புரியலானார்கள். மாவலி வீரர்கள் சிம்மம் போல் பாய்ந்து எதிரிகளை வெட்டி வீழ்த்தினர். பிரசித்திபெற்ற ஆப்கானியர்களும் யுத்தத்தில் சளைத்தவர்களல்லர். மலைகளுக்கிடையில் ஒரு ரத்தப் பிரவாகம்

பெருகியது. மராட்டிய வீரர்கள் எதிரிகளை வெட்டிக் குவித்துக்கொண்டிருந்தனர்.

இதற்குள் துர்க்கத்தின் சுவரிலிருந்து, 'மஹாராஜா சிவாஜிக்கு ஜே!' என்ற கோஷம் வானை ஊடுருவிச் சென்றது. ஒரு கணம் யாவரும் அந்தப் பக்கமாக நோக்கினர். சத்துருக்களின் சேனையைப் பிளந்து கொண்டு, உதிரத்தால் நனைந்த தன் ஈட்டியுடன் ஒரு மஹாராஷ்டிர வீரன் கோட்டையின் தளத்தின்மீது ஏறி, அங்கிருந்த மொகலாயர்களின் கொடியை வீழ்த்தி, கொடிக் காவலனையும் வெட்டி எறிந்தான். அந்த வீரன் தான் அங்கிருந்து, 'மஹாராஜா சிவாஜிக்கு ஜே!' என்று கோஷமிட்டான். அவன் யார்? அவன் தான் ரகுநாதஜீ ஹவல்தார்!

ஹிந்துக்களும் முகம்மதியர்களும் சண்டையை விட்டுத் திகைத்து நின்றனர். எல்லோருடைய பார்வையும் அந்த வீர ரகுநாதனின் பக்கம் சென்றது. ரத்தத்தால் நனைந்த அவன் உடல் நக்ஷத்திரங்களின் வெளிச்சத்தில் ஜ்வலித்தது. உடலில் இரண்டோர் இடங்களில் காயங்கள் பட்டிருந்தன. கால-தேவனே போர்க்கோலம் பூண்டு அரண்மேல் வந்து நிற்பதைப் போல் தோன்றினன் அவன். யாருக்கும் அவனை நெருங்கத் தைரியம் வரவில்லை.

சிறிது நேரம் எல்லோரும் சும்மா இருந்தனர். ஆனால் கோட்டைத் தளம் எதிரியின் வசமானத்தைக் கண்டு ஆப்கானியர்கள் நாற்புறமும் எழுந்து தாக்கலானார்கள். ரகுநாதன் நாற்புறமும் வீரர்களால் சூழப்பட்டான். அவன் யுத்தத்தில் நிபுணனாயினும் பலருக்கு மத்தியில் என்ன செய்ய முடியும்? ரகுநாதனுடைய உயிர் சந்தேகத்தில் இருந்தது!

ரகுநாதனுடைய வீர பராக்கிரமத்தைக் கண்டு

மாவலி வீரர்கள் உற்சாகமடைந்து, அரணின் பக்கம் ஓடி, கோட்டை மேல் ஏறலானார்கள். சிறிது நேரத்திற் கெல்லாம் வீரர்கள் வந்து கூடி, ரகுநாதனை நடுவே வைத்துக்கொண்டு, போரிடலானார்கள். மீண்டும் கத்திகள் மோதின. வீரர்கள் வீழ்ந்தனர். எதிரிகள் சின்னா பின்னமாயினர். மார்க்கம் தடையின்றிச் சீர்பட்டது. ஆயிரம் மஹாராஷ்டிர வீரர்களின் முன் முந்நூறு பட்டாணியர் என்ன செய்ய முடியும்?

அதே சமயம் சிவாஜியும் தானாஜியும் கீழே குதித்துக் கோட்டைக்குள் செல்லலானார்கள். சேனையும் இனி அங்கே போரிடுவது வீணென்று தன் தலைவனைப் பின் பற்றியது.

சிவாஜி வேகமாகச் சென்று கோட்டை அதிபனின் வாசலில் வந்து நின்றார். அந்த வாசல் பலமாகவும், காவலுடனும் இருந்தது. சிவாஜியின் கட்டளைப்படி வீரர்கள் காவலாளிகளை வீழ்த்தினர். சிவாஜி உரத்த குரலில் 'கதவைத் திறந்துவிடுங்கள்! இல்லாவிட்டால் வீடு உடைக்கப்பட்டுவிடும்!' என்றார். உள்ளே இருந்த பட்டாணியர், 'நெருப்பையிட்டுக் கொளுத்தவேண்டுமானாலும் செய்யுங்கள்! ஆனால் காபிர்களின் முன்னிலையில் கதவைத் திறக்க மாட்டோம்!' என்றனர்.

மஹாராஷ்டிர வீரர்கள் அந்த வீட்டில் நெருப்பு வைக்கலானார்கள். பட்டாணியர்கள் நெருப்பை அணைக்க முயன்றனர். ஆனால் அனல் வேகமாகப் பரவலாயிற்று. இந்த அக்னிக் காண்டத்தில் சில மஹாராஷ்டிர வீரரும் உயிரிழந்தனர்.

கொஞ்சம் கொஞ்சமாக யாவும் அக்னி மயமாயின. அக்னி ஜ்வாலை வானைத் தொட்டது. அந்தகாரம் ஒரே பிரகாசமாக மாறியது. அருகே உள்ள பர்வதங்கள், கிராமங்கள் யாவற்றிலும் இதன் ஜோதி வீசியது. அருகே

யிருந்த ஊர்களிலுள்ளவர்கள், மஹாராஷ்டிர சேனை மொகலாயரின் கோட்டையைப் பிடித்து வெற்றி கொண்டு விட்டதென்பதை அறிந்துகொண்டனர்.

வீரர்களால் எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவும் பட்டாணிய ரஹமத்கான் செய்துவிட்டான். வீரரைப் போல் உயிரைத் தியாகம் செய்யவேண்டியதுதான் பாக்கி. வீடு தீக்கிரையாக்கப்பட்டதும், ரஹமத்கான் தன் சகபாடிகளுடன் ஏறிக் குதித்து வெளியே வந்து நின்றான். ஒவ்வொரு வீரனும் ஒவ்வொரு மஹாவீரனைப் பலரைக் கொன்று குவிக்கலானான்.

மஹாராஷ்டிரர்கள் முகம்மதியர்களைச் சூழ்ந்து கொண்டார்கள். இந்தத் தடவை பலர் ஹதமானார்கள். ரஹமத்கான் களைப்படைந்த போதிலும் சிம்மம் போல் போர்புரிந்தான். மராட்டியர் நாற்புறமும் சூழ்ந்து அவன்மேல் வாள்வீச விரும்பினார்கள். அவனுக்கு உயிரில் நம்பிக்கை இல்லை. ஆனால் அப்பொழுது சிவாஜி இரைந்து, 'கோட்டை அதிபனைக் கொல்லாதீர்கள்! கைதுசெய்து கொண்டு வாருங்கள்!' என்றார். வீரர்கள் அவன் கையிலிருந்த வாளைப் பிடுங்கிக்கொண்டு அவனைக் கைது செய்தார்கள்.

மஹாராஷ்டிரர்கள் வழிகளில் நெருப்பை வைத்துக் கொண்டே சென்றனர். சிவாஜி பார்த்தார். கோட்டையின் மறுபுறமும் கருமேகத்தைப் போல் ஐந்நூறு ஆப்கானிய வீரர்கள் கோட்டைமீது ஏறிக்கொண்டிருந்தனர்.

சிவாஜி முதலில் நூறு வீரரைக் கோட்டையின் மற்றொரு புறத்திற்கு அனுப்பிய பொழுது, சிவாஜி அந்தப் பக்கந்தான் ஆக்கிரமிக்கிறார் என்று பட்டாணியர்கள் அந்தப் பக்கம் பாய்ந்தனர். அந்த நூறு வீரரும் யுத்தம் செய்துகொண்டே மெள்ளக் கீழ்நோக்கி இறங்கினர். பட்டாணியர்களும் அவர்களைப் பின்தொடர்ந்

தனர். இங்கே நடந்தது வேறாகி விட்டது. இது அவர்களுக்கு அப்பொழுது விளங்கவில்லை. மற்றொரு புறமாக சிவாஜி கோட்டையைப் பிடித்துக்கொண்டார். நெருப்பு ஜ்வாலையைக் கண்ட பிறகுதான் தாங்கள் ஏமாறியதை ஆப்கானியர் அறிந்தார்கள். பிறகு கோட்டைப் பக்கம் ஏறி எதிரிகளைத் துவம்சம் செய்ய விரும்பினார்கள்.

ஒரு சிறுசேனையைத் தோற்கடித்து சிவாஜி கோட்டையைப் பிடித்துக்கொண்டார். இப்பொழுது ஐந்நூறு வீரர்கள் கோட்டைமீது ஏறிக்கொண்டிருந்தனர். சிவாஜியின் முகம் கம்பீர மடைந்தது.

கோட்டையின் மத்தியில் உள்ள கோட்டை அதிபனின் மஹலைத் தவிர, ஆக்கிரமிக்க முடியாத இடம் வேறொன்றும் கிடையாது. அதன் நாற்புறமும் ஆழமான அகழ் இருந்தது. அதன் பின் கல் தளங்களும் இருந்தன. மஹலின் ஒரு பாகம் எரிந்து வீழ்ந்துவிட்டது. அதிகச் சேனையுடன் யுத்தம் செய்யத் தகுந்த இடம் அதுதான் என்று சிவாஜி எண்ணினார். உடனே வீரர்களை அந்த மஹலில் புகும்படி ஆக்கினையிட்டார். தீ அணைக்கப் பட்டது. உட்புற வாசலில் ஆயுதம் தாங்கிய வீரர்கள் வந்து நின்றனர். ஒரே கணத்தில் எல்லாம் சீர்ப்பட்டு விட்டது. சிவாஜி தானாஜியை நோக்கி, ‘இப்பொழுது எதிரி நம்மைத் தாக்கினால் நாம் நம்மை நன்றாகப் பாதுகாத்துக்கொள்ள முடியும். தவிர, சத்துருக்கள் இங்கு வந்து சேரு முன்பே தோல்வி யடைந்து விடுவார்கள்! இந்தச் சமயம் அவர்களை ஒரே தடவையாக எதிர்த்தால் அவர்கள் சின்னாபின்னமாகி விடுவார்கள். தானாஜி! இந்த இருநூறு கொண்ட சைனியத்துடன் இங்கேயே இருங்கள்! நான் ஒருமுறை முயற்சி செய்கிறேன்!’ என்றார்.

'அரசே! தாஞஜி என்ன? எந்த மஹாராஷ்டிர வீரரும் இங்கு இருக்கமுடியாது. எதிர்த்து நின்று யுத்தம் செய்வதில் எல்லோரும் சமர்த்தர்கள்! இந்த இடத்தை எதிரிகள் சூழ்ந்துகொண்டால் தாங்கள் இங்கு இல்லாமல் வேறு யாருடைய புத்தி பலத்தால் இந்த மஹல் ரட்சிக்கப் படும்?' என்ருர் தாஞஜி.

சிவாஜி சிரித்துக்கொண்டே, 'தாஞஜி, நீங்கள் சொல்வது சரிதான். நான் சத்துருக்களை எதிர்முகமாகக் கண்டு யுத்தப் பிரியஞனேன். உமது யோசனை ஏற்றுக்கொள்ளக்கூடியதுதான். நான் இங்கு இருக்கவேண்டியதும் உசிதம்தான்! ஆனல் நமது வீரர்களில் இருநூறு பேரை மாத்திரம் கொண்டு இந்த இருளிலேயே திடீரென்று அவர்களைத் தாக்கி அவர்களிடம் வெற்றிகொள்ளக்கூடியவர்கள் யார் இருக்கின்றனர்?' என்று கேட்டார்.

ஒன்று! இரண்டு! பத்து! நூறு வீரர்கள் ஒரே முகமாய் முன்வந்தார்கள்! எல்லோரும் ஒரே குரலில், 'நாங்கள் அவர்களை முறியடிக்கிருேம்!' என்றனர். ஆனல் ரகுநாதன் பேசாமல் ஓர் ஓரமாக நின்றுகொண்டிருந்தான். அவன் ஒன்றும் பேசவில்லை.

சிவாஜி ஒவ்வொருவராகப் பார்த்துவிட்டு, ரகுநாதனின் பக்கம் பார்த்து, 'ஹவல்தார்! நீ இவர்கள் எல்லோரிலும் சிறியவன்! ஆயினும் உன் புஜத்தில் பலம் இருக்கிறது. உன்னுடைய வீரத்தைக் கண்டு இன்று நான் சந்தோஷமடைந்தேன். நீதான் இன்று இந்தக் கோட்டையின் வெற்றியை ஆரம்பித்தாய். நீயே அதை ஒரு முடிவுக்குக் கொண்டுவா!' என்ருர்.

ரகுநாதன் பேசாமல் இருநூறு சேஞ வீரர்களுடன் மின்னல் போல் வெளியே பாய்ந்தான். சிவாஜி தாஞஜியை நோக்கி, 'தாஞஜி! இந்த ஹவல்தார் ஒரு ரஜபுத்

திரன்! இவனுடைய தோற்றத்தையும், நடவடிக்கைகளை யும் கவனித்தால் இவன் ஒரு வீர வம்சத்தில் பிறந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. ஆனால் இவன் தன் வம்சத் தைப்பற்றி ஒருபொழுதும் ஒன்றும் கூறியதில்லை. தன்னு டைய பராக்கிரமத்தைப் பற்றி கர்வமான வார்த்தைகளும் அவன் வாயினின்றும் வந்ததில்லை. என்னுடைய உயிரைப் புனாவில் ஒரு தினம் காப்பாற்றினான். இன்று இந்த துர்க்க விஜயத்தில் அவனே முதன்மையாக நின்றான். இன்று நாம் அவனுக்கு எந்த வெகுமதியும் அளிக்கவில்லை. நாளை சபையில் ராஜா ஜயஸிம்ஹரின் முன்னிலையில் ரஜ புத்திர ஹவல்தாருக்கு உசிதப்படி வெகுமதியளிக்க வேண்டும்!' என்றார்.

ரகுநாதன் தான் ஒப்புக்கொண்ட காரியத்தைச் செவ் வனே செய்து முடித்தான். எதிரிகள் மலைமேல் ஏறும் போது மஹாராஷ்டிரர்கள் அவர்கள் மீது பாய்ந்தார்கள். சிறிது நேரத்திற்கெல்லாம் 'ஹர ஹர மஹாதேவ!' என்ற கோஷம் வான்முகத்தை எட்டியது. எதிரிகளைச் சாமானியமாகத் தடைசெய்ய முடியவில்லை. சிறிது நேரத் திற்கெல்லாம் அவர்களுடைய தளம் கலைந்தது. அவர்கள் பின்வாங்க லானார்கள். அவர்கள் திரும்பியதும் மாவலி வீரர்கள் வாளை ஏந்தி அவர்களைத் துரத்தலானார்கள்! இதற்குள் ரகுநாதன் ஓங்கிய குரலில், 'ஓடுகிறவர்களைக் கொல்லாதீர்கள்! சிவாஜியின் ஆக்ஞையைக் கடைப் பிடியுங்கள்!' என்றான். சண்டை முடிந்தது. எதிரிகள் மலை ஏறுவதைத் தவிர்த்து ஓட்டம் பிடித்தனர்.

ரகுநாதன் கோட்டைத் தளத்தில் ஒவ்வோரிடத் திலும் தனது வீரர்களைக் காவல் வைத்திருந்தான். கோட் டையின் சகல பாகங்களையும் கைப்பற்றி, அதிலுள்ளவை களைக் காப்பாற்றிய பின், அவன் சிவாஜியிடம் வந்து வணங்கிச் சகல விஷயங்களையும் சொன்னான்.

அதே சமயம் கீழ்த்திசையில் உஷையின் செம்மேனி காணப்பட்டது. காலை நேரத்தின் மென்காற்று வீசியது. துர்க்கத்தில் சாந்தி நிலவியது. ஒரு சந்தடியும் இல்லை. அழகான மரங்கள் சூழ்ந்த அந்த மலைச் சிகரத்தில் யாரோ முனிவர் தவம் செய்யும் ஆசிரமம் இருப்பதாகத் தோன்றியதே ஒழிய, அங்கே யுத்தம் நடந்ததாகவே தெரியவில்லை.



அத்தியாயம் 16

வெற்றி கண்டவனுக்கு வெகுமதி

மறுநாள் காலை துர்க்கத்தில் ஒரு சபை கூடியது. மண்டபம் வெள்ளித் தூண்களாலும் பட்டுத் துணிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ராஜா ஜயஸிம்ஹரும் சிவாஜியும் சரியாசனத்தில் அமர்ந்திருந்தனர். நாற்புறமும் வழக்கப்படி சேனா வீரர்கள் நின்றிருந்தனர். எல்லோரும் துப்பாக்கி, வாள், கேடயம் முதலியவைகளைத் தரித்திருந்தனர்.

ஜயஸிம்ஹர் சிரித்துக்கொண்டே சிவாஜியிடம், 'தாங்கள் டில்லி அதிபனின் பக்கம் சேர்ந்ததிலிருந்து அவருக்கு வலக் கரம் போல் ஆகிவிட்டீர்கள்! தங்களுடைய இந்த உபகாரத்தை டில்லி அதிபர் ஒரு நாளும் மறவார். வெற்றிதான் தங்கள் முன்னிலையில் கைகட்டி நிற்கின்றதே!' என்றார்.

'மஹாராஜா ஜயஸிம்ஹர் எங்கு இருக்கிறாரோ அங்குதான் வெற்றியும்!' என்றார் சிவாஜி.

'விஜயபுரம் கைவசமாகுமென்பதுதான் நமது அனுமானம். ஆனால் இவ்வளவு சீக்கிரம் ஆகும் என்று எதிர்பார்க்கவில்லை! ஓரிரவில் கோட்டை வெற்றி!'

'மஹாராஜா! கோட்டையை வெற்றி கொள்ளும் முறையில் சிக்ஷை எனக்குப் பாலியத்திலேயே ஏற்பட்டது.

ஆனால் நாங்கள் எப்படி அனுயாசமாக வெற்றிகொள்ள வேண்டுமென்று எண்ணினேமோ அப்படி நடைபெற வில்லை!'

'ஏன்?'

'முகம்மதியர்கள் தூங்கிக் கொண்டிருப்பார்கள் என்று நாங்கள் எண்ணினேம். ஆனால் சென்ற பின்பு தான் அவர்கள் யாவரும் விழித்திருந்தார்கள் என்பதும், போரை எதிர்நோக்கி இருந்தார்கள் என்பதும் தெரிந்தது. இந்தக் கோட்டையைப் பிடிக்க நடந்த போரில் வீரர் களுக்கு ஏற்பட்ட சேதம் இதற்கு முன் எந்தக் கோட்டை யின் வெற்றியிலும் ஏற்பட்டதில்லை.'

'இரவில் கூடப் போர் மூளக்கூடும் என்று எதிரிகள் விழித்துத் தயாராய் இருந்தனர் போலும்!'

'ஆம்! இன்றுவரை பிடிக்கப்பட்ட கோட்டை களில் ஒன்றிலாகிலும் இம்மாதிரித் தயாராக இருந்த சேனை எதிர்ப்பட்டதில்லை!'

'முன்னறிந்து அணிவகுத்து அவர்கள் தயாராகவே இருக்கிறார்கள்! ஆனால் ராஜா சிவாஜியின் வேகத்தைத் தடை செய்ய முடியாது! சிவாஜியின் வெற்றி தவிர்க்க முடியாதது!'

'மஹாராஜரின் கிருபையால் கோட்டையை ஜயித் தாகிவிட்டது. ஆனால் நேற்று இரவில் ஏற்பட்ட நஷ்டத்தை இந்த ஆயுளில் பூர்த்தி செய்ய முடியாது. ஆயிரம் வீரர்களில் இருநூறு முந்நூறு பேரை இனி இந்த உலகில் காண முடியாது. அம்மாதிரியான திடமான நம்பிக்கை வாய்ந்த வீரர்கள் நமக்குக் கிடைப்ப தரிது!' என்று சொல்லி, சிவாஜி ஒரு கணம் சோகக் குறியுடன் இருந்துவிட்டு, தம் கண் ஜாடையினலேயே கைதிகளை ஆஜர் செய்யும்படி கட்டளை யிட்டார்.

ரஹமத்கானின் கீழ் ஆயிரம் வீரர்கள் அந்தக் கோட்

டையைக் காத்திருந்தனர். ஆனால் முந்தின நாள் நடந்த யுத்தத்தில் முந்நூறு பேரே கைதியாயினர். மற்றவர்களில் சிலர் கொல்லப்பட்டார்கள் சிலர் ஓடிவிட்டார்கள். கைதிகள் யாவரும் சபைக்குக் கொண்டுவரப்பட்டார்கள். அவர்கள் கைகள் பின்புறம் கட்டப்பட்டிருந்தன.

எல்லோர் கைகளையும் அவிழ்த்து விடும்படி சிவாஜி ஆக்ஞாபித்தார். பிறகு அவர்களை நோக்கி, 'ஆப்கானியர்களே! நீங்கள் வீரர் என்று பெயர் தரித்திருக்கிறீர்கள்! உங்களுடைய செய்கையினால் நாம் சந்தோஷமடைந்தோம். இனி நீங்கள் சுதந்திரர்கள். இஷ்டமானால் டில்லி அதிபரின் கீழ் வேலை பார்க்கலாம். அல்லது உங்கள் அரசன் விஜயபுர ஸுல்தானிடம் வேண்டுமானாலும் செல்லலாம். இது எமது உத்தரவு! உங்களுக்கு யாதொரு கெடுதியும் சம்பவிக்காது!' என்றார்.

சிவாஜியின் இந்தச் செய்கையைக் கண்டு யாரும் ஆச்சரிய மடையவில்லை. கோட்டைகளைப் பிடித்த பிறகும், எதிரிகளின் மேல் வெற்றிகொண்ட பிறகும், சிவாஜி அவர்களிடம் பல தடவை தயை காட்டியிருக்கிறார். இதன் காரணமாக அவருடைய ஆப்த நண்பர்கள்கூடக் குறை கூறுவதுண்டு. அவர் ஒன்றையும் பொருட்படுத்துவதில்லை. சிவாஜியின் இந்தக் குணத்தைக் கண்டு அந்த வீரர்களில் சிலர் டில்லி அதிபரிடம் சம்பளத்திற்குக் காரியம் பார்க்க இசைந்தனர்.

அதன் பிறகு சிவாஜி ரஹமத்கானைக் கொண்டு வரும்படி உத்தரவிட்டார். அவனுடைய கைளும் பின்புறம் கட்டப்பட்டிருந்தன. தலையில் வாளினால் ஏற்பட்ட காயம் இருந்தது. புஜங்களில் அம்பு தைத்த காயங்கள் இருந்தன. அவன் சிறந்த வீரனைப் போல் நடந்து வந்து சபைமுன் நின்று சிவாஜியை நோக்கலானான்.

அந்த வீர சிரேஷ்டனைக் கண்டு சிவாஜி தம் ஆசனத்தினின்றும் எழுந்து, தாமே தம் கையால் அவன் கட்டுக்களை அவிழ்த்துவிட்டு, பிறகு மெள்ளமெள்ள, 'வீரனே! யுத்த முறைப்படி தங்கள் கைகள் கட்டப் பட்டிருந்தன. தாங்கள் ஓர் இரவு கைதியைப் போல் இருந்தீர்கள்! இந்தக் குறைக்காக என்னை மன்னியுங்கள். இந்தச் சமயம் தாங்கள் சுதந்திரமானவர். வெற்றி தோல்வி அவரவர்கள் பாக்கியானுசாரம் ஆகிறது. ஆனால் தங்களைப் போன்ற வீரருடன் போராடினதால் நாங்கள் கௌரவமடைகிறோம்!' என்றார்.

ரஹமத்கான் மரண தண்டனையை எதிர்நோக்கி இருந்தான். சிவாஜியின் பெருந்தன்மையைக் கண்டு அவன் ஹிருதயம் இளகிவிட்டது. யுத்த காலத்தில் பய மடைந்து ரஹமத்கானை யாரும் பார்த்ததில்லை. ஆனால் இன்று அந்தப் பழுத்த வீரனின் ஒளி மிகுந்த இரு விழி களிலும் இரண்டு துளி கண்ணீர் துளிர்த்தது. ரஹமத் கான் முகத்தைத் திருப்பி அதைத் துடைத்துக்கொண்டு மெதுவாக சிவாஜியை நோக்கி, 'க்ஷத்திரிய ராஜ! நேற்று யுத்தத்தில் தங்களிடம் தோல்வி அடைந்தேன்! இன்று தங்கள் பெருந்தன்மையால் இன்னும் தோல்வி யடைந்தேன்!' என்றான்.

இதற்குள் ஜயஸிம்ஹர், 'பட்டாணிய சேனாபதி! தாங்களும் தங்களுடைய மேலான பதவியைச் சரியாக நிர்வகித்தீர்கள்! டில்லி அதிபர் தங்களைப் போன்ற சேனாபதியை அடைந்து தங்களுக்கு மேன்மையளிக்கத் தயங்கமாட்டார். தங்களைப் போன்ற பெருந்தன்மை வாய்ந்த சேனாபதி, நமது பிரதம காரியஸ்தராக இருக்க இசைந்துவிட்டாரென்று டில்லி அதிபருக்கு ஒரு கடிதம் எழுதலாமா?' என்றார்.

'மஹராஜ், தங்கள் நடத்தையால் எனக்குக்

கௌரவம் கிடைத்தது. ஆனால் குழந்தையிலிருந்து யாருடைய உப்பைத் தின்றிருக்கிறேனோ அவரை விட முடியாது! எது வரையில் கையில் வாள் ஏந்த முடிகிறதோ அதுவரை விஜயபுரத்திற்காகத்தான் போராடுவேன்!' என்றான் ரஹமத்கான்.

'நல்லது! இன்றிரவு தாங்கள் இங்கேயே சிரம பரிகாரம் செய்துகொள்ளுங்கள். நாளை நமது சேனை உங்களை ஆபத்தின்றி விஜயபுரம் கொண்டுபோய்ச் சேர்க்கும்!' என்றார் சிவாஜி.

'அரசே! தாங்கள் என்னுடன் இனிமையாகப் பழகுகிறீர்கள். நானும் கெடுதல் செய்ய முடியாது. எந்த விஷயத்தையும் மறைத்து வைக்கவும் முடியாது. தாங்கள் தங்கள் சைனியத்தில் நன்றாகத் தேடிப் பாருங்கள்! எல்லோரும் தங்களுக்கு உண்மையானவர்கள் அல்ல! நேற்றை யுத்தத்திற்கு முன்பே எனக்கு இந்த விஷயம் ரகசியமாகத் தெரிந்துவிட்டது. அதனால்தான் நாங்கள் இரவு பூராவும் சண்டையிட முன்னேற்பாடாக இருந்தோம். செய்தி தெரிவித்தவன் தங்களுடைய சைனிகன் ஒருவன்தான். இதை விட அதிகமாக நான் ஒன்றும் சொல்ல முடியாது. உண்மையையும் வாக்கையும் உடைக்க முடியாது!' என்று சொல்லிக் காவலர்களுடன் ரஹமத்கான் அப்புறம் செல்லலானான்.

கோபத்தாலும் துக்கத்தாலும் சிவாஜியின் முகம் கறுத்தது. கண்கள் கோபக் கனலைக் கக்கின. அவர் உடல் நடுங்கிற்று. அந்தச் சமயம் யோசனை கூறுவது கூடப் பிசகென்று அவருடைய நண்பர்கள் கருதினார்கள். அன்று பொழுது நன்றாகப் போகவேண்டுமே என்று மற்றவர்கள் எண்ணினார்கள்.

சிவாஜியின் நிலைமையைக் கண்ட ஜயஸிம்ஹர், 'சாந்தமடையுங்கள்!' என்று சொல்லி, சைனிகர்களை

அழைத்து' 'இந்தக் கோட்டையின் சண்டை விஷயம் உங்களுக்கு எப்பொழுது தெரிந்தது?' என்று கேட்டார்.

'இரவு முதல் ஜாமத்திற்குப் பிறகு' என்று பதிலளித்தனர் சைனிகர்கள்.

'அதற்கு முன்பு ஏதாவது தெரியுமா?'

'அன்றிரவு ஒரு கோட்டையை ஆக்கிரமிக்க வேண்டுமென்பது மட்டும் தெரியும். ஆனால் எதை ஆக்கிரமிக்க வேண்டும், அதன் பெயரென்ன என்பதொன்றும் தெரியாது.'

'சரி! கோட்டைக் கருகில் நீங்கள் எப்பொழுது சென்றீர்கள்!'

'இரவு இரண்டு மூன்று ஜாமங்கள் பொறுத்து!'

'இரவு முதல் ஜாமத்திலிருந்து இரவு மூன்றாம் ஜாமம் கழியும் வரை இடையில் எல்லோரும் ஒன்றாகத் தானே இருந்தீர்கள்! யாரும் வராம லிருக்கவில்லையே! அப்படி யாராவது வராமல் இருந்திருந்தால் சொல்லுங்கள். ஒருவருக்காக எல்லோரும் அவமானமடைய வேண்டியதில்லை! நீங்கள் சிவாஜியின் ஆதிக்கத்தின் கீழ் தேசந்தோறும் கிராமம் தோறும் போரிடுகிறீர்கள். அரசர் உங்களை நம்புகிறார். நீங்களும் இம்மாதிரி ஒரு தலைவனை அடைய முடியாது. நீங்களே உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாகப் பிரமாணம் செய்யுங்கள். யாராவது துரோகி இருந்தால் அவனை வெளிப்படுத்துங்கள்! அவன் நேற்றைய சண்டையில் இறந்திருந்தாலும் அவன் பெயரைத் தெரிவியுங்கள்! ஏன் சந்தேகத்தால் எல்லோரும் களங்கப்படவேண்டும்?' என்றார்.

சைனிகர்கள் முதல் நாள் விஷயத்தை ஞாபகப் படுத்திக் கொண்டு ஒருவருக்கொருவர் பேசலானார்கள். சிவாஜியின் கோபம் சற்றே தணிந்தது. அவர் ஜயஸிம்ஹரிடம், 'அரசே, அந்தக் கபடனை எனக்குக் காண்பித்

தால் நான் என் வாழ்நாள் முழுவதும் தங்களுக்குக் கடமைப்பட்டவனுவேன் !' என்ருர்.

சந்தர ராவ் என்ற பெயருடைய ஜுமேல்தார் முன் வந்து, 'அரசே! நேற்று இரவு ஒரு ஜாமத்திற்குப் பிறகு நாங்கள் போருக்குத் தயாராகிக்கொண்டிருந்தோம். அந்தச் சமயம் என் கீழ் உள்ள ஒரு ஹவல்தார் தேடியும் கூட அகப்படவில்லை. ஆனல் துர்க்கத்தின் அடிவாரத்தில் அவன் அகப்பட்டான் !' என்ருர்.

'அவன் யார்? அவன் இன்னும் ஜீவித்திருக்கிருனு?' என்ருர் சிவாஜி.

துரோகியின் பெயரைக் கேட்டு யாவரும் திக்பிரமை யடைந்து போயினர். பேச்சு மூச்சு இல்லை. ஊசி விழுந்தால் கூடக் காது கேட்கும்படியான நிசப்தம் நிலவியது. ரகுநாத ஹவல்தாரின் பெயரைக் கேட்டு யாவரும் ஆச்சரியமடைந்து போயினர்.

சந்திர ராவ் ஒரு பிரசித்தமான வீரர். ஆனல் ரகுநாதன் வந்ததினல் அவருடைய கியாதியும், பெயரும் அமுங்கி விட்டன. மனிதருடைய சுபாவத்தில் பொருமையைப் போன்ற பயங்கரமான சக்தி வேருென்றும் கிடையாது.

சிவாஜியின் முகம் கோபத்தால் ஜ்வலித்தது. அவர் பற்களைக் கடித்துக்கொண்டே, 'கபடத் துரோகி! உன் நிந்தனை ரகுநாதனின் கீர்த்தியைத் தொடக்கூட முடியாது. நான் அவனுடைய நடத்தையை நேரில் கண்டிருக்கிறேன்! பொய் நிந்தனைக்குச் சேனை தண்டனை யளிக்கும்! என்ருர்.

கோபத்தால் சிவாஜி வாளையுருவி சந்திரராவின்மேல் பாய்ந்தார். இதற்குள் ரகுநாதன் எதிரே வந்து நின்று, 'மஹராஜ்! சந்திரராவுக்கு மரண தண்டனை விதிக்காதீர்கள்! அவர் பொய் சொல்லவில்லை! உண்மையாக

நான் துர்க்க தளத்திற்கு வந்து சேரத் தாமதமாயிற்று!"
என்றான்.

மறுபடியும் சபையில் நிசப்தம். எல்லோரும் திடுக்கிட்டனர். சிவாஜி சில நிமிஷம் அசையாமல் சிலை போல் அமர்ந்திருந்தார். பிறகு மெள்ள நெற்றியில் துளிர்த்த வேர்வையைத் துடைத்துக்கொண்டு, நான் கனவு காணவில்லையே? ரகுநாத், இதென்ன காரியம் செய்தாய் நீ? கோட்டையைப் பிடிக்கும்போது நீ எல்லோரையும் முந்திவிடவில்லையா? இருநூறு வீரர்களுடன் நீ ஆப்கானியர்களை ஜயிக்கவில்லையா? சத்துருவுக்குத் தகவல் தெரிவித்து விட்டோமென்று இதெல்லாம் செய்தாய்?"
என்றார்.

ரகுநாதன் மெள்ள, 'பிரபோ! நான் இந்தத் தோஷத்தினின்றும் முற்றிலும் விடுபட்டவன்!' என்று சொன்னான். பயமற்ற அந்த வீரன் சபையில் சிவாஜியின் கோபக் கனலின் முன் நின்றான். கண் இமைக்கவில்லை. அவனுடைய விசாலமான மார்பினின்றும் பெருமூச்சு மாத்திரம் வந்துகொண்டிருந்தது. முன்தினம் எப்படிக் கணக்கற்ற எதிரிகளின் மத்தியில் நின்றிருந்தானோ அதே போல், அப்பொழுதும் சஞ்சலமன்றி நின்றுகொண்டிருந்தான்.

சிவாஜி கர்ஜித்துக்கொண்டே, 'பின் ஏன் என்னுடைய ஆக்கினையை மீறி இரவு ஒரு ஜாமம் கழித்து வந்தாய்?' என்று கேட்டார்.

ரகுநாதனின் உதடுகள் சற்றே துடித்தன. ஆனால் அவன் பதிலொன்றும் சொல்லாமல் பூமியைப் பார்க்கலானான்.

ரகுநாதன் சும்மா இருந்ததைப் பார்த்து சிவாஜியின் சந்தேகம் அதிகரித்தது. அவர் கண்கள் சிவந்தன. கோபத்துடன், 'கபடா! இதற்காகத்தான் வீரத்துவம் காண்பித்

தாயோ? நெருக்கடியான நிமிஷத்தில் சிவாஜியை மோசம் செய்ய முயற்சித்தாயா!' என்றார்.

ரகுநாதன் முன்போலவே தைரியமான குரலில், 'அரசே! மோசம், கபடம் முதலியவை எங்கள் வம்ச ரீதியல்ல! சந்திரராவ்கூட இந்த விஷயத்தை அறிவார்!' என்றான்.

ரகுநாதனின் இந்த உறுதியைக் கண்ட சிவாஜியின் கோபம் இன்னும் ஆகுதி கொண்டது. அவர் வெறுப்புடன், 'துரோகி! தப்ப முயற்சிப்பது வீண்! பசியுடன் இருக்கும் சிம்ஹத்தினிடமிருந்து தப்பிவிடுவது சுலபம். ஆனால் என் கோபத்தினின்றும் தப்புவது முடியாத காரியம்!' என்றார்.

ரகுநாதன் முன்போலவே அமைதியாக, 'நான் அரசர் முன்னிலையில் உயிர்ப்பிச்சை கேட்கவில்லை! மன்னிக்கும் படியும் மனிதரிடம் பிரார்த்தனை செய்யவில்லை. கடவுளே! நீதான் என்னை மன்னிக்கவேண்டும்!' என்றான்.

சிவாஜி வாளை உருவி, 'துரோகம் செய்தவனுக்கு மரணம்தான் தண்டனை!' என்றார்.

சிவாஜியின் வாளைக் கண்டு ரகுநாதன் சற்றும் கலங்கவே இல்லை. 'வீரன் இறக்கத் தயாராக இருக்கிறான்! ஆனால் அவன் துரோகம் செய்யவில்லை!' என்றான்.

சிவாஜியால் சகிக்க முடியவில்லை. அவர் கை வாளுடன் நடுங்கியது. அதே சமயம் ராஜா ஜயஸிம்ஹர் எழுந்திருந்து அவர் கையைப் பற்றினார்.

அந்தச் சமயம் சிவாஜி கோபத்தால் பொங்கிக்கொண்டிருந்தார். அவர் சரீரம் பதறிக்கொண்டிருந்தது. அவர் ஜயஸிம்ஹருக்கு மரியாதை செய்யவேண்டுமென்பதைக் கூட மறந்துவிட்டார். கோபத்துடன், 'கையை விடுங்கள்! எனக்கு ரஜபுத்திரர்கள் நியமம் என்னவென்பது

தெரியாது. நான் அதை அறிந்துகொள்ளவும் விரும்பவில்லை. எங்கள் மஹாராஷ்டிர ஸனாதன தர்மம் துரோகிக்கு மரண தண்டனை விதிக்கவேண்டுமென்பதுதான்! சிவாஜி அதையே கடைப்பிடிப்பார்!' என்றார்.

ஜயஸிம்ஹர் சற்றும் கோபமடையாமல், 'அரசே! தங்களுடைய இன்றைய செய்கைக்குத் தாங்கள் நாளை வருந்தவேண்டி வரும். இன்று இவனுக்கு மரண தண்டனை விதித்தால் உங்கள் ஆயுள்வரை துக்கம் உங்கள் மனத்தை விட்டகலாது. யுத்தம் செய்து செய்து என் தலை நரைத்துவிட்டது. என் பேச்சைக் கேளுங்கள். இந்த வீரன் துரோகியல்ல. இவனை விசாரிக்கவும் இது சமயமல்ல. தாங்கள் என் நண்பர். ஆகையால் என் நண்பரிடம் இந்த ரஜபுத்திரனுக்கு உயிர்ப் பிச்சை கேட்கிறேன். எனக்குப் பிக்ஷாதானம் செய்யுங்கள்!' என்றார்.

ஜயஸிம்ஹரின் தன்மையைக்கண்டு சிவாஜி பிரமித்துவிட்டார். அவர் மெதுவாக, ஐயனே! என் செய்கைக்கு மன்னியுங்கள். தங்கள் வார்த்தை ஒரு பொழுதும் தவிர்க்கக் கூடியதல்ல! ஆனால், துரோகியை சிவாஜி மன்னித்தார் என்பதை யாரும் நம்ப முடியாது. ஆனால், ஹவல்தார்! ராஜா ஜயஸிம்ஹர் உனது உயிரை ரக்ஷித்தார்! என் முன் நிற்காதே, போ! துரோகியின் முகத்தில் விழிக்க சிவாஜி விரும்பவில்லை!' என்றார்.

சபையிலிருந்து ரகுநாதன் புறப்படலானான். இதற்குள் சிவாஜி அவனை நோக்கி, 'நில்! உன் இடுப்பில் அந்த வாளை என் கையால் கட்டி இரண்டு வருஷமாகிறது! துரோகியிடம் அந்த வாள் இருப்பது உசிதமல்ல. வீரர்களே! அந்த வாளைப் பிடுங்கிக்கொள்ளுங்கள்! பிறகு இந்தத் துரோகியைக் கோட்டைக்கு வெளியே துரத்துங்கள்!' என்றார்.

ரகுநாதனுக்கு மரண தண்டனை விதித்தபோது அவன் சஞ்சலமடையவில்லை. ஆனால் காவலாளி ஒருவன் வாளைப் பிடுங்க ஆரம்பித்த பொழுது அவன் மெய் நடுங்கியது. அவன் கண்கள் சிவந்தன. ஆனால் அவன் தன் கோபத்தை அடங்கிக்கொண்டு சிவாஜியின் பக்கம் ஒரு முறை பார்த்துவிட்டு, தலை குனிந்து கோட்டையை விட்டு வெளியேறினான்.

மாலை இருண்டு இரவாயிற்று. ஒரு தனி மனிதன், மலைகள், சமவெளிகள், கிராமங்கள் இவைகளினூடே செல்கிறான். குவிந்த இருளில் அந்த வீரன் கண்ணுக்குத் தென்படவில்லை. பிறகு அவனை யாரும் பார்க்கவில்லை.



அத்தியாயம் 17

சந்திரராவ் ஜும்லேதார்

சந்திரராவ் ஜும்லேதாருடன் இதுதான் நமது முதல் பரிசயம். அவர் மிகுந்த புத்திமான். அசாதாரணமான பலசாலி. தமது பிரதிக்ஞையில் உறுதியுள்ளவர். அவர் ரகுநாதனைவிட ஐந்து அல்லது ஆறு வருஷம் பெரியவர். ஆனால் தூரத்திலிருந்து பார்த்தால் நாற்பது வயதுடைய வராகத் தோன்றுவார். சந்திரராவை நன்றாய்த் தெரிந்த வர்களுக்கு அவருடைய தைரியம், உறுதி, கம்பீரம் ஆகிய வைகளும் தெரிந்திருக்கும். நல்ல திடமான வஜ்ர சரீரம். அவரிடம் ஒரே ஒரு குறைதான். விஜாதியர்களுடைய மேலான அபிலாஷைகள் அவர் உள்ளத்தை நெருப்பைப் போல் தகிக்கும். அவர் தம்முடைய அசாதாரணமான புத்திபலத்தினால், உன்னத நிலை அடைய முயற்சித்து, தம் முடைய திடமான உறுதியினாலும், தம் கைவாளினாலும், தமது முன்னேற்ற மார்க்கத்தைத் தடையறச் செய்து கொண்டார். சத்துருவானாலும் சரி, மித்திரனானாலும் சரி, தோஷமுள்ளவனானாலும் சரி, தோஷமற்றவனானாலும் சரி, உபகாரியாயினும் சரி, அபகாரியாயினும் சரி, தம் வழிக்குக் குறுக்கே நிற்பவரைச் சரிக்கட்டித் தீர்த்துவிடுவார். இந்த அபூர்வ மனிதரின் பூர்வ விருத்தாந்தத்தை அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். ஏனென்றால் அதனுட

னேயே ரகுநாதனின் வம்சத்தைப்பற்றிய தகவலும் கிடைத்துவிடும்.

சந்திரராவும் ரகுநாதனின் விருத்தாந்தத்தைச் சொல்லவில்லை. ராஜா யசவந்த ஸிம்ஹரின் பிரதான சேனாதிபதி கஜபதி ஸிம்ஹர் சந்திரராவைச் சிறு வயதில் எடுத்து வளர்த்தார். அநாதையான சந்திரராவ் கஜபதி ஸிம்ஹரின் வீட்டில் அவர் குழந்தைகளுடன் இருந்தார். யுத்த சமயத்தில் கஜபதியுடன் செல்வார்.

சந்திரராவின் பதினைந்தாவது வயதிலேயே அவருடைய தைரியம், விவேகம், ஆழ்ந்த யோசனை, மனஉறுதி இவைகளைக் கண்டு கஜபதி ஸிம்ஹர் சந்தோஷமடைந்து, அவரையும் தமது புத்திரன் ரகுநாதனைப் போல் பாவிக்கலானார். அவரைத் தம் சைனியத்தில் ஒரு வீரனாகச் சேர்த்துக்கொண்டார்.

சேனையில் சேர்ந்ததும் சந்திரராவ் தமது பராக்கிரமத்தினால் நாளுக்கு நாள் கீர்த்தியடைந்து, மற்ற வீரர்கள் ஆச்சரியப்படும்படியான நிலைமைக்கு வந்தார். போர் முனையில், சத்துருக்களும் மித்திரர்களும் பெருக்கும் ரத்த வெள்ளத்தின் மத்தியில்,வீழ்ந்துபோன வீரரின் ஓலத்தின் நடுவில், உயிரே போயினும் போகட்டுமென்று கலங்காமல் ஒரு வீரர் நின்றிருக்கக் கண்டால் அவர்தான் சந்திரராவ்! அம்மாதிரியான சண்டைகளில் அவர் வீரம் காட்டி வெற்றிகொண்டு, அவரது நண்பர் ஜயகோஷமிட்டு ஆனந்தப்படும் போதுதான், கூடாரத்திலோ, அல்லது ஏதாவது ஆற்றங்கரை போன்ற தனிமையான இடத்திலோ உட்கார்ந்து யோசனை செய்துகொண்டிருப்பார்.

சந்திரராவின் உத்தேசம் சிறிது சிறிதாகப் பூர்த்தியாக ஆரம்பித்தது. இப்பொழுது அவர் அறியாத ரஜபுத்திரச் சிறுவரல்ல! அவர் பதவி உயர்ந்துவிட்டது. கஜபதி ஸிம்ஹரின் சேனையில் அவர் சிறந்த வீரர் என்று

பிரசித்தி பெற்றுவிட்டார். கௌரவத்துடன்கூட சந்திரராவின் கர்வமும் வளர்ந்துகொண்டே வந்தது.

ஒரு நாள் ஒரு போரில் சந்திரராவ் கஜபதி ஸிம்ஹரை ஒரு பெரிய விபத்தினின்றும் காத்தார். ஆகையால் யுத்தம் முடிந்ததும் கஜபதி அவரை அருகில் அழைத்து, " சந்திரராவ்" உன்னுடைய தைரியம் இன்று என் உயிரைக் காத்தது! இதற்காக நீ என்ன வெகுமதியை விரும்புகிருயோ கேள்!' என்ருர்.

சந்திரராவ் தலைகுனிந்து சும்மா இருந்தார்.

கஜபதி ஸிம்ஹர் மீண்டும் அன்பு கனியும் குரலில், 'யோசித்துச்சொல்லு! பொருள், பதவி எது இஷ்டமோ கேள்! உனக்காக எது வேண்டுமானுலும் தருகிறேன்!' என்ருர்.

சந்திரராவ் மெள்ளத் தலைநிமிர்ந்து, 'ரஜபுத்திர வீரன் வேறெதையும் அங்கீகாரம் செய்யமாட்டான். வீர சிரேஷ்ட! தங்கள் மகள் லக்ஷ்மி தேவியை எனக்கு மணம் செய்து கொடுக்க வேண்டுகிறேன்!' என்ருர்.

சபை நிசப்தமாகியது. கஜபதியின் உடல் கோபத்தால் நடுங்கியது. உறையிலிருந்து வாள் சற்று வெளியே வந்தது. ஆனுல் கோபத்தை அடக்கிக்கொண்டு, ஒரு சிரிப்புச் சிரித்துவிட்டு, 'உனது வேண்டுகோளை அங்கீகரிக்கிறேன். ஆனுல் உனது பிறப்பிடம் மஹாராஷ்டிரமாயிற்றே! ரஜபுத்திரப் பெண்கள், மஹாராஷ்டிரக் கொள்ளைக்காரரைப் போல், மலைக்குகையிலும் கானிலும் வசிக்கப் பழக்கமற்றவர்களாயிற்றே! முதலில் லக்ஷ்மி இருப்பதற்குத் தகுந்த வாசஸ்தலத்தை நிர்மாணம் செய்! காட்டுக் குடிசைகளையும் மலைக்குகைகளையும் சீர்ப்படுத்து. கொள்ளைக்காரன் என்ற பெயரை உத்தம வீரன் என்று மாற்றிக்கொள்! பிறகு ரஜபுத்திரக் கன்னிகையை விவாகம் செய்துகொள்ள ஆசைப்படு! இந்தச் சமயம்

வேறு ஏதாவது இச்சை உண்டானால் தெரிவி, என்றார்.

சந்திரராவ் மெதுவாக, 'வேறு ஒன்றும் கிடையாது. இருந்ததைச் சொல்லிவிட்டேன்!' என்றார்.

சபை கலைந்தது. எல்லோரும் தத்தம் வாசஸ்தானம் சென்றனர். உதாரகுணமுள்ள கஜபதி ஸிம்ஹர் சந்திர ராவ் மேல் இருந்த கோபத்தை மறந்துவிட்டார். ஆனால், சந்திரராவுக்கு அதை மறக்க முடியவில்லை. மாலை தம் கூடாரத்தில் உட்கார்ந்து தனிமையில் யோசிக்கலானார். வெளியே இருள் சூழ்ந்தது. அதைக் காட்டிலும் பன் மடங்கு இருள் அவர் உள்ளத்தில் கவிந்தது.

சிறிது நேரத்திற்கெல்லாம் சந்திரராவ் விளக்கைக் கொளுத்தினார். பேசாமல் ஒரு புஸ்தகத்தில் ஏதோ எழுத லானார். எழுதி அதை மூடினார். பிறகும் திறந்து பார்த்து மூடினார். தமக்குள் சிரித்துக்கொண்டார். அதே சமயம் அவருடைய நண்பனொருவன் வந்து, 'சந்திரராவ், என்ன எழுதினாய்?' என்று கேட்டான்.

சந்திரராவ் சட்டென்று, 'ஒன்றுமில்லை. நான் யார் யாருக்கு எவ்வளவு கடன் கொடுக்கவேண்டும் என்று கணக்குப் பார்த்தேன்!' என்றார்.

நண்பன் சென்றான். சந்திரராவ் மீண்டும் புஸ்தகத் தைத் திறந்தார். உண்மையில் அது கணக்குப் புஸ்தகம் தான். சந்திரராவும் அதில் ஒரு கடனைத்தான் எழுதினார்.

இந்தச் சம்பவம் நடந்து ஒரு வருஷம் ஆயிற்று. அவு ரங்கஸீபுக்கும் ராஜா யசவந்த ஸிம்ஹருக்கும் உஜ்ஜ யினியில் சண்டை நடந்தது. அந்த யுத்தத்தில் கஜபதி ஸிம்ஹர் உயிரை இழந்தார்.

கஜபதியின் அநாதைக் குமாரனும் குமாரியும் மஹா ராஷ்டிரத்திலிருந்து மேவாரிலுள்ள சூரியமண்டல துர்க் கத்திற்குத் திரும்பிக்கொண்டிருந்தார்கள். ரகுநாதனுக்கு

அந்தச் சமயம் வயது பன்னிரண்டு. லக்ஷ்மி அவனை விட ஒரு வயது சிறியவள். வழியில் கொள்ளைக்காரர்கள் அந்த அநாதைக் குழந்தைகளின் போஷகர்களைக் கொன்று அவர்களை மீண்டும் மஹாராஷ்டிர தேசத்தின் பக்கம் கொண்டு சென்றார்கள். பையன் சிறு வயதிலிருந்தே சுறுசுறுப்பானவன். இரவு சமயங் கிடைத்ததும் அவன் கொள்ளைக்காரரிடமிருந்து தப்பி ஓடிவிட்டான். ஆனால் அந்தப் பெண்ணை அந்தக் கொள்ளைக் கூட்டத்தின் தலைவர் மணந்துகொண்டார். அந்தத் தலைவர்தான் சந்திரராவ்.

கூர்மையான புத்திவாய்ந்த சந்திரராவின் மனோரதம் பூர்த்தியாயிற்று. அவர் கஜபதி ஸிம்ஹரின் வீட்டிலிருந்து அளவற்ற பொருளைக் கொள்ளை கொண்டார். அதனால் ஒரு ஜாகீரை விலைக்கு வாங்கி, தக்ஷிணத்தில் ஒரு பெரிய மனிதரானார்.

சந்திரராவ் ஒரு பிராசீன ரஜபுத்திர வம்சத்தில் பிறந்தவரென்பதில் சந்தேகம் இல்லை. மேலும் கஜபதி ஸிம்ஹரின் கன்னிகையை மணந்ததால் இன்னும் மேன்மையாக மதிக்கப்பட்டார். சந்திரராவின் தைரியத்தையும், பராக்கிரமத்தையும் கண்டு சிவாஜி அவரை ஜும்லேதார் பதவியில் நியமித்தார். நாளுக்கு நாள் அவரை ஜனங்கள் பெரிதும் கௌரவித்தனர். ஆனால் ரகுநாதன் நடு நடுவே அவருடைய கீர்த்திக்குத் தடையாக இருந்தான். ஆகையால் அந்தத் தடையையும் நீக்கிவிட்டார் சந்திரராவ்.

அத்தியாயம் 18

லக்ஷ்மிபாய்

பன்னிரண்டு வயதில் ரகுநாதன் சந்திரராவின் ஆக்கிரமிப்பினின்றும் தப்பி ராஜபுதனத்திற்குச் செல்லாமல் நேரே மஹாராஷ்டிரத்தை நோக்கி நடந்தான். வழியில் பல மலைகளின் மீதேறியும், வனங்களில் நடந்தும், கிராமங்களைக் கடந்தும் செல்லலானான். அவன் எந்த வீட்டு வாசலில் சென்று நின்றாலும், பிடி அரிசி இடாமல் யாரும் அவனை அனுப்புவதில்லை.

நாலைந்து வருஷம்வரை ரகுநாதன் பல இடங்களில் சுற்றித் திரிந்தான். உலகமான அகண்டக் கடலிலே அந்த அநாதைப் பாலகன் தனியே மூழ்கித் திளைத்தான். பல இடங்கள் சென்றான். பலவகைப்பட்ட மனிதர்களிடம் சிக்ஷை பெற்றான். கூலி வேலை செய்து காலம் கழித்தான். ஆயினும் அவனுடைய பழைய வம்ச கௌரவம், தந்தையின் வீரம், அவருக்கிருந்த மதிப்பு—இவைகள் அந்தப் பாலகனின் மனத்தினின்றும் அணையவில்லை. ஆனால் தன்னம்பிக்கையுள்ள அந்தச் சிறுவன் தனது கஷ்ட காலங்களில் அதை ஒன்றையும் வெளியிடவில்லை. சிற்சில சமயங்களில் துக்கத்தின் பாரம் பொறுக்க முடியாமல், மனம் நொந்து, எங்காவது ஏகாந்தமாகவோ அல்லது மலைச் சிகரங்களிலோ உட்கார்ந்து மனம்விட்டு

அழுவான். பிறகு தனக்குத் தானே தேறுதல் செய்து கொண்டு, கண்ணைத் துடைத்துக் கொண்டு, தன் காரியத்தைக் கவனிக்கச் செல்வான்.

வயதாக ஆக அவன் மனத்தில் அவனுடைய வம்ச பரம்பரையின் உணர்ச்சி பெருகலாயிற்று. சிற்சில சமயங்களில் ரகசியமாக அவன் தன் தந்தையின் தலைப்பாகையை அணிந்து, கையில் வாளேந்தி, மாலை நேரத்தில் திறந்த வெளியில் உட்கார்ந்து சாரணர்களின் கீதத்தைப் பாடுவான். அந்த மாலை இருளில் சங்கிராம ஸிம்ஹனையும், ராணு பிரதாப சிம்மனையும் பற்றி அவன் பாடும் வீரக் கவிதைகளைக் கேட்கும் வழிப்போக்கர்கள் ஆச்சரியமடைந்து விடுவார்கள். இந்த விதமாக ரகுநாதனின் வயது பதினெட்டாயிற்று. அப்பொழுது அவன் சிவாஜியின் வீரப் பிரதாபங்களைக் கேள்விப்பட்டு அதைப் பற்றிச் சிந்திக்கலானுன். ராஜஸ்தானத்தைப் போல் மஹாராஷ்டிரமும் சுதந்திரமடையும், சிவாஜி தக்ஷிணத்தில் ஹிந்து ராஜ்யத்தை விஸ்தரிப்பார் என்று எண்ணி எண்ணி அவன் உள்ளம் சிவாஜியிடம் அன்பு கொள்ளலாயிற்று.

மனிதர்களின் மனத்தை அறிவதில் சிவாஜி வெகு சமர்த்தர். சில தினங்களுக்குப் பிறகு ரகுநாதனை அவர் நன்கு அறிந்துகொண்டார். அவனை ஹவல்தார் பதவியில் நியமித்தார். அதற்குப் பல மாதங்கள் கழிந்த பிறகுதான் அவனைத் தோரண துர்க்கத்திற்கு அனுப்பிவைத்தார்.

சிவாஜியிடம் ரகுநாதன் வந்தபோது சந்திரராவின் ஆதிக்கத்தின் கீழிருந்த ஒரு ஹவல்தார் மரணமடைந்தான். அந்த ஸ்தானத்தில்தான் ரகுநாதன் நியமிக்கப்பட்டான். அவன் சந்திரராவைத் தன் தந்தையின் பழைய ஊழியன் என்றும், தன் பாலிய நண்பன் என்றும் சொல்லி அழைத்து வந்தான். ஆனுல் இந்தச் சந்திரராவ்தான் தன் சஹோதரி லக்ஷ்மியின் கணவன் என்ற விஷயம் அவனுக்குத்

தெரியாது. ஆகையால் அவன் சந்திரராவுடன் சந்தோஷமாகப் பேசிப் பழகிக்கொண்டிருந்தான்.

அதன் பின் நடந்த விஷயங்கள் ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கின்றன.

சந்திரராவ் தமது வீடு வந்து சேர்ந்தார். அவருடைய வரவை எதிர்பார்த்து லக்ஷ்மிபாய் காத்துக்கொண்டிருந்தாள். லக்ஷ்மிபாய் சுபாவத்திலேயே லக்ஷ்மி சொரூபம். சாந்தமும் புத்தி நுட்பமும் வாய்ந்தவள். சிறு வயதில் தந்தையின் ஆதரவில் இருந்தாள். ஆனால் வாலிப வயதில், பரிசயமற்ற விதேச மனிதரின் மத்தியில், சந்திரராவுக்கு மனைவி ஆனாள். இதன் காரணமாக கொடியிலிருந்து விழுந்த புஷ்பம் போல் அவள் வாடலானாள். பல வருஷங்களாகத் துக்கப்பட்டாள். ஆனால் துக்கத்தை யாரிடம் உரைப்பது? யார் அவளுக்குத் தைரியம் சொல்வார்கள்? பழைய சம்பவங்களையும், தன் தாய் தந்தை தமையனையும் எண்ணி அவள் கண்ணீர் உகுப்பாள்.

சோகத்தினாலோ கஷ்டத்தைச் சகிப்பதனாலோ நமது புத்தி தீக்ஷண்யமடைகிறது. நமது மனம்கூட ஓர் அமைதியை அடைகிறது. அந்தச் சிறு பெண் லக்ஷ்மியும் இரண்டொரு வருஷங்களில் உலக விவகாரங்களில் தேர்ச்சி பெற்றுத் தன் கணவர் சேவையில் ஈடுபட்டாள். ஹிந்து ரமணிக்குக் கணவரைத் தவிர வேறு கதி கிடையாது. கணவர் நல்ல ஹிருதயமுள்ள தயாளுவாக இருந்தால் பெண் சந்தோஷத்துடன் சேவை செய்கிறாள். தயையற்றுக் கொடியவராக இருந்தாலும் அவளுக்குக் கணவரைத் தவிர வேறு வழி ஒன்றும் கிடையாது.

சந்திர ராவின் ஹிருதயத்தில் அன்பு என்பது எள்ளளவும் கிடையாது. அது கர்வத்தாலும், பராக்கிரமம் என்ற திமிரினாலும் நிறைந்திருந்தது. சகாயமற்ற லக்ஷ்மியிடம் அவர் தயையற்று நடந்துகொண்டதில்லை. அடக்க

மும் அன்பும் வாய்ந்த லக்ஷ்மியின் சேவையால் அவர் சந்தோஷமடைந்தார். போர்க்களத்தில் அவகாசம் கிடைத்ததும் சாந்தியடைய அவர் லக்ஷிமியிடம் ஓடோடியும் வருவார். லக்ஷ்மிபாயும் அவருடைய போர்ச் செய்தியைக் கேட்டு இன்பமுறுவாள்.

இந்த விதமாக உலக விவகாரங்களிலும் பதி சேவையிலும் அவளுடைய நாட்கள் கழிந்து வந்தன. அவள் யௌவனத்தை அடைந்தாள். அவளுடைய யௌவனம் சாந்தமும், ஆர்வமும் அற்றுக் கழிந்தது.

அன்று சந்திரராவ் போஜனம் செய்ய உட்கார்ந்தார். லக்ஷ்மியும் ஒரு புறம் அமர்ந்து விசிறிக்கொண்டிருந்தாள். லக்ஷ்மிபாய்க்கு அப்பொழுது வயது பதினேழு. யௌவனத்தின் அழகு அவள் உடலில் திகழ்ந்துகொண்டிருந்தது. கண்களில் சோகமும் ஏக்கமும் குடிகொண்டிருந்தன. யௌவனத்தின் முழு மலர்ச்சியும் அவளிடம் இருந்தது. ஆனால் அதனுடைய ஆர்வம் துளிகூட அவளிடம் இல்லை. ராஜஸ்தானத்தின் அந்தப் புஷ்பம் மஹாராஷ்டிர தேசத்தில் சௌந்தரிய மணத்தைப் பரப்பிக்கொண்டிருந்தது. ஆனால் உயிர் உணர்ச்சி இல்லாததால் வாடிக்கொண்டே வந்தது.

ஒருநாள் சந்திரராவ் லக்ஷ்மியிடம், 'உன் சகோதரன் ரகுநாதன் என் ஆதீனத்தின் கீழ் ஒரு ஹவல்தார் பதவியில் நியமிக்கப்பட்டிருக்கிறான். நல்ல கீர்த்தியடைந்திருக்கிறான்!' என்று சொன்னார். ஆனால் இதைச் சொன்னதும் அவருடைய முகத்தில் சோகக் களை தட்டியது. சந்திரராவின் இந்த நிலைமையைப் பார்த்து லக்ஷ்மிக்கு சம்சயம் ஏற்பட்டது. அன்று அத்தோடு விட்டுவிட்டாள். ஒன்றும் கேட்கவில்லை.

மற்றொரு நாள் தன் கணவரருகில் அமர்ந்திருக்கும் போது, பேச்சோடு பேச்சாய், வணக்கமாக, 'அடியாளுக்கு

ஒரு வேண்டுகோள் இருக்கிறது! ஆனால் சொல்லப் பயமாக இருக்கிறது!' என்றாள்.

சந்திரராவ் படுத்துக்கொண்டே வெற்றிலை மென்று கொண்டிருந்தார். அன்புடன், 'சொல்லேன்! என்ன விஷயம்?' என்றார்.

'என் சகோதரன் அறியாத சிறுவன்!'

சந்திரராவின் முகம் கம்பீரமடைந்தது.

'அவன் தங்கள் ஊழியன்! தங்கள் ஆதிக்கத்தின் கீழ் இருக்கிறான்!'

'இல்லை! அவன் என்னைவிட வீரனென்று பிரக்கியாதி பெற்றுவிட்டான்!'

புத்திசாலியான லக்ஷ்மி அறிந்துகொண்டாள். அவள் எண்ணியது உண்மை என்பது அவளுக்கு விளங்கியது. சகோதரன் ரகுநாதனிடம் கணவருக்குக் குரோதம் இருக்கிறது என்று அவளுக்குத் தெரிந்துவிட்டது. சிறிது நேரம் அவள் பிரமைபிடித்தவள் போல் அமர்ந்திருந்தாள். பிறகு தன்னைச் சுதாரித்துக்கொண்டு, 'ஸ்வாமி! சிறுவன் ஏதாவது தவறிழைத்தால்கூடத் தாங்கள் அதை க்ஷமித்துக்கொள்ளுங்கள். தாங்கள் மன்னிக்காவிட்டால் வேறு யார் மன்னிப்பார்கள்?' என்றாள்.

சந்திரராவின் முகம் இன்னும் கடுமையடைந்தது. அந்தச் சமயம் மேற்கொண்டு அதிகம் சொல்வது உசிதமல்ல என்று அத்துடன் நிறுத்திவிட்டாள் லக்ஷ்மி.

இந்தச் சம்பவங்கள் நடந்த தினத்திற்குப் பிறகு அன்றுதான் சந்திரராவ் மீண்டும் வீட்டுக்கு வந்திருந்தார். ரகுநாதனுக்கு நடந்த விஷயம் ஒன்றையும் லக்ஷ்மி அறியாள். ஆயினும் அன்று அவளுடைய உள்ளம் ஒரு வேதனையால் உழன்றுகொண்டிருந்தது. வாய் திறந்து ஒன்றும் பேசவில்லை. ஆயினும் இரவு கணவர் வீடு

வந்ததும் சகோதரனைப் பற்றிய விஷயத்தை விசாரிக்கலாம் என்றிருந்தாள்.

சந்திரராவ் போஜனத்தை முடித்துக்கொண்டு நேரே சயன அறைக்குச் சென்றார். கையில் வெற்றிலைப் பெட்டியுடன் நின்றிருந்தாள் லக்ஷ்மி. கணவர் முகம் இருந்த மாதிரியைப் பார்த்துவிட்டு, அவள் வெற்றிலையை வைத்துவிட்டுச் சட்டென்று அவ்விடம் விட்டகன்றாள். சந்திரராவும் எழுந்து அவசரமாகக் கதவைச் சாத்தினார்.

தம்முடைய பழைய கணக்குப் புஸ்தகத்தை எடுத்தார். பத்து வருஷங்களுக்கு முன் கஜபதி ஸிம்ஹரின் சபையில் அவமான மடைந்தபோது எழுதிய கணக்குப் புஸ்தகம் அது. அதில் குறிக்கப்பட்டிருந்த கடன்கள் சில தீர்க்கப்பட்டு விட்டன. அதை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு, சந்திரராவ் யோசிக்கலானார். அதிலிருந்த விஷயம் இதுதான்.

'மஹராஜன்............................கஜபதி.

'கடன்..அவமானம். அவனிடமும், அவன் வம்சத்திடமும்.'

இரண்டொரு தடவை இதைப் படித்தார். அவர் முகத்தில் ஒரு வரண்ட சிரிப்புத் தோன்றியது. உடனே அவர் அந்தப் புஸ்தகத்தில், 'கடன் இன்று தீர்க்கப்பட்டு விட்டது!' என்று எழுதினார். பிறகு அதை மறைத்து வைத்துவிட்டு, கதவைத் திறந்து லக்ஷ்மியை அழைத்தார். அவள் வந்ததும், 'வெகு நாளையக் கடன் இன்று தீர்ந்தது!' என்றார்.

லக்ஷ்மியின் உடல் நடுங்கியது.

அத்தியாயம் 19

ஈச்வரியின் கோயில்

சந்திரராவ் ஜும்லேதாரின் வீட்டுக்குச் சற்று தூரத்தில் ஈச்வரியின் கோயில் இருந்தது. மலைகளின் சிகரமொன்றில் அந்த ஆலயம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. பழைய காலத்துக் கோயில். கீழே கலகலவென்று சப்த மிட்டு நதியொன்று பெருகிக்கொண்டிருந்தது. தேவியின் ஆலயத்திற்குச் செல்லப் பல படிகள் அமைக்கப்பட் டிருந்தன. ஓடும் அருவியின் தண்ணீர் தேவி கோயிலின் படிகளை அலம்பிக்கொண்டு சென்றது. யாத்திரீகர்கள் இந்த நதியில் மூழ்கி, அந்தப் படிகள் வழியாகக் கோயிலுக்குச் சென்று தேவியை வணங்குவார்கள். இன்றுவரை அந்தக் காட்சி அப்படியே இருந்துவருகிறது. கோயிலுக்குப் பின்புறம் மரங்களடர்ந்த கானகம். அந்தப் பயங்கரமான கானகத்தின் அருகில்தான் கோயில் பூசாரிகள் குடிசை கட்டிக்கொண்டு வசித்தார்கள். பார்ப்பதற்கு அந்த இடத்தின் தோற்றம் சாந்தியெல்லாம் ஒருங்கே திரண்டு வந்து நிற்கும் இடம்போல் தோன்றியது. சாந்தம் நிறைந்த அந்த வனத்தில் பாரத வர்ஷத்தின் பிரசித்தி பெற்ற புராணங்கள் வேத மந்தி ரங்கள் இவைகளின் சப்தத்தைத் தவிர்த்து வேறொன்றும் கேட்பதில்லை. கணக்கற்ற யுத்தங்களின் காரணமாக

மஹாராஷ்டிரம் பூராவும் கலக்கமடைந்து கிடந்தது. ஆனால் ஹிந்துவோ முஸல்மானோ யாரும் இந்தக் கோயிலுக்கு யாதொரு தீங்கும் இழைக்கவில்லை.

இரவு ஒரு ஜாமம் கழிந்தது. யாரோ ஒரு யாத்திரீகன் இந்த வனத்தில் தனியாகச் சுற்றிக்கொண்டிருந்தான். அந்த வழிப்போக்கனின் உள்ளம் ஏதோ ஒரு வேகத்தால் உந்தித் தள்ளப்பட்டுக்கொண்டிருந்தது. அவன் கண்களில் ஓர் உன்மத்தம் பொங்கிக்கொண்டிருந்தது. ரோசத்தாலும் கோபத்தாலும் அந்த ரகுநாதனின் மனம் குழம்பிக் கொண்டிருந்தது உண்மைதான்.

ரகுநாதன் சிறிது நேரம் அங்கு உலவிக்கொண்டே யோசித்தான். மனம் அவன் வசமற்றிருந்தது. அவனுடைய அந்தக் கவலை சீக்கிரம் அகலாவிட்டால் அவனுடைய யோசனையின் சக்திகள் மெலிந்து வாடிவிடும். ஆனால் இயற்கை ஒரு சிறந்த சஞ்சீவி! மலைபோன்று வந்து நிற்கும் மனத் துக்கங்கள், அக்னியின் தீ நாக்குப் போலத் துளைக்கும் கவலைகள் ஆகிய மனத்தின் வியாதிகளுக்கு மருந்தும் இல்லை, வைத்தியனும் கிடையாது. ஆனால் இயற்கை அதைச் சமனப்படுத்திவிடுகிறது. பாருங்கள்! உலகில் எத்தனை பேர் பைத்தியம் பிடித்துத் தம்மைச் சுகஜீவிகள் என்று எண்ணிக்கொண்டிருக்கின்றனர்! ஆயிரக் கணக்கானவர்கள் தங்கள் ஆரோக்கியத்திற்காகப் பிரார்த்தனை செய்கின்றனர். ஆனால் அதை அடைவதில்லை.

ரகுநாதன் உலவிக்கொண்டிருந்த இடத்திற்குச் சிறிது தூரத்தில் பிராமணர்கள் ஏதோ கதா புராணங்கள் சொல்லிக் கொண்டிருந்தனர். ஆஹா! சங்கீதம் நிறைந்த புண்ணியக் கதை! சாந்தமான இரவில் அமைதியான கானகத்தில் அந்த மழை பொழிந்துகொண்டுதான் இருந்தது. நக்ஷத்திரங்கள் ஒளிரும் ககன மண்டலமும், வனமும்

அந்தப் புண்ணியத்தினால் எதிரொலித்துக்கொண்டிருந்தன. உணர்ச்சியற்ற ரகுநாதனும் இந்த மதுர ஓஷதியைக் கிரகித்து உணர்ச்சி யடையலானான்.

அந்த அமைதியான கானகத்தின் நடுவில் கேட்ட அந்தக் கதையும் கீதமும் ரகுநாதனின் ஹிருதய வனத்தில் தகித்துக்கொண்டிருந்த தீக்கு ஒரு குளிர் மழையாக இருந்து அதைத் தணித்தது. அலைபடும் உள்ளம் சாந்தி பெற்றது. தன்னுடைய மகத்தான உத்தேசமும் வீரமும் இந்தப் புண்ணியக் கதையின் முன் எம்மாத்திரம் என்று அவன் மனம் எண்ணிற்று. அவன் மனம் அதில் லயித்தது. மெள்ள மெள்ள நித்திராதேவி ரகுநாதனைத் தன் வசமாக்கிக் கொண்டாள்.

ரகுநாதன் கனவு காணலானான். என்ன கனவு கண்டான்! எந்தக் கௌரவம் மீண்டும் அவன் கண்முன் வந்து நின்றது? அவன் மீண்டும் நாளுக்கு நாள் மேன்மையடைந்து கீர்த்தியையும் அடைகிறான். பாவம்! அவனுடைய வாழ்க்கையில் அம்மாதிரி சந்தர்ப்பம் வந்து சென்று விட்டது. கௌரவ மயமான கதிரவன் தோன்றி மறைந்தான். யுத்தத்தில் அவன் எதிரிகளை முறியடிக்கிறான்! கோட்டைகளை வெற்றி கொள்கிறான்! யுத்தத்தைத் தலைமை வகித்து நடத்துகிறான்! இன்னும் அந்தக் காரியம் பூர்த்தியடையக்கூட இல்லை! அவன் கனவு கலைந்தது!

யௌவனத்தின் ஒவ்வொரு செய்கையும் மறைந்தது. நம்பிக்கை விளக்கு அணைந்தது. அந்த அந்தகாரமான இரவில், பந்துக்களற்ற யுவனின் உள்ளத்தில் பாலியத்தில் நடந்த சகல கதைகளும் ஞாபகத்திற்கு வரலாயின. நம்பிக்கையும் சுகமும் ரகுநாதனின் உள்ளத்தை விட்டகன்றன. இன்று பந்து ஜனங்களற்றவர்களின் மனோ உணர்ச்சிகளை அவன் அனுபவித்தான். தன் தாயின்

அன்பு மிக்க ஆதரவு, தந்தையின் திடகாத்திரமான தோற்றம், தன் சிறு வயதில் சூரியமஹலில் விளையாடியது, தனது பாலிய சகாவான சாந்தமான சகோதரி லக்ஷ்மி—எல்லாம் அவன் மனக்கண் முன் படம் போல் விரிந்தன. 'மற்றவர்கள் தான் இப்பொழுது இவ்வுலகில் இல்லை! ஆனால் சகோதரி லக்ஷ்மியையாவது இந்த ஜன்மத்தில் பார்க்கும் பாக்கியம் கிட்டுமா?' என்று அவன் மனம் ஒரு சந்தேகத்தை அடைந்தது. தூக்கம் நிறைந்த கண்கள் கண்ணீரைச் சொரிந்தன. தன் தங்கை லக்ஷ்மியின் நினைவிலே மீண்டும் அவன் தூக்கத்தில் ஆழ்ந்தான்.

மறுபடியும் அவன் கண்விழித்த போது என்ன கண்டான்? லக்ஷ்மியே நேரில் வந்து சகோதரரின் தலையருகில் அமர்ந்து, தன் மிருதுவான கரங்களால் அவன் தலையை வருடிக்கொண்டிருப்பதைக் கண்டான். அன்பு நிறைந்த பார்வையுடன் அவள் சகோதரனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். சோகத்தாலும், துக்கத்தாலும் லக்ஷ்மியின் முகம் வாடியிருந்தது. கண்கள் இரண்டும் அப்படியே நிலையாக நின்றன.

ரகுநாதன் மீண்டும் கண்களை மூடி அழலானான். 'பகவானே! ஜகத்பிதாவே வேண்டியது சகித்துவிட்டேன்! இனி வீணாக ஒரு நம்பிக்கையை உண்டாக்கி, மனசை வருத்துகிறாயோ?' என்று அவன் வாய் பிதற்றியது.

யாரோ தனது மெல்லிய கரங்களால் ரகுநாதனின் கண்ணீரைத் துடைப்பது போல் இருந்தது. ரகுநாதன் மீண்டும் கண்களைத் திறந்தான். அப்பொழுது அவன் அவை யாவும் கனவல்ல என்பதைக் கண்டான். தன் சகோதரியேதான் அவன் தலையை மடியில் வைத்துக் கொண்டு மரத்தருகே அமர்ந்திருப்பதை உணர்ந்தான்.

அவன் உள்ளம் நிரம்பியது. அவன் லக்ஷ்மியின் கரங்களைத் தன்னுடைய நைந்துபோன ஹிருதயத்தில்

எடுத்து வைத்துக்கொண்டு, அவள் முகத்தை நோக்க லானுன். அவனுல் பேசமுடியவில்லே. கண்கள் கண் ணீரை மாலே மாலேயாகச் சொரிந்தன. அவனுல் அதிக நேரம் சகிக்க முடியவில்லே. விக்கி விக்கி அழலானுன் அந்த வீரன். 'லக்ஷ்மி! லக்ஷ்மி! உன்னே இந்த ஆயுளில் பார்த்துவிட்டேன்! என் துக்கங்கள் அகன்றன! எனது மற்ற ஆசைகள் அகன்றன. இனிக் கவலே இல்லே! ஆனுல் லக்ஷ்மி! துர்ப்பாக்கியனுன உன் சகோதரன் உன் தரிசனத்தைத் தவிர வேருென்றையும் விரும்பவில்லே!" என்ருன்.

லக்ஷ்மியாலும் தன் துக்கத்தை அடக்க முடியவில்லே. தன் சகோதரனின் ஹிருதயத்தில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழலானுள். அந்தக் கருணே முகத்துடன் ஒப்பிட இந்த உலகில் வேறு எது இருக்கிறது?

வெகுநாட்களுக்குப் பின் சந்தித்ததால் இருவரும் சரியாகப் பேசக்கூட முடியவில்லே. வெகு நேரம் வரை இருவரும் மௌனமாக இருந்தனர். வெகு காலத்துக் கதைகள் ஒவ்வொன்ருக மனத்தில் நினேவு வரலாயின. சுகத்தின் அருவி துக்க சாகரத்தில் கலந்துவிட்டது. கலந்த சுக-துக்க அலேகள் உள்ளத்தில் எழுந்து மோதின. உலகில் சகோதரிக்கு மிஞ்சின அன்பு வேறென்ன இருக் கிறது? இந்தப் பவித்திரமான நிலேமையை வர்ணிக்க நமக்குச் சக்தி கிடையாது.

வெகு நேரத்திற்குப் பிறகு இருவருடைய ஹிருதயங் களும் சற்று குளிர்ந்தன. லக்ஷ்மி தன் தலேப்பினுல் சகோதரனின் கண்ணீரைத் துடைத்து, 'ஈச்வரியின் கிருபை! வெகு நாட்களுக்குப் பிறகு நமக்குச் சந்திப்பு ஏற்பட்டது! இதை விட இந்த உலகில் வேறென்ன சுகம் இருக்கிறது? எனக்கு இந்தச் சுகத்தை யளித்த கடவுளுக்கு நான் என்றும் கடமைப்பட் டிருக்கிறேன்!

ரகுநாத்! இந்தக் குளிர் காற்றில் நீ இங்கிருப்பது சரியல்ல. வா! கோயிலுக்குள் செல்வோம்! நான் இங்கே அதிக நேரம் தங்க முடியாது!' என்ருள். இருவரும் கோயிலுக்குள் சென்றனர். லக்ஷ்மி ஒரு தூணில் சாய்ந்து உட்கார்ந்தாள். ரகுநாதனும் அருகே அமர்ந்தான். இருவரும் மிருதுவான குரலில் பழைய விஷயங்களைப் பேசலானுர்கள்.

லக்ஷ்மி மெள்ள மெள்ள ரகுநாதனின் தலையை வருடிக்கொண்டே ஏதேதோ கேட்டுக்கொண்டிருந்தாள். ரகுநாதனும் ஏதேதோ பதிலுரைத்துக்கொண்டு வந்தான். கொள்ளைக்காரரிடமிருந்து தப்பித்து அந்த அனுதைப் பையன் எங்கெந்தத் தேசம் சென்ருன், மஹாராஷ்டிர விவசாயிகளுடன் மாடுமேய்த்தது, வெகுநாள் கொங்கண தேசத்தில் வசித்தது, பிறகு ஒரு மஹாராஷ்டிர வீரனுடன் சேர்ந்து யுத்தப் பயிற்சி பெற்று அடிக்கடி அவனுடன் போர்க்களம் செல்லச் சந்தர்ப்பம் வாய்த்தது, வயதாக ஆகத் தன் பராக்கிரமம் அதிகரித்தது, கடைசியில் சிவாஜியின் சைனியத்தில் போய்ச் சேர்ந்தது, மூன்று வருஷம்வரை அங்கு மனோவாக்கு காயங்களால் குற்றம் புரியாமல் சேவை புரிந்தது, அப்படியிருந்தும் சிவாஜிக்குத் தன்மேல் சந்தேகம் ஏற்பட்டது, தான் அதனுல் அவமானம் அடைந்தது, யாவற்றையும் சொல்லி, 'இப்பொழுது தேசம் தேசமாக யாதொரு உத்தேசமுமின்றித் திரிகிறேன். தந்தையைப் போல் வீரத்துடன் போர்க்களத்தில் உயிரைத் தியாகம் செய்துகொள்ள வேண்டும் என்று எண்ணுகிறேன்!' என்ருன்.

சகோதரனின் சோகக் கதைகளைக் கேட்டு லக்ஷ்மியின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. சகோதரனின் கஷ்டங்களால் வியாகூலமடைந்த அவள் தன் விஷயங்களை எப்படிச் சொல்வதென்று யோசித்

தாள். பிறகு அவள் சந்திரராவின் பெயரை எடுக்காமல், 'நான் இந்தத் தேசத்திற்கு வந்த சில நாட்களுக்கெல்லாம் ஒரு க்ஷத்திரிய ஜாகீர்தாரை மணந்துகொண்டேன். ஸ்திரீகள் தங்கள் கணவன் பெயரைச் சொல்லக்கூடாது. ஆனாலும் சூசக மாகச் சொல்கிறேன். வானத்திலிருந்து இரவில் உதயமாகிறானே அவனுடைய பெயர்தான் என் நாதன் பெயரும். அவருடைய வீரமும், கீர்த்தியும் இந்த நாலு திசையும் பரவியிருக்கிறது. நான் அவருடைய வீட்டில், அவருடைய அனுக்கிரகத்தில் சுகமாக இருக்கிறேன். என்னுடைய ஆயுளில் என் சகோதரன் சுகமாக இருக்கப் பார்க்கவேண்டு மென்ற ஆசையைத் தவிர எனக்கு வெறெந்த ஆசையும் கிடையாது. உன்னைப்பற்றி நடுநடுவே கேள்விப்பட்டு வந்தேன். உன்னைப் பார்க்கவேண்டு மென்று அவா எழுந்து கொண்டே யிருந்தது. இன்று அந்த எண்ணம் கோயிலில் பூஜா காலத்தில் நிறைவேறியது' என்று சொல்லித் தன் சகோதரனின் துக்கத்தைத் தேற்றினாள் லக்ஷ்மி.

லக்ஷ்மி துக்கப்படுபவள். துக்கத்தின் கதை அவளுக்கு நன்றாகத் தெரியும். அவள் ஸ்திரீ! துக்கத்தைப் போக்க அவளுக்குத் தெரியும். உலகின் துக்கத்தைத் தூர விலக்குவது ஸ்திரீகளின் தர்மம்.

அநேகம் பிரயத்தனங்களுடன் தன் சகோதரனின் மனத்தைச் சாந்தப்படுத்த முயற்சித்தாள் லக்ஷ்மி. அவள் ரகுநாதனைப் பார்த்து, 'பகவான் நமக்கு விதித்திருக்கும் துக்கத்தை நாம் அனுபவித்தே தீரவேண்டும். ஒரு நாள் நமக்குத் துக்கம் வந்துவிட்டதென்று நாம் முகம் சிணுங்கலாமா? மனித ஜன்மமே ஒரே துக்க மயந்தான். நாம் துக்கத்தைச் சகிக்காவிட்டால் வேறு யார் சகிப்பார்கள்? நல்ல காலம், கெட்ட காலம் யாவருக்கும் உண்டு. கெட்ட காலத்திலும் நாம் கடவுள் பெயரைச் சொல்லி அதை

மறக்கவேண்டும். அவர்தான் நம்மைத் தந்தையின் வீட்டில் சுகமாக வைத்தார். இன்று அவரே கஷ்டத்தை அளித்திருக்கிருர். நாளை அவரே அதை நிவர்த்திப்பார்! பாயி, நிராசையடையாதே! இம்மாதிரி சோகமடைந்தால் உடல் நிலைமையை எப்படிச் சமாளிப்பாய்? ஊண் உறக்கம் இன்றி மனித ஜீவன் எத்தனை நாள் தங்கும்? என்ருள்.

'சரீரம் இருக்கவேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? வீரனுடைய பெயரில் என்று களங்கம் வந்ததோ அன்றே அதைக் கழிக்கவேண்டியதுதானே! ஆனுல் ஏனே தெரியவில்லை. இதுவரை அது அப்படியே இருந்து வருகிறது' என்ருன் ரகுநாதன்.

'நீ உன் சகோதரி லக்ஷ்மியை என்றென்றும் துக்கப்பட்டுக்கொண்டே இருக்கும்படி செய்யப்போகிருயா? பாயி, இங்கே பார்! உலகில் நமக்கு யார் இருக்கிருர்கள்? தந்தை இல்லை; தாய் இல்லை; உலகில் யாரும் இல்லை! உன் சகோதரி லக்ஷ்மியிடம் இருந்த வாஞ்சையையெல்லாம் மறந்துவிட்டாயா? கடவுளே! நீயும் ஒரேயடியாய் இப்படி முகம் திருப்பிவிட்டாயா?' என்ருள் லக்ஷ்மி.

'லக்ஷ்மி! உனக்கு என்னிடம் அன்பு இருக்கிறது. இதை நான் நன்ருக அறிவேன். நான் உனக்குக் கஷ்டம் கொடுக்கும் தினத்தன்று கடவுளும் உன்னிடமிருந்து முகம் திருப்பிக்கொள்வார். ஆனுல், சகோதரி! இந்த வாழ்க்கையில் எனக்குச் சுகமில்லை! நீ பெண். உனக்குச் சைனிகருடைய துக்கத்தின் ஞானம் போதாது. எங்களுக்கு உயிரை விட நல்ல பெயர்தான் பெரிது. மரணத்தைவிடக் களங்கமும் அபகீர்த்தியும் பொறுக்க முடியாதவை. ஆகையால் ரகுநாதன் களங்கத்தைச் சுமந்திருக்க விரும்பவில்லை!' என்ருன்.

'பின் அந்தக் களங்கத்தைப் போக்குவதிலிருந்து ஏன்

மாறிவிட்டாய்? மஹானுபாவன் சிவாஜியிடம் செல்! அவருடைய கோபம் சாந்தமடைந்ததும் அவர் நீ சொல்வதை ஏற்றுக்கொள்வார். பிறகு அவர் உன்னைக் குற்ற மற்றவன் என்று சொல்லுவார்!'

ரகுநாதன் பதிலொன்றும் உரைக்கவில்லை. அவன் முகம் சிவந்தது. அவன் கண்களில் ஓர் அலட்சியம் ஜ்வலித்தது. தந்தையின் கர்வம், தந்தையின் லட்சியம் மகனிடமும் இருக்கிறதென்பதை லக்ஷ்மி தெரிந்து கொண்டாள். அவனுக்கு உயிரில் ஆசையில்லை. சகோதரனுடைய உள்ளக் கருத்தை அறிந்துகொண்ட லக்ஷ்மி, 'மன்னித்துக்கொள்! நான் ஸ்திரீ ஜாதி. எனக்கு அந்த விஷயங்களைப் பற்றிய ஞானம் ஏது? உனக்கு சிவாஜியிடம் போக முடியாவிட்டால் உன் செய்கையின் மூலம் உன் கீர்த்தியை நிலைநாட்டு. "சைனிகரின் தைரியமும், அவர்களுடைய எஜமான பக்தியும் அவர்கள் செய்கைகளில் தெரியும்" என்று அப்பா சொல்வதுண்டு. உன் மேல் துரோகியென்று யாருக்காவது சந்தேகம் இருந்தால், வாளைக் கையில் ஏந்தி அதைக் கண்டனம் செய்துவிடு!' என்றாள்.

ரகுநாதனின் ஹிருதயம் உற்சாகத்தால் நிறைந்தது. 'சகோதரி! இந்தச் சந்தேகத்தை எப்படிக் கண்டனம் செய்யலாம்?' என்றான்.

'ராஜா சிவாஜி டில்லிக்குச் செல்லப் போகிறாரென்று கேள்விப்பட்டேன். அங்கு அநேக சம்பவங்கள் நடக்க வேண்டியிருக்கின்றன. ஆகையால் திடமான பிரதிக்ஞையுள்ள வீரர்களுக்கு, ஆத்ம பரிசயம் செய்துகொள்ளச் சந்தர்ப்பம் கிடைக்கும். நான் ஸ்திரீ; வேறென்ன என்னால் சொல்ல முடியும்? நீ தந்தையைப் போல் தைரியசாலி! அவரைப் போல் நீயும் திடமான பிரதிக்ஞை

செய்துகொண்டு இறங்கினுயானுல் எந்தக் காரியம் ஆகாது?'

ரகுநாதன் சற்று நிதானித்திருந்தால் தன் சகோதரிக்கும் உலக ஞானம் நன்கு தெரியும் என்பதை அறிந்திருப்பான். இன்று அவள் கொடுத்த மருந்து அந்த க்ஷணமே பலனைக் காட்ட ஆரம்பித்துவிட்டது. ரகுநாதனின் சோகமெல்லாம் காற்றில் பறந்தது. அந்த வீர ஹிருதயம் முன்போன்றே உற்சாகத்தால் நிரம்பியது.

ரகுநாதன் வெகுநேரம் யோசனை செய்தான். அவன் முகமும் கண்களும் புது ஒளி கொண்டு பிரகாசித்தன. சற்று நேரம் பொறுத்து அவன், 'லக்ஷ்மி! நீ பெண்தான்! உன் பேச்சைக் கேட்டு என் மனத்தில் ஒரு புதிய பாவம் உண்டாகி வருகிறது! என் உள்ளத்தில் உற்சாகம் இல்லாமலில்லை. ரகுநாதன் துரோகியுமல்ல, கோழையுமல்ல. இதை இன்றுவரை ஜனங்கள் அறிவார்கள். ஆனுல் நீ பெண். உன்னிடம் என் உள்ளத்திலிருப்பதை எப்படி உரைப்பேன்?' என்ருன்.

லக்ஷ்மி முதலில் சிரித்தாள். பிறகு தன் மனத்திற்குள், 'வியாதியின் நிதானத்தை அறிந்துவிட்டேன்' என்று எண்ணினுள். 'சரி, மருந்தும் கொடுக்கிறேன்' என்று எண்ணி, வெளிப்படையாக, 'சகோதரா! உன் உற்சாகத்தைக் கண்டு என் மனம் சுகமடைகிறது. உன்னுடைய மகத்தான உத்தேசத்தை நான் எவ்வாறு அறிதல் கூடும்? நான் உன் தங்கை. நான் இருக்கும் வரை உன் பூர்ணமான மனேரதம் பூர்த்தியாகவே விரும்புகிறேன். கடவுளிடமும் இதே பிரார்த்தனையைத் தான் செய்கிறேன்!' என்ருள்.

'லக்ஷ்மி நான் உயிருள்ளவரை உன்னை மறக்க மாட்டேன்!' என்ருன் ரகுநாதன்.

லக்ஷ்மி சிறிதுநேரம் மௌனமாக இருந்துவிட்டு,

மனமற்றவளாய் மெதுவாக, ‘ரகுநாத், நான் உன்னிடம் ஒன்று கேட்க விரும்புகிறேன், ஆனால் பயமாக இருக்கிறது!’ என்றாள்.

‘லக்ஷ்மி, என்ன சொல்லு! உனக்கென்ன பயம்? நான் உன் அண்ணன்; நீ என் தங்கை!’

‘சந்திர ராவ் என்று ஒரு ஜும்லேதார் இருக்கிறார்! உனக்குத் தெரியுமா? அவர்தான் உனக்கு அபகாரம் செய்தார்!’

ரகுநாதனின் சிரிப்பு மங்கியது. முகம் சிவந்தது. ஆனால் தனது வேகத்தைச் சமாளித்துக்கொண்டு, ‘சந்திர ராவ் அரசனிடம் சொன்னவை சரியல்ல. அவர் எனக்கு வேறு ஏதாவது கெடுதல் செய்திருந்தால் கூட எனக்குக் கவலை இல்லை!’

‘அவர் ஏதாவது செய்திருக்கட்டும், ஆனால் பாயி! நீ அவருக்குக் கெடுதல் செய்யக்கூடாது. எனக்குச் சபதம் செய்துகொடு!’

ரகுநாதன் பதில் சொல்லாமல் யோசனையிலாழ்ந்தான். லக்ஷ்மி மீண்டும், ‘என் சகோதரனிடம் இதைத் தவிர வேறு ஒரு பிக்ஷையும் இதற்குமுன் கேட்கவில்லை! நன்மை என்று தெரிந்தால் இதை நிறைவேற்று’ என்றாள்.

லக்ஷ்மியின் வார்த்தைகள் ரகுநாதனுக்குக் கோபத்தை உண்டாக்கின. அவன் சகோதரியின் கைகளைப் பிடித்துக்கொண்டு, ‘லக்ஷ்மி! என் சந்தேகம், சந்திர ராவ்தான் நம்மைச் சர்வநாசம் செய்தானென்பது. ஆனால் உனக்காக கொடுக்கக் கூடாதது என்னிடம் ஒன்றும் இல்லை. நான் ஈச்வரியின் சன்னிதியில் இந்தப் பிரதிக்ஞை செய்கிறேன். நான் சந்திர ராவுக்கு எந்தத்தீங்கும் இழைக்கமாட்டேன். நான் அவனுடைய குற்றத்தை மன்னித்து விடுகிறேன். கடவுளும் அவனை மன்னிக்கட்டும்!’ என்றான்.

லக்ஷ்மியும் சகோதரனுடன், 'பகவான் அவரை மன்னிக்கட்டும்' என்ருள்.

கிழக்கே காலையின் அறிகுறி தென்பட்டது. லக்ஷ்மி கண்ணீருடன் தன் சகோதரனிடம் விடை பெற்றுக் கொண்டு, 'என்னுடன் வீட்டிலிருந்து இன்னும் சிலரும் வந்திருந்தார்கள். அவர்கள் தூங்கிக் கொண்டிருக்கிருர்கள். நான் சென்று வருகிறேன். பரமேசுவரன் உனது மனோரதத்தைப் பூர்த்திசெய்து வைக்கட்டும்!' என்ருள்.

'பரமேசுவரன் உன்னைச் சௌக்கியமாக வைக்கட்டும், என்று சொல்லி ரகுநாதன் லக்ஷ்மிக்கு விடையளித்தான். அவள் உடனே கோயிலினின்றும் வெளியே செல்லலானுள்.



அத்தியாயம் 20

சீதாபதி கோஸ்வாமி

ருத்திரமண்டல துர்க்கத்தின்மேல் போர் தொடுத்த போது ரகுநாதனுக்கு வர ஏன் தாமதமாயிற்றென்ற விஷயத்தை வாசகர்கள் அறிய ஆவலாக இருப்பார்கள். அன்றைய தினப் போரில் யாருக்கும் 'உயிருடன் திரும்பி வருவோம்' என்ற நம்பிக்கையே கிடையாது. அதன் காரணமாகத்தான் ரகுநாதன் யுத்த யாத்திரைக்கு முன் தன் காதலி ஸரயூவைக் காணச் சென்றிருந்தான். ஸரயூவும் ரகுநாதனைக் கண்ணீர் வழியும் கண்களுடன் விடை கொடுத்தனுப்பினாள்.

ஒரு நாள், இரண்டு நாள் என்று நாட்கள் கழிந்து கொண்டே சென்றன. ஆனால் ரகுநாதனைப் பற்றிய தகவல் ஒன்றும் வரவில்லை. ஆசை மாத்திரம் அடிக்கடி ஸரயூவின் காதில் ரகுநாதன் வெற்றியடைந்திருக்கிறான் என்று சொல்லிற்று. ரகுநாதன் வெற்றியடைந்து சந்தோஷத்துடன் வருவான், தந்தையிடம் யுத்தத்தைப் பற்றிய தகவல்களெல்லாம் சொல்லுவான் என்றெல்லாம் எண்ணினாள். ஆனால் ரகுநாதன் வரவும் இல்லை, யாரைப்பற்றியும் விருத்தாந்தங்களைச் சொல்லவும் இல்லை. திடீரென்று இடியோசை போன்று திடுக்கிடத்தக்க செய்தியொன்று வந்தது. 'ரகுநாதன் துரோகியாகி

விட்டான். அந்தத் துரோகத்தின் காரணமாக அவன் அவமானப்படுத்தப்பட்டு வெளியே துரத்தப்பட்டான்' என்பதுதான் அச்செய்தி.

சிறிது நேரம்வரை ஸரயூ பைத்தியம் பிடித்தவளைப் போல் ஆனுள். அவள் அதைச் சரியானபடி அறிந்து கொள்ளவும் முடியவில்லை. அவள் கன்னங்கள் ரத்த வர்ணமாயின. முகம் சுண்டியது. உடல் நடுங்கியது. கண்களில் கோபமும் கேலியும் ஜ்வலித்தன. சேதி சொன்ன வேலைக்காரியிடம் என்ன சொன்னுள்? 'ரகுநாதரா துரோகி? அவரா முஸல்மான்களுடன் சேர்ந்துவிட்டார்? நீ ஒரு பைத்தியக்காரி! இதை யார் உன்னிடம் சொன்னது? போ! என் எதிரே நிற்காதே!' என்ருள்.

மெள்ள மெள்ளப் போருக்குச் சென்ற சைனிகர்கள் அநேகமாகத் திரும்பிவிட்டனர். எல்லோரும், 'ரகுநாதன் துரோகி!' என்ருர்கள். ஸரயூவின் தோழிகளும் சொன்னுர்கள். கிழவர் ஜனர்த்தன தேவரும் அழுது கொண்டு, 'அந்த அழகான வாலிபனின் மனத்தில் இவ்வளவு கொடூரம் இருந்ததென்பது யாருக்குத் தெரியும்?' என்ருர்.

ஸரயூ யாவற்றையும் கேட்டாள். ஆனுல் அவள் ஒன்றும் சொல்லவில்லை. உலகத்தில் எல்லோரும் ரகுநாதனைத் துரோகி என்றனர். ஆனுல் ஸரயூவின் ஹிருதயம், 'இந்த உலகம் முழுதும் பொய் சொல்கிறது. ரகுநாதனின் சரித்திரத்தை இந்த மாதிரித் தோஷம் அண்ட முடியுமா?' என்றது.

இப்படிச் சில தினங்கள் கழிந்தன. ஒரு நாள் ஸரயூ குளத்திற்கு நீராடச் சென்ருள். அந்தக் குளக்கரையில் ஜடாதாரியான ஒரு கோஸ்வாமி உட்கார்ந்திருந்தார். ஸரயூ சற்று நிதானித்து, கோஸ்வாமியின் பக்கம் பார்க்க

லானுள். கோஸ்வாமியின் தேஜஸ் பொருந்திய சரீரத்தைக் கண்டு அவள் மனத்தில் ஒரு பக்தி பாவம் உண்டாயிற்று.

கோஸ்வாமியும் ஸரயூவைப் பார்த்தார். சிறிது நேரம் கவனமாகப் பார்த்துவிட்டு, கம்பீரமான குரலில், 'பத்ரே! என்னால் ஏதாவது பிரயோஜனம் இருக்கிறதா? ஏதாவது விசேஷமாக நீ விரும்புவது இருக்கிறதா? தேவி! உன் நெற்றியில் துக்கத்தின் சின்னங்கள் காணப்படுகின்றனவே, ஏன்? கண்களில் ஏன் கண்ணீர் பொங்குகிறது?' என்றார்.

ஸரயூவால் பதிலளிக்க முடியவில்லை. கோஸ்வாமி மீண்டும், 'தெரிகிறது! நாம் உனது உத்தேசத்தை அறிந்துகொண்டோம்! ஒருக்கால் நீ உனக்கு அந்தரங்கமான ஒருவரைப்பற்றிக் கேட்க விரும்புகிறாய் என்று தோன்றுகிறது!' என்றார்.

ஸரயூவால் மேற்கொண்டு பொறுக்க முடியவில்லை. அவள் நடுங்கும் குரலில், 'ஸ்வாமி! தங்களிடம் அசாதாரணமான சக்தி இருக்கிறது. அனுக்கிரஹம் செய்து சொன்னால் எனக்குப் பெரிதும் உபகாரமாக இருக்கும். என்னுடைய அந்த பந்துவின் சௌக்கியத்தைப் பற்றிச் சொல்லுங்கள்! இதுதான் எனது பிரார்த்தனை!' என்றாள்.

'உலகமெல்லாம் அவனைத் துரோகி என்கிறார்கள்' என்றார் கோஸ்வாமி.

'ஆனால் அந்த விஷயம் தங்களுக்குத் தெரியாததல்ல.'

'சிவாஜி அவரைத் துரோகி என்று தம்மிடமிருந்து வெளியேற்றிவிட்டார்.'

ஸரயூவின் முகம் சிவந்தது. சிவந்த கண்களுடன், 'தவத்தில் நான் அவநம்பிக்கை கொள்வேன்! ஆனால் ரகுநாதரைத் துரோகி என்று எண்ண என்னால்

முடியாது! மஹராஜ், நான் விடைபெற்றுக்கொள்கிறேன். மன்னியுங்கள்!' என்ருள்.

கோஸ்வாமியின் கண்களிலும் கண்ணீர் வந்து விட்டது. அவர் மெதுவாக, 'நான் சொல்ல விரும்புவது வேறு!' என்ருர்.

'சொல்லுங்கள்!'

'ஒவ்வொரு மனிதனுடைய உள்ளத்திலும் இருப்பதை அறிவதென்பது மனித சக்திக்குப் புறம்பானது. ஆனல் ரகுநாதன் உள்ளத்தில் இருந்ததென்ன? அதை அறிய ஓர் உபாயம் இருக்கிறது. காதலர் ஹிருதயத்தைக் காதலர்தான் அறியமுடியும். ரகுநாதனுக்கு உண்மைக் காதலி யாராவது இருந்தால் நீ அவளிடம் சென்று அவளுடைய ஹிருதய பாவத்தைப் பார். அவளுடைய ஹிருதயத்தில் தோன்றுவது பொய்யாக இருக்காது.'

ஸரயூ ஆகாயத்தைப் பார்த்து, 'ஈசுவரா, உன் கருணே! நீதான் இந்தச் சமயம் என் உள்ளத்திற்குச் சாந்தியளித்தாய். நான் அந்த உன்னத சரித்திரமுள்ள வீரனின் காதலியாகவே விரும்புகிறேன். உயிருடன் இருந்தால் ஸ்திரமாக அவரையே உபாசிப்பேன்' என்று மனத்தினுள் சொல்லிக்கொண்டாள்.

ஒரு நிமிஷம் பொறுத்து, கோஸ்வாமி மீண்டும், 'சுந்தரி! உன்னுடைய வார்த்தைகளிலிருந்து அந்த ரஜபுத்திரனுடைய உண்மைக் காதலி நீதான் என்று தோன்றுகிறது. நான் தேசம் தேசமாகச் சஞ்சாரம் செய்கிறேன். ரகுநாதனே மீண்டும் சந்திக்கவும் கூடும். நீ அவனிடம் ஏதாவது சொல்ல விரும்புகிருயா? என்னிடம் வெட்கப்பட வேண்டாம். நான் இந்த உலகை வெறுத்தவன்—' என்ருர்.

ஸரயூவுக்குச் சற்று வெட்கமாகிவிட்டது. ஆனல்

மெள்ள, 'தாங்கள் அவரை எப்பொழுதாவது சந்தித்தீர்களா?' என்ருள்.

'நேற்று இரவு ஈசுவரியின் கோயிலில் அவனைச் சந்தித்தேன். அவன்தான் என்னை உன்னிடம் அனுப்பினான்.'

'அவர் இப்பொழுது என்ன செய்ய உறுதிகொண்டிருக்கிருர்? அவர் என்ன சொல்கிருர்?'

'அவன் தன் புஜபலத்தினுல் வீரச் செயல் புரிவான். தன்னுடைய அபகீர்த்தியைப் போக்குவான்; தவறினுல் உயிர் துறப்பான்!'

'அதுதான் வீரனுடைய பிரதிக்ஞை. தாங்கள் அவரைச் சந்தித்தால், "ஸரயூபாலா க்ஷத்திரியப் பெண்! அவள் வாழ்வைவிடக் கீர்த்தியைத்தான் பெரிதாக எண்ணுகிருள்!" என்று அவரிடம் சொல்லுங்கள். என்று ரகுநாதரின் களங்கம் ஒழிந்து அவர் வீரராகப் பூஜிக்கப்படுகிருரோ அன்றே என் ஜன்மம் சபலமானதென்று எண்ணுவேன். ஈசா! அவருடைய காரியங்களில் வெற்றி கிடைக்கட்டும்!' என்ருள் ஸரயூ.

'கடவுள் அப்படியே அனுக்கிரகம் செய்யட்டும். ஆனுல், பெண்ணே! உண்மைக்கு எப்பொழுதும் வெற்றி கிடைப்பதில்லை. விசேஷமாக ரகுநாதன் ஈடுபட்டிருக்கும் கடினமான முயற்சியில், அவனுடைய உயிருக்குக்கூட ஆபத்துத்தான்!' என்ருர் கோஸ்வாமி.

'அதுதான் ரஜபுத்திரரின் தர்மம்! தம்முடைய விரதத்தைப் பூர்த்தி செய்வதில் அவர் தம் உயிரை இழந்து விட்டால் ஸரயூபாலா அவருடைய கீர்த்தியைப் பாடிக்கொண்டு சந்தோஷமாகப் பிராணத் தியாகம் செய்வாள் என்று அவரிடம் சொல்லுங்கள்' என்ருள்.

சிறிது நேரம் வரை இருவரும் மௌனமாக இருந்தனர். பிறகு ஸரயூ, 'ரகுநாதர் தங்களிடம் வேறெதாவது சொன்னுரா?' என்று கேட்டாள்.

கோஸ்வாமி சிறிது நேரம் பேசாமல் யோசனை செய்துவிட்டு, 'உலகமெல்லாம் அவனைத் துரோகி என்று சொல்லி வெறுக்கிறார்கள். நீ ஏன் அவனை உன் ஹிருதயத்தில் இருத்திக்கொண்டிருக்கிறாய்? ஜகம் அவனுடைய பெயரை உச்சரிக்க விரும்பவில்லை. நீ ஏன் அவன் நாமத்தை ஸ்மரணம் செய்கிறாய்? "வெறுத்து அவமானப்படுத்தப்பட்டு வெளியேற்றப்பட்ட ரகுநாதனை ஸரயூபாலா ஏன் விரும்புகிறாள்?" என்று கேட்கச் சொன்னான்' என்றார்.

'பிரபோ! ஸரயூபாலா ரஜபுத்திரப் பெண்! அவள் உலகத்தினிடம் நம்பிக்கையற்றவளென்று அவரிடம் சொல்லுங்கள்!' என்றாள் ஸரயூ.

'கடவுளே! இனி அவன் ஹிருதயத்தில் ஒரு கஷ்டமும் இல்லை. உலகம் அவனை என்னவேண்டுமானாலும் சொல்லட்டும், இன்னும் அவனிடம் ஒரு ஜீவன் நம்பிக்கை வைத்திருக்கிறது. விடைகொடு! நான் இந்த விஷயங்களை ரகுநாதனிடம் சொல்லி அவன் உள்ளத்தைச் சாந்தப்படுத்துகிறேன்' என்றார் ஸ்வாமிஜீ.

ஸரயூ கண்ணீர் ததும்பும் கண்களுடன், 'அவரைக் கையில் வாளேந்தித் தமது கீர்த்தியின் மார்க்கத்தைச் செம்மை செய்யச் சொல்லுங்கள்! ஜகத்பிதா அவருக்குச் சகாயம் செய்வார்!' என்றாள். அவள் கண்கள் கண்ணீரைச் சொரிந்தன. அவள் மீண்டும், 'பிரபோ, தாங்கள் என் ஹிருதயத்திற்குச் சாந்தி யளித்தீர்கள்! நான் தங்கள் பெயரை அறிய விரும்புகிறேன். தங்கள் நாமம்?' என்றாள்.

'சீதாபதி கோஸ்வாமி!' என்று சொல்லி விடைபெற்றுக் கொண்டார் ஸ்வாமி.

இருள் குவியலாயிற்று. அந்த இருளினூடே கோஸ்வாமி ராய்கட்டை நோக்கிச் செல்லலானார்.

அத்தியாயம் 21

ராய்கட் துர்க்கம்

முன் கூறிய சம்பவங்கள் நடந்த சில நாட்களுக்குப் பிறகு சிவாஜீ தம் ராஜதானி ராய்கட்டில் ஒருநாள் நடுநிசியில் தம் சபையைக் கூட்டினுர். அந்தச் சபையில் சிவாஜியின் முக்கியமான சேனுபதிகள், மந்திரிகள், உத்தியோகஸ்தர்கள், புரோகிதர்கள், பண்டிதர்கள், பிராமணர்கள் யாவரும் வந்திருந்தார்கள். யுத்த காரியங்களில் சிவாஜிக்கு இவர்கள் தான் ஆலோசனை கூறுகிறவர்கள். சிவாஜியைப் போல இவர்களுடைய ஹிருதயமும் தேச பக்தியால் பூர்ணமடைந்திருந்தது. ஆனுல் அன்றைய சபை நிசப்தமாக இருந்தது. சிவாஜியும் மௌனமாக உட்கார்ந்திருந்தார். மஹாராஷ்டிர வீரமண்டலம் மஹாராஷ்டிர கௌரவ லக்ஷ்மியிடம் விடைபெற்றுக்கொள்வதைப் போல் இருந்தது.

வெகு நேரம் பொறுத்து சிவாஜி மோரேசுவரை அழைத்து, 'பேஷ்வாஜீ! சக்கரவர்த்தியின் ஆதிக்கத்தை ஒப்புக்கொண்டால் அவர் கீழ் ஒரு ஜாகீர்தாரைப் போல் இருக்கவேண்டி யிருக்கும் என்று யோசனை கூறினீர்கள், அல்லவா?' என்ருர்.

'மனிதனுல் எவ்வளவு முயற்சிகள் செய்யமுடியுமோ

அவ்வளவையும் தாங்கள் செய்தீர்கள். ஆனால் விதியை மாற்ற யாரால் முடியும்?' என்றார் மோரேசுவர்.

'ஸ்வர்ணதேவ்! நீ என்னுடைய வற்புறுத்தலின் மேல் ராய்கட் கோட்டையை நிர்மாணம் செய்யும்போது, அதை அரசனின் ராஜதானி என்று நிர்மாணித்தாயா, அல்லது ஜாகீர்தார் வசிப்பதற்காகவா?' என்றார் சிவாஜி.

ஆவாஜீ ஸ்வர்ணதேவர் மலினமான குரலில், 'அரசே! பவானியின் கட்டளைப்படி நாம் இன்றுவரை சுதந்திர ஆவல் கொண்டிருந்தோம். இப்பொழுது பவானியின் இஷ்டப்படி வெறும் கையுடனானோம். ஹிந்து சேனாபதியுடன் நாம் போரிடுவதை ஈசுவரியே நிஷித்தமாகக் கருதினாள்' என்றார்.

அண்ணாஜீ தத்தரும், 'இது கட்டாயம் சம்பவிக்கக் கூடியது. தாங்கள் இப்பொழுது டில்லி செல்லும் கடமைகளைப்பற்றி ஆலோசனை செய்யுங்கள்' என்றார்.

'அண்ணாஜி. தாங்கள் சொல்வது உண்மை! எந்த எண்ணத்துடன் எந்த முயற்சிகளை வெகு நாட்களாகச் செய்து வருகிறோமோ அவற்றைச் சாதாரணமாகப் பிடுங்கி எறிந்துவிட முடியாது. உன்னத லட்சியங்களெல்லாம் வெறும் கனவுதானா? பிறகு மஹாராஷ்டிரம் சுதந்திரமடையுமா? பாரதவர்ஷத்தில் மீண்டும் ஹிந்து கௌரவ சூரியன் தன் கிரணங்களைப் பரப்புமா? ஹிமயம் முதல் குமரிவரை மீண்டும் ஹிந்து ராஜன் அரசாட்சி புரிவானா? ஈசுவரி! இந்த எண்ணங்கள், இந்த லட்சியங்கள் வெறும் கனவானால் ஏன் இந்தப் பேதை ஹிருதயத்தைச் சஞ்சலமடையச் செய்கிறாய்?' என்றார்.

இந்த வார்த்தைகளைக் கேட்டு நிறைந்த சபையில் நிசப்தம் குடிகொண்டது. அந்த நிசப்தத்தைப் பிளந்து கொண்டு, சபையின் ஒரு மூலையிலிருந்து ஒரு கம்பீரமான சப்தம் எழுந்து, 'ஈசுவரி மோசம் செய்யவில்லை! மனித

ரிடம் முயற்சியும் தைரியமும் இருந்தால் ஈசுவரி சகாயம் செய்வதினின்றும் பின்வாங்கமாட்டாள்!' என்றது.

ஆச்சரியமடைந்து திரும்பிப் பார்த்தார் சிவாஜி. இதைச் சொன்னவர் ஒரு கோஸ்வாமி!

உற்சாக மேலீட்டினால் சிவாஜியின் நேத்திரங்கள் ஜ்வலித்தன :

'கோஸாயிஜீ! தாங்கள் என் உள்ளத்திற்கு மீண்டும் உற்சாகமளித்தீர்கள்! இதே மாதிரி, மரணப் படுக்கையில் இருந்தபடி தாதாஜீ கன்ஹதேவர் பாலியத்தில் எனக்கு ஒரு முறை உற்சாகமளித்தார். அதைவிட என்னிடம் வேறு மேலான முயற்சிகள் ஒன்றும் இல்லை. அந்த உன்னதமான வழியை அனுசரித்து, தேசத்தின் சுதந்திரம், பிராமணர், கோக்கள், கிருஷிகள் இவர்களைக் காத்தல், தேவாலயங்களை நாசம் செய்பவர்களைப் பலத்தின் மூலம் தண்டிப்பது—இதைத்தான் பவானியும் வற்புறுத்தியிருக்கிருள். அதை அனுசரிப்பதுதான் உசிதம். தாதாஜீ சொன்ன அந்த வார்த்தைகள் இருபது வருஷ காலமாக நமது செவிகளில் ஒலித்து வருகின்றன. ஆகா! எப்படிப் பட்ட சப்தங்களை அவர்கள் பிரயோகித்தார்கள்!'

கோஸ்வாமி மீண்டும் கம்பீரமான குரலில், 'கன்ஹ தேவர் சொன்னது சரி! உன்னதமான வழியைக் கடைப் பிடித்தால் கடைசியில் உன்னத ஸ்திதி கிடைத்தே தீரும். உற்சாகமிழந்து வழியிலேயே உட்கார்ந்துவிட்டால் அது கன்ஹ தேவரின் குற்றமல்ல - நமது கோழைத்தனம்!' என்ருர்.

'கோழைத்தனம்!' என்ற வார்த்தையைக் கேட்டதும் சபையில் ஒரு கலகலப்பு ஏற்பட்டது. வீரர்களின் வாட்களின் உரைசல் சப்தம் கேட்டது.

கோஸ்வாமி மீண்டும், 'அரசே! கோஸ்வாமியின் பேச்சை மன்னியுங்கள்! வேறு ஏதாவது வார்த்தை

வெளிப்பட்டிருந்தால் அதைப் பொருட்படுத்தாதீர்கள். ஆனால் என் உபதேசம் உண்மையா அல்லது பொய்யா என்பதைத் தங்கள் வீர ஹிருதயத்தினிடம் கேளுங்கள். ஜாகீர்தார் பதவியிலிருந்து ராஜபதவியைக் கிரகித்தவர், தம் கைவாள் வலிமையால் சுதந்திரப் பாதையை இடைஞ்சலறச் செய்தவர், மலை, வனம், கிராமம், நகரம் எங்கும் தம் வீரத்தை நாட்டியவர்,—அவர் தம்முடைய வீர பாவத்தை மறந்துவிட்டாரா? சுதந்திரத்தை அவர் கைவிட்டுவிட்டாரா? பாலசூரியனின் ஒளி போல் கிளம்பி யவன அந்தகாரத்தை விரட்டிய அந்தச் சக்தி அகாலத்திலேயே மங்கிவிடுமா? அரசே! ஹிந்து கௌரவ லக்ஷ்மி தங்களை வரிக்கிறாள். தாங்கள் மனம் உவந்து அவளை உதறித் தள்ள விரும்புகிறீர்களா? நான் வெறும் தர்ம சாஸ்திரத்தில் உழல்பவன். எனக்கு ஆலோசனை கூறும் அதிகாரம் இல்லை. தாங்களே ஆலோசித்துப் பாருங்கள்' என்றார்.

சபை முழுதும் மௌனமாக இருந்தது. சிவாஜியும் மௌனமாக உட்கார்ந்திருந்தார். ஆனால் அவர் கண்கள் தகதகவென்று ஜ்வலித்துக்கொண்டிருந்தன.

சிறிது நேரம் பொறுத்து சிவாஜி கோஸ்வாமியின் பக்கம் பார்த்து, 'கோஸ்வாமின்! தங்களுடன் பரிசயமடைந்து சொற்ப தினங்களே ஆகின்றன. தாங்கள் மனிதரா அல்லது தேவதாம்சமா என்பதை நம்மால் சொல்ல முடியாது. ஆனால் தங்கள் வாக்கு தேவ வாணியைவிடப் பன்மடங்கு அதிகமாக உள்ளத்தைக் கவர்கிறது. நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். ஹிந்து சேனாபதிக்குப் பிரதாபம் இருக்கிறது. யுத்த தந்திரம் இருக்கிறது. அவரிடம் கணக்கற்ற ரஜபுத்திர சைனியம் இருக்கிறது. அவருடன் போரிடக்கூடிய சைனியம் நம்மிடம் இருக்கிறதா?' என்றார்.

'ரஜபுத்திரர்கள் வீரசிரேஷ்டர்கள்தான்! ஆனால் மஹாராஷ்டிரரும் வாள் வீசுவதில் சளைத்தவரல்லர். ஜயஸிம்ஹர் யுத்த பண்டிதர். ஆனால் சிவாஜியும் க்ஷத்திரிய குலத்தில் உதித்தவர்தான். தோல்வியை எதிர் பார்த்தால் தோல்விதான். அரசே! ஆபத்துக்களைத் துச்சமாக நினைத்து, கடவுளிடம் நம்பிக்கை வைத்து, காரியத்தைச் சாதியுங்கள்! பாரத வர்ஷத்தில் தங்கள் கீர்த்தியைப் பாடாத ஒரு ஹிந்துகூட இருக்கமாட்டான்!' என்றார்.

'நான் ஒப்புக்கொண்டேன்; ஆனால் ஹிந்து ஹிந்துவுடன் போரிட்டு, பூமியை ஹிந்து ரத்தத்தால் நனைப்பது நன்மையா? இதைப் புண்ணிய கர்மம் என்று சொல்ல முடியுமா?'

'இந்தப் பாபத்தை அனுபவிப்பவர் யார்? ஸ்வஜாதியர்களோடும், ஸ்வதர்மிகளோடும் யுத்தம் செய்து, முஸல்மான்களுக்காக ஸ்வஜாதியர்களுடன் வைர பாவம் வைத்துக் கொண்டிருப்பவர்கள் அன்னியர்கள்தான்!'

சிவாஜி சிறிது நேரம் சும்மா இருந்தார். மனத்திற்குள் யோசிக்கலானார். அவருடைய விசாலமான ஹிருதயம் சிந்தனை அலைகளால் மோதப்பட்டது. என்ன சொல்வது? ஒரு கணத்திற்குப் பிறகு தலை நிமிர்ந்து கம்பீரமாக, 'சீதாபதிஜி! நான் இன்று அறிந்தேன். இன்றுவரை மஹாராஷ்டிரம் வீர சூன்யமடையவில்லை. இப்பொழுதும் அது அடிமைப்படவில்லை. மீண்டும் யுத்தம் நடக்கும். அந்தச் சமயம் தங்களைப் போன்ற அறிஞர்களையோ, அல்லது மந்திரிகளையோ எதிர்பார்க்கவில்லை. அந்த நிலை வரப்போவதும் இல்லை. நாம் தோல்வியை எதிர்பார்க்கவும் இல்லை. ஸ்வதர்மிகள் நாசம் அடைவதற்கும் பயமில்லை. ஆனால் மற்றொரு காரணம்; அதனால் நாங்கள் யுத்தத்தினின்றும் திரும்புகிறோம். கேளுங்கள்:

'நாங்கள் எந்த மகா விரதத்தைப் பூண்டோமோ அதைச் சாதிப்பதற்கு அநேகம் சூழ்ச்சிகள், அநேக ரகசிய உபாயங்கள் முதலியவைகளைக் கையாண்டோம். மிலேச்சர்கள் நம்முடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தைக் காப்பாற்ற மாட்டார்கள். ஆகையால் நாங்களும் அவர்களுடைய சமாதானத்தைப் பற்றி யோசிக்கவில்லை. ஆனால் இன்று ஹிந்து தர்ம ஸ்வரூபமாகவும், ஹிந்து பிரதாபராயும் விளங்கும் ஜயஸிம்ஹருடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தினின்றும் சிவாஜி தவற முடியாது. ரஜபுத்திரர்களுடன் இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. சிவாஜி உயிருடன் இருக்கும்போது இதை அசட்டை செய்ய முடியாது. அந்தத் தர்மாத்மா ஒரு நாள் "சத்திய பாலனம் ஸநாதன ஹிந்து தர்மமில்லாவிட்டால் சத்தியத்தை அசட்டை செய்வதாகும்" என்று கூறியிருக்கிறார். அந்த வார்த்தைகளை நாம் மறக்கவில்லை, மறக்கவும் முடியாது' என்றார்.

'ஆனால் தந்திரசாலியான ஒளரங்கஸீப் நம்முடைய ஒப்பந்தத்தை அசட்டை செய்தால், ஜயஸிம்ஹரிடம் செய்து கொண்ட ஒப்பந்தத்தை அசட்டை செய்வது சிவாஜிக்கு உசிதமல்ல. சிவாஜி கையில் வாளேந்தாமல் இருக்கவேண்டும். இந்த ஏற்பாடுகளை ஏற்றுக் கொள்வீர்களா ?' என்றார் கோஸ்வாமி.

சபை நிசப்தமாக இருந்தது. சிறிது நேரம் பொறுத்து அண்ணாஜீ, 'மஹாராஜா ! இன்னொரு விஷயம். நாளைய தினம் டில்லிக்குச் செல்வதென்று நிச்சயம் செய்துவிட்டீர்களா ?' என்றார்.

'ஆமாம் ! இந்த விஷயத்தைப்பற்றி நான் ஜயஸிம்ஹருக்கு வாக்குக் கொடுத்துவிட்டேன்' என்றார் சிவாஜி.

'அரசே, தாங்கள் ஒளரங்கஸீபின் கபடத்தை அறியவில்லை. அவருடைய பேச்சை நம்பாதீர்கள். அவ

ருடைய காரியம் எது நமக்குத் தெரியாது? தாங்கள் இதைப்பற்றி யோசித்தீர்களா?' என்றூர் அண்ணுஜீ.

'அண்ணுஜீ! நான் டில்லி செல்வதில் யாதொரு இடையூறும் ஏற்படாதென்று ஜயஸிம்ஹரே வாக்குக் கொடுத்திருக்கிறூர்.'

'கபடனை ஔரங்கஸீப் தங்களைக் கைதுசெய்து விட்டால், அல்லது கொலை செய்துவிட்டால், ஜயஸிம்ஹர் தங்களை எப்படிக் காப்பாற்றுவார்?' என்றூர் அண்ணுஜீ.

'அப்பொழுது ஒப்பந்தத்தை மீறியதன் பலனை ஔரங்கஸீப் அனுபவிக்கவேண்டி ஏற்படும். அண்ணுஜீ, மஹாராஷ்டிர பூமி வீரத்தை ஈன்றது. ஔரங்கஸீப் இந்தச் செய்கையால் மஹாராஷ்டிர தேசத்தில் எழும் யுத்த ஜ்வாலையை எந்த சமுத்திர ஜலத்தினுலும் அணைக்க முடியாது. ஔரங்கஸீபும் அவருடைய டில்லி சாம்ராஜ்யமும் அதில் பஸ்மமாகிவிடும்!' என்றூர் சிவாஜி.

சிவாஜி தம் பிரதிக்ஞையில் ஸ்திரமுள்ளவரென்றும், மேற்கொண்டு சொல்வது உசிதமல்ல என்றும் அறிந்து எல்லோரும் சும்மா இருந்துவிட்டனர்.

சிறிது நேரத்திற்கெல்லாம் சிவாஜி மீண்டும், 'பேஷ்வா மோரேசுவர்! ஆவாஜீ ஸ்வர்ணதேவ்! அண்ணுஜீ தத்தர்! உங்களைப் போன்ற செயலாற்றும் சக்தியுள்ளவர்கள் இந்த மஹாராஷ்டிரத்தில் வேறெவரும் இல்லை. நீங்கள் மூவரும் எனக்குப் பதிலாக மஹாராஷ்டிரத்தை ஆளுங்கள். தங்கள் கட்டளையை ஜனங்கள் என் கட்டளையாகவே மதித்து அதன்படி நடப்பார்கள். நான் உத்தரவிட்டுவிட்டு மாத்திரம் செல்கிறேன்' என்றூர்.

மோரேசுவர், அண்ணுஜீ, ஸ்வர்ணதேவ் மூவரும் அரசியல் பாரத்தை ஏற்றுக்கொண்டனர். அப்பொழுது தாணுஜி மாலஸ்ரீ சிவாஜியை நோக்கி, 'ஐயனே! எனது பிரார்த்தனை ஒன்று. சிறு வயது முதல் நான் தங்களைப்

பிரிந்ததில்லை. இந்தச் சமயமும் நான் தங்களைப் பிரியாமல் தங்களுடன் டில்லிக்கு வர ஆக்ஞை அளியுங்கள்!' என்றான்.

கண்களில் கண்ணீர் பொங்க, 'தானாஜீ, உனக்குக் கொடுக்கக்கூடாத வஸ்து உலகில் ஒன்றும் இல்லை. உன் ஆசை பூர்த்தியாகட்டும்' என்றார் சிவாஜி.

இதற்குள் சீதாபதி கோஸ்வாமி, 'அரசே! எனக்கு விடை யளியுங்கள்; நான் என்னுடைய விரதப்படி தீர்த்தங்களுக்குச் செல்லவேண்டும். ஈசுவரன் தங்களுக்கு நன்மை செய்வார்!' என்றார்.

'கோஸ்வாமிஜீ! சௌக்கியமாகத் தீர்த்த யாத்திரையை முடியுங்கள். யுத்த காலத்தில் மீண்டும் தங்களை நினைக்கிறேன். தங்களைப் போன்ற வாலிப வயதும், விவேகமும், தைரியமும் நான் யாரிடமும் கண்டதில்லை' என்று சொல்லி, ஒரு பெருமூச்சு விட்டு, மெல்லிய குரலில், 'இன்னும் ஒரு மனிதனைப் பார்த்திருக்கிறேன்!' என்றார் சிவாஜி.



அத்தியாயம் 22

சந்திர கவியின் கீதம்

கி. பி. 1663-ம் வருஷம். வஸந்த காலத்தில் ஒரு நாள் சிவாஜி ஐந்நூறு குதிரை வீரர்களுடனும் ஆயிரம் காலாட் படைகளுடனும் டில்லிக்கு அருகில் வந்து சேர்ந்தார். நகரத்திற்குத் தெற்கில் ஆறு குரோச தூரத்தில் தம் கூடாரத்தைப் போட்டார். சைனியங்கள் இளைப்பாறிக்கொண்டன. சிவாஜி பிரமையடைந்து இங்குமங்கும் சுற்றிக்கொண்டிருந்தார். 'நாம் டில்லிக்கு வந்தது நல்லதா? முஸல்மான்களின் ஆதிக்கத்தை ஒப்புக் கொள்வது வீரர்களுக்கு உசிதமானதா? திரும்பிச் செல்ல இனி உபாயம் இருக்கிறதா?'—இம்மாதிரியான எண்ணங்கள் அவர் மனத்தில் எழுந்து மோதலாயின. இதற்கு முன் யுத்தகாலத்திலும்கூட சிவாஜியைக் கவலைகொண்ட தோற்றத்துடன் யாரும் கண்டதில்லை.

சிவாஜி தம்முடன் தம் வீர புத்திரனை ஒன்பது வயதுள்ள சம்புஜீயை அழைத்துக்கொண்டு இங்குமங்கும் உலாவிக்கொண்டிருந்தார். அடிக்கடி தந்தையின் முக மண்டலத்தைப் பார்த்து, அவருடைய ஹிருதய பாவங்களைக் கொஞ்சம் கொஞ்சம் அறிந்துகொண்டான் சம்புஜீ. சிவாஜியின் புராதன மந்திரி ரகுநாத்ஜீ நியாயசாஸ்திரியும் கூடவே வந்திருந்தார்.

சிறிது நேரம் பொறுத்து சிவாஜி மந்திரியிடம், 'நியாய சாஸ்திரி! நீங்கள் இதற்கு முன் எப்பொழுதாவது டில்லிக்கு வந்திருக்கிறீர்களா?' என்ருர்.

'வந்திருக்கிறேன்; சிறு வயதில் ஒரு முறை டில்லியைப் பார்த்திருக்கிறேன்' என்ருர் நியாய சாஸ்திரி.

'அதோ தூரத்தில் விஸ்தீரணமாக அடர்ந்து குவியலாகக் கிடக்கும் அவை என்ன என்பதைத் தாங்கள் சொல்ல முடியுமா? ஏன், தாங்கள் அதை அம்மாதிரி மனமின்றிப் பார்க்கிறீர்கள்?' என்ருர் சிவாஜி.

'அரசே, டில்லியில் அரசாண்ட ஹிந்து அரசன் பிருதிவி ராஜனுடைய கோட்டையின் இடிந்த சுவர்கள் என்ருர் நியாய சாஸ்திரி.

சிவாஜி வியப்படைந்து, 'ஆஹா! இது பிருதிவிராஜன் கோட்டையா? இது அவருடைய ராஜதானியா? இந்த இடத்தை முன்பு ஹிந்து அரசன் ஆண்டானு? நியாய சாஸ்திரிஜீ! அந்த நாட்கள் வெறும் கனவுபோல் மறைந்து விட்டன. பாரத வர்ஷத்தில் அந்தத் தினம் மீண்டும் வருமா? நமது கௌரவ தினம் மீண்டும் வருமா? உலர்ந்து போன சுதந்திர மொட்டு மீண்டும் மலருமா?' என்று கேட்டார்.

'கடவுள் கிருபையால் யாவும் நடைபெறக்கூடும். கடவுள் சித்தமிருந்தால் அந்த நாள் மீண்டும் வரும்!'

'நியாய சாஸ்திரி! பாலிய வயதில் நான் கொங்கண தேசத்தில் இதைப் பன்முறை கேட்டிருக்கிறேன். சந்திர கவியின் கீதத்தில்கூட இதைப்பற்றி விஷயம் கிடைக்கிறது. தங்களுக்குத் தெரியுமா? இந்த இடிந்துபோன கோட்டை இதற்குமுன் பெரிய அரண்மனைகளும் ராஜ பவனங்களுமாக இருந்தது. கணக்கற்ற வீரர்கள் இதில் வாழ்ந்தார்கள். கொடிகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்ட நகரம் ஒன்றிருந்தது. வீரர்கள்

நிறைந்த சபையில் அரசன் வீற்றிருந்தான். கண்ணெடுத்துப் பார்க்கத் தகுந்த தூரம்வரை, ஆறுகளும், குளங்களும், தோட்டங்களும், கோயில்களுமாக நகரம் காட்சி அளித்துக்கொண்டிருந்தது. கடை வீதிகளில் ஏராளமான கொடுக்கல் வாங்கல் வியாபாரம் நடைபெற்றது. உத்தியானத்தில் ஜனங்கள் ஆனந்தம் அனுபவித்தார்கள். நதிகளில் நங்கையர் நீராடி, குடங்களில் நீர் கொண்டு சென்றனர். அரண்மனை வாயிலில் எப்பொழுதும் சைனியம் நின்றுகொண்டிருந்தது. யானைகளும் குதிரைகளும் சூழ்ந்து நின்றுகொண்டிருந்தன. வாத்தியம் முழங்கிற்று. அப்பொழுது மஹமத் கோரியின் தூதன் அரண்மனைக்குள் நுழைந்தான். இந்த விஷயம் தங்களுக்குத் தெரியுமா?' என்றார்.

'அரசே! சந்திர கவியின் வாக்கு என்னவோ தெரியும். தாங்கள் அதைச் சொல்லிவிட்டீர்கள். தங்கள் வாக்கில் அந்தக் கதை வெகு மனோகரமாக விளங்கியது' என்றார் நியாய சாஸ்திரி.

'மஹமத் கோரியின் தூதன் அரசனிடம், "பாதுஷா மஹமத் கோரி தங்களுடைய ராஜ்யத்தில் பாதியை எடுத்துக்கொள்ள உத்தேசித்திருக்கிறார். தங்களுக்குச் சம்மதமா?"' என்று கேட்டான்.

'அதற்கு மகானுபாவனான பிருதிவி ராஜன், "சூரியன் ஆகாயத்தில் மற்றொரு சூரியன் உதிக்க இடம் கொடுத்தால் அன்று தினம் பிருதிவிராஜனும் தனது ராஜ்யத்தில் வேற்றரசனை நுழைய விடுவான்!' என்றார்.

'முஸல்மான் தூதுவன் மீண்டும், தங்கள் மாமனார் மஹமத் கோரியிடம் ஆலோசனை கூறியிருக்கிறார். யுத்தத்தின்போது முகம்மதிய சேனையையும் ராடோர் சேனையையும் ஒன்றாகக் காண்பீர்கள்' என்றான்.

'தாங்கள் என் மாமனாரிடம் என் வந்தனத்தைச்

சொல்லி நானும் அதைத்தான் விரும்புகிறேன், சீக்கிரம் அவரைச் சந்திப்பேன் என்றும் சொல்லுங்கள்' என்ருர்.

'சீக்கிரத்தில் கணக்கற்ற செளஹான் சேனே இந்தக் கோட்டையிலிருந்து வெளிப்பட்டு முகம்மதிய சைனியத்தையும், ராடோர் சைனியத்தையும் புயற்காற்றில் பட்ட தூசிபோல் பறக்க அடித்தது. ரொம்பக் கடினத்துடன் கோரி தன் உயிரைக் காப்பாற்றிக்கொண்டான்.'

'அந்த நாள் சென்றுவிட்டது. சந்திர கவியின் கீதத்தை யார் பாடுகிருர்கள்? யார் கேட்கிருர்கள்? நான் நின்று கொண்டிருக்கும் இடத்தின் பூர்வ கெளரவத்தை யோசிக்கும்போது, அந்த மகாராஜர்களே நினைக்கும்போது மனம் புதுப்புதுக் கனவுகளேக் காண ஆரம்பிக்கிறது. இந்த விசாலமான இடத்தில் என்றென்றும் இருளே பரவிக் கிடக்குமென்று எழுதியிருக்கவில்லே. பாரத வர்ஷத்தின் தினம் மீண்டும் வரும். கடவுள் நோயாளியை ஆரோக்கியமுள்ளவனுக ஆக்குவார். பலமற்றவனே வீரனுக்குவார். துர்ப்பாக்கியம் பிடித்த பாரத சந்தானர்களே அவர்தான் உன்னதியின் சிகரத்தில் ஏற்றிவைக்க முடியும்' என்ருர் சிவாஜி.



அத்தியாயம் 23

ராமஸிம்ஹன்

சிவாஜியும் அவர் மகன் சம்புஜீயும் கூடாரத்திற்கு வந்ததும், காவலாளி ஒருவன் வந்து, 'அரசே, ஜயஸிம்ஹரின் புத்திரர் ராமஸிம்ஹர் ஒரு காவலனுடன் வெளியே நிற்கிறார். தங்களை வரவேற்கும்படி சக்கரவர்த்தி அவருக்குக் கட்டளை யிட்டிருக்கிறார்' என்றான்.

'அவரை உள்ளே அழைத்துவா!' என்றார் சிவாஜி.

உக்கிர சுபாவமுள்ள சம்புஜீ உடனே, 'தந்தையே! தங்களை அழைக்க இரண்டு தூதர்களைத்தானா ஔரங்கஸீப் அனுப்பினார்?' என்றான்.

சிவாஜி ஔரங்கஸீப் செய்த இந்த அவமானத்தால் கோபமடைந்துதான் இருந்தார். ஆனால் அவர் அதை வெளியிடவில்லை. அதற்குள் ராமஸிம்ஹன் உள்ளே வந்தான். அந்த ரஜபுத்திர வீரன் தன் தந்தையைப் போல வீரமும் தேஜஸும் பொருந்தியவனாயும், சத்தியப் பிரியனாயும் இருந்தான். கூர்மையான புத்தி வாய்ந்த சிவாஜி அவனுடைய முகத்தைக் கண்டதும் அவனுடைய உதார குணத்தை அறிந்துகொண்டார். ஆயினும் அவர் அவனிடம் இந்தச் சந்திப்பில் கபடமோ, அல்லது டில்லிப் பிரவேசத்தில் ஏதாவது ஆபத்தோ இருக்கிறதென்ற விஷயம் எதையும் பிரஸ்தாபிக்கவில்லை. ராமஸிம்ஹன் தன்

தந்தை மூலம் சிவாஜியின் வீரத்தைக் கேள்விப்பட்டிருந் தான். ஆகையால் அவன் மஹாராஷ்டிர வீர புருஷனின் பக்கம் ஆச்சரியத்துடன் பார்க்கலானான். சிவாஜி ராம ஸிம்ஹனை ஆலிங்கனம் செய்துகொண்டு க்ஷேமம் விசாரித் தார்.

சிறிது நேரத்திற்குப் பிறகு ராமஸிம்ஹன், 'மஹா ராஜாவை இதற்குமுன் நான் எப்பொழுதும் பார்த்த தில்லை. ஆனால் தந்தையின் மூலம் தங்கள் கீர்த்தியைக் கேள்விப்பட்டிருக்கிறேன். இதுவரை தங்களைப் போன்ற ஸ்வதேச பக்தர்களையோ ஸ்வதர்மப் பற்றுள்ளவர்களையோ நான் பார்த்ததே கிடையாது. இன்று எனது நேத்திரங் கள் புனிதமடைந்தன' என்றான்.

'எனக்கும் இன்று தினம் சௌபாக்கியம்தான். தங்கள் தந்தையைப் போன்ற சத்திய விரதமுள்ள வீர புருஷர்கள் ராஜஸ்தானத்தில வெகு சொற்பம். டில்லி வந்ததும் அவருடைய புத்திரரைச் சந்திக்க நேரிட்டதில் எல்லையற்ற ஆனந்தம். இது எனக்கு ஒரு நல்ல சகுனம்' என்றார் சிவாஜி.

'அரசே! நீங்கள் டில்லிக்கு வருவதைக் கேள்விப் பட்டதும் சக்கரவர்த்தி என்னைத் தங்களிடம் அனுப்பி னார். தாங்கள் நகரத்திற்குள் வர உத்தேசமா?' என்றான் ராமஸிம்ஹன்.

'நகரத்திற்குள் வருவதைப் பற்றித் தங்கள் அபிப் பிராயம் என்ன?'

'என் உத்தேசம் தாங்கள் இப்பொழுதே வரவேண்டு மென்பதுதான். ஏனென்றால் தாமதம் ஆவதால் புயல் வீசும், வெயில் தகிக்கும்!'

ராமஸிம்ஹனின் ஸரளமான பதிலைக் கேட்டு சிவாஜி சிரிக்கலானார். அவர் மீண்டும், 'நான் அதைக் கேட்க வில்லை! தாங்கள் வெகுநாட்களாக டில்லியில் வசிக்கிறீர்

கள்; தங்களுக்குத் தெரியாத விஷயம் ஒன்றுமிருக்காது. எங்களை ஏன் டில்லிக்கு அழைத்திருக்கிறார்கள்? தாங்கள் இந்த விஷயத்தை நிச்சயம் அறிந்திருப்பீர்கள்!' என்றார்.

சிவாஜியின் மனோவேக பாவத்தை அறிந்து உதார குணமுள்ள ராமஸிம்ஹன் சிரித்துவிட்டு, 'அரசே! மன்னியுங்கள். நான் தங்கள் உத்தேசத்தை அறியவில்லை. நான் தங்கள் வயதடைந்து தங்களைப்போல் சதா மலையில் வசித்து, வாளிலேயே நம்பிக்கை வைத்திருந்தால், எனக்கும் விளங்கியிருக்கும். இந்த விஷயங்களை நான் அறியேன் என் தந்தையே தங்களை டில்லிக்கு அனுப்பியிருக்கும் பொழுது அது நன்மைதான். அவர் இணையற்ற பண்டிதர். அவருடைய யோசனை ஒருநாளும் வியர்த்தமாகாது' என்றான்.

டில்லியில் தம்மைத் தடுக்கும் நோக்கம் யாருக்கும் இல்லை. அப்படியே இருந்தாலும் அது ராமஸிம்ஹனுக்குத் தெரியாதென்பதை உணர்ந்துகொண்டார் சிவாஜி. ஆயினும் அவர், 'தங்கள் தந்தை தான் என்னை இங்கு வரும்படி யோசனை கூறினர். நான் வரும்போது அவர் இன்னொரு வாக்குக்கூடக் கொடுத்தார். ஒருக்கால் நீங்கள் அதை அறிந்திருந்தாலும் இருக்கலாம்' என்றார்.

'தெரியும்! டில்லியில் தங்களுக்கு எந்தக் கஷ்டமோ விபத்தோ ஏற்படாது. இந்த வாக்கைத்தான் தங்களுக்குக் கொடுத்திருக்கிறார். அந்தக் கட்டளையைத்தான் எனக்கும் இட்டிருக்கிறார்.'

'இதில் தங்கள் சம்மதம் எப்படி?'

'தந்தையின் கட்டளை அவசியம் நிறைவேற்றக் கூடியது. ரஜபுத்திரர்களின் வார்த்தை பொய்யாகாது. இதில் அடியேன் ஒரு குறையும் நேராமல் பார்த்துக்கொள்வேன்!'

சிவாஜி சந்தேகமற்றவராய், ஆனால், தங்கள் யோசனையை ஏற்றுக்கொள்கிறேன். தாமதிப்பதனால் காற்று

பலமாகிவிடும். புறப்படுங்கள், இப்பொழுதே டில்லி செல்வோம்' என்முன்.

எல்லோரும் டில்லியை நோக்கிப் புறப்பட்டார்கள். வழியெல்லாம் முகம்மதியர்களின் சிறு சிறு இடிந்த வீடுகள் இருந்தன. முதலில் முஸல்மான்கள் டில்லியை ஜயித்து பிருதிவி ராஜனின் கோட்டைக்குச் சமீபம் தங்கள் ராஜதானியை நிர்மாணித்தார்கள். ஆகையால் அங்கே பழைய இடிந்த மசூதிகளும் புதைகாடுகளும் இருந்தன. உலகப் பிரசித்தி பெற்ற குதுப்மினார் அங்கேதான் கட்டப்பட்டிருந்தது. தீர வீரமுள்ள புதிய பாதுஷாக்கள் வடபுறமாகத் தங்கள் அரண்மனைகளை அமைத்துக்கொண்டனர். இந்த விதமாக டில்லி வடக்கு நோக்கியே போய்க்கொண்டிருந்தது. சிவாஜி போகும் போது, வழியில் எத்தனை மசூதிகளையும் மினார்களையும் கண்டார்! ராமஸிம்ஹனும் சிவாஜியும் சேர்ந்து சென்றுகொண்டிருந்தனர். ஒருவர் மற்றொருவருடைய கண்யத்தைப் பற்றிப் புகழ்ந்துகொண்டே சென்றனர்.

வழியில் லோடி வம்சத்துப் பாதுஷாக்களின் பெரிய பெரிய கபர்(சமாதி)கள் காணப்பட்டன. ஆப்கானியர்களின் கௌரவ சூரியன் அஸ்தமித்த பொழுதுகூட டில்லி அங்கேதான் இருந்தது. அதன்பின் கிழக்கே நகரலாயிற்று.

இதன்பின் ஹுமாயூனின் சமாதி இருந்த பெரிய கட்டடம் காணப்பட்டது. அப்பால் ஒரு நூற்றுக்கால் மண்டபம். பிறகு ஒரு சுல்தானுடைய சமாதி. பிருதிவி ராஜனின் கோட்டையிலிருந்து தற்போதைய டில்லி வரை வந்துகொண்டிருக்கும் போதே பாரத வர்ஷத்தின் சரித்திரம் இந்தப் பாதையில்தான் எழுதப்பட்டிருக்கிறதென்பது சிவாஜிக்கு நன்கு விளங்கியது. ஒவ்வொரு சமாதியும் சரித்திரத்தின் ஒவ்வொரு பக்கம்; ஒவ்வொரு கல்லும்

அதனுடைய ஒவ்வொரு அக்ஷரம்! காலத் தச்சன் சரித்திரத்தை இம்மாதிரி வேறெங்காவது செதுக்கியிருக்கிறானோ என்னமோ, யார் கண்டது?

சிவாஜி மேலே சென்றார். ராமஸிம்ஹன் சிவாஜியை அழைத்து, 'மஹாராஜா, பாருங்கள்! எங்கள் தந்தை இந்தக் கோயிலைக் கட்டியிருக்கிறார். அரசே! இந்தக் கோயிலில் ஜோதிஷ கணிதத்தின் அளவுகள் இருக்கின்றன. இதற்கு வான மந்திரம் என்று பெயர். இரவில் ஜோதிஷர்கள் இதன்மேல் அமர்ந்து நக்ஷத்திரங்களைக் கணிப்பார்கள்' என்றான்.

'தங்கள் தந்தை எப்படி வீரரோ அப்படியே புத்திசாலியும்கூட. உலகில் அம்மாதிரி சர்வகுண சம்பன்னர்கள் வெகு சொற்பம்' என்றார் சிவாஜி.

டில்லியின் எல்லைக்குள் காலடி எடுத்து வைத்ததும் சிவாஜியின் ஹிருதயம் ஒரு முறை நடுங்கியது. தமது குதிரையைச் சட்டென்று நிறுத்தினார். பின்புறம் திரும்பிப் பார்த்து யோசிக்கலானார். இதுவரை அவர் சுதந்திரமாக இருந்தார். சிறிது நேரத்திற்குள் கைதியானாலும் ஆகலாம். உடனே அவருக்குத் தாம் ஜயஸிம்ஹருக்குக் கொடுத்த வாக்கு ஞாபகத்திற்கு வந்தது. அவர் ஜயஸிம்ஹரின் புத்திரனுடைய உதாரமான முகமண்டலத்தை ஒருமுறை பார்த்து, உடனே தம் இடையிலுள்ள 'பவானி' என்ற வாளைத் தரிசித்து, டில்லிக்குள்ளே பிரவேசித்தார்.

சுதந்திர மகாராஷ்டிர வீரர் அதே சமயம் கைதியானார்.

அத்தியாயம் 24

டில்லி

டில்லி அன்று தடபுடலாக இருந்தது. ஔரங்கஸீப் அந்த ஆடம்பரங்களை யெல்லாம் விரும்பாதவராக இருந்த போதிலும், ராஜகாரியங்களைச் சாதிப்பதற்கு அவை அவசியம் என்பதை நன்கு உணர்ந்திருந்தார். தரித்திர மஹாராஷ்டிர தேசத்திலிருந்து ஐசுவரியம் கொழிக்கும் மொகலாய ராஜதானிக்கு சிவாஜியும் வந்து சேர்ந்தார். மொகலாயர்களின் பலம், சம்பத்து, பொருள் நிலைமை யாவற்றையும் கண்டு சிவாஜி தம் ஏழைமையை அறிந்து விடுவார் என்றும், பிறகு மொகலாயருடன் போர் செய்யத் துணியமாட்டார் என்றும் உத்தேசித்துத்தான் ஔரங்கஸீப் அந்தத் தடபுடலான ஏற்பாடுகளெல்லாம் செய்து வைத்திருந்தார்.

சிவாஜியும் ராமஸிம்ஹனும் ஒன்று சேர்ந்து ராஜ வீதியில் செல்லலானார்கள். வழியில் குதிரைவீரரும், காலாட்படை வீரர்களும் திரிந்துகொண்டிருந்தனர். நகரம் முழுதும் மனித வனமாகத் திகழ்ந்தது. வியாபாரிகள், தங்கள் தங்கள் கடைகளைச் சீர்செய்து, பொன் வெள்ளி முதலியவைகளாலான சாமான்களை எல்லாவற்றிற்கும் முன்னால் வைத்து அழகுபடுத்தி யிருந்தனர். சிற்சில வீடுகளின்மேல் கொடிகள் பறந்துகொண்

டிருந்தன. ஜனங்கள் உப்பரிகையில் வந்து நின்று நோக்கினர். ஸ்திரீகள் பிரசித்திபெற்ற மஹாராஷ்டிர வீரனைக் காண ஜன்னல்களில் வந்து கூடினர். வழியில், பல்லக்கு, குதிரை, யானை முதலிய வாகனங்களில் ராஜா, மனஸூப்தார், ஷேக் முதலியவர்கள் போய்க்கொண்டும் வந்துகொண்டும் இருந்தனர். சிவாஜி இதற்குமுன் இம் மாதிரி நகரைக் கண்டதே இல்லை. புனாவும், ராய்கட்டும், எம்மாத்திரம்!

போகும் போது ராமஸிம்ஹன் சிவாஜியிடம் மூன்று அழகான கும்பங்களைக் காட்டி, 'பாருங்கள்! இதுதான் ஜூம்மா மசூதி. ஷாஜஹான் பாதுஷா உலகின் பொருளையெல்லாம் ஒன்றுகூட்டி இந்த மசூதியைக் கட்டினுர். இது போன்ற ஒரு பவனம் உலகில் வேறெதுவும் கிடையாது என்றே சொல்லிவிடலாம்' என்றான்.

சிவாஜி ஆச்சரியத்துடன் அதையே நோக்கலானுர். பிரமாண்டமான அந்த மசூதி சிவப்புக் கற்களால் கட்டப் பட்டிருந்தது. மேலே உயர்ந்த கும்பங்கள்!

இந்த அபூர்வமான மசூதிக்கு எதிரிலேயே ராஜபவனமும் கோட்டையின் அழகிய சுவர்களும் காணப்பட்டன. பின்புறம் யமுனை நதி பெருகிக்கொண்டிருந்தது. எதிரே ராஜபாதையில் மனிதர் கூட்டம் கூட்டமாகச் சென்றனர். அந்தச் சமயம் பாரத வர்ஷத்தில் அம்மாதிரி இடம் வேறொன்றும் இல்லை. உலகிலேயே வேறொன்றுண்டா? அதிலும் சந்தேகமில்லை. கோட்டைச் சுவர்களின் மேல் உள்ள கொடிகள் காற்றில் அசைந்துகொண்டிருந்தன. கோட்டை வாசலில் ஒரு மனஸூப்தார் இருந்தான். கோட்டைக்கு வெளியே சைனிகர்கள் காவல் புரிந்தனர். அவர்களுடைய துப்பாக்கிகளிலும் வாள்களிலும் சூரிய கிரணம் வீசி ஜ்வலித்துக் கொண்டிருந்தது. ஹிந்துஸ்தானத்தின் அக்காலத்திய பெரிய மனிதர் பலர் குதிரை

யிலும், பல்லக்கிலும் யானையின் மேலும் கோட்டைக்குள் வந்து போய்க்கொண்டிருந்தனர். அவர்கள் உடைகள் கண்களைக் கூசச் செய்தன. ஜனங்களின் ஆரவாரத்தால் காது செவிடுபட்டது. ஆனால் கோட்டைத் தளத்திலிருந்து கிளம்பிய பீரங்கிச் சப்தம் யாவற்றையும் தன்னுள் அடக்கியது. இவை யாவற்றையும் ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டே சிவாஜி ராமஸிம்ஹனுடன் கோட்டை வாசலுக்கு வந்து சேர்ந்தார்.

உள்ளே பிரவேசிக்கும் போது அவர் கண்ட காட்சி அவரை மேலும் ஆனந்தமடையச் செய்துவிட்டது. நாற்புறமும் பல தொழிற்சாலைகளில் பாதுஷாவுக்காக வித விதமான பொருள்களைத் தயாரித்துக்கொண்டிருந்தனர். சம்கி வேலைக்காரர்கள் விலையுயர்ந்த சால்வைகளையும், படுதாக்களையும், அங்கிகளையும் தயாரித்துக்கொண்டிருந்தனர். பேகம்களுக்காக நவரத்தின மணிகளில் நகைகள் பல தயாராகிக் கொண்டிருந்தன. பாரத வர்ஷத்தில் இருந்த உயர்ந்த சிற்பிகள் சித்திரக்காரர்கள் யாவரும் அங்கு இருந்தனர்.

சிவாஜிக்கு இவற்றை எல்லாம் நன்கு பார்க்கச் சமயம் இல்லை. அவர் நேரே 'திவான் ஆம்' என்ற தர்பார் மண்டபத்திற்குச் சென்றார். பாதுஷா அங்கேதான் தமது வஜீர்களுடன் தர்பார் நடத்துவது வழக்கம். ஆனால் சிவாஜிக்கு பாதுஷாவின் கௌரவத்தைக் காட்டவேண்டி அன்றைய தர்பார் உலகப் பிரசித்தி பெற்ற 'திவான் கா' ஸில் கூட்டப் பட்டிருந்தது. சிவாஜி அங்கே சென்று உள்ளே நுழைந்தார். அங்கே சிவப்புக் கற்களாலும் நவரத்தினங்களாலும் இழைத்த மயிலாசனம் சூரியனைப் போல் ஒளி வீசிக்கொண்டிருந்தது. அதன் மேல் பாதுஷா ஔரங்கஸீப் வீற்றிருந்தார். அதன் நாற்புறமும் வெள்ளியினால் செய்யப்பட்ட சோபாக்களில் பாரத

நாட்டின் முக்கியமான ராஜாக்கள், மனஸுப்தார்கள், சேனுபதிகள், பெரிய மனிதர்கள் யாவரும் அமர்ந்திருந் தனர். சிவாஜியை அறிமுகப்படுத்த வேண்டி ராம ஸிம்ஹன் முதலிலேயே உள்ளே வந்துவிட்டான்.

ஒளரங்கஸீப் நகரத்தின் சோபையை இன்று அதிகப் படுத்தி அந்தத் தடபுடல்களெல்லாம் எதற்காகச் செய் திருக்கிருர் என்பதை சிவாஜி முன்பே அறிந்து கொண்டார். ராஜஸ்தலத்தில் நுழைந்ததும் அவருக்கு அது இன்னும் அதிகமாக நிச்சயமாயிற்று. இருபது வருஷ காலமாகத் தமது ஸ்வஜாதிக்காகவும் ஸ்வராஜ்யத் திற்காகவும் போரிட்டு அதை ரட்சித்தவரே இன்று சக்ரவர்த்தியின் ஆதிக்கத்தை ஒப்புக்கொண்டு பாதுஷா வைச் சந்திக்க டில்லிக்கு வந்திருந்தார். பார்ப்போம் ஒளரங்கஸீப் அவருக்கு எப்படி மரியாதை அளிக்கிருர் என்பதை!

சிவாஜி இன்று ஒளரங்கஸீபின் அரண்மனையில் ஒரு சாதாரண உத்தியோகஸ்தரைப் போல் நின்ருர். அவ ருடைய ரத்தம் கொதித்தது. ஆயினும் அவர் ஒரு சாதாரண உத்தியோகஸ்தரைப் போலவே ஸலாம் செய்து, வெகுமதியைக் கொடுக்கவேண்டி யிருந்தது. ஒளரங்க ஸீபின் எண்ணம் பூர்த்தியாயிற்று. அந்த உத்தேசத்தை நிறைவேற்றவே அவர் சிவாஜியின் வெகுமதியை ஏற்றுக் கொண்டார். ஆனல் துக்கப்படக்கூடிய விஷயம் எது வென்ருல் அவர் சிவாஜியைத் தகுந்தபடி கௌர விக்காததே. அவர் சிவாஜியை ஒரு 'பஞ்சஹஜாரி' (ஐயாயிரம் சேனுவீரரின் தலைவன்) அமர வேண்டிய வகுப்பில் உட்காரக் கட்டளையிட்டார்.

சிவாஜியின் கண்களினின்றும் தீப்பொறி பறந்தது. மெய் நடுங்கியது. அவர், பற்களால் தமது உதட்டைக் கடித்துக்கொண்டு, தெளிவான குரலில், 'ஆஹா! சிவாஜி

பஞ்சஹஜாரியா ? ஸம்ராட் மஹாராஷ்டிரத்திற்கு வந்தால், எத்தனை பஞ்சஹஜாரிகள் சிவாஜியின் கீழ் இருக்கிருர்கள் என்பதையும், அவர்கள் வாள் வீசுவதில் பலமற்றவர்கள் அல்லர் என்பதையும் அறியலாம்!' என்ருர்.

அவசியமான காரியம் முடிந்து விட்டது. பாதுஷா எழுந்து அருகே உள்ள ஜனன்காணுவுக்குள் சென்றுவிட்டார். எல்லோரும் எழுந்து தத்தம் இருப்பிடம் சென்றனர்.

சிவாஜிக்காக ஒரு வீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ரோசத்தாலும் துக்கத்தாலும் பீடிக்கப்பட்டு சிவாஜி தனியாக அந்த வீட்டில் உட்கார்ந்து யோசனை செய்யலானுர்.

சிறிது நேரத்திற்கெல்லாம் அரண்மனையிலிருந்து ஒரு செய்தி வந்தது :

'சிவாஜி கோபமடைந்து சொன்னவற்றை எல்லாம் பாதுஷா கேட்டார். ஆனல் அவர் சிவாஜிக்குத் தண்டனையளிக்க விரும்பவில்லை. ஆனல் எதிர்காலத்தில் சிவாஜியை அவர் ஒருபோதும் சந்திக்க விரும்பவில்லை. இனி சிவாஜி தர்பாருக்கும் அழைக்கப்படமாட்டார்.'

இந்தச் செய்திகளைக் கேட்டு சிவாஜி எதிர்கால வானத்தில் கருமேகம் கூடிவிட்டதென்பதை அறிந்து கொண்டார்.

வேடன் எப்படி சிம்மத்தைப் பிடிக்க வலை வீசுவானே அம்மாதிரியே குரூர ஔரங்க்ஸீபும் சிவாஜியைக் கைது செய்ய ரகசிய வலை வீசிக்கொண்டிருந்தார். சிவாஜி மனத்திற்குள் யோசிக்கலானுர் :

'இந்த வலையை அறுத்தெறிந்து மீண்டும் சுதந்திரம் அடைவோமா? ஆஹா! சீதாபதி கோஸ்வாமி! நீண்ட

யுத்தமென்று நீ உரைத்தாய்; அந்த வார்த்தை இப்பொழுது எனக்கு ஞாபகம் வருகிறது.

'ஔரங்கஸீப்! ஜாக்கிரதை! சிவாஜி உன்னிடம் சத்தியத்தைக் கடைப் பிடித்தான். நீ கபடம் செய்கிருய். ஞாபகமிருக்கட்டும். சிவாஜிக்கும் இந்த வித்தை தெரியும். அவன் இந்த வித்தையில் குழந்தையல்ல. பவானி! நீ சாக்ஷி! மஹாராஷ்டிரத்தில் மீண்டும் போர்க் கனல் ஜ்வலிக்கச் செய்கிறேன். இந்த டில்லியும் இந்த மொகலாய சாம்ராஜ்யமும் அதில் பஸ்மீகரமாகிவிடும்!'



அத்தியாயம் 25

நடுநிசியில் வந்தவன்

சில தினங்களில் சிவாஜி ஔரங்கஸீபின் உத்தேசத்தை நன்கறிந்து கொண்டார். சிவாஜி மீண்டும் தம் நாட்டிற்குத் திரும்பிச் செல்லக் கூடாது, வெகுநாள் சிறைப்பட்டிருக்கவேண்டும், மகாராஷ்டிரர்கள் சுதந்திரமடையக் கூடாது, இதுதான் ஔரங்கஸீபின் உத்தேசம். ஔரங்கஸீபின் இந்தக் கபடத்தினுல் சிவாஜி எல்லையற்ற கோபமடைந்தார். எனினும் அதை வெளிக்குக் காட்டாமல் டில்லியிலிருந்து வெளியேற உபாயம் தேடலானுர்.

சிவாஜியின் நம்பிக்கைக்குப் பாத்திரமான மந்திரி ரகுநாதபந்த் ஙியாய சாஸ்திரி எப்பொழுதும் இந்த விஷயத்தைப் பற்றியே சிந்தனை செய்யலானுர். வெகுநேரம் விவாதித்த பிறகு, முதலில் தேசத்திற்குத் திரும்பிச் செல்லப் பாதுஷாவிடம் அனுமதி கேட்பது, அனுமதி கிடைக்காவிட்டால், அப்பொழுது வேறு உபாயத்தைக் கைக்கொண்டு வெளியேறுவது என்று ஙிச்சயம் செய்யப்பட்டது.

பண்டித சிரேஷ்டரான ரகுநாதபந்த் ஙியாய சாஸ்திரியே இதை ராஜ சபைக்குத் தெரிவிக்கும் பாரத்தை ஏற்றுக்கொண்டார்.

அறிக்கைப் பத்திரத்தில், சிவாஜி டில்லிக்கு வந்த காரணம், சிவாஜி டில்லிச் சேனையுடன் சேர்ந்து செய்த காரியம், அதைப் பாதுஷாவும் அங்கீகரித்தது, பாதுஷா சிவாஜியை டில்லிக்கு எதற்காக அழைத்தா ரென்பது ஆகியவைகள் விளக்கப்பட்டிருந்தன. அதன் பின், சிவாஜி எந்தக்காரியத்திற்காக வந்தாரோ அதற்கு அப்பொழுதும் தயாரென்றும், விஜயபுரத்தையும் கோல்கொண்டாவையும் பாதுஷாவின் ஆதிக்கத்திற்குக் கொண்டுவர சகாயம் செய்வதாகவும், பாதுஷா தங்கள் உதவியை வேண்டாவிடில் அவருடைய ஜாகீரைத் திருப்பித் தந்து விடுவதாகவும், டில்லி அவர்களுக்கும் அவர்கள் சகாக்களுக்கும் ஒத்துக்கொள்ள வில்லையாதலால் அங்கே இருக்க முடியாதென்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த அறிக்கைப் பத்திரத்துடன் ரகுநாதபந்த் நியாய சாஸ்திரி அரச சபை சென்றார். பாதுஷா அதற்களித்த பதிலில் பல விஷயங்கள் இருந்தன. ஆனால் சிவாஜி புறப்பட்டுச் செல்வதைப் பற்றி ஒரு வார்த்தைகூட இல்லை. தம்மை அங்கேயே கைதியாக வைத்திருக்கவேண்டும் என்று பாதுஷா நினைக்கிறார் என்பது சிவாஜிக்கு நன்றாக விளங்கிவிட்டது. ஆகையால் அந்தக் கட்டினின்றும் விடுபடத் தகுந்த உபாயத்தைத் தேடவேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்.

இந்தச் சம்பவம் நடந்து சில தினங்கள் கழித்து ஒரு நாள் சிவாஜி உட்கார்ந்து யோசனை செய்துகொண்டிருந்தார். மாலையாகிவிட்டது. ஆயினும் இருள் படரவில்லை. ராஜபாதையில் ஜனங்களின் சந்தடி ஓயவில்லை. தேச தேசாந்தரங்களிலிருந்து வந்த மனிதர்கள் விதவிதமான ஆடையணிந்து தங்கள் தங்கள் காரிய நிமித்தம் அலைந்துகொண்டிருந்தனர். பார்ஸிகள், அராபியர்கள்,

துருக்கியர்கள் போன்ற பற்பல தேச வியாபாரிகள் நகரத்தில் வாணிபம் செய்ய வந்து சென்றுகொண்டிருந்தனர்.

கொஞ்சம் கொஞ்சமாக ஜனசந்தடி குறையலாயிற்று. டில்லியிலுள்ள கடைகள் ஒவ்வொன்ருக மூடப்பட்டன. வீடுகளில் விளக்குகள் ஏற்றப்பட்டன. தூரத்திலிருந்த செடி கொடிகள் கண் பார்வைக்கு மங்கின. வானத்தில் இரண்டொரு தாரகைகள் ஒளிர்ந்தன. மேல் திசைச் செவ்வானமும் இருண்டது. சிவாஜி மேல் திசையை நோக்கிக்கொண்டிருந்தார். என்ன பார்த்தார்? விசாலமான யமுனை நதி சாந்தமாகக் கடலை நோக்கிப் பெருகிச் சென்றுகொண்டிருந்தது.

அந்த நிசப்தத்தின் நடுவே ஜும்மா மசூதியினின்று 'அஜாம்!' என்ற சப்தம் எழுந்து நாலு திசையும் எதிரொலித்தது. சிவாஜி பேசாமல் ஒரு கம்பீரமான சப்தத்தைக் கேட்கலானுர். சிறிது நேரம் பொறுத்து மீண்டும் இருளின் பக்கம் திரும்பிப் பார்த்த பொழுது ஜும்மா மசூதியின் ஸ்தூபமும், கோட்டையின் சுவர்களும் மலைச் சிகரங்கள் போல் காட்சியளித்தன.

இருள் நன்கு கவிந்தது. சிவாஜியின் சிந்தனை குவியவில்லை. பழைய சம்பவங்கள் ஒவ்வொன்ருக அவர் ஞாபகத்திற்கு வரலாயின. பாலிய கால நண்பர் குழாம், இளமையின் ஆசைகள், முயற்சிகள், துணிகரம், தந்தை ஷாஹஜீ, தந்தை போன்ற தாதாஜி கன்ஹ தேவர், அவருக்கு வீரக் கதைகள் புகன்று, விபத்துக் காலத்தில் தைரியமூட்டி, போரில் உற்சாக மூட்டிய வீரத்தாய் ஜீஜாபாயி! இதன்பின் யௌவன வயதில் எழுந்த உன்னத ஆசைகள், துர்க்க விஜயங்கள், தேச விஜயம், ராஜ்ய விஜயங்கள், விபத்தின் மேல் விபத்து, போருக்குப் பின் போர், அதிசயிக்கத்தக்க வெற்றிகள்!—இம்மாதிரி சிவாஜி தம்முடைய இருபது வருஷ காலத்துச் சம்பவங்கள் ஒவ்

வொன்றும் ஒவ்வோர் அபூர்வ வீரச்செயலாக நிகழ்ந்ததை எண்ணிப் பெருமூச்சு விட்டுக்கொண்டார்.

அவைகளெல்லாம் வியர்த்தமா? அந்த எண்ணங்கள் யாவும் வெறும் மாயையா? இல்லை, இன்னமும் எதிர்கால வானத்தில் கௌரவ நக்ஷத்திரம் ஜ்வலித்துக்கொண்டு தான் இருந்தது. இனியும் பாரத நாடு முஸல்மான்களிட மிருந்து விடுதலையடைந்து ஹிந்து சக்கரவர்த்தியின் சிரத்தின் மேல் வெண்கொற்றக் குடை சோபிக்கும். இந்தமாதிரி யோசனையில் சிவாஜி இரவு முதல் ஜாமத் தைக் கழித்தார். இரவு ஒரு ஜாமம் கழிந்ததை அரண் மனையிலிருந்து மணியடித்து நகருக்குத் தெரியப்படுத்தி ஞர்கள் காவலர்கள். மணியின் நாதம் காற்றுடன் கலந்து ஓய்ந்துகொண்டிருந்தது. அதே சமயம் சிவாஜி தம் அறையின் வாசலில் ஒரு மனித உருவம் நிற்பதைக் கண்டார்.

திடுக்கிட்டு எழுந்து நின்று அந்த உருவத்தின் பக்கம் பார்க்கலானுர். உறையிலிருந்த வாள் கைக்கு வந்தது. வந்த உருவம் சிவாஜியின் சம்மதமில்லாமலே அவர் அருகில் வந்து, மெள்ள மெள்ளத் தன் புருவங்களைத் துடைத்துக்கொண்டது.

சிவாஜி கூர்மையாகப் பார்த்தார். வந்திருந்தவரின் தலையில் சடைமுடி இருந்தது. உடலெல்லாம் விபூதி அணிந்திருந்தார். கையில் எந்த ஆயுதமும் இல்லை. அவர் சிவாஜியைக் கொல்லப் பாதுஷாவால் அனுப்பப்பட்ட வரும் அல்லர். பின் அவர் யார்?

அந்த அந்தகாரத்தில் வந்திருந்தவர் சிவாஜியைப் பார்த்து, 'மஹாராஜாவுக்கு ஜே!' என்ருர்.

இருளின் காரணமாக சிவாஜி அவரை நன்ருக அறிந்துகொள்ள முடியவில்லை. ஆனல் அவருடைய குரலை அறிந்துகொண்டார். உலகில் மனிதருக்கு ஆத்

மார்த்த நண்பர்கள் சிலர்தான் இருப்பார்கள். விபத்துக் காலங்களில் அப்படிப்பட்டவரைக் கண்டால் ஹிருதயம் புளகாங்கித மடைந்து விடுகிறது.

சிவாஜி சீதாபதி கோஸ்வாமிக்கு நமஸ்காரம் செய்து அவரை ஆலிங்கனம் செய்துகொண்டார். இருவரும் அமர்ந்தனர். சிவாஜி விளக்கைக் கொளுத்திவிட்டு, 'மித்திரரே! ராய்கட்டின் நிலைமை எப்படி இருக்கிறது? தாங்கள் அங்கிருந்து எப்பொழுது எவ்விதமாக வந்தீர்கள்? இந்த இருளில் இவ்வளவு தூரம் வந்ததன் காரணம் என்ன?' என்றார்.

'மஹாராஜ்! ராய்கட்டில் யாவரும் சௌக்கியம். தாங்கள் யாரிடம் ராஜ்யத்தை ஒப்புவித்துவிட்டு வந்தீர்களோ அவர்கள் திறமையாக நிர்வாகத்தை நடத்துகின்றனர். அதில் குறையேற்பட ஒன்றும் இல்லை. நான் முன்பே தங்களிடம் என்னுடைய விரதத்தின்படி தீர்த்தாடனம் செய்யப்போகிறேன் என்று சொல்லியிருந்தேனல்லவா! இந்தப் பக்கம் வரும்போது தங்களைக் காணும் பாக்கியம் கிடைத்தது' என்றார்.

'ஆனாலும் காரணமில்லாமல் நீங்கள் இந்த மாதிரி சாளரத்தின் வழியாக வரமாட்டீர்கள். தயவுசெய்து காரணத்தைச் சொல்லுங்கள்!' என்றார் சிவாஜி.

'சரி, சொல்லுகிறேன். முதலில் இதைச் சொல்லுங்கள். தாங்கள் இங்கு வந்தது முதல் சௌக்கியமாகத் தானே இருக்கிறீர்கள்?'

'உடல் சௌக்கியமாகத்தான் இருக்கிறது. ஆனால் மனம் சௌக்கியமாக இல்லை.'

'தங்களுக்கும் பாதுஷாவுக்கும் ராஜியான பிறகு சத்துருத்வம் ஏது?'

'நல்லது. தவளையும் பாம்பும் எங்காவது நட்பாக இருக்க முடியுமா? சீதாபதி! தங்களுக்கு எல்லாம்

தெரியும். என் கோபத்தை அதிகம் தூண்டாதீர்கள். தங்கள் பேச்சைக்கேட்டிருந்தால், இன்று பாதுஷாவிடம் கைதியாகாமல் சுதந்திரமாக ராய்கட்டிலோ கொங்கண தேசத்து மலைக் குகைகளிலோ இருந்திருக்கலாம்.

'பிரபோ! ஆத்ம திரஸ்காரம் செய்து கொள்ளாதீர்கள். மனிதன் மாத்திரம் பிரமையில் வீழ்பவனன்று. இந்த ஜகமே பிரமையால் சூழப்பட்டிருக்கிறது. தாங்கள் ராஜி என்ற வார்த்தையில் நம்பிக்கைவைத்து உண்மையாக நடந்து கொண்டீர்கள். இங்கும் வந்தீர்கள். ஆனால் பாதுஷா கபடம் செய்தார். கடவுள் விரும்பினால் அவருக்கு இதன் பலன் கிடைக்கும். அரசே! கபடர்களுக்கு என்றும் சந்தோஷம் கிடையாது. இன்று அவர் தங்களைக் கபடமாகக் கைது செய்தால் நாளை இதற்குப் பதிலாக அவர் தம்முடைய வம்சத்துடன் நாசமடைய நேரும். அரசே! தாங்கள் ராய்கட்டில், "ஔரங்கஸீப் கபடமாக நடந்துகொண்டால் அதனால் மஹாராஷ்டிரத்தில் எழும் கோப அனலில் அந்த மொகலாய சாம்ராஜ்யமே பஸ்மமாகிவிடும்!" என்று சொல்லிவிட்டு வந்ததை மஹாராஷ்டிர வீரர்கள் மறக்கவில்லை' என்றார் கோஸ்வாமி.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் சிவாஜியின் கண்கள் ஜ்வலித்தன. அவர், 'சீதாபதி! இந்த எண்ணம் என்றும் மறையாது. இன்னம் மஹாராஷ்டிரம் ஜீவித்துள்ளதென்பதை ஔரங்கஸீப் காண்பார். ஆனால் நமது வீரர்கள் பாதுஷாவுடன் போரிடும் போது நான் டில்லியில் இருப்பதுதான் துக்கமான விஷயம்' என்றார்.

'வானத்தில் செல்லும் காற்றை வலைபோட்டு ஔரங்கஸீபினால் பிடிக்க முடியுமானால், அப்பொழுது உங்களையும் அவர் கைதியாக வைக்கமுடியும்!' என்றார் சீதாபதி.

சிவாஜி சிரித்துக்கொண்டே, 'கொஞ்சம் மெதுவாகப் பேசுங்கள். தாங்கள் பேசுவதைப் பார்த்தால் வெளியே செல்ல ஏதோ ஏற்பாடு செய்துவிட்டு வந்திருப்பதாகத் தோன்றுகிறது. இல்லாவிட்டால் இந்த நடுநிசியில் வர மாட்டீர்கள்!' என்றார்.

'தங்களிடம் எந்த விஷயத்தையும் ஒளிக்க முடியாது.'

'சரி, என்ன உபாயம்?'

'இருளில் தாங்கள் ஏதாவது மாறுவேஷம் பூண்டு இங்கிருந்து வெளியேற முடியும். டில்லியின் நாற்புறமும் மதில்கள் இருக்கின்றன. எனினும் மேற்புறத்தில் இரும்புத் தூண் ஸ்தாபிப்பதற்காக ஓர் இடம் காலியாக விடப்பட்டிருக்கிறது. அதன் வழியாகக் குதித்து வெளியேறி விடலாம். அதில் குதித்துச் செல்வது மஹாராஷ்டிரர்களுக்கு ஒரு பெரிய காரியமல்ல. தவிர ஆற்றங்கரையில் எட்டுச் செம்படவர்கள் தயாராக இருக்கிறார்கள். அவர்கள் உடனே ஓடத்தில் ஏற்றி மதுரைக்குக் கொண்டு சேர்த்து விடுவார்கள். அங்கே தங்களுக்கு எத்தனையோ நண்பர்களும் பந்துக்களும் இருக்கின்றனர். எத்தனையோ தேவாலயங்களில் எத்தனையோ தர்மாத்மாக்கள் இருக்கிறார்கள். அவர்கள் மூலம் தாங்கள் அனுயாசமாக ஸ்வதேசம் சென்று விடலாம்' என்றார் கோஸ்வாமி.

'தங்கள் முயற்சியால் சந்தோஷமடைகிறேன். தங்களைப் போன்ற நண்பர் வேறு யாரும் கிடைக்கமாட்டார்கள். ஆனால் அங்கே ஏறிக் குதிக்கும் போது யாராவது பார்த்துவிட்டால், ஓடுவது கஷ்டமாகிவிடும். பிறகு ஔரங்கஸீபின் கையால் மரணம் நிச்சயம்' என்றார் சிவாஜி.

'தாங்கள் குதித்துச் செல்லவேண்டிய இடத்தில் தங்களுடைய வீரர்களில் பதின்மர் காவல் இருக்கின்

றனர். தங்களை யாராவது தடுத்தால் அவர்கள் அங்கேயே மடியவேண்டியதுதான்!'

'சரி, ஓடம் செல்லும்போது யாராவது காவலன் சந்தேகப்பட்டு ஓடத்தைத் தடுத்துவிட்டால்?'

'எட்டுச் செம்படவர்களும் தங்களைப் போல் மாறு வேஷமணிந்த வீரர்கள்தான். அவர்கள் ஆயுதபாணிகள். அவர்களைத் தடுக்க யாராலும் முடியாது!'

'மதுரை சென்று தகுந்த உண்மையான மனிதர் கிடைக்காவிட்டால்?'

'தங்கள் பேஷ்வாஜியின் மைத்துனர் மதுரையில் தான் இருக்கிறார். அவர் தங்களுக்கு வெகுநாள் பழக்க மானவர். நம்பிக்கை உள்ளவர். இதோ, இது அவரு டையதுதான்!' என்று சொல்லி, சீதாபதி ஒரு கடிதத் தைத் தம் வஸ்திரத்திலிருந்து எடுத்துக் கொடுத்தார்.

சிவாஜி சிரித்துக்கொண்டே, 'சரி! கடிதத்தை நீங்களே படியுங்கள்' என்றார்.

சீதாபதிக்கு வெட்கமாகிவிட்டது. அப்பொழுது அவருக்கு சிவாஜிக்கு எழுதப் படிக்கத் தெரியாது, கையெழுத்துக்கூடப் போடத் தெரியாது என்பது ஞாபகம் வந்தது. அவர் கடிதத்தைப் படித்துச் சொன்னார். அவசிய மான வஸ்துக்கள் எல்லாம் மோரேசுவர் தயாரித்து வைத் திருந்தார். இதைப் பற்றிக் கடிதத்தில் விரிவாக எழுதப் பட்டிருந்தது.

இதைக் கேட்டு சிவாஜி, 'கோஸ்வாமி! தங்கள் வாழ் நாள் முழுவதும் யாக யக்ஞங்களிலேயே கழியவில்லை. தங்களைப் போல சிவாஜியின் மந்திரிகூடக் காரியத்தைச் சாதிக்க முடியாது. ஆயினும் ஒரு விஷயம். நாம் சென்றால் எனது மகன் எங்கிருப்பான்? நமது மந்திரி ரகுநாத பந்த், மித்திரன் தாஜி இவர்களெல்லாம் எங்கு செல்வது?

எனது சேனை எப்படி ஔரங்கஸீபின் கோபக் கனலி லிருந்து தப்புவது?' என்றார்.

'தங்கள் புத்திரர், மித்திரர், மந்திரிகள் யாவரும் இரவு தங்களுடனேயே செல்வார்கள். தங்கள் சேனை டில்லியில் இருப்பதால் யாதொரு ஆபத்தும் இல்லை. ஔரங்கஸீப் அவர்களை என்ன செய்யமுடியும்? கடைசி யில் அவர்களை விட்டுவிடவே நேரிடும்' என்றார் சீதாபதி.

'சீதாபதி, தாங்கள் ஔரங்கஸீபின் குணத்தை அறியீர்கள். அவர் தம் சகோதரர்களைக் கொன்று சிம்மா தனம் ஏறியவர்!'

'ஔரங்கஸீப் தங்கள் சைனியத்திற்கு ஏதாவது தீங்கிழைத்தால் ஜனங்கள் தாங்கள் ஆபத்தின்றிச் சென்றுவிட்டீர்கள் என்று உயிரைவிடவும் தயாராகி விடுவார்கள்.'

சிவாஜி சிறிதுநேரம் பேசாமல் யோசனை செய்து விட்டுப் பிறகு, 'கோஸ்வாமி! நான் தங்கள் முயற்சிக்கும் சிரமத்திற்கும் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் சிவாஜி தன் ஊழியர்களை ஆபத்தில் விட்டுவிட்டுத் தான் மாத் திரம் தப்ப விரும்பவில்லை. இந்தக் கோழைத் தனமான காரியம் என்னால் ஆகாது. சீதாபதி, வேறு ஏதாவது உபாயம் இருந்தால் கூறுங்கள். இல்லாவிட்டால் இந்த உபாயத்தை விட்டுவிடுங்கள்!' என்றார்.

'வேறு உபாயம் ஒன்றுமில்லை!'

'அப்படியானால் சமயம் அளியுங்கள்! சிவாஜிக்கு இது முதல் ஆபத்தல்ல. சிவாஜியும் உபாயம் தேடுவதில் சமர்த்து இல்லாதவரல்லர்.'

'சமயம் இல்லை. இன்றிரவே தாங்கள் வெளியேற வேண்டும். இல்லாவிட்டால் நாளை தாங்கள் வெளி யேறுவது கடினமாகிவிடும்.'

'ஏன் தாங்கள் ஏதாவது யோக பலத்தினால் இதை

அறிந்தீர்களா? எனக்குத் தெரியவில்லையே! தங்கள் வார்த்தைகள் உண்மையாக இருந்தால்கூட சிவாஜியின் அபிப்பிராயம் மாறுது. அண்டினவர்களையும் ஊழியர் களையும் விட்டுவிட்டு சிவாஜி தன் உயிரைக் காத்துக் கொள்ள விரும்பவில்லை. கோஸ்வாமி! அது க்ஷத்திரிய தர்மமும் அல்ல!'

'அரசே! நம்பிக்கைத் துரோகம் செய்பவர்களுக்கு மரண தண்டனை விதிக்கவேண்டியது க்ஷத்திரிய தர்மம். தவிர, ஔரங்கஸீபுக்கும் இதே தண்டனையைத்தான் அளிக்கவேண்டும். ஆகையால் நீங்கள் சீக்கிரம் மஹா ராஷ்டிரம் செல்லுங்கள். அங்கிருந்து அலைப் பெருக்கைப் போல் சைனியத்தைப் பெருக்குங்கள். ஔரங்கஸீபின் கனவு சிதைந்து அவருடைய சாம்ராஜ்ய ஓடம் அந்தப் பிரளயத்தில் மூழ்கட்டும்!' என்றார் கோஸ்வாமி.

'சீதாபதி! இந்த அகிலத்தையும் ஆள்பவர் ஔரங்க ஸீபுக்கு தண்டனை அளிப்பார்! என் வார்த்தையை ஒப்புக் கொள்ளுங்கள். இதற்கு அதிக நாள் ஆகிவிடாது. சிவாஜி தன்னை அண்டியவர்களை விட்டுவிட முடியாது.'

'அரசே! இப்பொழுதே தங்கள் பிரதிக்ஞையை உதறுங்கள். கொஞ்சம் கவனமாய் யோசியுங்கள்; நாளை யோசிக்கச் சமயம் கிடைக்காது. நாளை நீங்கள் கைதியாகி விடுவீர்கள்!'

'எது வேண்டுமானாலும் ஆகட்டும்! அண்டினவர்களை விட முடியாது. சிவாஜியின் இந்தப் பிரதிக்ஞை உறுதி யானது.'

சீதாபதி மௌனமானார். அவர் கண்களில் கண்ணீர் பெருகுவதை சிவாஜி கண்டார். அவர் சட்டென்று சீதாபதியின் கரங்களைப்பற்றி, 'கோஸ்வாமி! வருந்தா தீர்கள்! தங்கள் முயற்சி - தங்கள் அன்பு - என் உள்ளத் தினின்றும் ஒருநாளும் மறையாது. ராய்கட்டில் தாங்கள்

தந்த உபதேசம், டில்லியில் இன்று தாங்கள் செய்த முயற்சி இவை என் ஹிருதயத்தில் பதிந்துவிட்டன. தாங்கள் தயை செய்யுங்கள் ; தங்கள் உபதேசத்தின் மூலமே சீக்கிரம் எல்லோரும் உத்தாரண மடைடவார்கள் ' என்றார்.

'அரசே! தங்கள் இன் சொல்லால் நான் ஒருவாறு திருப்தி யடைந்தே னென்றாலும், ஈசுவரர் சாக்ஷியாகச் சொல்கிறேன் : எனக்குத் தங்களுடன் இருப்பதைத் தவிர வேறு எந்த ஆசையும் கிடையாது. ஆனால் தவிர்க்க முடியாத என் விரதத்தால் நான் பற்பல இடங்களைச் சுற்ற வேண்டியிருக்கிறது ' என்றார் கோஸ்வாமி.

'இதென்ன விரதம், கோஸ்வாமி! இந்தக் கடுமையான விரதத்தை ஏன் மேற்கொண்டீர்கள்?'

'எல்லாவற்றையும் இப்பொழுது எப்படிச் சொல்ல முடியும்?'

'சரி, தாங்கள் இந்த விரதத்தை எதற்காக ஏற்றீர்கள் ?'

கோஸ்வாமி சிறிது நேரம் யோசனை செய்துவிட்டு. 'நான் யாரை என் பாலிய காலத்திலிருந்து இஷ்ட தேவதையாகப் பூஜை செய்து வந்தேனோ அவர் துரதிர்ஷ்ட வசத்தால் என்மீது கோபம் கொண்டுவிட்டார். அந்த அபவாதத்தைக் கண்டனம் செய்வதற்காக இந்த விரதம் பூண்டேன்!' என்றார்.

'அந்த அபவாதத்தை உங்கள் மேல் சுமத்தியவர் யார்? அதனைக் கண்டிக்க இந்த விரதத்தை மேற்கொள்ளும்படி உபதேசித்தது யார்?'

'அதை நானே அறிந்து கொண்டேன். ஈசுவரியின் கோயிலில் ஒரு மகாத்மா இந்த விரதத்தை மேற்கொள்ளும்படி உபதேசித்தார். என் மனோரதம் பூர்த்தியானால் தங்களிடம் கூறுகிறேன். பூர்த்தியாகாவிட்டால் இந்தப் பயனற்ற என் உயிரைத் தியாகம் செய்கிறேன். யாரைப்

பூஜிக்க இந்த உயிர் இருக்கிறதோ அவர் கோபங்கொண்டு முகத்தைத் திருப்பிக்கொண்டிருக்க இந்த உயிரை வைத்துக்கொண்டிருப்பதில் என்ன பிரயோசனம்?' என்ருர் சீதாபதி.

'சீதாபதி, தாங்கள் சொன்னது உண்மை! யாருக்காக இந்த உயிரைத் துச்சமாக நினைத்திருக்கிருேமோ அவர் துக்கமடைந்தால் அந்தத் துக்கம் நமக்கு நரக வாதனையை விடக் கொடியது!'

அரசே! தாங்கள் எப்பொழுதாவது அந்த நிலைமையை அனுபவித்திருக்கிறீர்களா?'

'கடவுள் என்னை மன்னிக்கட்டும்! நான் ஒருமுறை குற்றமற்ற ஒரு வீரனுக்கு இந்த மாதிரித் துக்கத்தைக் கொடுத்தேன். அந்தப் பாலகனின் ஞாபகம் வரும்போதெல்லாம் என் ஹிருதயம் நடுங்குகிறது.'

'அந்த அபாக்கியவானின் பெயர் என்ன?'

'ரகுநாத்ஜீ ஹவல்தார்!'

அறையிலிருந்த விளக்கு சட்டென்று அவிந்தது. சிவாஜி விளக்கைக் கொளுத்தலானுர். அந்தச் சமயம் சீதாபதி, 'விளக்கு வேண்டியதில்லை. சொல்லுங்கள், நான் கேட்டுக்கொண்டு போகிறேன்!' என்ருர்.

'வேறென்ன சொல்வேன்? அந்த வீர வாலிபன் எனது சைனியத்தில் சேர்ந்து மூன்று வருஷங்களாகின்றன. நல்ல கம்பீரமான மேனி. தங்கள் நேத்திரங்களைப் போன்ற பிரகாசம் பொருந்திய கண்கள். ஆமாம், தங்களை விடக் கொஞ்சம் சிறு வயது. ஆனுல் தங்களைப் போன்றே திடமான வீர உள்ளம். நல்ல தைரியசாலி. தங்களைப் போன்ற திடகாத்திரமான தேகம். தங்கள் குரலைக் கேட்கும் போதெல்லாம் எனக்கு அந்த வாலிப வீரனின் குரல் நினைவுக்கு வருகிறது.'

'பிறகு?'

'நான் அவனைப் பார்த்த அன்றே அவன் ஒப்பாரும் மிக்காருமற்ற உயர்ந்த வீரன் என்றெண்ணி அவனுக்கு ஒரு வாளைப் பரிசளித்தேன்! ரகுநாதன் அந்த வெகுமானத்தை ஒருநாளும் களங்கப்படுத்தியதில்லை. ஆபத்துக் காலங்களில் எப்பொழுதும் நிழல் போல என்னைத் தொடர்வான். போர்க் காலங்களில் துணிகரமான வீரங் காட்டிச் சத்துருவைப் புறங்காணுவான். இனி அந்த வீர வதனத்தைக் காணக்கூட முடியாதென்றே என் மனம் எண்ணுகிறது' என்றார் சிவாஜி.

'பிறகு?'

'அந்தப் பாலகன் போரில் என் உயிரைக் காத்தான். ஒரு போரில் கோட்டைகளை வென்றான். பல யுத்தங்களில் அவன் அசாதாரணமான போர்த் திறமையைக் காட்டினான்.'

'அதன் பின்?'

'இன்னும் என்ன கேட்கிறீர்கள்? ஒருநாள் ஏமாறி அந்த நம்பிக்கையுள்ள வீரனை அவமானம் செய்துவிட்டேன். அவனை வேலையினின்றும் நீக்கிவிட்டேன். ஆனால் அவன் கடைசிவரை யாதொரு கடுவசனமும் உரைக்கவில்லை. செல்லும்போது தலைகுனிந்து சென்றான்!' சிவாஜியின் குரல் தடைப்பட்டது. கண்களில் கண்ணீர் பெருகியது. அவர் மௌனமானார்.

'இதில் தங்கள் தோஷம் என்ன? குற்றவாளிக்குத் தண்டனை அளிக்கவேண்டியது தானே?' என்றார் கோஸ்வாமி.

'குற்றவாளியா? ரகுநாதன் உன்னதமான சரித்திரமுடையவன். களங்கம் அவன் அருகில்கூட அண்ட முடியாது. ஒரு முற்றுகைக்குப் புறப்படும்போது ரகுநாதன் வரத்தாமதமாயிற்று. நான் அவனைத் துரோகி என்று எண்ணினேன். ஆனால் ஜயஸிம்ஹர், அவன் ஒரு

புரோகிதரின் ஆசீர்வாதத்தைப் பெறப் போயிருந்தான். அதனால்தான் தாமதம் என்று சொன்னார். குற்றமற்றவனை நான் அவமானம் செய்தேன். அந்த அவமானத்தால் அவன் பிராணத் தியாகம் செய்துகொண்டு விட்டானென்று கூடத் தெரிகிறது. யுத்தத்தில் என் உயிரைக் காப்பாற்றினவன்-அவன் உயிரை நான் வாங்கினேன்!' —சிவாஜியின் வார்த்தைகள் முடிவுற்றன. அவரால் பேச முடியவில்லை, தலை குனிந்தார். சிறிது நேரம் பொறுத்து, 'சீதாபதி! சீதாபதி!' என்று கூப்பிட்டார்.

யாரும் பதில் சொல்லவில்லை. சிவாஜி ஆச்சரியமடைந்து விளக்கை ஏற்றினார். பார்த்தால் யாரும் இல்லை. சீதாபதி எங்கு சென்றாரோ? எவரையும் காணவில்லை.



அத்தியாயம் 26

ஔரங்கஸீப்

மறுநாள் சிவாஜி விழித்தெழுந்த பொழுது விடிந்து ஒரு ஜாமம் ஆகிவிட்டது. எழுந்ததும் ராஜபாதையில் உண்டான சந்தடியைக் கேட்டு ஜன்னல் வழியாக வெளியே நோக்கினர். என்ன கண்டார்? தாம் இருந்த இடத்தைக் காவலர் சூழ்ந்துகொண்டிருந்தனர். தெரியாமல் யாரும் உள்ளே வரமுடியாது. காவலர்கள் எல்லோரும் ஆயுதபாணிகளாக இருந்தனர். சரியானபடி அறிமுகமானவர்களைத் தவிர யாரையும் உள்ளே அனுமதிப்பதில்லை. சிவாஜிக்கு கோஸ்வாமியின் வார்த்தை நினைவிற்கு வந்தது. முந்திய நாள் சிவாஜி வெளியேறியிருக்க முடியும். ஆனல் இன்று அவர் கைதி.

அதன் காரணம் என்னவென்பதை சிவாஜி யோசிக்கலானர். வெகுநேரம் யோசித்த பிறகு தம்முடைய பிரார்த்தனைக் கடிதத்தில் ஔரங்கசீப் சந்தேகங்கொண்டே நகரக் கொத்தவாலிடம் தம்மைக் கண்காணிக்கும்படி உத்தரவிட்டிருக்கிறர் என்பதை யூகித்தார். இந்த விஷயத்தைச் சீதாபதி நன்கு அறிந்துகொண்டதால் தான் ஔரங்கஸீபின் எண்ணம் பூர்த்தியாகு முன்பே தம்மை வெளியேற்ற முதல் நாள் இரவு வந்தார் என்பதும் விளங்கியது. மனத்திற்குள் கோஸ்வாமியை சிவாஜி வாழ்த்தினர்.

ஔரங்கஸீபின் கபடம் அப்பொழுது ஸ்பஷ்டமாக விளங்கிவிட்டது. முதலில் பாதுஷா கௌரவமாகக் கடிதம் எழுதி சிவாஜியைக் கூப்பிட்டனுப்பினார். சிவாஜி வந்த பிறகு நிறைந்த சபையில் அவரை அவமானம் செய்தார். ஸ்வதேசம் செல்ல முடியாதபடி அவரைக் காவலிலும் வைத்தார். போதாததற்கு அவரைப் பிறர் காணுவண்ணமும் கட்டுப்பாடு செய்தார். மலைப் பாம்பு எப்படித் தன் இரையைச் சாப்பிடுமுன் அதைத் தன் உடலால் சுற்றி இறுக்கிப் பிணித்துக் கொள்ளுமோ அதே போல ஔரங்கஸீபும் சிவாஜியை வலையில் சிக்க வைத்துப் பிறகு அவரை ஒழித்துவிட வேண்டுமென்று எண்ணினார். சாதாரணமான மனிதர் மனத்தினாலும் எண்ண யோக்கியமற்ற அந்த எதிரியின் சூழ்ச்சியை சிவாஜி உணர்ந்தார். அவர் உதடுகள் நடுங்கின. கண்களில் கோபமும் கேலியும் ஜ்வலித்தன. வெகுநேரம் யோசித்துவிட்டு, அவர் தம் உதடுகளைக் கடித்துக் கொண்டு, 'ஔரங்கஸீப்! சிவாஜியை நீ இதுவரையில் அறிந்துகொள்ள வில்லை. தந்திரத்தில் நீ தான் சிறந்தவனென்று எண்ணினாய்; ஆனால் சிவாஜியும் அந்த விஷயத்தில் குழந்தையல்ல! இந்தப் பழியை ஒருநாள் தீர்த்துவிடுகிறேன். தக்ஷிணத்திலிருந்து போர் நெருப்பைப் பாரதவர்ஷம் முழுவதிலும் பரப்புகிறேன்!' என்று சொல்லி, பிறகு வெகுநேரம் யோசித்துவிட்டுத் தமது மந்திரியான ரகுநாதபந்தைக் கூப்பிட்டார். ரகுநாத நியாய சாஸ்திரி வந்ததும், 'நியாய சாஸ்திரி! ஔரங்கஸீபின் விளையாடல்களைப் பார்த்தீர்களா? சிவாஜிக்கும் விளையாட்டுத் தெரியும். நான் இன்று கைதியாகி விட்டேன். ஆனால் இந்த விஷயம் எனக்கு நேற்றே தெரிந்துவிட்டது. ஆனால் என் கூட்டாளிகளை ஆபத்தில் விட்டுவிட்டு நான் செல்ல விரும்பவில்லை. ஏன்?' என்றார்.

நியாய சாஸ்திரி வெகுநேரம் யோசனை செய்துவிட்டு, 'தாங்கள் பாதுஷாவிடம் தங்கள் கூட்டாளிகள் ஸ்வதேசம் திரும்பிச் செல்ல உத்தரவு கேளுங்கள். தங்களைக் கைது செய்தாய்விட்டது. தங்கள் கூட்டாளிகள் ஸ்வதேசம் திரும்பிச் செல்வதென்றால் அவர் சந்தோஷப்படுவார். அவர் அந்த உத்தரவைச் சுலபமாகக் கொடுத்துவிடுவார் என்பதே என் உத்தேசம்!' என்றார்.

'மந்திரி! தங்கள் யோசனை முற்றிலும் சரி. தூர்த்தரான ஔரங்கஸீபும் இதை மறுக்கமாட்டார் என்பதே என் அனுமானமும்' என்றார் சிவாஜி.

இந்த உத்தேசம் அடங்கிய ஒரு கடிதம் ஔரங்கஸீபிடம் சமர்பிக்கப்பட்டது. சிவாஜி நினைத்தபடியே நடந்தது. சிவாஜியின் கூட்டாளிகள் டில்லியிலிருந்து செல்கிறார்கள் என்ற விஷயத்தைக் கேட்டு ஔரங்கஸீப் மிக்க சந்தோஷம் கொண்டார். சீக்கிரமாகவே உத்தரவு கிடைத்து விட்டது. இதைக் கேட்ட சிவாஜி தம் மனத்திற்குள், 'முட்டாள்! சிவாஜியைக் கைதியாய் வைப்பானும்! அவரும் ஒரு கூட்டாளியைப் போல் வேஷம் பூண்டு அனுமதிச் சீட்டுப் பெற்றுக்கொண்டு வெளியேறிவிட்டால் என்ன செய்ய முடியும்? இதுதான் நடக்கும். கூட்டாளிகள் ஆபத்தின்றி வெளியேறி விடுவார்கள். சிவாஜி தாம் வெளியேறத் தாமே உபாயம் தேடிக்கொள்வார்!' என்று எண்ணலானார்.

வாசகர்களே! தம்முடைய அசாதாரணமான வலிமையாலும், புத்தி சாதுரியத்தாலும், போர்த் திறமையாலும், தம் சகோதரர்களை வென்று, தந்தையைச் சிறையிட்டு, டில்லிச் சிம்மாதனத்திலமர்ந்து, வங்கம் முதல் காஷ்மீரம் வரை ஆரியாவர்த்தம் பூராவையும் தம் ஆதிக்கத்திற் குட்படுத்தி, தக்ஷிண தேசத்தையும் ஜயித்து, பாரதவர்ஷம் முழுமைக்கும் தாமே ஏகச் சக்கராதிபதியாய் விளங்க

வேண்டும் என்று சங்கற்பித்துக்கொண்ட கபடா சாரியான ஔரங்கஸீபின் ராஜசபையில் பிரவேசித்து அவர் மனோபாவங்களைச் சற்று ஆராய்வோம்.

ராஜகாரியம் பூர்த்தியாகிவிட்டது. ஔரங்கஸீப் ஒரு மண்டபத்தில் உட்கார்ந்திருந்தார். அங்கேதான் அவர் தம் மந்திரிகளுடன் ரகசியமாக ஆலோசனை செய்வது வழக்கம். ஆனால் அன்று ஔரங்கஸீப் அங்கு தனியாகத்தான் உட்கார்ந்து ஏதோ யோசனை செய்து கொண்டிருந்தார். சில சமயம் அவர் நெற்றி சுருங்குகிறது. சில சமயம் புருவம் விரிகிறது. கண்களில் கோபமும் கர்வமும் ஜ்வலிக்கின்றன. சில சமயம் தன் சூழ்ச்சியின் வெற்றியால் உதடுகளில் புன்னகை அரும்புகிறது. பாதுஷா என்ன யோசிக்கிறார்? தம் புத்தி பலத்தினால் இன்று இந்தப் பாரதவர்ஷம் முழுவதற்கும் தாமே பாதுஷா ஆனதைப் பற்றி நினைக்கவில்லை. இப்பொழுது ஹிந்துக்களை அவமானம் செய்தாகிவிட்டது; இனி அவர்கள் சத்தியநாசம் அடைய அதிகத் தாமதமில்லை என்றும் யோசிக்கவில்லை. அவர் என்ன யோசனை செய்து கொண்டிருக்கிறாரோ நமக்குத் தெரியாது. ஏனென்றால், அவர் பாரதவர்ஷத்தில் எந்த மனிதரையும், எந்த மந்திரியையும், எந்தச் சேனாபதியையும் பூராவும் நம்பி மனம் விட்டுத் தம் விஷயம் ஒன்றையும் சொல்வதில்லை. புத்தி பலத்தைக் கைக்கொண்டே யாவரையும் தம் கைப் பொம்மையாக ஆட்டிவைத்துத் தேசம் பூராவையும் ஆண்டார். எப்படி ஆதிசேஷன் பூமியைத் தாங்குவதில் களைப்போ அல்லது பிறர் சகாயத்தையோ அடைவதில்லையோ அதேமாதிரியே ஔரங்கஸீப் யாருடைய சகாயத்தையும் வேண்டாமல் நின்றார்.

ஔரங்கஸீப் வெகுநேரம் யோசித்தார். இதற்குள் சைனிகன் ஒருவன் வந்து ஸலாம்செய்து, 'ஜஹாம்பனாஹ்!

தானீஷ்மந்த் தங்கள் சமுகம் வர விரும்புகிறார்!' என்றான்.

அவரை உள்ளே அனுப்ப உத்தரவிட்டுவிட்டு, ஔரங்கஸீப் கவலையை ஒழித்து, சிரித்த முகத்துடன் அவரைக் காணத் தயாரானார்.

தானீஷ்மந்த், ஔரங்கஸீபின் மந்திரி அல்ல. அவருடைய ராஜகாரியங்களில் ஆலோசனை சொல்லவும் துணிவதில்லை. அவர் அரபி பார்ஸி பாஷைகளில் தேர்ந்த பண்டிதர். ஆகையால் பாதுஷா அவருக்கு மரியாதை அளித்துவந்தார். சம்பாஷணைகளில் சில சமயம் ஏதாவது கேட்டுக்கொள்வதும் உண்டு. தயாள குணமுள்ள தானீஷ்மந்த் ஏதாவது உதார குணமான யோசனைகளைத் தான் கூறுவார். ஔரங்ஸீப் தம் சகோதரன் தாராவைக் கைது செய்தபோது, தானீஷ்மந்த் அவன் உயிரைக் காக்கும்படியான யோசனையையே கூறினார். ஆனால் அந்த விஷயம் ஔரங்கஸீபின் காதில் ஏறவில்லை. தானீஷ் மந்தையும் அற்ப புத்தியுள்ளவர் என்றார். ஆயினும் அவருடைய வித்தையைப் பாராட்டுவார். அன்றும் அந்தத் தானீஷ்மந்த் பாதுஷாவிடம் ஒரு முக்கியமான விஷயத்தைத்தான் பேச வந்திருந்தார். உள்ளே வந்த தானீஷ்மந்த், 'இந்தச்சமயம் நான் இங்கே வந்ததைப் பற்றி பாதுஷா மன்னித்துக் கொள்ளவேண்டும். ஏனெனில் இந்தச் சமயம் ஹுஜூர் ஓய்வெடுத்துக்கொள்ளும் நேரம். ஆயினும் வேறொருவர் விஷயமாக இங்கு வரலானேன்!' என்றார்.

பாதுஷா சற்று சிரித்துக்கொண்டே, 'தானீஷ்மந்த்! மற்றவர்களிடம் எப்படி இருந்தபோதிலும் தாங்கள் கௌரவிக்கத் தகுந்த வித்வான்' என்றார்.

சிறிது நேரம் இந்த மாதிரி இனிமையான விஷயங்களைப் பேசி, கடைசியில் தானீஷ்மந்த் பேச்சை வேறு

புறம் திருப்பி, 'ஜஹாம்பனுஹ்! தாங்கள் உலகை ஜயித்தவர் என்ற பெயருக்கு இழுக்கு உண்டாக்கி விட்டீர்கள். உண்மையில் ஹிந்துஸ்தான் உங்களுக்கு...?' என்ருர்.

ஔரங்கஸீப் ஒரு கனைப்புக் கனைத்துக்கொண்டு, 'ஏன்? தாங்கள் எந்த விஷயத்தில் கவனித்தீர்கள்?' என்ருர்.

'கவனித்ததைப் பற்றித்தான்!'

'சிவாஜியைப் பற்றிப் பேசுகிறீர்களா? ஹிந்துக்கள் நன்ருக அகப்பட்டுக்கொண்டார்கள்!' என்று சொல்லிச் சட்டென்று தானீஷ்மந்திடம் தம் மனேபாவத்தை மறைப்பதற்காக, 'தானீஷ்மந்த்! இந்தத் தேசத்தின் ஒவ்வொரு வீரரையும் நான் கௌரவிக்கிறேன் என்பது தாங்களறிந்த விஷயம். சிவாஜி தந்திரமும் புரட்சி மனப்பான்மையும் கொண்டவர். தவிரவும் பலிஷ்டர். ஆகையால் அவரை டில்லிக்கு வரவழைத்தேன். ஒருநாள் சபைக்கு அவரை வரவழைத்து மரியாதையுடன் திருப்பி அனுப்பினேன். ஆனுல் அவர் ஒரு மூர்க்கர். சபையிலேயே அவர் கோபத்தைக் காட்டினர். நான் அவரைக் கைதுசெய்தேன். ஆனுல் அவரைக் கொல்ல விரும்பவில்லை. ஆகையால் வேறு தண்டனை ஒன்றும் விதியாமல் சபைக்கு வருவதினின்றும் தடுத்துவிட்டேன். இன்றுகூட அவர் டில்லியிலுள்ள சந்நியாசிகளோடும் துரோகிகளோடும் பேசிக்கொண்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அதில் நஷ்டம் ஒன்றும் இல்லாவிட்டாலும், நகரக் கொத்தவாலிடம் அவர்மேல் ஒரு கண் வைத்திருக்கும்படி கட்டளை இட்டிருக்கிறேன். சில நாட்களுக்குப்பிறகு மரியாதையுடன் அவருக்கு ஆக்ஞை அளித்துவிடுவேன்!' என்ருர்.

பாதுஷாவின் வார்த்தைகளைக் கேட்டு தானீஷ்மந்த் சந்தோஷமடைந்தார்.

'என்ன?' என்றார் பாதுஷா.

உதார குணமுடைய தானீஷ்மந்த் பாதுஷாவை நோக்கி, 'பாதுஷாவுக்கு ஆலோசனை சொல்ல நான் எங்கே? ஆனால், ஜஹாம்பனாஹ்! சிவாஜியை விடுதலை செய்யாமல் எப்பொழுதும் கைதியாகவே வைத்திருந்தால், நியாயமில்லாமல் அவரை அழைத்துச் சிறை வைத்திருப்பதாக ஜனங்கள் சொல்லும் இழிசொல்லுக்கு ஆளாக வேண்டும்' என்றார்.

ஔரங்கஸீப் ஒரு சிரிப்புச் சிரித்துத் தம் கோபத்தை மறைத்துக்கொண்டு, 'தானீஷ்மந்த்! துஷ்ட ஜனங்கள் சொல்வதைப் பற்றி ஔரங்கஸீபுக்கு ஒன்றுமில்லை. அவர்களுடைய நல்ல வார்த்தைக்காக நான் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கவில்லை. தகுந்தபடி நியாயம் வழங்கப்படும். பிறகு அவருக்கு மரியாதை செய்யப்படும்!' என்றார்.

'பக்திமானான மேன்மைதங்கிய அக்பர் பாதுஷா இவ்விதமாகத்தான் ஆதிபத்தியம் செலுத்தினார். அம்மாதிரியான தந்திரத்தினால் தாங்களும் நற்பெயரடையலாம்' என்றார் தானீஷ்மந்த்.

'எப்படி?'

'பாதுஷாவுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. பாருங்கள்! அக்பர்ஷாஹ் டில்லிச் சிம்மாசனத்தில் அமரும்போது தேசம் பூராவும் புரட்சிக்காரர்களால் நிறைந்திருந்தது. ராஜபுதனம், பீஹார், தக்ஷிணம் யாவற்றிலும் அவர்களுடைய ஆதிக்கியமே வலுத்திருந்தது. டில்லியின் அருகேயுள்ள பிரதேசங்களும் துரோகிகளால் சூழப்பட்டிருந்தன. பாதுஷாவுக்கு யார் நேர் விரோதிகளாக இருந்தார்களோ அந்த ரஜபுத்திரர்களே பாதுஷாவின் நம்பிக்கைக்குப் பாத்திரர்களாகி, காபூல் முதல் வங்காளம் வரை டில்லி பாதுஷாவின் ஆதிக்கியத்திற்குள் கொண்டு வந்தார்கள். வெற்றி வெறும் சாமர்த்தியத்திலும் பலத்

திலும்தான் இருக்கிறதா? தைமூர் வம்சத்தவரில் யாரும் சாமர்த்தியமோ தைரியமோ அற்றவர்கள் அல்ல. ஆனால் மற்ற யாரும் ஏன் இம்மாதிரி வெற்றி காணவில்லை? குதாபந்த்! இவைகளெல்லாம் பெருந்தன்மையின் பலன் தான்! அக்பர் எதிரிகளிடம் அன்பு கொண்டார். ஹிந்துக் களின் கஷ்டத்தைத் தாம் ஏற்றுக்கொண்டார். அவர் களுடைய நம்பிக்கையைப் பெற்றார். ஹிந்துக்களும் அவரிடம் விசுவாசமுள்ளவர்களாக நடந்து கொள்ள முயன்றார்கள். மான்சிங், தோடர்மல், வீர்பல் முதலிய வர்கள் ஹிந்துக்களாக இருந்தபோதிலும் முஸல்மான் ஆதிக்கியத்தைப் பரப்பினார்கள். நல்ல மனிதர்களிடம் நம்பிக்கை வைக்காவிட்டால் அவர்களும் கெட்டுவிடு கிறார்கள். கெட்டவர்களிடம் நாம் சரியாக நடந்து கொண்டால் அவர்கள் மெள்ள மெள்ள நல்வழிக்கு வந்து விடுகிறார்கள். சிவாஜி நமக்கு எவ்வளவோ உதவிகளைப் புரிந்திருக்கிறார். ஆகையால், ஜஹாம்பனாஹ்! அவரைக் கௌரவித்தால் அவர் வாழ்நாள் முழுதும் மொகலாய ஆட்சிக்கு ஓர் ஆதாரமாக இருப்பார்!' என்றார்.

தானீஷ்மந்த் எந்தக் காரணத்திற்காகப் பாதுஷாவைச் சந்திக்க வந்தாரென்பது வாசகர்களுக்கு விளங்கியிருக்கும். சிவாஜியை அழைத்துக் கைது செய்ததால் டில்லியிலுள்ள சகல கனவான்களும், கண்யம் வாய்ந்த முஸல்மான்களும், அரச சபையைச் சேர்ந்தவர்களும் வெட்கமடைந்தார்கள். ஔரங்கஸீபிடம் தானீஷ்மந்துக்கு மதிப்புண்டு. பேச்சு வாக்கில் இதைப் பாதுஷாவிடம் தெரிவித்தால் அவர் சிவாஜியைக் கண்யமாய் விடுதலை செய்துவிடுவார் என்று எண்ணினார்கள். தானீஷ்மந்தின் வார்த்தைகள் மலையை உருக்கினாலும் உருக்கிவிடும். ஆனால் ஔரங்கஸீபின் மனம் சிறிதுகூட இளகவில்லை.

தானீஷ்மந்தின் அர்த்தம் நிறைந்த வார்த்தைகள்

ஔரங்கஸீபின் மனத்தில் படியவில்லை. அவர் சிரித்துக் கொண்டே, 'ஆமாம், தானீஷ்மந்த்! என்ன சொல்வது! நீர் புத்திசாலி! தக்ஷிணத்தில் சிவாஜி ஆதாரமாக இருப்பார். ராஜபுதனத்தில் முதலிலேயே துரோகிகள் ஸ்தூபம் நிறுத்தியிருக்கிறார்கள். காஷ்மீரம் மீண்டும் சுதந்திரமாக இருக்கட்டும். வங்காளத்தில் பட்டாணியர்கள் வரட்டும். போதும்! இந்த நாலு ஆதாரத்தின் பேரில் மொகலாய ஆதிக்கியம் நன்றாக வலுவடைந்துவிடும் அல்லவா?' என்றார்.

தானீஷ்மந்தின் முகம் வாடியது. அவர் மெள்ள மெள்ள, 'தங்கள் தந்தை என்னிடம் மதிப்பு வைத்திருந்தார். தாங்களும் என்பேரில் தயை வைத்திருக்கிறீர்கள். ஆகையால் எப்பொழுதாவது மனத்தில் உள்ளதைச் சொல்லுகிறேன். இதைத் தவிர பாதுஷாவுக்கு யோசனை சொல்ல எனக்கென்ன இருக்கிறது?' என்றார்.

ஔரங்கஸீப் தானீஷ்மந்த் வெறும் ஸரள குணமுடையவரென்று கருதி அவர் சொல்வதைத் தப்பாகக் கொள்வதில்லை. தானீஷ்மந்த் இந்த விஷயத்தால் வருத்தமாக இருக்கிறார் என்பதை அறிந்ததும், அவர், 'தானீஷ்மந்த்! நான் சொன்னதற்காகக் கோபமடைய வேண்டாம். அக்பர்பாதுஷா புத்திசாலிதான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவர் காபிர்களையும் முஸல்மான்களையும் ஒரே கண்கொண்டு பார்த்தார். அதனால் மதத்திற்கு அவமானம் உண்டாயிற்று. இன்னொரு விஷயம் நாம் தினம் நேரில் காண்கிறோம். ஒரு காரியம் நமது கையால் ஆவதைப் போல் பிறர் கையால் ஆவதில்லை. நானே சகல ஆதிக்கியத்தையும் வகிக்கச் சக்தியுள்ளபோது காபிர்களின் உதவிக்கு என்ன அவசியம் இருக்கிறது? ஔரங்கஸீப் சிறு வயதிலிருந்தே தன் வாளில் நம்பிக்கை வைத்து, அதனாலேயே அரியணை மீது அமர்ந்திருக்கிறான். இப்

பொழுதும் அதை அனுசரித்தே நடப்பான். நாம் பிறருடைய உதவியையோ அன்பையோ விரும்பவில்லை!' என்றார்.

'ஜஹாம்பனாஹ்! தம் கையினாலேயே தினசரிக் காரியத்தைச் செய்துகொள்ளலாம். ஆனால் இவ்வளவு பெரிய சாம்ராஜ்யத்தை ஆளப் பிறர் உதவி இல்லாமல் முடியாது. வங்காளம், காபூல், தக்ஷிணம் மூன்று இடங்களிலும் தாங்களே இருக்க முடியுமா? பிறரை நியமிக்காமல் எப்படி முடியும்?' என்றார் தானீஷ்மந்த்.

'கட்டாயம் யாராவது ஒரு நண்பரை நியமித்தே தீரவேண்டும். அவர்கள் ஊழியர்களைப் போல் இருப்பார்களேயன்றி எஜமானர்களைப் போல் அல்ல. நாம் இன்று யாரிடம் அதிக ஆயுதம் கொடுக்கிறோமோ அவர்களே நாளை விரோதிகளாக ஆகிவிடலாம். அல்லது யாருக்கு அதிக ஆயுதம் இருக்கிறதோ அவனே நாளை உபத்திரவம் செய்பவனாக ஆகலாம். ஆகையால், பலத்தையும் நம்பிக்கையையும் பிறரிடம் கொடுக்காமல் நாமே நிர்வகிக்கவேண்டும். தானீஷ்மந்த்! குதிரைமீதேறி அதன் லகானைக் கைக்கொண்டு எப்படி நம் இஷ்டப்படி ஓட்டுகிறோமோ அதுபோலத் தான் அரசியல் விஷயமும். பாதுஷா இந்த விதமாகத்தான் ஏற்பாடு செய்யவேண்டும். யாரிடமும் அதிக ஆயுதங்களைக் கொடுத்துவிடக்கூடாது. எந்தச் சேனாபதியையும் கைக்குள் வைத்திருக்கவேண்டும்' என்றார் ஔரங்கஸீப்.

'குதாபந்த்! மனிதன் குதிரையல்ல. அல்லா அவனுக்குப் புத்தியை அளித்திருக்கிறார். அவன் தன் கடமையை உணர்ந்திருக்கிறான்' என்றார் தானீஷ்மந்த்.

'அதை நானும் அறிவேன், மனிதன் குதிரையல்ல; அவனைச் சாட்டையைக்கொண்டும் வேலை வாங்க முடியாது. ஆகையால்தான் அவன் புத்தியைக் கொண்டு

செலுத்தப் படுகிறான். நல்ல காரியத்தைச் செய்பவன் வெகுமதியையும், கெட்ட காரியத்தைச் செய்பவன் தண்டனையையும் அடைகிறான். ஆகையால் மனிதன் வெகுமதிக்கும் தண்டனைக்கும் பயந்தே செயலாற்றுகிறான். ஆகையால் ஔரங்கஸீப் இவர்களைத் தன் கைக்குள் வைத்துக்கொள்வான்!' என்றார் பாதுஷா.

'ஹுஜூர்! வெகுமதியும் தண்டனையும் மனிதர்களை விரோதிகளாக்கி விடுகின்றன. தைரியமற்றவர்கள் தண்டனைக்குப் பயந்து காரியம் செய்கிறார்கள். அது சரியல்ல. யாரிடம் தாங்கள் அன்பு காட்டி மரியாதை செய்கிறீர்களோ அவர்கள் தங்களிடம் பிரியமாகவும் உண்மையாகவும் தொண்டு புரிவார்கள். இதற்கு ஆயிரம் உதாரணங்கள் இருக்கின்றன.'

'தானிஷ்மந்த்! நான் உம்மைப்போல் பண்டிதனல்ல. புஸ்தகத்தில் இருப்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. மனித சுபாவம் நமது சாஸ்திரமில்லை. நாம் அந்த சுபாவத்தை எவ்வளவோ பார்த்திருக்கிறோம். துஷ்டர்கள், துரோகிகள், புரட்சிக்காரர்கள் யாவரையும் நாம் அறிவோம். ஆகையால் தான் அந்தக் காபிர்களிடம் ஜஸியா* விதித்திருக்கிறேன். புரட்சிக்காரர்களான ரஜபுத்திரர்களை நண்பரைப் போல் பார்வையிலேயே வைத்திருக்கிறேன். அவர்கள் மராட்டியரிடம் விரோதம் காட்டுவார்கள். விஜயபுரத்தையும் கோல்கொண்டாவையும் நமது ஆதிக்கத்திற்குக் கொண்டு வருவார்கள். பிறகு இமய முதல் குமரி வரை பாதுஷாவின் கியாதியைப் பரப்புவார்கள்.

உற்சாகத்தினால் பாதுஷாவின் கண்கள் ஜ்வலித்தன. அவர் இதுவரை யாரிடமும் தம் மனோபாவத்தை வெளி

* ஜஸியா :—அந்நிய மதஸ்தர்கள் மேல் முஸல்மான் அரசர் விதித்த அதிக வரி.

யிட்டதில்லை. அன்று பேச்சோடு பேச்சாகப் பல விஷயங்களை வெளியிட்டுவிட்டார். அவர் தானீஷ்மந்தின் சரள குணத்தை அறிவார். ஆகையால் அவரிடம் இரண்டொரு வார்த்தை சொல்வதால் யாதொரு கெடுதியும் இல்லை என்று எண்ணினர்.

சிறிது நேரம் பொறுத்து, ஔரங்கஸீப் சிரித்துக்கொண்டு, 'என்ன, கபடமற்றவரே! இன்று தெரிந்ததா நமது விஷயம்?' என்றார்.

இதற்குள் காவலன் ஒருவன் வந்து ராமஸிம்ஹன் பாதுஷாவைக் காண வந்திருப்பதாகத் தெரிவித்தான்.

'உள்ளே அனுப்பு!' என்றார் பாதுஷா.

ராஜா ஜயஹிம்ஹரின் புத்திரன் ராமஸிம்ஹன் உள்ளே வந்தான்.

'இந்தச் சமயம் தங்களைச் சந்திப்பது உசிதமல்ல என்றாலும், தந்தை அனுப்பிய அவசியமான செய்தியைத் தெரிவிக்கும் பொருட்டு வர நேர்ந்தது' என்றான் ராமஸிம்ஹன்.

'தங்கள் தந்தையிடமிருந்து இன்று நமக்கும் ஒரு கடிதம் கிடைத்தது. விஷயம் யாவும் தெரிந்தது!'

'தந்தை எதிரிகள் எல்லோரையும் ஜயித்து அவர்களுடைய ராஜதானியான விஜயபுரத்தை ஆக்கிரமித்தார். ஆனால் தம்மிடம் போதுமான சைனியம் இல்லாமையால் நகரத்திற்குள் பிரவேசிக்கக்கூட முடியவில்லை. ஏனென்றால் கோல்கொண்டா சுல்தான் விஜயபுரத்திற்கு உதவி புரிகிறான். அவனுடைய சேனாபதி கணக்கற்ற சைனியத்துடன் அங்கே வந்திருக்கிறான்!'

'எல்லாம் தெரியும்!'

'நாற்புறமும் சத்துருக்களால் சூழப்பட்டிருந்தும், தந்தை தங்கள் கட்டளைப்படி போரை இதுவரை நிறுத்தவில்லை. ஆனால் போரில் வெற்றி கிடைப்பது துர்லபம்.

ஆகையால் தங்களிடம் கொஞ்சம் சேனை கேட்டிருக்கிறார்!'

'தங்கள் தந்தை மகாவீரர்! அவருடைய சேனையினால் விஜயபுரத்தை ஜயிக்க முடியவில்லையா?'

'மனிதனால் எவ்வளவு சாத்தியமோ, அவ்வளவையும் தந்தை செய்துவிட்டார். சிவாஜி இதுவரை யாரிடமும் தோல்வியடைந்ததில்லை. விஜயபுரத்தை இதுவரை யாரும் ஆக்கிரமித்ததில்லை. இவைகளெல்லாம் தந்தையின் புஜபலம்; அவர் தங்களிடம் ஒரு சிறு சைனியத்தை வேண்டுகிறார். தக்ஷிண தேசம் முழுவதிலும் மொகலாய சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்பது அவர் விருப்பம். அதைப் பூர்த்தி செய்யவேண்டும்!'

இம்மாதிரி சந்தர்ப்பத்தில் வேறு எந்தப் பாதுஷாவாகவாவது இருந்தால், சகாயத்தை அனுப்பி, தக்ஷிண விஜயத்தைப் பூர்த்தி செய்திருப்பான். ஆனால் ஔரங்கஸீப் தம்மைப் பெரிய தீர்க்கதரிசி என்று எண்ணிக்கொண்டு உதவி அனுப்பவில்லை. அவர் ராமஸிம்ஹனிடம், 'ராமஸிங், தங்கள் தந்தை என் நண்பர். அவருடைய ஆபத்தைக் கேட்டு என் மனம் வருந்துகிறது. நான் என்னுடைய கடிதத்தில், அவருடைய அசாதாரணமான புஜபலத்தினால் வெற்றிபெறுவார் என்று எழுதியிருக்கிறேன். வருத்தம்தான். இந்தச் சமயம் டில்லியில் சேனை குறைவாக இருக்கிறது' என்றார்.

ராமஸிம்ஹன் அடக்கமான குரலில், 'ஜஹாம்பனாஹ்! என் தந்தை டில்லியின் பழைய உதவியாளர். தங்கள் கீழும், தங்கள் தந்தையின் கீழும், அவர் எத்தனையோ போர்களில் உயிரை லட்சியம் செய்யாது சென்றிருக்கிறார். தாங்கள் அவசியம் உதவி அனுப்ப வேண்டும். தாங்கள் உதவி அனுப்பாவிட்டால், சேனையுடன் அவர் தப்பித் திரும்புவது கடுமை!' என்றான்.

அந்த வாலிப ராமஸிம்ஹனின் வார்த்தைகளைக் கேட்டு ஔரங்கஸீபின் ரகசியமான சூழ்ச்சி சற்றுவது கலங்கியதா? ராஜா ஜயஸிம்ஹர் பொறுமையும், பராக்கிரமமும் பொருந்திய சேனபதி. அவர் தம் கணக்கற்ற சேனையாலும், தம் பராக்கிரமத்தாலும் தம் வாழ்நாள் பூராவும் டில்லி ஆட்சிக்கு எவ்வளவோ உதவி புரிந்திருக்கிறர். அவ்வளவு திறமை வேறு எந்தச் சேனபதியிடத்தும் இல்லை. அதே காரணத்தால்தான் ஔரங்கஸீப் ஜயஸிம்ஹரை நம்பவில்லை. தவிர, இந்த யுத்தத்தில் அவர் ஜயமடையாமல் தம் சைனியத்துடன் விஜயபுரப் போரில் இறந்தால், ஒரு கவலை ஒழிந்தது என்று ஔரங்கஸீப் நிச்சயம் செய்திருந்தார். எப்படி வேடன் வலையில் பட்சி அகப்பட்டுத் தவிக்குமோ அப்படி ஔரங்கஸீபின் சூழ்ச்சியில் ஜயஸிம்ஹர் சிக்கிக்கொண்டிருந்தார். அவர் தப்புவது கடினம்.

ஜயஸிம்ஹர் வெகுகாலமாக டில்லி அதிபதிக்கு சேவை புரிந்திருக்கிறர். ஆகையால் அவருடைய சூக்ஷ்மமான சூழ்ச்சி வலையினின்றும் தப்புவது வியர்த்தம்தான்.

ஜயஸிம்ஹரின் மகன் எதிரே கண்ணீருடன் நின்றுன். ஆனல் தீர்க்க தரிசியான ஔரங்கஸீப் தமது எண்ணத்தைக் கைவிடப் போகிறுனு? தயை, அன்பு, பெருந்தன்மை இவைகளுக்கு ஔரங்கஸீபின் ஹிருதயத்தில் இடம் இல்லை. தமது வாழ்க்கை வழியிலுள்ள ஓர் இடையூற்றை இன்று பிடுங்கி எறிய எண்ணிவிட்டார். முதல்நாள் தான் தமது சகோதரன் ஒருவனைக் கொன்றுர். ஒருநாள் தந்தை, தமையன், மைத்துனன், இன்னும் முக்கியமான உறவினர் எல்லோரும் அவர் வழியில் வந்து மாண்டார்கள். ஆசை மேலிட்டு, தந்தையையும், அவர் உயிருடன் வைக்கவில்லை. தந்தை ஜீவித்திருப்பதினுல் எதிர்காலத்தில் ஓர் ஆபத்தும்

ஏற்படப் போவதில்லை. ஆயினும், தம் எண்ணம் பூர்த்தியாவதில் குறுக்கே வரக்கூடும் என்று அவர் கருதிவிட்டார். அண்ணன் ஜீவித்திருந்தால் தம் எண்ணம் பூர்த்தியாவதில் இடையூறு ஏற்படுமென்று அவனையும் தீர்த்துவிட்டார்.

அன்று அவர் சூழ்ச்சி சபலமடைய ஜயஸிம்ஹர் சைனியத்துடன் ஹதமாக வேண்டியது அவசியமாக இருந்தது. ஆகையால், அவர் நல்லவராக இருக்கட்டும், கெட்டவராக இருக்கட்டும், — நம்பிக்கையுள்ளவராக இருக்கட்டும், நம்பிக்கை யற்றவராக இருக்கட்டும்— அதைப்பற்றி ஔரங்கஸீபுக்கு அவசியமில்லை. சைனியத்துடன் அவர் இறக்கவேண்டியதுதான்.

சில நிமிஷம் பொறுத்து, ராமஸிம்ஹன் ஒரு நீண்ட பெருமூச்சுவிட்டு, 'பிரபோ! ஒரே பிரார்த்தனை' என்றான்.

'சொல்லலாம்!'

'சிவாஜி டில்லிக்கு வரும்போது, அவர் டில்லியில் எந்த ஆபத்துக்கும் உட்படவேண்டி இருக்காதென்று தந்தை வாக்குக் கொடுத்திருக்கிறார்!'

'தங்கள் தந்தை எனக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்!'

'ரஜபுத்திரர்கள் தாங்கள் கொடுத்த வாக்கினின்றும் பிறழ்வது நிந்திக்கத்தக்கது. சிவாஜி ஏதாவது பிழை இழைத்திருந்தாலும்கூட, அதைப் பொறுத்து, அவரைத் திருப்பி அனுப்பிடவேண்டும். இதுதான் எனது தந்தையின் பிரார்த்தனை. என்னுடையதும் இதுதான்!'

ஔரங்கஸிப் தமக்கு வந்த கோபத்தை அடக்கிக் கொண்டு, மெதுவாக, 'பாதுஷாவுக்கு எது உசிதம் என்று படுகிறதோ அதை அவர் செய்வார். தாங்கள் அதைப் பற்றிச் சிந்திக்கவேண்டாம்.'

அன்று சிவாஜியைப் போன்று மற்றொரு பட்சி பாதுஷாவின் சூழ்ச்சி வலையில் சிக்கிக்கொண்டது. தானீஷ்மந்தும் ராமஸிம்ஹனும் சிவாஜியை விடுவிக்க முடியவில்லை.

ஜயஸிம்ஹர், சிவாஜி இருவரும் ஒரே விதமான குற்றவாளிகள்தான். சமாதானம் செய்துகொண்ட நாளிலிருந்து சிவாஜி உண்மையாக பாதுஷாவின் காரியங்களைச் செய்து வந்தார். அவருடைய கணக்கற்ற சைனியம் பாதுஷாவுக்கு சகாயமாக இருந்தது.

யாரிடம் அவநம்பிக்கை ஏற்பட்டதோ, நாளடைவில் அவர்கள் நம்பிக்கை யற்றவர்களாகவே ஆகிவிட்டார்கள். ஔரங்கஸீபின் வாழ்நாளிலேயே, மஹாராஷ்டிரர்களும், டில்லி பாதுஷாக்களுக்கு நம்பிக்கை வாய்ந்த ரஜபுத்திரர்களும் மூட்டிய பயங்கரமான போர்த் தீயில் மொகலாய சாம்ராஜ்யம் எரிந்து பஸ்மமாகிவிட்டது.



அத்தியாயம் 27

அதிசய வியாதி

சிவாஜிக்கு அதிசயமான வியாதி ஒன்று வந்திருக்கிற தென்ற செய்தி டில்லி நகரெங்கும் பரவியது. இரவு பகல் சிவாஜி இருந்த வீட்டின் ஜன்னல்கள் சாத்தப் பட்டே இருந்தன. வைத்தியர்கள் கூட்டம் அதிக மாயிற்று. அந்தக் கொடிய வியாதி மகா கடுமையாகி விட்டது. அன்று உள்ள வியாதியின் நிலைமை அடுத்த நாள்வரை அப்படியே நீடித்தால், அவர் பிழைப்பதுகூடத் துர்லபம். சிற்சில சமயம் சிவாஜியே 'இல்லை' என்ற செய்திகளும் வந்துகொண்டிருந்தன. ராஜவீதியில் செல்லும் ஜனங்களும், சைனிகர்களும், வீரர்களும் தங்கள் குதிரைகளை நிறுத்தி தங்கள் விரல்களால் அந்த வீட்டைச் சுட்டிக்காட்டி, சிவாஜியைப் பற்றி விசாரித் தார்கள். நகரெங்கும் அதே பேச்சு, அதைப் பற்றியே விவாதங்கள். ஔரங்கஸீப் பிரதி தினம் சிவாஜியின் நோயைப் பற்றி அறிந்து வந்தார்; ஆயினும் அந்த வீட்டைச் சுற்றி வைத்திருந்த காவலை அகற்றவில்லை. ஜனங்கள் முன்னிலையில் ஔரங்கஸீப் வருத்தத்தைத் தெரிவித்தார். ஆனால் தம் மனத்திற்குள் நல்லதாயிற் றென்றே எண்ணினார்; அந்த நோயினால் சிவாஜி இறந்தால் தம்முடைய உபத்திரவம் ஒழிந்துவிடும், ஜனங்

களின் நிந்தனைக்கும் தாம் ஆளாகவேண்டியிராது என்று எண்ணினார்.

மாலை நேரம் ஒரு கிழ வைத்தியர் சிவாஜி இருந்த வீட்டின் முன் வந்து நின்றார். காவலாளிகள், 'என்ன வைத்தியரே, சிவாஜியைப் பார்க்க வேண்டுமா?' என்றனர்.

வைத்தியர் தலையை அசைத்து. 'சிவாஜியை சொஸ்தப்படுத்தும்படி பாதுஷா என்னை இங்கு அனுப்பியிருக்கிறார். ஆகையால் நான் அவருக்கு மருந்து கொடுக்க வந்திருக்கிறேன்' என்றார். காவலர் மரியாதையுடன் கதவைத் திறந்துவிட்டனர்.

சிவாஜி படுக்கையில் படுத்துக்கொண்டிருந்தார். காவலாளி ஒருவன் பாதுஷா வைத்தியரை அனுப்பியிருப்பதாகத் தெரிவித்தான். சூக்ஷ்ம புத்தியுள்ள சிவாஜி, 'இதுவும் ஒரு சூழ்ச்சி; ஒருகால் விஷத்தைக் கொடுக்கக்கூட பாதுஷா வைத்தியரை அனுப்பி யிருப்பார்' என்று எண்ணி, 'வைத்தியரிடம் என் வந்தனத்தைத் தெரிவித்து, ஹிந்து வைத்தியர் வைத்தியம் செய்வதாகவும், ஹிந்து வைத்தியரைத் தவிர வேறு யாரிடமும் நான் மருந்து சாப்பிட முடியாதென்றும் சொல்லி விடுங்கள். பாதுஷாவின் இந்த உபகாரத்திற்கு அநேக வந்தனங்களையும் நான் கூறுவதாகச் சொல்லி அனுப்புங்கள்!' என்றார்.

காவலன் விஷயத்தைத் தெரிவிக்க வெளியே வருமுன்பே வைத்தியர் சிவாஜியின் அறைக்கு வந்துவிட்டார். சிவாஜியின் ஹிருதயம் கோபத்தால் எரிந்தது. ஆனால் அவர் கோபத்தை அடக்கிக்கொண்டு, க்ஷீணமான குரலில், 'வாருங்கள் வைத்தியரே! அமருங்கள், தங்களுக்கு ரொம்ப சிரமம்!' என்றார்.

'வைத்தியர் படுக்கையருகில் அமர்ந்தார். தோற்றத்

தைக் காணும்போது வைத்தியரிடம் எந்த சந்தேகமும் எழவில்லை. வயதானதன் காரணமாகத் தலைமயிர் பூராவும் நரைத்திருந்தது. நீண்ட தாடி, தலையில் பெரிய தலைப்பாகை. அவருடைய குரல் கம்பீரமாக இருந்தது. அவர் சிவாஜியை நோக்கி, 'மஹாசயரே! காவலனிடம் தாங்கள் சொல்லியதை நான் கேட்டேன். தாங்கள் என் மருந்தைச் சாப்பிட விரும்பவில்லை. ஆயினும் மானிட ஜீவனை ரக்ஷிப்பது எங்கள் கடமை. நான் இதை அவசியம் பூர்த்தி செய்வேன்' என்றார்.

சிவாஜி மனத்தினுள் கோபமடைந்தார். இந்த ஆபத்து எங்கிருந்து வந்ததென்று யோசிக்கலானார். ஆனால் வெளிப்படையாக ஒன்றும் சொல்லவில்லை.

'தங்களுக்கு என்ன உடம்பு?' என்றார் ஹகீம்ஜீ.

தாழ்ந்த குரலில் சிவாஜி, 'என்ன கொடிய வியாதியோ, தெரியாது. உடம்பெல்லாம் எரிகிறது. ஹிருதயத்தில் வலி, சரீரம் பூராவும் ஒரே வலி!' என்றார்.

வைத்தியர் கம்பீரமான குரலில், 'வியாதியை விட கவலைதான் சரீரத்தில் அதிகம் எரிச்சலை உண்டாக்கியிருக்கிறது. தங்களுக்கு இந்த வியாதி மட்டும் இல்லையே?' என்றார்.

சிவாஜி ஆச்சரியத்துடன் வைத்தியரின் பக்கம் பார்க்கலானார் அவர் முகம் முன்போலவே கம்பீரமாக இருந்தது. அதில் எந்த விதமான பாவமும் தோன்றவில்லை. பதிலின்றிப் பேசாமல் உட்கார்ந்திருந்தார். வைத்தியர் அவருடைய நாடியைப்பார்க்க விரும்பினார். இதனால் சிவாஜி பயந்தார். எனினும் கையைக் காட்டினார்.

வெகு நேரம் பார்த்து யோசித்துவிட்டு, 'தங்கள் வார்த்தை எவ்வளவு க்ஷீணமாக இருக்கிறதோ அவ்வளவு க்ஷீணமாக சரீரம் இல்லை. நரம்புகளில் ரத்தம் நன்கு ஓடு

கிறது. ஜீர்ணப்பை எல்லாம் முன்போல திடமாகவே இருக்கிறது. இவைகளெல்லாம் வெறும் சாகசம்தானே ?' என்றார்.

சிவாஜி ஆச்சரியமடைந்து, அந்த விசித்திரமான வைத்தியரை நோக்கினார். வைத்தியரின் முகத்தில் எவ்வித மாறுதலும் இல்லை. அதில் எந்தக் கபடமும் தோன்றவில்லை. சிவாஜியின் உடல் கொதிக்கலாயிற்று. அவர் கோபத்தை அடக்கி, மெதுவான குரலில், 'தாங்கள் சொன்னதைத்தான் மற்ற வைத்தியர்களும் சொன்னார்கள். இந்தக் கடினமான நோய் இன்னதென்று யாரும் அறியவில்லை. ஆனால் உடல் நாளுக்கு நாள் க்ஷீணித்துக் கொண்டு வருகிறது. மரணம் சீக்கிரத்திலே இருக்கிறதென்று தெரிகிறது' என்றார்.

வைத்தியர் சிறிது யோசித்துவிட்டு, 'அல்லாவின் பெயரால் நம்மிடம் இரண்டு வைத்திய சாஸ்திரம் இருக்கிறது. அதில் ஆயிரத்தோரு வியாதிகளின் குணங்கள் எழுதியிருக்கிறது. அவற்றில் கைதியின் சாகசம்கூட ஒரு வியாதிதான். கைதிகள் வேலையினின்றும் மனதைத் திருப்பி இந்த நோயைச் சாக்காகக் கொள்கிறார்கள். இதற்குத் தண்டனை சிரச்சேதம்தான். இன்னொரு நோயின் பெயர் கபட நாடி. குற்றவாளிகள் தங்கள் குற்றங்களை மறைக்க அந்த வியாதியைச் சாக்காகக் கொள்வார்கள். அதற்கும் மருந்திருக்கிறது. அதைத்தான் இன்று தங்களுக்குக் கொடுக்கப் போகிறேன்.'

சிவாஜி இந்த வார்த்தைகளைச் சரியாக உணரவில்லை. ஆனால் வைத்தியர் அவருடைய மனத்திலுள்ளதை நன்றாக உணர்ந்துவிட்டார். அதையும் சிவாஜி அறியவில்லை. அவர் ஒன்றும் தோன்றாதவராய், மெதுவாக, 'அது என்ன மருந்து ?' என்றார்.

'அது உத்கிருஷ்டமான ஔஷதம். அதனுடைய குணமும் மகா உத்கிருஷ்டமானது. ரப்புல் ஆல்மீனின் பெயரைச் சொல்லி, இந்த மருந்து தங்களுக்குக் கொடுக்கப்படும். உண்மையாகவே நோய் இருந்தால், அது போய்விடும்; இல்லாவிட்டால் உயிர் போய்விடும்' என்று கூறி, வைத்தியர் மருந்து தயாரிக்கலானார்.

சிவாஜியின் உள்ளம் நடுங்கியது. நெற்றியில் வேர்வை துளித்தது. மருந்து சாப்பிடாவிட்டால் விஷயம் வெளியாகிவிடும், சாப்பிட்டால் உயிர் போய்விடும். என்ன செய்வதென்று யோசித்து, உடனே, 'முஸல் மான்கள் தொட்ட தண்ணீரைக்கூட நாங்கள் குடிக்க மாட்டோம்' என்று சொல்லி, மருந்துப் பாத்திரத்தைத் தூக்கி எறிந்தார்.

ஆனால் வைத்தியர் கோபித்துக்கொள்ளவில்லை. அவர் மெள்ள மெள்ள, 'இந்த மாதிரி முரட்டுத்தனமான வேலை செய்வது க்ஷீண தசையைக் காட்டாது' என்றார்.

சிவாஜி வெகு நேரமாகக் கோபத்தை அடக்கிக் கொண்டிருந்தார். அப்பொழுது அவராலும் பொறுக்க முடியவில்லை. சட்டென்று எழுந்து, 'நோயாளியைக் கிண்டல் செய்ததின் பலன் இதுதான்' என்று வைத்தி யரின் கன்னத்தில் ஓர் அறை அறைந்து, அவர் தாடியைப் பிடித்து இழுத்தார். அவ்வளவுதான், பொய்த் தாடி அவர் கையோடு வந்துவிட்டது! அழகான முகம்! யார் அது? பாலிய நண்பன் தானாஜியல்லவா சிரித்துக் கொண்டு நிற்கிறான்!

தானாஜி சிரிப்பை அடக்கிக்கொண்டே, கதவைச் சாத்தி விட்டு சிவாஜியருகில் வந்து, 'பிரபோ! நீங்கள் எப்பொழுதுமே வைத்தியரை இப்படித்தான் செய்வதா? இதனால் வியாதியஸ்தருக்கு முன் வைத்தியனே இறந்து

விடுவானே! அடேயப்பா! உங்கள் அறையினுல் இன்னும் என் தலை சுற்றுகிறது!' என்ருன்.

சிவாஜி சிரித்துக்கொண்டே, 'பாயி! புலியுடன் விளையாடினுல் சில சமயம் காயமும் ஏற்படுகிறது. ஆனுல் உன்னைப் பார்த்து எனக்கு ஆனந்தம் உண்டாகிறது. வெகு நாளாக உன்னை எதிர்பார்த்திருந்தேன். சொல், என்ன சமாசாரம்?' என்ருர்.

'தங்கள் கட்டளைகள் யாவும் செய்யப்பட்டுவிட்டன. தாங்கள் டில்லியிலிருந்து ஆபத்தின்றி ஸ்வதேசம் திரும்பி வரவேண்டுமென்பதுதான் எல்லோருடைய விருப்பமும்.'

'கடவுளின் கிருபை! நீ இன்று எனக்கு சாந்தியளித்தாய். நான் நீ சொல்லியதைப் போல் ஓட விரும்பவில்லை. ஆனுல், வானத்தில் பறக்கும் பட்சியை யார் தடுக்க முடியும்?'

தங்களுடைய அனுசரர்கள் எல்லோருடனும் டில்லியிலிருந்து மதுரைவரை செல்ல மார்க்கத்தை நான் சீர்செய்து வைத்திருக்கிறேன். எங்கெங்கே யார் யாரை வைக்க வேண்டுமோ அங்கங்கே அவரவர்களை வைத்திருக்கிறேன்.'

'பால்ய மித்திரா! உன்னுடைய காரியத் திறமையினுல் நாம் கட்டாயம் ஸ்வதேசம் திரும்பிச் சென்றுவிடலாம்!'

'தாங்கள் டில்லிக்கு வெளியே வேகமாகச் செல்லக் கூடிய ஒரு குதிரை கொண்டுவந்து வைக்கும்படி சொன்னீர்கள். அதன்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தங்களுக்கு என்று தினம் தேவையோ அன்று அது தயாராய் வந்துவிடும்.'

'ரொம்ப சரி.'

'ராஜா ஜயஸிம்ஹரின புத்திரன் ராஜா ராமஸிம்ஹனிடம் நான் சென்றிருந்தேன். அவனிடம் அவனுடைய

தந்தையின் வாக்குத்தத்தத்தை ஞாபகப்படுத்தினேன். ராமஸிம்ஹன் தன் தந்தையைப் போன்று சத்தியஸந்தன்! தங்களை ஸ்வதேசத்திற்குத் திருப்பி அனுப்பிவிட வேண்டுமென்று பாதுஷாவிடம் அவன் நேரே சென்று சொன்னதாகக் கேள்விப்பட்டேன்.'

'பாதுஷா என்ன சொன்னார்?'

'பாதுஷாவுக்கு எது உசிதமோ அப்படிச் செய்வாராம்!'

'நம்பிக்கைத் துரோகி! இனி இதற்குப் பதில் செய்ய வேண்டும்!'

'ராமஸிம்ஹனின் முயற்சி கைகூடாததால், அவன் கோபத்துடன், "ரஜபுத்திரர்கள் வாக்குப் பொய்யாகாது!" என்று சொல்லிவிட்டான். பொருளாலும், சைனியத்தாலும் எந்த விதம் வேண்டுமானாலும் தங்களுக்குச் சகாயம் செய்வேன். தங்களுக்காக உயிரைக் கூடக் கொடுக்கத்தயார்!' என்றான் தானாஜி.

'பிதாவுக்கேற்ற பிள்ளை! ஆயினும் நாம் அவனை விபத்தில் சிக்க வைக்கக்கூடாது. நாம் எப்படி வெளியேறுகிறோம் என்ற விஷயத்தை அவனிடம் தெரிவித்தாயா?' என்றார் சிவாஜி.

'ஆமாம், தெரிவித்தேன். அதை அறிந்து சந்தோஷமடைந்து தன்னாலான எல்லா உதவியையும் செய்வதாகச் சொன்னான்!'

'சந்தோஷம்!'

'சரி. ஆனால் எல்லாம் தயார்தானே? சொஸ்தமாக்கி விட முடியுமல்லவா?'

தானாஜி சிரித்துக்கொண்டே, 'என் போன்ற வைத்திய நிபுணன் தங்களுக்குச் சிகிச்சை செய்ய வந்திருக்கையில் சொஸ்தமாவதற்கு என்ன தடை?

ஆனால் தங்களுக்குக் குடிக்கத் தயாரித்த ஷர்பத்தைத் தான் தாங்கள் கொட்டிவிட்டீர்களே ?'

'பாயி ! அதே பாத்திரத்தில் தயார் செய் !'

தாணுஜி அதே பாத்திரத்தை எடுத்துவந்து மீண்டும் ஷர்பத் தயாரித்தான். சிவாஜி அதைக் குடித்துவிட்டு, 'வைத்தியரே, தங்கள் ஔஷதம் எப்படித் தித்திப்பாக இருக்கிறதோ அப்படியே அதன் குணமும் இருக்கும்; நமது பீடை ஒரே தடவையாய்த் தொலைந்துபோகும்' என்றார்.

சிவாஜியை அன்புடன் ஆலிங்கனம் செய்து கொண்டு, மீண்டும் தன் தாடி, மீசை, தலைப்பாகையைப் பொருந்த வைத்துக்கொண்டு தாணுஜி புறப்படலானான்.

வாசலில் நின்றிருந்த காவலன், 'உடல் நிலை எப்படி இருக்கிறது ?' என்று கேட்டான்.

'ரொம்பக் கடினம்தான். ஆயினும் நமது ஔஷதம் மிகவும் குணப்படுத்தியிருக்கிறது. சிவாஜி இந்தக் கஷ்டத்திலிருந்து சீக்கிரம் ஆரோக்கிய மடைந்து விடுவார் !' என்றார் வைத்தியர்.

வைத்தியர் சிவிகையில் அமர்ந்து செல்லலானார். காவலாளி மற்றவனிடம், 'வைத்தியர் புத்திசாலி என்று தெரிகிறது. மற்றவர்கள் சொஸ்தப்படுத்த முடியாததை இவர் ஒரே நாளில் குணப்படுத்திவிட்டார் !' என்றான்.

மற்றவன், 'செய்யாமல் என்ன ? இவர் பாதுஷாவின் அரண்மனை வைத்தியராயிற்றே !' என்றான்.

அத்தியாயம் 28

ஆரோக்கிய லாபம்

மேற்சொன்ன சம்பவம் நடந்த சில தினங்களுக்கெல்லாம் சிவாஜி சற்று குணமடைந்திருக்கிறுர் என்ற செய்தி டில்லி நகரெங்கும் பரவியது. மீண்டும் நகரத்தில் எங்கும் இதைப் பற்றியே பேச்சு. ஹிந்துக்கள் மட்டுமல்ல, கண்யம் வாய்ந்த முஸல்மான்களும் அதைக் கேட்டு சந்தோஷ மெய்தினர். ஔரங்கஸீபும் அதைக் கேட்டுத் தமது சந்தோஷத்தை வெளியிட்டார்.

சிவாஜி ஆரோக்கியமடைந்ததும் பிராமணர்களுக்குத் தானம் கொடுக்க ஆரம்பித்துவிட்டார். தேவாலயங்களுக்கு பூஜைகள் செய்யச் சொன்ஞர். வைத்தியர்களுக்கு சன்மானம் வழங்கிஞர். வந்தவர்களுக்கெல்லாம் மிட்டாய் வழங்கப்பட்டது. ஏழை, பணக்காரர், பக்கிரிகள் எல்லோருக்கும் மிட்டாய் வழங்கப்பட்டது. பாதுஷாவின் மனத்தில் என்ன எண்ணமிருந்தாலும், டில்லி ஜனங்களின் மனதில், சிவாஜியின் இந்தச் செய்கை ஆதரவையும் மரியாதையையும் எழுப்பியது. சிவாஜியைப் புகழாமல் இருக்க யாராலும் முடியவில்லே. டில்லி நகரம் ஓரே மிட்டாய் மயமாய் இருந்தது. இதஞல் யாருக்காவது ஏதாவது ஹானி விளேந்ததா என்ருல், அதைச் சொல்ல முடியாது.

ஆனால் ஔரங்கஸீபின் மனோரதம் சிதறி, அவர் பச்சாத் தாபமடையும்படி ஏற்பட்டது.

சிவாஜி ஜனங்களுக்கு மிட்டாய் வழங்குவதில் மட்டும் சந்தோஷமடைந்து விடவில்லை. ஆனால் மிட்டாய்களை வரவழைத்துக் கூடை கூடையாக வெளியே அனுப்பிக் கொண்டிருந்தார். பெரிய கூடையைக் கயிற்றில் கோத்து, இரண்டு இரண்டு ஆட்களாகத் தூக்கிச் சென்றுகொண் டிருந்தனர். சில நாள்வரை இம்மாதிரி மிட்டாய் - தர்மம் நடந்தது. ஒரு நாள் மாலை மிட்டாய்க் கூடைகளை ஆட்கள் தூக்கிச் சென்று கொண்டிருந்தனர். காவலாளிகள் அதில் இரண்டு பெரிய கூடைகளைப் பார்த்து, 'இவை யார் வீட்டிற்குப் போகின்றன?' என்று கேட்டார்கள்.

ஆட்கள், 'ராஜா ஜயஸிம்ஹரின் வீட்டிற்கு' என்றார்கள்.

'உங்கள் பிரபு இன்னும் எத்தனை நாள் இம்மாதிரி மிட்டாய் விநியோகம் செய்யப்போகிறார்?'

'இன்றோடு சரி!' என்று சொல்லி ஆட்கள் சென்றனர்.

வெகுதூரம் சென்ற பிறகு ஒரு ரகசியமான இடத்தில் இரண்டு கூடைகளையும் இறக்கினார்கள். மாலை நன்றாக இருண்டுவிட்டது. கூடை தூக்கிவந்த ஆட்கள் நாற்புறமும் நோக்கினர். ஒரு சந்தடியும் இல்லை. ஒரு காக்கை குருவிகூட சஞ்சாரம் இல்லை. காற்று மாத்திரம் வேகமாக வீசிக்கொண்டிருந்தது. ஆட்கள் கூடைகளைத் திறந்தனர். ஒன்றிலிருந்து சிவாஜியும், மற்றொன்றிலிருந்து சம்புஜியும், வெளியே வந்தனர். இருவரும் கடவுளுக்கு வந்தனம் செலுத்தினர்.

உடனே இருவரும் மாறுவேஷம் புனைந்து, டில்லியின் எல்லையை நோக்கிப் புறப்பட்டனர். இருளானதால் வழி யில் அதிக ஜன நடமாட்டமில்லை. ஓரிரண்டு ஜனங்கள்

வந்து போய்க் கொண்டிருந்தனர். யாராவது வழிப் போக்கர்கள் தன்னருகே வந்து செல்லும்போது சம்புஜியின் உள்ளம் துடிக்கும். சிவாஜிக்கு இம்மாதிரி ஆபத்துக்கள் சர்வ சாதாரணம். ஆனால், அவர் மனமும் வேகத்தால் அலைமோதிக் கொண்டிருந்தது.

இருவரும் குலை நடுக்கத்துடன் கோட்டை மதில் களைத் தாண்டினார்கள். ஆமாம்—அதற்குள், 'யார் அது?' என்றான் ஒரு காவல்காரன்.

'கோஸ்வாமி! ஹரே ராம்!' என்றார் சிவாஜி.

'எங்கே செல்கிறீர்கள்?'

'தீர்த்த யாத்திரை' ஸ்ரீ மதுரா, பிருந்தாவனம்! 'கலௌ நாஸ்த்யேவ நாஸ்த்யேவ நாஸ்த்யேவ கதிரன் யதா!' என்று சொல்லி இருவரும் வெளியே வந்தார்கள்.

வெளியேயும் பலதனவந்தர்களும் உத்தியோகஸ்தர் களும் வசித்து வந்தார்கள். ஆகையால் சிவாஜியும் சம்புஜியும் ஓரமாகச் சென்று அவ்விடத்தையும் கடந்து முன்னேறினார்கள்.

தூரத்தில் மரத்தின்கீழ் குதிரை கட்டி யிருப்பதைக் கண்டு சிவாஜி சந்தோஷத்துடன் அதை நோக்கி விரைந்தார். அங்கே சென்று பார்த்தால், தானாஜி என்ன சொன்னானோ, அதேமாதிரி குதிரை கட்டப்பட்டிருந்தது. சிவாஜி அருகில் சென்று, 'பாயி! அசுவரக்ஷகா! உன் பெயர் என்ன?' என்றார்.

'ஜானகி நாத்!'

'எங்கே செல்லவேண்டும்?'

'மதுரா!'

'ஆமாம், இதே குதிரைதானே!' என்று சொல்லி, சிவாஜி குதிரைமீதேறி, சம்புஜியையும் பின்னால் ஏற்றிக் கொண்டார். குதிரை மதுரையை நோக்கி விரைந்தது. அசுவரக்ஷகனும் பின்னால் ஓடி வந்துகொண்டிருந்தான்.

இருள் சூழ்ந்த அந்த இரவில் கிராமங்களில் புகாமல் செல்லலானார் சிவாஜி. வானத்தில் தாரகைகள் மினுங்கிக் கொண்டிருந்தன. நடுநடுவே மேகம் திரையிட்டுக்கொண்டிருந்தது.

தூரத்தில் சில குதிரைகள் வரும் சப்தம் கேட்டது. சிவாஜி மறைந்துகொள்ள முயற்சி செய்யலானார். ஆனால் அங்கே மரமோ, குடிசையோ ஒன்றுமில்லை. ஆகையால் முன்னேறுவதே மேலென்று குதிரையை நடத்தினார். மூன்று வீரர்கள் டில்லியை நோக்கிக் குதிரைமீது வந்து கொண்டிருந்தனர். அவர்களிடம் சகல அயுதங்களும் இருந்தன. அவர்கள் தூரத்தில் சிவாஜியின் குதிரையைக் கண்டதும், தாங்களும் அவரை நோக்கி விரையலானார்கள். சிவாஜியின் உள்ளம் ஒரு வேகத்தால் உருகிக் கொண்டிருந்தது. வந்தவர்கள் அருகே வந்துவிட்டார்கள். அவர்களில் ஒருவன், 'யார் போகிறது?' என்று கேட்டான்.

'கோஸ்வாமி!'

'எங்கிருந்து வருகிறாய்?'

'டில்லி நகரிலிருந்து!'

'நாங்களும் டில்லிதான் போகிறோம். ஆனால் வழி தவறிவிட்டது. எங்களுடன் வந்து வழி காட்டிவிட்டுப் பிறகு மதுரா செல்லுங்கள்!'

சிவாஜிக்கு மின்னலால் தாக்கப்பட்டதைப் போன்ற ஓர் உணர்ச்சி எழுந்தது. டில்லி செல்ல மறுத்தால், குதிரை வீரர்கள் பலவந்தம் செய்வார்கள். விவாதித்தால், அவரை அறிந்துகொண்டு விட்டாலும் விடலாம். டில்லியில் சிவாஜியை அறியாதவர் யாரும்இல்லை. டில்லி திரும்பினாலோ ஆயிரம் தொல்லைகள். அவர் செயலற்று யோசிக்கலானார்.

ஒரு வீரன்தான் எதிரே வந்து வார்த்தையாடிக்

கொண்டிருந்தான். மற்ற இருவரும் யோசனை கூறிக் கொண்டிருந்தனர். அந்த யோசனை என்ன?

'இந்த மனிதரை எனக்குத் தெரியும்! ஷாயிஸ்தா கானின் தலைமையில் நான் சண்டையிடும்போது இவரைப் பார்த்திருக்கிறேன். நான் சரியாகச் சொல்கிறேன், இவர் கோஸ்வாமியல்ல!' என்றான் ஒருவன்.

'பின்னே யார்?' என்றான் மற்றவன்.

'இவர் சிவாஜியே என்பதுதான் என் அபிப்பிராயம். ஏனென்றால் இருவருடைய குரலும் ஒத்திருக்கிறது!'

'சீ, முட்டாளே! சிவாஜிதான் டில்லியில் கைதியாக இருக்கிறாரே!'

'நான்கூட சிவாஜி சிம்ஹகட் துர்க்கத்தில் ஒளிந் திருப்பதாகத்தான் எண்ணினேன். ஆனால் ஒரே இரவில் புனா நகரம் துவம்சமாகிவிட்டது!'

'சரி! இவர் தலையிலுள்ள துணியை விலக்கிப் பார்த் தால் உண்மை விளங்கி விடுகிறது!'

சட்டென்று ஒரு குதிரை வீரன் சிவாஜியின் தலைப் பாகையை எடுத்தெறிந்தான். அவன் ஷாயிஸ்தாகானின் ஒரு முக்கிய சைனிகன் என்பதை சிவாஜி அறிந்து கொண்டார். கையில் ஆயுதமிருந்திருந்தால் சிவாஜி மூவரையுமே ஒரு கை பார்த்திருப்பார். ஆயுதமில்லாம லிருந்தும்கூட ஒருவனை ஒரு குத்துக் குத்திக் கீழே வீழ்த் தினார். உடனே மற்ற இரு வீரர்களும் வாளை உருவிக் கொண்டு சிவாஜியைப் பூமியில் தள்ளினர்.

சிவாஜி தம் இஷ்ட தேவதையை மனத்தில் எண்ணி, தாம் கைதியானால் மீண்டும் ஔரங்கஸீபின் கையினால் தமக்கு மரணம் சம்பவிக்கும் என்பதையும் எண்ணி, சம்புஜியின் பக்கம் பார்த்ததும், அவர் கண்களில் கண்ணீர் வந்துவிட்டது.

சட்டென்று ஒரு சப்தம். சிவாஜி திரும்பினார். ஒரு

வீரன் உடலில் அம்பு பாய்ந்து, ரத்தம் பெருகக் கீழே சாய்ந்துவிட்டான். மீண்டும் ஓர் அம்பு! அதன்பின் ஒன்று! இப்படி வரிசையாக வந்து குதிரை வீரர்களைப் பூமியில் வீழ்த்தியது.

சிவாஜி கடவுளுக்கு நன்றி செலுத்திவிட்டு, எழுந்து நின்று திரும்பிப் பார்த்தார். யார்? அந்த அசுவரக்ஷகன் ஜானகிநாத் பாணங்களை வருஷித்துக்கொண்டிருந்தான். சிவாஜி ஆச்சரியமடைந்து தம் உயிரைக் காப்பாற்றிய அவனை மனமார வாழ்த்தினர். அசுவரக்ஷகன் இன்னும் சற்று அருகில் வந்ததும், சிவாஜியின் ஆச்சரியம் பன் மடங்கு அதிகரித்தது. அசுவரக்ஷகன் ஸீதாபதி கோஸ்வாமியாக இருந்தான்.

சிவாஜி தம்மை மன்னிக்கும்படி அவரை வேண்டிக் கொண்டு, மேலும், 'ஸீதாபதி! தங்களைத் தவிர எனக்கு உண்மையான துணைவர் வேறு யார் இருக்கப் போகிறார்கள்? தங்களை அசுவரக்ஷகன் என்றெண்ணி நான் தங்களுக்கு விசேஷ மரியாதை எதையும் செய்யவில்லை. மன்னியுங்கள்; இந்தக் காரியத்திற்கு நான் தங்களுக்கு வெகுமதிகூடக் கொடுக்க முடியுமா?' என்றார்.

ஸீதாபதி சிவாஜியின் முன் மண்டியிட்டுக் கை குவித்து, 'ராஜன்! இந்த மாறுவேடம் பூண்டதற்காகத் தாங்கள் என்னை மன்னியுங்கள்! நான் அசுவரக்ஷகனும் அல்ல, கோஸ்வாமியுமல்ல. நான் தங்கள் பழைய ஊழியன் ரகுநாத் ஹவல்தார்! நான் தங்களுக்கு சேவை செய்தேன்; உயிருள்ளளவும் செய்வேன் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். இதைத் தவிர வேறு யாதொரு வெகுமதியும் வேண்டியதில்லை. ஏதாவது தவறிப் பிழை இழைத்திருந்தாலும் ஆதரவற்ற எனக்கு ஆச்ரயம் அளிக்கவேண்டும். என்னை மன்னியுங்கள்!' என்றான்.

சிவாஜி பிரமித்துப் போய் ரகுநாதனின் முகத்தைப் பார்க்கலானுர். அவரால் தம் உள்ளத்திலெழுந்த வேகத்தை அடக்க முடியவில்லை. கண்ணீர் பொங்கும் கண்களுடன் ரகுநாதனைத் தம் மார்புடன் தழுவிக் கொண்டார். அவர் குரல் தழுதழுக்க, 'ரகுநாத்! ரகுநாத்! சிவாஜி உன் முன்னிலையில் பல குற்றங்கள் செய்த அபராதி! ஆனுல் உன்னுடைய மகத்தான நடத்தை எனக்குத் தண்டனை அளித்து விட்டது. உன்னிடம் நான் கொண்ட சந்தேகத்தை எண்ணினுல் என் ஹிருதயம் பிளந்துவிடும் போல் இருக்கிறது. சிவாஜி ஜீவித்திருக்கும் வரை உன் குணத்தை மறக்க முடியாது' என்ருர்.

சாந்தமயமான அந்த இரவில் பரஸ்பரம் ஒருவரை யொருவர் தழுவி ஆனந்த மடைந்தனர். ரகுநாதனின் விரதம் அன்று பூர்த்தியாயிற்று. சிவாஜியின் மனத்தி லிருந்த வேதனை அன்று அகன்றது. சிறு பாலகர்களைப் போன்று அன்று இருவரும் அழுதுவிட்டனர்.



அத்தியாயம் 29

காதலியின் கலியாணம்

அன்று இரவு ஸீதாபதி கோஸ்வாமியிடம் விடை பெற்றுக்கொண்டு ஸரயூபாலா வீடு திரும்பினாள். ஆனால் வீட்டில் அவளுக்கு எல்லாம் வெறுப்பாக இருந்தது. அந்த ஸ்வதேச வாலிப வீரன், தான் முதல் முதல் சந்தித்துப் பின் தன் மனத்தை அவனிடம் பறிகொடுத்த அந்த ரஜபுத்திரன், தன் தந்தை ஜனார்த்தனதேவர் மணம் செய்து கொடுப்பதாக வாக்களித்த அந்தக் கட்டழகனைக் காணாது அவள் உள்ளம் வருந்தியது.

நாட்கள் சென்றன. வாரங்கள் சென்றன. மாதமும் சென்றது. ஆயினும் அவள் காதலன் திரும்பி வரவில்லை. சிற்சில சமயம் இரவில் ஜன்னலருகே அமர்ந்து நடுநிசி வரை கண் விழித்திருப்பாள். சில சமயம் நடுநிசியில் எழுந்து விடியும்வரை உட்கார்ந்திருப்பாள். எப்பொழுதும் ரகுநாதனுடைய சிந்தனைதான். எந்த வழியாகவோ வருவார் என்ற நம்பிக்கைதான் அவளுக்கு.

சில சமயம் பகலில் மாந்தோப்புக்குச் செல்வாள், அங்கே உட்கார்ந்ததும், தோரண துர்க்கத்தின் கதை, மாலையணிவித்த அந்த மனம் கவர்ந்தோன், அதன்பின் மலர்ந்த காதல் மலர், ராய்கட் விஜயம், அங்கிருந்து விடைபெற்றுக்கொண்டது, யாவும் அவள் ஞாபகத்திற்கு

வரும். பேசாமல் தாடையில் கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருப்பாள். சில சமயம் தூங்கி விழுவாள். அணை திறந்த நதி போல் பெருக்கெடுத்தோடும் அந்த பிரேமப் பிரவாகத்தில் மூழ்குவாள். கண்கள் சிராவண மாதத்து மழையைப் போல் கண்ணீரைச் சொரியும்.

காலை வேளையில் மலர் கொய்யச் செல்வாள். தோட்டத்திலுள்ள பூக்களைப் பறிப்பாள். அங்குள்ள ஒவ்வொரு புஷ்பக் கொடியும் அவளுக்கு மனோகரமான காட்சியளிக்கும், அவளுக்கென்ன கவலை? அதை யார் அறிய முடியும்? மீண்டும் சோகத்தில் மூழ்குவாள், மீண்டும் புஷ்பத்தின் பக்கம் பார்ப்பாள். காலை வேளையில் பறித்த மலரிலிருந்து உதிரும் பனித்துளிகள் போல அவள் முகக் கமலத்திலிருந்து கண்ணீர் உதிரும். மாலையானதும் வீணையை எடுத்து வைத்துக்கொண்டு பாடுவாள். அந்த சோக கீதத்தைக் கேட்பவர்கள் கண்ணீர் விடாமல் இருக்க முடியாது.

இந்த விதமாகக் கவலைப்பட்டுப்பட்டு ஸரயூவின் உடல் வாடியது. முகம் வெளுத்தது. கண்கள் உலர்ந்தன. ஆனால் கள்ளம் கபடற்ற ஜனார்த்தன தேவர் ஸரயூவின் உள்ளத்தை உணரவில்லை. ஆனால் அவளுடைய உடல் நிலையைக் கண்டு காரணத்தை அனுமானிக்கலானார்.

ஸ்திரீகளிடம் ஸ்திரீகள் தங்கள் உள்ளத்தை ஒளிக்க முடியாது. அதுபோல, ஸரயூ தன் மனத்திலுள்ளதை மறைத்தும், அவளுடைய தோழிகளுக்கு எப்படியோ விஷயம் தெரிந்துவிட்டது. அவர்கள் தங்கள் கைச்சரக்கையும் கொஞ்சம் சேர்த்து ஜனார்த்தனரிடம், 'ஸரயூ வயதடைந்து விட்டாள். இனி அவளுக்கு விவாகம் செய்து வைத்துவிட வேண்டியதுதான்!' என்றார்கள்.

ஸரயூ இதைக் கேள்விப்பட்டு, தனக்கு மணம் செய்துகொள்ளவே இஷ்டமில்லை என்றும், தன் வாழ்நாள்

பூராவும் விவாகமின்றி அவர் பாதங்களுக்கு சேவை செய்வதில் கழிப்பதாகவும் தன் தந்தையிடம் சொல்லி, விடும்படி ஒரு தோழியிடம் சொல்லி அனுப்பினுள்.

ஜனுர்த்தனர் இதை ஒப்புக்கொள்ளவில்லை. அவர் கலியாணத்திற்கு வரன் தேடலானுர். ராஜ புரோகிதரால் வளர்க்கப்பட்ட க்ஷத்திரியப் பெண்ணுக்கு வரனுக்கா பஞ்சம்? கடைசியில் ராஜா ஜயஸிம்ஹரின் ஒரு சேனுபதிக்குக் கொடுப்பதாய் நிச்சயமாயிற்று. இதைக் கேட்டு ஸரயூவின் மனம் துடிதுடித்தது அவள் வெட்கத்தை உதறித் தள்ளி, தந்தையிடம், முன்பு ஓர் வீரனுக்குத் தருவதாக அவர் வாக்களித்திருப்பதை ஞாபகப்படுத்தி, 'அவர்தான் எனது பதி; நான் வேறு யாரையும் மணக்க முடியாது' என்று சொல்லியனுப்பினுள்.

ஜனுர்த்தனர் இந்த வார்த்தைகளேக் கேட்டுக் கோபமடைந்து, ஸரயூவை வெறுத்தார். பெண்ணின் இஷ்டம் இல்லாமலே கலியாண தினம் நிச்சயமாகிவிட்டது.

ஸரயூ தன் தந்தைக் கொப்பான ஜனுர்த்தனரின் பாதங்களில் வீழ்ந்து அழுது, 'தந்தையே மன்னியுங்கள்! இன்றேல், தாங்கள் வளர்த்த கன்னிகையைக் கொன்ற தோஷம் தங்களேச் சாரும்!' என்ருள்.

ஜனுர்த்தனர் அவளே மிரட்டிப் பயமுறுத்தி அனுப்பி விட்டார். பெண்ணின் பேச்சை யார் கேட்கிருர்கள்? நாலு பெரிய மனிதர்கள் பார்த்து எது சொல்கிருர்களோ அதுதான் சமூகத்திற்குச் சரியான யோசனே. அதன்படி தான் நடக்கும்.

ஜனுர்த்தனர் வெகு தூரம் சொன்னுர்; மிரட்டினுர்; வெறுத்தார். ஆனுல் இவை ஒன்றும் பலனளிக்கவில்லே.

கடைசியில் விவாகத்தின் முதல் தினத்தன்று அவர் பெண்ணிடம், 'அடி பாவி! உனக்காக இந்தக் கிழவயதில்

நான் அவமானமடைய வேண்டுமா? களங்கமற்ற உன் தந்தையின் குலத்திற்குக் களங்கத்தை உண்டாக்கப் போகிருயா?' என்று சொன்னுர்.

'கண்ணீர் வழியும் கண்களுடன், 'தந்தையே! நான் அறியாதவள்! நான் தங்களுக்கு ஏதாவது தவறிழைத்திருந்தாலும் மன்னித்துக் கொள்ளுங்கள். கடவுள் எனக்கு அருள் புரியட்டும்! என்ஞல் தங்களுக்கு அவமானம் ஒன்றும் நேராது' என்ருள்.

அந்தச் சமயம் அந்த வார்த்தையின் அர்த்தம் ஜஞர்த்தனருக்கு விளங்கவில்லை. ஆனல் மறுநாள் விவாகத்தன்று பெண்ணேக் காணவில்லை என்று சொன்னபோது தான் விளங்கியது.



அத்தியாயம் 30

குடிசை

சரத்காலத்தின் காலை இளங்கதிர் ஒளியில் வேகவதி நதி பெருகிக்கொண்டிருந்தது. சூரிய ஒளியில் தண்ணீர் அலைகள் பல வர்ணக் காட்சிகளைக் காட்டின. ஆற்றின் இருபுறமும் உள்ள நிலங்களின் காட்சி, கிருஷிகர்களின் தவத்தால் மேதினி பச்சைக் கலையுடுத்திக்கொண்டு அருள் பொழிய வந்தது போல் இருந்தது. வடக்கேயும் ஒரே பசுமை. தூரத்தில் சில கிராமங்களின் காட்சி தென்பட்டது. தென் திசையில் மலைச் சிகரங்களில் சூரியன் ஒளி வீசிக்கொண்டிருந்தான்.

அந்த நதிக்கரையில் பசுமையால் சூழப்பட்ட ஒரு சிறு கிராமம் திகழ்ந்துகொண்டிருந்தது. அந்தக் கிராமத்தில் ஒரு குடியானவனின் குடிசை. குடிசைக் கருகில் ஒரு பாலிகை நதிக்கரையில் விளையாடிக்கொண்டிருக்கிறாள். அருகே ஒரு குடியான ஸ்திரீ ஏதோ தன் கை வேலையைச் செய்துகொண்டிருக்கிறாள்.

வீட்டைப் பார்த்தால் குடியானவன் சற்று பணக்காரன் போலத்தான் தோன்றிற்று. அருகே இரண்டொரு ஆயர் வீடு. ஐந்தாறு பசுக்கள் கட்டியிருந்தன. வீட்டின் உட்புறம் நாலைந்து அறைகள். வெளியே பெரிய திண்ணை. இவற்றிலிருந்து அந்தக் குடியானவன்

தான் அந்த ஊருக்கு நாட்டாண்மைக்காரன் என்று தெரிந்தது.

பெண்ணின் வயது ஏழு அல்லது எட்டு இருக்கும். நிறம் சற்றுக் கறுப்பு. ஆயினும் நல்ல களையான முகம். சிறுமி வீட்டுக்கும் ஆற்றங்கரைக்குமாக ஓடிக்கொண்டிருந்தாள். சில சமயம் அருகே உள்ள வேலைக்காரியுடன் பேசுவாள்.

'அக்கா! வாயேன், இன்றும் ஆற்றுக்குச் சென்று ஸ்நானம் செய்துவிட்டு வரலாம்!' என்கிறாள் அந்தச் சிறுமி.

'இல்லை அம்மா! ஆற்றுக்குப் போகக் கூடாதென்று அம்மா சொல்லியிருக்கிறாள்' என்கிறாள் அந்த ஸ்திரீ.

'இல்லை! அம்மாவுக்குத் தெரியாமல் வா!'

'கூடாது! அம்மா வேண்டாமென்று சொன்னதை நாம் ஏன் செய்யவேண்டும்?'

'சரி அக்கா! எங்கம்மா உனக்கும் அம்மாவா?'

'ஆமாம்!'

'இல்லை, உண்மையைச் சொல்!'

'ஆமாம், நிஜமாக அம்மாதான்!'

'இல்லை அக்கா, நீ ரஜபுத்திரப் பெண். நாங்கள் தான் ரஜபுத்திரர்களல்லவே!'

வேலைக்காரி குழந்தையைக் கட்டி முத்தமிட்டு, 'தெரிந்திருந்தும் ஏன் கேட்கிறாய்?' என்கிறாள்.

'ஏன் கேட்டேனென்றால் நீ ஏன் எங்கம்மாவை "அம்மா" என்று கூப்பிடுகிறாய்? அதனால்தான்!'

'தங்க இடமளித்து, சாப்பிட உணவளித்து, தன் மகளைப் போல் பாவிப்பவரை அம்மா என்று கூப்பிடாமல் வேறு யாரைக் கூப்பிடுவது? இந்த உலகில் எனக்கு யாரும் துணை இல்லை. அம்மாதான் எனக்கு இடமளித்தாள்!'

'அக்கா! ஏன் அக்கா உன் கண்களில் கண்ணீர் வருகிறது? ஏன் வார்த்தைக்கு வார்த்தை அழுகிறாய்?'

'இல்லை அம்மா! அழுவானேன்?'

'உன் கண்களில் கண்ணீரைப் பார்த்து என் கண்களில் கண்ணீர் வருகிறது!'

வேலைக்காரி மீண்டும் சிறுமியைத் தழுவி முத்தமிட்டு, 'என்னிடம் உனக்கு எவ்வளவு அன்பு!' என்கிறாள்.

'என்னிடம் உனக்கெவ்வளவு அன்பு?'

'ரொம்ப சரி!'

'எம்பொழுதும் என்னிடம் அன்பாகவே இருப்பாயா? மறந்து விடுவாயா?' என்று கேட்கிறாள் சிறுமி.

'ஆனால் நீ ஒருநாள் என்னை மறந்துவிடுவாய்!' என்கிறாள் வேலைக்காரி.

'அதெப்பொழுது?'

'உனக்கு வரன் வரும் பொழுது!'

'அது எப்பொழுது வரும்?'

'ஆச்சு, இன்னும் நாலைந்து வருஷத்தில்!'

'இல்லை அக்கா! நான் உன்னை ஒருநாளும் மறக்க மாட்டேன். என் கணவரைவிட உன்னிடம் தான் பிரியமாக இருப்பேன். ஆனால் உன் புருஷர் வரும்போது நீ என்னை மறந்துவிட மாட்டாயே?'

வேலைக்காரியின் கண்களில் மீண்டும் கண்ணீர் பெருகுகிறது. 'இல்லை, ஒரு நாளும் மறக்கமாட்டேன்' என்கிறாள்.

'உன் ஆத்துக்காரரைவிட என்னிடம் அதிகம் அன்புடன் இருப்பாயா?'

வேலைக்காரி சிரித்துக்கொண்டே, 'கட்டாயம் நிச்சயம்!' என்கிறாள்.

'உன் கணவர் எப்பொழுது வருவார்?'

'கடவுளுக்குத்தான் தெரியும். விடு, நாழிகையாகி விட்டது; சமையல் செய்ய நேரமாகிவிட்டது.'

வாசகர்களுக்கு இது யார் என்று சொல்லவேண்டிய அவசியமில்லை. ஸரயூவுக்கு உலகில் வேறு எங்கும் ஆச்ரயம் கிடைக்காத போது, அவள் இந்தக் குடியானவர் வீட்டுக்கு வேலைக்காரியாக வந்தாள். குடியானவரின் பெயர் கோகரண நாதர். அவர் கொஞ்சம் சொத்துடையவர். கொஞ்சம் கொடுக்கல் வாங்கலும் உண்டு. நல்ல மனிதர். அவர் மனைவியும் நல்ல மாதிரி. அவர் ஸரயூவுக்குத் தம் வீட்டில் ஆச்ரயமளித்தார். ஸரயூவும் தாழ்மையுடன் அவர் மனைவிக்கு மரியாதை செய்து, அவள் மகளைப் பார்த்துக்கொண்டு வந்தாள். குடியானவரின் மனைவியின் வேலையில் பாதியை அவள் ஏற்றுக்கொண்டாள். ஆகையால் ஸரயூவின் மேல் அவளும் சந்தோஷம் கொண்டாள்.

ரகுநாதனில்லாமல் ஸரயூவுக்கு மனச்சாந்தி அடைய ஓர் இடம் இருந்ததென்றால் அது கோகரணநாதரும் அவர் மனைவியும் இருக்கும் வீடுதான். கோகரணரின் வயது நாற்பதுக்கு மேல் இருக்கும். ஆனால் எப்பொழுதும் சிரமப்பட்டு வேலை செய்ததால் அவர் தேகம் திடமாகவே இருந்தது. கோகரணரின் மகன் ஒருவன் சிவாஜியிடம் சைனிகனாக இருந்தான். வெகு நாட்களாக அவன் வீட்டுக்கு வரவில்லை. தாய் தந்தையருக்கு அவனிடம் அதிக அன்பு. காலையில் எழுந்ததும் ஸரயூ வீட்டு வேலையில் முனைந்துவிடுவாள். கோகரணரின் மனைவி ஒவ்வொரு சமயம், 'அடி ஸரயூ! நீ பெரிய இடத்துப் பெண் இந்த மாதிரி எல்லாம் வேலை செய்தால் உன் உடம்புக்கு ஒத்துக்கொள்ளாது. அதிகமாகச் சிரமப்படாதே. நான் செய்துகொள்கிறேன்' என்பாள். ஸரயூ அன்புடன், 'அம்மா! நீ என்னிடம் எவ்வளவு அன்பாக இருக்கிறாய்! உன்னுடைய காரியம் எனக்குச் சிரமமாகவே தோன்றுவ

தில்லை. நான் ஜன்ம ஜன்மத்திற்கும் உனக்குச் சேவை செய்யவேண்டும்!' என்பாள்.

இந்த இன்சொல்லைக் கேட்டு அந்தக் குடியான ஸ்திரீயின் கண்களில் கண்ணீர் வந்துவிடும். அவள் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே, 'ஸரயூ! உன்னைப் போன்ற பெண்ணை நான் இதுவரை பார்த்தது கிடையாது. உன்னைப் போன்ற பெண்கள் எங்கள் ஜாதியில் இருந்தால், நான் என் மகனுக்குக் கலியாணம் செய்துகொள்வேன். வெகு நாளாயிற்று என் மகன் வீட்டை விட்டுப் போய்!' என்பாள்.

இந்த விதமாகப் பல மாதங்கள் கழிந்தன. ஒருநாள் மாலை, கோகரணர் தம் மனைவியினருகில் அமர்ந்திருந்தார். மறுபுறம் ஸரயூவும் சிறுமியும் விளையாடிக்கொண்டிருந்தார்கள். அந்தச் சமயம் கோகரணர், 'கொஞ்சம் சும்மா இருங்கள் ஒரு சுப சேதி சொல்கிறேன்!' என்றார்.

'ஆஹா! என்ன விசேஷம் நமது பீம்ஜியைப் பற்றியா?' என்றாள் அவர் மனைவி.

'சீக்கிரம் வந்துவிடுகிறான். அவன் சிவாஜியுடன் டில்லி சென்றிருந்தான். துஷ்ட பாதுஷாவிடமிருந்து சிவாஜி தப்பி வந்துவிட்டதாக இன்று கேள்விப்பட்டேன். ஆகையால், நமது பீம்ஜி நிச்சயம் அவருடன் இருப்பான்!' என்றார் கோகரணர்.

'பகவான் அப்படியே செய்யட்டும்! ஒரு வருஷம். ஆயிற்று அவனைப் பார்த்து. எப்படி இருக்கிறானோ? கடவுளுக்குத்தான் தெரியும்!' என்றாள் கோகரணரின் மனைவி.

'பீம்ஜி கட்டாயம் திரும்பி வருவான். அவன் ரகுநாத்ஜி ஹவல்தாரின் கீழே காரியம் பார்க்கிறான். ரகுநாத்ஜியும் வருகிறார்.'

ஸரயூவின் உள்ளம் மலர்ந்தது. அவள் ஆவலுடன்,

மூச்சுக்கூட விடாமல் கோகரணரின் பேச்சைக் காது கொடுத்துக் கேட்கலானாள்.

'சிவாஜியினால் ரகுநாதர் துரோகி என்று சொல்லப் பட்டபோது நமது பீம்ஜி என்ன சொன்னான், ஞாபகம் இருக்கிறதா?'

'இல்லை! நான் மறந்துவிட்டேன்!'

'"தந்தையே! நான் ஹவல்தாரை அறிவேன். அவர் போன்ற வீரர்கள் சிவாஜியின் சைனியத்தில் வேறொரு வரும் இல்லை. ஏதோ பிரமையினாலே சிவாஜி அவரை அவமானம் செய்துவிட்டார். பிறகு ஒருநாள் அவருடைய குணங்கள் விளங்கும்!" என்றான். அவனுடைய வார்த்தைகள் உண்மையாகிவிட்டன!' என்றார் கோகரணர்.

ஸரயூவின் ஹிருதயம் ஆனந்தத்தால் நிரம்பியது. முகம் வியர்த்தது.

கோகரணர் மீண்டும், 'ரகுநாதர் மாறு வேஷம் புனைந்து சிவாஜியுடன் கூடவே டில்லி சென்றார். அவர் தம் புத்தி பலத்தினால் அரசரைத் தப்ப வைத்தார். தம்மிடம் யாதொரு தோஷமும் இல்லை என்பதைப் பூரணமாக வெளிக் காட்டினார். சிவாஜியே ரகுநாதரிடம் மன்னிப்புக் கேட்டதாகக் கேள்வி! அவரைச் "சகோதரா" என்று சொல்லி ஆலிங்கனம் செய்துகொண்டாராம். ரகுநாதரை ஹவல்தார் பதவியிலிருந்து ஒரேயடியாய் பஞ்ச ஹஜாரி பதவிக்கு உயர்த்திவிட்டாராம். நகரம், கிராமம் எங்கும் இதே பேச்சுத்தான். எங்கே பார்த்தாலும் ரகுநாதரின் வீரக் கதையை ஜனங்கள் வர்ணித்து, அவருக்கு ஜயகோஷமிடுகின்றனர்!' என்றார்.

ஆனந்தத்தாலும் உற்சாகத்தாலும் ஸரயூ ஆரவாரம் செய்து, அப்படியே மூர்ச்சையானாள்.

அத்தியாயம் 31

கனவில் காட்சி

அன்றைய தினத்திலிருந்து ஸரயூவின் நிலைமை மாறுதலடையலாயிற்று. வெகுநாளைய ஆசைகள், இன்பங்கள், ஆனந்தங்கள் - யாவும் அவள் உள்ளத்தில் ஒருங்கு கூடி அவளைக் குதூகலமடையச் செய்தன. அவள் கண்களில் ஒரு புதிய ஒளி மின்னியது. அவள் உதடுகளில் மதுரமான புன்னகை எப்பொழுதும் தவழலாயிற்று. காலை இளங் காற்றும் கோலக் குயிலிசையும் அவள் உள்ளத்தில் மது ரஸத்தை வார்த்தன. பகலில் வீட்டு வேலைகளை முடித்து, மாலை நதிக்கரை சென்றமர்ந்து, மேற்றிசையில் மூழ்கும் சூரியனைக் கண்டு அவள் ஏதாவது யோசித்திருப்பாள்.

கோகரணரின் பெண், ஸரயூவிடம் ஏற்பட்டிருக்கும் மாறுதலை உணர்ந்துவிட்டாள். இருவரும் ஒரு நாள் நதிக்கரையில் அமர்ந்திருக்கும் போது, அந்தச் சிறுமி ஸரயூவிடம், 'அக்கா, என்ன நாளுக்கு நாள் நீ ரொம்ப சந்தோஷமாகக் காணப்படுகிறுயே, என்ன?' என்று கேட்டாள்.

'என்னடி சொல்கிருய் நீ?'

'என்ன சொல்கிறேன்? நான் பார்க்கவில்லையா?'

'இல்லை! நீ பார்ப்பதில் தவறிருக்கிறது.'

'நன்றாகச் சொன்னாய்! நானா தவறாகப் பார்க்கிறேன்? இதற்கு முன் நீ தலையில் பூ வைத்துக் கொள்வதுண்டா?'

'பைத்தியம்!'

'நான் பைத்தியம்! நீ? கழுத்தில் மாலை, கையில் முத்து வளை இவைகளை நான் பார்க்கவில்லையா?'

'சீ, பேசாமல் இரு!'

'ஏன்? ஆற்றங்கரையில் உட்கார்ந்து, வெகு நேரம் வரை யார் தண்ணீரில் முகம் பார்க்கிறார்கள்?'

'இந்தா! இந்தப் பொய்யெல்லாம் சொல்லாதே!' என்றாள் ஸரயூ.

'யார் மரத்தின் ஓரம் ஒளிந்து இனிய குரலில் பாடுகிறார்கள்? எனக்கு இதுகூடத் தெரியாதா?'

ஸரயூவால் பொறுக்க முடியவில்லை. அவள் சிரித்துக் கொண்டே சிறுமியின் வாயைப் புதைத்தாள்.

சிறுமி சிரித்துக்கொண்டே, 'இரு, இரு! நான் இதையெல்லாம் அம்மாவிடம் சொல்லுகிறேன்!'

'இல்லை, இல்லை அம்மா! இங்கே பார், அம்மாவிடம் சொல்லாதே!'

'சரி, ஒன்று கேட்கிறேன், சொல்லு!'

'கேளேன்!'

'இதன் அர்த்தம் என்ன? இந்தப் புஷ்பம், இந்த மாலை, இந்தப் பாட்டு,—இதன் காரணம் என்ன? உன் கண்களில் ஓர் ஆனந்த ஒளி! உதடுகளில் களி நகை! சரீரமே ஒரு புது மேனியுடன் திகழ்கிறதே!'

'அம்மா உனக்குத் தலைவாரிப் பின்னி நகை போடுகிறாளே, அதென்ன?'

சிறுமிக்கு இந்தத் தடவை சற்று வெட்கமாகி விட்டது. ஆனால் அவள் சட்டென்று, 'அம்மா சொன்னாள், அடுத்த வருஷம் உனக்கு மாப்பிள்ளை வருவானாம்!' என்றாள்.

'எனக்குக் கூடவா மாப்பிள்ளை வருகிறான்?' என்றாள் ஸரயூ.

'ஆமாம், உண்மையாய்!'

ஸரயூவுக்கும் சிறுமிக்கும் இந்த விதமாகப் பேச்சு வார்த்தை நடந்துவந்தது. அதே சமயம் ஆஜானுபாகு வான ஒரு சந்நியாசி, 'ஹர ஹர மஹாதேவ!' என்று சொல்லிக்கொண்டே, ஆற்றங்கரையில் வந்தமர்ந்தார். மாலையின் மங்கிய ஒளியில் விபூதி யணிந்திருந்த சந்நியா சியின் மேனி அற்புதமான காட்சியாக இருந்தது. சிறுமி பயந்து ஓடலானாள். ஆனால், ஸரயூ கூர்மையான பார்வை யுடன் அவர் பக்கம் பார்க்கலானாள். ஓஹோ! அவர் ஸீதாபதி கோஸ்வாமியல்லவா!

ஸரயூவின் ஹிருதயம் ஒரு முறை நடுங்கியது. ஆனால் வெட்கம் நடுக்கத்தை விரட்டியது. ஸரயூ மெல்ல மெல்ல சந்நியாசியின் அருகில் வந்து, 'பிரபோ! தங்கள் தரிசனம் முன்பு ஒரு நாள் இந்த அபாக்கியவதிக்குக் கிடைத்தது. களங்க முடையவளென்று தந்தை என்னை நீக்கினார். இதைத் தவிர என்னிடம் வேறு ஒரு தோஷமும் இல்லை!' என்றாள்.

சந்நியாசியின் கண்களில் நீர் ததும்பியது. அவர் மெதுவாக, 'ரகுநாதனுக்காக நீ இந்தக் கஷ்டத்தை ஏற்றாய்!' என்றார்.

'பெண்கள் தங்கள் கணவன்மார்களின் நாமத்தை ஜபித்துக்கொண்டிருக்கும் வரை இதைக் கஷ்டம் என்று கூற முடியாது!' என்றாள் ஸரயூ.

சந்நியாசியின் குரல் தடைப்பட்டது. கண்கள் கண்ணீரைச் சொரிந்தன.

'பிரபோ! தாங்கள் அந்த மகா புருஷரை சந்தித்தீர் களா?' என்றாள் ஸரயூ.

'ஆமாம், சந்தித்தேன்!'

'என்ன சொன்னார்?'

'உன்னை அவன் சற்றும் மறக்கவில்லை. நான் அவனிடம், "ஸரயூ ரஜபுத்திர நங்கை. அவள் வாழ்வை விடக் கீர்த்தியைத்தான் விரும்புகிறாள். ஸரயூ ஜீவித்துள்ளவரை ரகுநாதனைக் களங்கமற்ற வீரனென்று அவன் கீர்த்தியைப் பாடுவாள்!" என்று சொன்னேன்.'

'சரி, பிறகு?'

'இதையும் சொன்னேன்: "ஸரயூ உன்னுடைய மகத்தான காரியத்திற்கு இடையூறாகவும் இல்லை. ரகுநாதன் கையில் வாளேந்தித் தனது மார்க்கத்தைச் சீர்செய்யலாம். ஈசன் அவனுக்கு அருள் புரிவார். இந்த நிலைமையில் அவன் உயிரைத் தியாகம் செய்தாலும், ஸரயூ ஆனந்தத்துடன் உயிர்விடுவாள்!"'

ஸரயூ தழுதழுத்த குரலில், 'மஹராஜ்! பிறகு அவர் என்ன சொன்னார்?' என்றாள்.

'ரகுநாதன் ஒன்றும் பதிலுரைக்கவில்லை. என் வார்த்தைகளைக் கேட்டு, தனது செயலில் இறங்கத் துணிந்தான். இப்பொழுது அவனது வாழ்க்கை மார்க்கம் சீர்ப்பட்டு விட்டதாகக் கேள்விப்படுகிறேன்!' என்றார். அவர் கண்களில் கண்ணீர் பெருகியது.

'உலகைப் படைத்த ஆதிபுருஷனை பகவானை வணங்குகிறேன்' என்று சொல்லி, ஸரயூபாலா வானை நோக்கி நமஸ்கரித்தாள். கோஸ்வாமியும் ஜகத்தின் ஆதிபுருஷருக்கு வந்தனம் செய்தார்.

சிறிது நேரம் இருவரும் மௌனமாக இருந்தனர். மாலைக் காற்று வீசி அவர்களுடைய கண்ணீரை உலர வைத்தது.

சில நிமிஷங்கள் பொறுத்து, கோஸ்வாமி, 'தெய்வ சங்கற்பத்தால் ரகுநாதனுடைய காரியம் சித்தியானதும்,

அவன் உன்னிடம் ஒரு விஷயத்தைச் சொல்லும்படி என்னை வற்புறுத்தினான்!' என்றார்.

ஸரயூ ஆவலுடன், 'மஹராஜ், அதென்ன அது?' என்றாள்.

'இவ்வளவு நாள் அவனை மனத்தில் இருத்தியிருந்த ஸரயூவுக்கு அவனைக் கண்டதும் தெரிந்துகொள்ள முடியவில்லையா?'

'இந்த ஆயுளில் நான் அவரை மறக்க முடியுமா?'

'உன்னை அவன் நன்றாக அறிந்துகொண்டான். ஆனால் பெண்களின் உள்ளம் எப்பொழுதும் ஸ்திரமாக இருப்பதில்லை. மறந்துபோனாலும் போகலாம்!' என்று சொல்லிச் சிரித்தார்.

கோஸ்வாமியின் சிரிப்பைக் கண்டு ஸரயூவுக்குச் சற்று ஆச்சரியமுண்டாயிற்று. அவள், 'பெண்களின் உள்ளம் சபலமடையும்! ஆனால் நான் அப்படிப்பட்டவளல்ல!' என்றாள்.

'எனக்குக்கூடத் தெரியாது. ஆனால் நான் இன்று காண்கிறேன்!'

'எதைக் காண்கிறீர்கள்?'

'எனக்கு வாக்களித்த அந்த நாரீரத்தினமே இன்று என்னை மறந்துவிட்டது. பார்த்தும்கூட அறிந்துகொள்ள முடியவில்லை!

'அது யார் அந்தப் பாக்கியவதி?'

'இவள்தான் அந்தப் பாக்கியவதி! தோரண துர்க்கத்தில் சந்தித்து, தன் மனசைப் பறிகொடுத்தவள். கழுத்தில் முத்து மாலை அணிந்துகொண்டு, வாழ்நாள் சபலமடைந்ததாக எண்ணி மகிழ்ந்த அதே ஸௌபாக்கியவதிதான் இவள்! ஜயஸிம்ஹரின் வீட்டில் மணிவிளக்குப்

போன்று விளங்கியவள், தன் சப்தத்தால் என் உள்ளத்தை சங்கீத மயமாக்கியவள்! தன் ஸ்பரிசத்தால் என்னைச் சந்தனமாக்கிய என் ஹிருதயேசுவரி! அவள்தான் என் வாழ்க்கையின் ஒளிச்சுடர்!

'அவள் வார்த்தையைக் கேட்டுத்தான் நான் டில்லி சென்றேன். அவளுடைய உற்சாகத்தால் என்னுடைய கீர்த்தியின் மார்க்கத்தைச் சீர்செய்து, விபத்தின் கடல்களைக் கடந்தேன். வெகுநாட்களுக்குப் பிறகு, அந்தப் பாக்கியவதியின் சரணங்களின் அருகில் வந்திருக்கிறேன். அவள் இன்று என்னை அறிந்துகொள்ள முடியுமா?' என்றார் கோஸ்வாமி.

இந்த வார்த்தைகள் ஸரயூவின் உள்ளத்தை ஒரு கலக்குக் கலக்கின. அவள் கோஸ்வாமியை அறிந்து விட்டாள். அவளால் தன் ஹிருதய வேகத்தை அடக்க முடியவில்லை. அவள் தலை சுற்றியது.

'ஹவல்தார்ஜீ! மன்னியுங்கள்!' என்று ரகுநாதன் முன் இரு கைகளையும் நீட்டினாள். துவண்டு விழும் ஸரயூவை ரகுநாதன் தன் கைகளில் வாரி, தன் ஹிருதயத்துடன் அணைத்துக்கொண்டான்.

சிறிது நேரம் பொறுத்து ஸரயூ உணர்ச்சி பெற்றாள். தன் கண்களைத் திறந்து பார்த்தாள். தான் ரகுநாதனின் மடியிலிருப்பதை உணர்ந்தாள். வெகுநாளாக எதிர் பார்த்த அவளுடைய காதலன் அவளை வாரி ஆலிங்கனம் செய்துகொண்டான்.

வெகுநாட்களுக்குப் பிறகு, கொதித்துக்கொண்டிருந்த ஸரயூவின் ஹிருதயம் ரகுநாதனின் ஹிருதயச் சேர்க்கையால் குளிர்ந்தது. ஸரயூவின் மூச்சு ரகுநாதனின் மூச்சுடன் கலந்தது. ஸரயூவின் அசையும் இதழ்கள்

ரகுநாதனின் இதழ்களைத் தொட்டு அவன் வாழ்க்கையுடன் ஒட்டிக்கொண்டன.

ஆலிங்கனத்தினால் அவள் ஒன்றும் தோன்றாதவளானாள். இறுகிய ஆலிங்கனமும், ஆழ்ந்த முத்தங்களும் அவள் உடற்கொடியைக் குலுக்கின.

காற்றினால் அசைக்கப்பட்ட தளிர்போல, மனத்திற்குள், 'கடவுளே! இது கனவா, நினைவா? கனவானால் இந்த சுக நித்திரையி னின்றும் என்னை ஒரு நாளும் எழுப்பாதே!' என்றாள்.



அத்தியாயம் 32

விளக்கணைந்தது

மஹாராஷ்டிரத்தில் ஒரே குதூகலம்! வீட்டுக்கு வீடு, கிராமத்திற்குக் கிராமம் இதே பேச்சு! 'சிவாஜி திரும்பி வந்துவிட்டார். மீண்டும் ஔரங்கஸீபுடன் போர் புரிவார். மிலேச்சர்களை விரட்டி யடித்து, ஹிந்து சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்கப் போகிறார்!' என்ற இதே பேச்சை பாலர் முதல் விருத்தர் வரை பேசிக்கொண்டனர்.

இங்கே.... ராஜா ஜயஸிம்ஹர் விஜயபுரத்தின்மேல் சண்டை யிட்டார். ஆனால் அதைக் கைப்பற்ற முடியவில்லை. அடிக்கடி அவர் பாதுஷாவிடம் சகாயத்திற்குச் சேனை அனுப்பும்படிக் கேட்டுக்கொண்டார். ஆனால் அவருடைய வேண்டுகோள் நிஷ்பலமாயிற்று. தாம் சைனியத்துடன் மாளவேண்டு மென்பதைத் தவிர வேறு யாதொரு எண்ணமும் பாதுஷாவுக்கில்லை என்பதை ஜயஸிம்ஹர் உணர்ந்து கொண்டார். ஆயினும், அவர் விஜயபுரத்தை விட்டு, ஔரங்காபாதின் பக்கம் திரும்பினார்.

இறக்குமளவும் ஔரங்கஸீபின் நம்பிக்கையுள்ள ஊழியராக வீரச் செயலே புரிந்தார். ஔரங்கஸீபின் கண்யமற்ற தன்மைக்கோ, அவர் ஹிந்து மதத்தின் மீது

இழைத்த அநீதிக்கோ, அவரை ஜயஸிம்ஹர் உதாசின மாகக் கருதவில்லை. மொகலாயரின் பிடியிலிருந்து மஹாராஷ்டிரம் விலக விரும்பிய போது அவர் தம்மாலான உதவியைப் பாதுஷாவுக்குச் செய்தார். லோகதட், ஸிம்ஹகட் முதலிய துர்க்கங்களை ஜயிப்பதென்பது மொகலாய சைனியத்தால் முடியாத காரியம். அதைக் கைப்பற்றியது ஜயஸிம்ஹரின் திறமைதான்.

ஆனால் இந்த உலகில் இம்மாதிரியான நம்பிக்கை வாய்ந்த செயல்களுக்கு வெகுமதி கிடையாது. மஹாராஜ் ஜயஸிம்ஹர் தம் காரியத்தில் தோல்வி யடைந்தார் என்று தெரிந்ததும், ஒளரங்கஸீப் அவரை அவமானம் செய்ய வேண்டி, அவரைத் தக்ஷிணத்தின் சேனாபதிப் பதவியி னின்றும் நீக்கி டில்லிக்கு அழைத்தார். அவருடைய ஸ்தானத்தில் யசவந்த ஸிம்ஹரை நியமித்தார்.

விருத்த சேனாபதி தமது வாழ்நாளில் தம்மால் இயன்ற அளவு டில்லிக்கு சேவை செய்தார். ஆனால் கடைசி நாளில் அவமானத்தால் அவர் மனம் உடைந்து படுத்த படுக்கையானார்.

அவர் மரணப் படுக்கையில் இருக்கும்போது ஒருநாள், தூதன் ஒருவன் வந்து, 'ஒரு மஹாராஷ்டிர வீரன் தங்களைக் காணவேண்டி வந்திருக்கிறான். தங்கள் பாதங்களில் வீழ்ந்து ஒருநாள் உபதேசம் பெற்றானும், மீண்டும் சிக்ஷை பெற வந்திருப்பதாகவும் கூறுகிறான்!' என்றான்.

'அவரை மரியாதையுடன் உள்ளே அழைத்து வா. வந்திருக்கும் மஹாசயரை நான் அறிவேன். அவர் வரலாம். அவருக்கு யாதொரு தடையும் இல்லை!' என்றார் ஜயஸிம்ஹர்.

சில நிமிஷத்திற் கெல்லாம் மாறுவேஷமணிந்த மகாராஷ்டிர வீரன் அங்கு வந்தான். ராஜா அவன் பக்கம் பார்த்து, 'நண்பா, சிவாஜி! இறக்கு முன் உன்னை ஒரு

முறை கண்டதால் சந்தோஷம். எழுந்து உனக்கு மரியாதை செய்யச் சக்தி இல்லை. வத்ஸ! மன்னித்துக் கொள்!' என்றார்.

சிவாஜி தழுதழுத்த குரலில், 'தந்தையே! நான் தங்களிடம் விடைபெற்று டில்லி செல்லும்போது, இவ்வளவு சீக்கிரம் தங்களை இந்த நிலைமையில் பார்ப்பேன் என்று எண்ணவில்லை!' என்றார்.

'ராஜன்! மனித சரீரம் அநித்யம்! இதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது? சிவாஜி! நான் உன்னை முதல் தடவை சந்தித்ததற்கும், கடைசித் தடவை சந்திப்பதற்கும் இடையில், மொகலாய சாம்ராஜ்யத்தில் எவ்வளவு மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன!'

'மஹாராஜ்! தாங்கள் அந்தச் சமயம் சாம்ராஜ்யத்திற்கு ஸ்தம்பமாக இருந்தீர்கள். தாங்கள் இந்த நிலைமையை அடைந்த பிறகு, இனி மொகலாய சாம்ராஜ்யத்திற்கு என்ன நம்பிக்கை இருக்கிறது?'

'வத்ஸ! அதல்ல விஷயம். ராஜபுத்திர பூமி வீரம் விளைந்தபூமி! ஜயஸிம்ஹனுக்குப் பிறகு வேறொரு ஜயஸிம்ஹன் உதிப்பான். இப்பொழுதும் ஜயஸிம்ஹனுக்குச் சமானமாய் அநேக வீரர்கள் இருக்கிறார்கள். ஆகையால் என் போன்ற ஒரு வீரன் இறப்பதால் மொகலாய ராஜ்யத்திற்குக் கேடொன்றும் வந்து விடாது!'

'தங்களுடைய தோல்வியைவிட மொகலாய ராஜ்யத்திற்கு வேறு துரதிர்ஷ்டம் என்ன இருக்கிறது?'

'சிவாஜி! ஒரு வீரனுக்குப் பின் மற்றொரு வீரன் வருகிறான். ஆனால் பாபத்தால் நாசமானது ஒருநாளும் பூரணமாகாது. நான் முன்பே, பாபமும் கபடமும் இருக்குமிடம், நாசத்தாலும் மரணத்தாலும் சூழப்பட்டிருக்கிறதென்று சொல்லியிருக்கிறேன்.'

'அதென்ன விஷயம்?'

'நான் உன்னை டில்லிக்கு அனுப்பும்போது உன் மனம் சிந்தையற்றிருக்கவில்லை. எனினும் நீ திடப் பிரதிக்ஞை உள்ளவன். உன்னைப் பாதுஷா நம்பினவரை நீயும் நம்பிக்கை மோசம் செய்யவில்லை. உன்னைச் சிநேகம் செய்து கொண்டதனால் பாதுஷா தக்ஷிணத்தில் மகத்தான ஒரு மித்திரனைப் பெற்றிருந்தார். உன்னை விரோதித்துக் கொண்டதால், தக்ஷிணத்தில் தம்மால் வெல்ல முடியாத ஒரு சத்துருவைப் பெற்றுவிட்டார்.'

'அரசே! தாங்கள் தீர்க்கதரிசி! தங்கள் புத்தி தீக்ஷண்யம் சாதாரணமானதல்ல. உண்மையில் உலகம் தங்களை அறிவாளி என்று தான் சொல்லுகிறது!'

'நான் ஔரங்கஸீபின் தந்தையின் காலத்திலும் டில்லியில் காரியம் பார்த்திருக்கிறேன். கஷ்டத்தைச் சகித்து எதுவரை முடியுமோ அதுவரை உபகாரம் செய்தேன். ஸ்வஜாதி விஜாதி என்று பார்க்கவில்லை. எந்தக் காரியத்தில் இறங்கினேனோ ஆயுள் பூராவும் அதினின்றும் வழுவவில்லை. ஆனால் இந்தத் தள்ளாத வயதில் பாதுஷா என்னை அவமானம் செய்தார். ஈச்வர சங்கற்பம். நான் எந்தெந்தக் கோட்டைகளை ஜயித்தேனோ அவைகளைக் காக்க சைனியத்தை அங்கங்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். தவிரவும் சிவாஜி! யுத்தம் செய்யாமல் அவைகளைக் கைக்கொள்ள முடியாது. ஆனால் இந்த நடத்தையால் ஔரங்கஸீப் தாமே கஷ்டத்தை அனுபவிக்க வேண்டியிருக்கும். அம்பர் ராஜாக்கள் டில்லி ஆதிக்கியத்திற்கு நம்பிக்கையுள்ள உதவியாளர்களாக யிருந்தார்கள். ஆனால், இனி அவர்களும் சத்துருக்கள் தான்!' என்றார் ஜயஸிம்ஹர்.

'தாங்கள் சரியாகச் சொன்னீர்கள்! ஔரங்கஸீப் தமது கெட்ட நடத்தையால், அம்பர் மஹாராஷ்டிரம்

ஆகிய இரு தேசங்களையும் தம்முடைய சத்துருவாக்கிக் கொண்டுவிட்டார்!'

'நான் உதாரணத்திற்காக இந்த இரு தேசங்களையும் சொன்னேன். ஆனால் பாரத வர்ஷம் பூராவும் இந்த நிலைமையில்தான் இருக்கிறது. சிவாஜி! ஔரங்கஸீப் பாரத நாட்டின் நம்பிக்கையுள்ள அனுசரர்கள் எல்லோரையும் அவமானம் செய்துவிட்டார். காசியில் விச்வேச்வரரின் ஸ்தானத்தில் மசூதி கட்டியது ஹிந்துக்களுக்குச் சாதாரண அவமானமா? ராஜபுத்திரர்களை அவமானம் செய்தார். ஹிந்துக்கள் மேல் ஜஸியா விதித்தார்!'

சிறிது நேரம் வரை ஜயஸிம்ஹர் கண்ணை மூடி, கம்பீரமான குரலில், 'மரணப் படுக்கையில் என் திவ்ய நேத்திரம் திறந்துவிட்டது. நான் எதிர்காலத்தை அறிந்து சொல்லும் ராஜரிஷி போலக் கூறுகிறேன். சிவாஜி! இந்தக் கபடத்தின் காரணமாக, பாரத நாட்டின் நாற்புறமும் போர்க் கனல் மூளும். அந்தக் கனல், மஹாராஷ்டிரம், வங்காளம், ராஜஸ்தானம் அவைகளிலும் ஜ்வாலை வீசும். ஔரங்கஸீப் இருபது வருஷம் முயற்சி செய்தாலும் அதை அணைக்க முடியாது. அவருடைய தீக்ஷண்யமான புத்தி, அசாதாரணமான சாமர்த்தியம், தைரியம் யாவும் வியர்த்தமாகும். வயோதிக காலத்தில் அவர் டில்லியிலமர்ந்து பச்சாத்தாபப் படும்படி நேரிடும். யுத்தக் கனல் அதி வேகமாக ஜ்வாலை கொள்ளும். மொகல் சாம்ராஜ்யம் முழுமையும் அதில் பஸ்மமாகிவிடும். அதன் பின் மஹாராஷ்டிர ஜாதியின் நக்ஷத்திரம் வானத்தில் உயரும். மஹாராஷ்டிரர்கள் முன்னேறி டில்லியின் அகண்ட சிம்மாதனத்தில் அமர்வார்கள்!'

ராஜாவின் குரல் தடைப்பட்டது. அவரால் அதிகம் பேச முடியவில்லை. வைத்தியர்கள் அருகே அமர்ந்திருந்தார்கள். அவர்கள் பற்பல சந்தேகங்கள் கொண்டார்கள். வியாதியை ஆராயலானார்கள்.

சிறிது நேரம் பொறுத்து ஜயஸிம்ஹர் மிருதுவான குரலில், 'கபடாசாரி! உன்னை நீயே நாசம் செய்துகொண்டாய்! "ஸத்யமேவ ஜயதி"' என்றார். ஜயஸிம்ஹரின் மூச்சு நின்றது. அவர் உடலினின்றும் ஆவி பிரிந்தது.



அத்தியாயம் 33

சந்திரராவின் முடிவு

அன்று மாலை ரகுநாதன் தனியாக நதிக்கரையில் உலாவிக்கொண்டிருந்தான். தன்னுடைய கீர்த்தி, ஸரயூவுடன் சந்திப்பு, முஸல்மான்களுடன் மீண்டும் யுத்தம், ஹிந்துக்களின் எதிர்கால சுதந்திரம் - இம்மாதிரியான புதுப் புது யோசனைகளால் அவனுடைய உள்ளம் நிரம்பிக் கிடந்தது. அதே சமயம் திடீரென்று பின்னுலிருந்து, 'ரகுநாத்!' என்று யாரோ அழைத்தார்கள்.

ரகுநாதன் பின்னுல் திரும்பிப் பார்த்தான். சந்திர ராவ் ஜும்லேதார் நின்றிருந்தார். கோபத்தால் ரகுநாதனின் உடல் நடுங்கலாயிற்று. ஆனுல் ஈசுவரியின் கோயிலில் செய்த பிரதிக்ஞையை எண்ணி அவன் தயங்கி நின்றுன்.

'ரகுநாத்! இந்த உலகில் நீயும் நானும் சேர்ந்திருக்க முடியாது. யாராவது ஒருவர் நிச்சயம் மடிந்தே தீர வேண்டும்!' என்றுர் சந்திரராவ்.

ரகுநாதன் கோபத்தை அடக்கிக்கொண்டு, 'சந்திர ராவ்! கபடனும் மித்திரத் துரோகியுமான சந்திரராவ்! உன்னுடைய செய்கைகளுக்கு சிரச்சேதம்தான் சிறந்த தண்டனை. ஆனுல் ரகுநாதன் உன்னை மன்னிக்கிறுன்! நீ கடவுளிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்!' என்றுன்.

'சிறுவன் கொடுத்த மன்னிப்பை நாம் ஏற்க முடியாது. நீ இன்னும் அதிக நேரம் ஜீவித்திருக்கவும் முடியாது. ஆகையால் மனத்திலுள்ளதைச் சொல்லி விடு! பிறந்ததிலிருந்தே நீ என் சத்துரு! நானும் உனக்குப் பரம சத்துரு. நான் உன் நிலைமையைச் சிறு வயதிலிருந்தே அறிவேன்! ஆயிரம் தடவை உன் தலையை அறுத்தெறிய சங்கற்பம் செய்துகொண்டேன். ஆனால் அந்த மாதிரி செய்யாமல் உன்னைத் துரோகி என்று அவமானம் செய்து நாட்டை விட்டுத் துரத்தினேன். உன்னிடம் இன்னும் எதைச் சொல்வது? நீ என் வலையி லிருந்து எப்பொழுதுதான் தப்பமுடியும்? நான் பாக்கிய மற்றவன். நீ மீண்டும் உன்னதியடைந்து சேனையில் சேர்ந்துவிட்டாய். ஆனால் சந்திரராவும் தன் பிரதிக்ஞை யினின்றும் அசையவில்லை. உன் சிரத்தைக் கொய்து எறியாமல் சந்திரராவ் சாந்தியடைவ தென்பது முடியாத விஷயம். உன் ஹிருதயத்தின் ரத்தத்தைப் பானம் செய்யாதவரை என் வாழ்க்கை சாந்தமடையாது!'

கோபத்தால் ரகுநாதனின் கண்கள் ஜ்வலித்தன. அவன் படபடக்கும் குரலில், 'பாமரா! என் எதிரி னின்றும் விலகிச் செல். இன்றேல் நான் என் புனிதமான பிரதிக்ஞையை மறந்து, உன் பாப காரியங்களுக்கு உசித மான தண்டனையை அளிக்கும்படி நேர்ந்து விடும்!' என்றான்.

'கோழைப் பயலே! இப்பொழுதுகூட யுத்தத்தினின் றும் விலகுகிறாய்! பார்த்துக்கொள், உஜ்ஜயினியில் இந்த அஸ்திரத்தினால்தான் உன் தந்தையின் குடலைக் கிழித்தேன். அந்தச் சத்துரு வேறல்ல. சந்திரராவ்தான் உன் தந்தையைக் கொன்றவன்!' என்றார் சந்திரர்.

ரகுநாதனால் அதற்கு மேல் சகிக்க முடியவில்லை. அந்த வார்த்தைகளைக் கேட்டதும் அவன் கோபம் பன்

மடங்கு பொங்கி எழுந்தது. சட்டென்று உறையி லிருந்து வாளை உருவிச் சந்திரராவைத் தாக்கலானன். சந்திரராவும் வாளை உருவினர். வெகு நேரம் வரை இருவருக்கும் போர் நிகழ்ந்தது. வாள் வீச்சினல் இரு வருடைய கேடயங்களும் நொறுங்கின. இருவர் சரீரத்தி லிருந்தும் ரத்தம் பெருகிற்று. சந்திரராவும் சாமான்ய மான வீரரல்ல. ரகுநாதன் டில்லியில் இருந்து வாட் போரில் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தான். வெகு நேரம் சண்டைக்குப் பிறகு ரகுநாதன் சந்திரராவை ஜயித்தான். அவரைக் கீழே தள்ளி, அவர் மீது ஏறி நின்று, ' துஷ்டா! இன்று உன்னுடைய பாபத்திற்குப் பிராயச்சித்தம் கிடைக்கும். தந்தையைக் கொன்றதற்கும் பழி வாங்கு கிறேன் !' என்றான்.

சாகும் தறுவாயிலும் சந்திரராவ் சற்றும் கலங்க வில்லை. அவர் ஒரு கேலிச் சிரிப்புச் சிரித்து, ' அப்படி யானல் உன் சகோதரி விதவையாகிவிடுவாள். ஆகையால் நான் சுகமாக உயிர்விடுகிறேன் !' என்றார்.

அந்த வார்த்தைகள் மின்னல் போல் ரகுநாதன் உள்ளத்தில் பாய்ந்தன. அதற்காகத்தான் லக்ஷ்மி ஒவ் வொரு தடவையும் தன் கணவனின் பெயரை மறக்க முயன்றாள். சந்திரராவுக்கு யாதொரு தீங்கும் இழைக்க வேண்டாமென்றும் வேண்டிக்கொண்டாள். தந்தையைக் கொன்று, சகோதரியைப் பலவந்தமாக விவாகம் செய்து கொண்ட சந்திரராவின் மேல் ரகுநாதன் பொறுக்க முடியாத கோபம் கொண்டான். ஆயினும் கையில் உருவிய வாளைச் சந்திரராவின் ஹிருதயத்தில் சொருக அவனல் முடியவில்லை. மெள்ள அவரை விட்டு விட்டு ரகுநாதன் தனியாக ஒதுங்கி நின்றான்.

இரண்டு வீரரும் ஒருவரை யொருவர் கோபம் பொங் கும் பார்வையுடன் நோக்கினர். தோல்வியடைந்த

சந்திரராவ் ரத்தத்திலும் புழுதியிலும் புரண்டு ஒரு கோர ராக்ஷஸன் போல் காட்சியளித்தார். கோபத்தால் பொங்கிக் கொண்டிருந்தார். தந்தையின் கொலை, சகோதரிக்கு இழைத்த அவமானம் இவைகளை எண்ணி ரகுநாதனின் உள்ளமும் கோபத்தழலால் அழன்று கொண்டிருந்தது. இதற்குள் மரங்களுக்கிடையினின்றும் ஒரு வீரன் தோன்றினன். இருவரும் அவன் பக்கம் பார்த்தனர். அது யார்? சிவாஜி!

சிவாஜி ஒன்றும் சொல்லவில்லை. ஒளிந்திருந்த தமது சைனிகர் நால்வரையும் அழைத்தார். நால்வரும் வந்து சந்திரராவினருகில் சென்று அவர் கையிலிருந்த வாளையும் கேடயத்தையும் பிடுங்கிக்கொண்டனர். பிறகு அவர் கைது செய்யப்பட்டார். சிவாஜி மறைந்தார். ஆனல் ரகுநாதனுக்கு இவைகளெல்லாம் ஆச்சரியமாக இருந்தன.

மறுநாட் காலை சந்திரராவின் விசாரணை. அவர் ரகுநாதனின் தந்தையைக் கொலை செய்ததைப் பற்றியும் அல்ல, முதல் நாள் ரகுநாதனைத் தாக்கியதற்கும் அல்ல,-ருத்திர மண்டலக் கோட்டையைப் பிடிக்கச் சென்ற தினத்தன்று சந்திரராவ்தான் ரகசியமாக ரஹமத் கானுக்குத் தகவல் தெரிவித்தார். அதற்கு இப்பொழுது பிரமாணம் கிடைத்துவிட்டது. அதைப் பற்றித்தான் விசாரணை!

ஆப்கான் சேனபதி ரஹமத்கானை ருத்திர மண்டலத்திலிருந்து கைதுசெய்துகொண்டு வந்திருந்ததைப் பற்றி முன்பே கூறியிருக்கிறோம். ஆனல், சிவாஜி அவனைப் பெருந்தன்மையுடன் விடுதலை செய்துவிட்டார். ரஹமத்கான் சுதந்திரமடைந்து தனது எஜமானனை விஜயபுரம் சுல்தானிடம் சென்றுவிட்டான். ஜயஸிம்ஹர் விஜய்புரத்தை ஆக்கிரமித்த பொழுது ரஹமத்கான்

ரொம்ப சாமர்த்தியமாய் அவரை எதிர்த்தான். ஆயினும் தோல்வியடைந்து ஜயஸிம்ஹரிடம் கைதியானன். ஜயஸிம்ஹர் அவனைத் தமது சேனையில் வைத்துத் தகுந்த ஆதரவுடன் நடத்தினர். அவனுக்கு நோய் கண்டபோது சிறந்த வைத்தியர்களைக் கொண்டு வைத்தியம் செய்தார். ஆயினும் முடிவில் அவன் இறந்துபோனன்.

ரஹமத்கான் இறப்பதற்கு முதல் நாள் ஜயஸிம்ஹர் அவனிடம், 'கான்ஸாஹேப், இனி நீங்கள் பிழைப்பதரிது! செய்த வைத்தியமெல்லாம் வீணயின. தாங்கள் தயவு செய்து ஒரு விஷயம் கூறவேண்டும்!' என்ருர்.

'எனக்கு இனி உயிர் வாழ ஆசை இல்லை. தாங்கள் எனக்களித்த ஆதரவுக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். சொல்லுங்கள், தாங்கள் என்ன கேட்கிறீர்கள்? நான் தங்களிடம் எதையும் ஒளிக்க மாட்டேன்!' என்ருன்.

'ருத்திர மண்டலத்தை ஆக்கிரமிக்கு முன் உங்களுக்கு எங்கள் சைனியத்தினிடமிருந்து தகவல் கிடைத்ததல்லவா? அந்தத் தகவல் கொடுத்தவன் யார்? நாங்கள் அறிய முடியவில்லை. அவனுக்குப் பதிலாக ஒரு நிரபராதி தண்டிக்கப்பட்டிருக்கிருன்!' என்ருர் ஜயஸிம்ஹர்.

'உயிருள்ளவரை இதை யாருக்கும் தெரிவிப்பதில்லை என்று பிரதிக்ஞை செய்து கொடுத்திருக்கிறேன். ரஜபுத்திரரே! நான் தங்கள் பெருந்தன்மையால் பெரிதும் கௌரவிக்கப்பட்டேன். ஆயினும் பட்டாணியர்கள் தங்கள் பிரதிக்ஞையினின்றும் வழுவ முடியாது.'

'பட்டாணிய வீரரே! நான் உங்கள் பிரதிக்ஞையைப் பங்கம் செய்ய விரும்பவில்லை. ஆனல் அதற்கு ஏதாவது அடையாளம் இருந்தால் அதை என்னிடம் கொடுப்பதில் தாங்கள் தடைப்பட வேண்டாம்!'

'ஆனால் அந்த அடையாளத்தை நான் இறந்த பிறகு படிப்பதாகப் பிரதிக்ஞை செய்யுங்கள்!'

ஜயஸிம்ஹர் பிரதிக்ஞை செய்தார். அப்பொழுது ரஹமத்கான் ஒரு லிகிதச் சுருளை அவரிடம் கொடுத்தான். ரஹமத்கான் இறந்த பின் ஜயஸிம்ஹர் அதைப் படித்து, சந்திரராவ்தான் துரோகம் செய்தவரென்பதை அறிந்தார்.

சந்திரராவ் தம் கைப்பட எழுதிய கடிதம் ஒன்றை ரஹமத்கானுக்கு அனுப்பியிருந்தார். சதியாலோசனை சம்பந்தமான கடிதம்தான் அது. சந்திரராவ் பட்டாணியர்களால் சந்தோஷப்படுத்தப்பட் டிருப்பதும் அதிலிருந்து விளங்கியது. ஜயஸிம்ஹர் இறந்த பிறகு அவருடைய மந்திரி அதை சிவாஜியிடம் கொடுத்தார்.

விசாரணை சமயம் நெருங்கிவிட்டது. சிவாஜியின் மந்திரியான நியாய சாஸ்திரி ஒவ்வொன்றாக எல்லாக் கடிதங்களையும் படித்தார். கடிதங்களைப் படித்து முடித்ததும் சபையிலுள்ள சைனிகர்கள் யாவரும், 'சந்திரராவ் துரோகி' என்று கோஷமிட்டனர்.

உடனே சிவாஜி சந்திரராவை நோக்கி, 'துரோகி! உனக்கு மரணம் சமீபித்துவிட்டது. ஏதாவது சொல்ல வேண்டுமானால் சொல்!' என்றார்.

சந்திரராவ் சற்றும் கலங்கவில்லை. அவருடைய தைரியமும் கர்வமும் மிடுக்கும் முன்போலவே இருந்தன. 'நான் என்ன சொல்ல இருக்கிறது? ஒரு நாள் இதே குற்றத்திற்காக ரகுநாதனுக்குத் தண்டனை கிடைத்தது. இன்று எனக்குக் கிடைக்கிறது. நான் இறந்த பிறகு இன்னொருவருக்குத் தண்டனை விதிக்கப்படும். அப்பொழுது, இவையாவும் கபடம் என்பதை அறிவீர்கள்! இவைகளில் ஒன்றும் உண்மையல்ல' என்றார்.

இந்த வார்த்தைகளால் சிவாஜியின் கோபம் இன்னும் பெருகியது. 'காவலாளிகளே! இவன் இரு கைகளையும் வெட்டுங்கள்! இனி இந்த மாதிரி துரோகக் கடிதங்கள் எழுதாமலிருக்கட்டும். பழுக்கக் காய்ந்த இரும்புக் கம்பியால் இவன் தலையில் துரோகி என்று எழுதுங்கள்!' என்ருர்.

காவலர் உத்தரவை நிறைவேற்றச் சென்றனர் அந்தச் சமயம் ரகுநாதன் அங்கே வந்து நின்று, 'அரசே அடியேனுடைய விண்ணப்பம் ஒன்று!' என்ருன்.

'ரகுநாத்! இந்த விஷயத்தில் உன் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும். இந்தப் பாவிதானே உன் தந்தையைக் கொன்றவன்? அதற்குப் பழிவாங்க விரும்புகிருயா? சொல்!' என்ருர் சிவாஜி.

'அரசனின் ஆக்ஞை ஏற்கத் தக்கது. ஆனல் நான் பழி வாங்க விரும்பவில்லை. இந்தச் சமயம் சந்திர ராவுக்கு யாதொரு தீங்கும் சம்பவிக்கக் கூடாது. இது தான் எனது விருப்பம்' என்ருன் ரகுநாதன்.

சபையில் ஒரே நிசப்தம்.

சிவாஜியால் தம் கோபத்தை அடக்க முடியவில்லை. அவர் சீறி, 'உனக்கு இவன் தீங்கிழைத்திருக்கிருன்; இவனை நீ மன்னிக்க விரும்புகிருய்! ராஜத்துரோகத்திற்குத் தண்டனை மரணம். நான் இவனுக்கு அதே தண்டனையை அளிக்கிறேன். காவலர்களே, இவனைக் கொண்டு செல்லுங்கள்!' என்ருர்.

'அரசரின் யோசனை சிரேஷ்டமானது. ஆனல் இந்த ஊழியன் பிரபுவிடம் ஒரு பிச்சை கேட்கிருன். தாங்கள் என்னை மன்னித்துக்கொள்ளுங்கள். சிவாஜியின் கட்டளையின் முன் யாரும் எதுவும் இன்றுவரை சொன்னதில்லை. ஆனல் இவரைத் தண்டிக்காமல் விட்டுவிடும்படி

அடியேன் விண்ணப்பித்துக் கொள்கிறேன்!' என்றான் ரகுநாதன்.

'நான் இந்தப் பிச்சையை அளிக்க முடியாதவனாக இருக்கிறேன். ரகுநாத்! நான் இந்தத் தடவை உன்னை மன்னிக்கிறேன். ஆனால் என்னால் இம்மாதிரி செய்ய முடியாது!'

'தங்களுடைய இரண்டொரு காரியங்களில் நான் வெற்றியடைந்திருக்கிறேன். தாங்கள் அதற்காக எனக்கு வெகுமதியளிப்பதாகக் கூறியிருக்கிறீர்கள். இன்று அந்த வெகுமதியாக, சந்திராவைத் தண்டிக்காமல் விட்டுவிடும் படி கேட்டுக்கொள்கிறேன்!' என்றான் ரகுநாதன்.

கோபத்தினால் சிவாஜியின் கண்கள் தீப்பொறிபோல் ஜ்வலித்தன. அவர் கர்ஜனை செய்து, 'ரகுநாத்! நீ எனக்கு எவ்வளவோ தடவை உபகாரம் செய்திருக்கிறாய். இன்று அதன் மூலம் சிவாஜியின் நியாயத்தை மாற்ற விரும்பு கிறாயா? அதை மாற்ற முடியாது. நீ உன் வீரத்தை உன்னிடமே வைத்துக்கொள்' என்றார்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட ரகுநாதனின் முகம் சிவந்தது. அவன் மெதுவாக நடுங்கும் குரலில், 'அரசே! வெகுமதி பெற்றுக்கொள்ளும் வழக்கம் அடியேனுக்குக் கிடையாது. என் வாழ்நாளில் ஒரே வெகுமதியைத்தான் வேண்டுகிறேன். தங்களுக்கு அதைக் கொடுக்க முடியா விட்டால், இனி ஒருபொழுதும் கேட்கவே மாட்டேன். அடியேனுடைய பிச்சை இது ஒன்றுதான். எனக்கு விடைகொடுங்கள். ரகுநாதன் சைனிக வேஷத்தைத் தியாகம் செய்து, மீண்டும் கோஸ்வாமியாகத் தேசம் தேசமாகத் திரிவான்!' என்றான்.

சிவாஜி சிறிது நேரம் மௌனமாக இருந்தார். இதற்குள் மந்திரி ஒருவன் வந்து சிவாஜியின் காதோடு, 'சந்திர

ராவின் மைத்துனன் ரகுநாதன்; ஆகையால்தான் ரகுநாதன் அவன் உயிரைக் காக்க விரும்புகிறுன் !' என்றுன்.

சிவாஜி ஆச்சரியமடைந்து சந்திரராவை விடுதலை செய்ய உத்தரவிட்டு, தம்முடைய வஜ்ரம் போன்ற குரலில், 'போ, சந்திரராவ்! சிவாஜியின் ராஜ்யத்தில் நில்லாதே! வேறு தேசம் சென்று மித்திரர்களை நாசம் செய்; சத்துருக்களால் சந்தோஷப்படு. சூழ்ச்சியும் துரோகமும் செய்து அவர்களை நாசம் செய்து உன் பாப ஜன்மத்தைப் பாக்கியமானதென்று எண்ணிச் சந்தோஷமடை !' என்றுர்.

சந்திரராவ் கோழையல்ல. அவரும் கோபத்தால் பொங்கிக்கொண்டிருந்தார். அவர் ரகுநாதனின் அருகில் வந்து, 'சிறுவனே, நான் உன் தயவை விரும்பவில்லை. உன்னுல் கொடுக்கப்பட்ட உயிரையும் தரித்திருக்க விரும்பவில்லை' என்று சொல்லிக்கொண்டே, தம் உடைவாளை உருவி, ஹிருதயத்தில் பாய்ச்சிக்கொண்டார். உயிரற்ற அவர் உடல் கீழே சாய்ந்தது.



அத்தியாயம் 34

அண்ணனும் தங்கையும்

சந்திரராவ் தற்கொலை செய்துகொண்ட தினத்தன்று மாலை ரகுநாதன் தன் சகோதரியைக் காணச் சென்றான். லக்ஷ்மி தன் இறந்த கணவனின் அருகிலமர்ந்து தலைவிரிகோலமாய் அழுதுகொண்டிருந்தாள். ரகுநாதனின் ஹிருதயம் துடித்தது. ஆரிய குல நாரிகள் எவ்வளவு பெரிய துக்கத்தையும் துன்பத்தையும் சகிக்க வேண்டி யிருக்கிற தென்பதை யாரே சொல்லவல்லார்? இன்று லக்ஷ்மியின் முன் உலகமே சூனியமாக இருந்தது. அவள் ஹிருதயம் சூனியமாகி விட்டது.

ரகுநாதன் லக்ஷ்மியைத் தேற்றலானான். லக்ஷ்மி தன் சகோதரனை அறிந்துகொள்ளக்கூட முடியவில்லை. அழுது கொண்டே ரகுநாதன் அங்கிருந்து வெளியே வந்தான்.

மாலை மீண்டும் அங்கு சென்றான். சகோதரியின் நிலைமையில் ஏற்பட்டிருந்த மாறுதலைக் கண்டு ரகுநாதனுக்கு ஆச்சரியமாகிவிட்டது. லக்ஷ்மியின் கண்களில் ஒரு சொட்டுக் கண்ணீர்கூட இல்லை. அவள் தன் கணவனின் இறந்த சரீரத்தை வாசனைத் திரவியம் முதலியவைகளால் அலங்காரம் செய்துகொண்டிருந்தாள். அது ஒரு பாலிகை பொம்மைக்கு அலங்காரம் செய்யும் பாவனையில் இருந்தது.

ரகுநாதனைக் கண்டதும் அவள் அவனிடம் மெதுவாக, 'பாயி, ரகுநாத்! இதுதான் கடைசி முறையாக உன்னைச் சந்திப்பது. நான் பாக்கியவதி! எனக்கு இனி ஒரு கஷ்டமும் இல்லை' என்றாள்.

ரகுநாதன் அழுதுகொண்டே, 'என் உயிரினும் இனிய லக்ஷ்மி! நான் இந்தச் சமயம்கூட உன்னைப் பார்க்காவிட்டால், எப்பொழுது பார்ப்பது?' என்றான்.

லக்ஷ்மி தன் தலைப்பினால் அவன் கண்களைத் துடைத்து, 'பாயி! உண்மை, நீ எவ்வளவோ தயை செய்தாய்! அரசனிடமிருந்து கணவரைக் காப்பாற்ற எவ்வளவோ பிரயத்தனப்பட்டாய். நான் எல்லா வற்றையும் கேள்விப்பட்டேன். ஆயினும் என்ன செய்வது? நமது விதி இப்படி இருக்கிறது. நீ தீர்க் காயுசாக வாழ்வாய்!' என்றாள்.

'லக்ஷ்மி! நீ புத்திசாலி, எல்லையற்ற உன் சோகத்தை நீ எப்படியோ சகித்துக்கொண்டாய். எனக்கு இது சந்தோஷமாயிற்று. மனித வாழ்க்கையே சோகமயம்தான். எழுதியபடி நடக்கும். இனி தைரியத்தைக் கைக்கொள்! வா, என் வீட்டிற்கு வா; சகோதரனின் முயற்சியால், அவனுடைய அன்பினால், உனது சோகம் சற்றுத் தணியு மானால், அதுவே எனக்குப் பரம சந்தோஷமாகும்!' என்றான் ரகு.

இந்த வார்த்தைகளைக் கேட்டு லக்ஷ்மி சிரித்தாள். அந்தச் சிரிப்பைப் பார்த்து ரகுநாதனுக்கு உயிரே போய் விடும்போல் இருந்தது. லக்ஷ்மி மீண்டும், 'பாயி, ரகுநாத்! நீ தயையின் பொக்கிஷம். ஆனால் கடவுள் லக்ஷ்மிக்கு சாந்தி யளித்துவிட்டார். சாந்தியின் வழியைக் காட்டி விட்டார். கணவர் உயிருடன் இருக்கும்போது எனக்கு எது நன்மையாகத் தோன்றியதோ அதுவே அவர் இறந்த பிறகும் பரம சுகமாகத் தோன்றுகிறது' என்றாள்.

ரகுநாதனின் சிரத்தில் இடி விழுந்ததைப் போன்ற ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. அவன் லக்ஷ்மியை அதுவரை சரியாக அறிந்துகொள்ளவில்லை. அதுவரை லக்ஷ்மியின் பிரதிக்ஞையைப் பங்கப்படுத்தவே முயற்சித்துவந்தான். விதவிதமான உதாரணங்களையும், தேறுதல்களையும் சொல்லி ஒரு பகற்பொழுதைக் கழித்தான். ஆயினும் திடமான பிரதிக்ஞையுள்ள லக்ஷமியின் வாயினின்றும், 'என் கணவர் என் உயிருக்கினியவர்! நான் அவரை விட முடியாது!' என்ற பதில்தான் வந்தது.

ரகுநாதன் கண்ணீர் பொங்கும் கண்களுடன், 'லக்ஷிமி! ஒருநாள் எனக்கும் வாழ்க்கை நிராசை நிறைந்ததாகவே இருந்தது. நானும் வாழ்க்கையை தியாகம் செய்துவிட எண்ணினேன். ஆனால், லக்ஷ்மி! உன்னுடைய உபதேசத்தால், உன்னுடைய அன்பு வார்த்தைகளால், நான் அந்த எண்ணத்தைக் கைவிட்டுச் செயலாற்ற இறங்கினேன். இப்பொழுது நீ என் பேச்சைக் கேட்க மாட்டாயா? உனக்கு உன் அண்ணன் மேல் பிரியமில்லையா?' என்றான்.

லக்ஷ்மி முன்போலவே சாந்தமாக, 'பாயி! நான் அதை மறக்கவில்லை. உனக்கு லக்ஷ்மியிடம் அன்புதான். ஆனாலும் யோசனை செய்து பார்! என்னுடைய வாழ்க்கை லக்ஷியங்களைப் போன்றவைதானா உன்னுடைய வாழ்க்கை லக்ஷியங்கள்? நீ புருஷன், அநேக ஆசைகள் உன் மனத்தில் உண்டாகலாம். அவைகளில் சில மறையலாம்; சில பூர்த்தியாகலாம். ரகுநாத்! அன்று நீ சகோதரியின் வார்த்தைகளைக் கேட்டாய். ஆனால் அதே மாதிரி உன் பேச்சைக் கேட்டு நான் உலகில் களங்கமில்லாமல் இருக்க முடியுமா? என்னுடைய கணவர் மீண்டும் இவ்வுலகத்திற்கு வருவாரா? ரகுநாத்! நீ லக்ஷ்மியிடம் குழந்தையிலிருந்து அன்புள்ளவன். ஆகையால், என் மார்க்கத்தி

னின்றும் என்னைத் தடுக்காதே. என்னை என் கணவருடன் செல்லும்படி விட்டுவிடு!' என்றாள்.

ரகுநாதன் பதிலற்றவனானான். தன் சகோதரியின் தலைப்பினால் முகத்தை மறைத்துக்கொண்டு அழலானான். இந்தக் கபட உலகத்தில் சகோதர சகோதரிகளின் அன்புக்குச் சமானமான பவித்திரமான அன்பு வேறென்ன இருக்கிறது? சகோதரியைப் போன்ற விலையற்ற ரத்தினம் உலகில் வேறென்ன இருக்கிறது?

நடுநிசி நேரத்தில் சிதை தயாராயிற்று. தன் தோழியர்களின் கண்ணீரைத் துடைத்து விடைபெற்றுக் கொண்ட பிறகு, குருவினிடம் விடைபெற்று, அவருடைய பாத தூளியைச் சிரமேல் தரித்துப் புறப்பட்டாள் லக்ஷ்மி. எல்லோர் கண்களிலும் கண்ணீர் பெருகியது. ஆனால் லக்ஷ்மி இனிய சொல்லுடன் யாவரிடத்தும் விடை பெற்றாள்.

கடைசியில் ரகுநாதனிடம் வந்தாள். 'பாயி! இன்று லக்ஷ்மி பாக்கியவதியானாள். ஒருமுறை அன்புடன் சகோதரிக்கு விடைகொடு! லக்ஷ்மி திருப்தியுடன் செல்லட்டும்!' என்றாள்.

ரகுநாதனால் பொறுக்க முடியவில்லை. அவன் லக்ஷ்மியின் கைகளைப் பற்றி, சிறு குழந்தையைப் போல் விக்கி விக்கி அழலானான். லக்ஷ்மியும் கண்ணீர் சொரியலானாள். பிறகு தன் சகோதரனின் கண்ணீரைத் துடைத்து 'பாயி! என்ன இது? தந்தையைப் போன்ற தைரியசாலியல்லவா நீ! உன் கண்களில் கண்ணீர் வரலாமா? சுப காரியத்தில் அழலாமா? ஈசன் உன்னைச் சுகமாகவும் உலகில் கீர்த்தியுள்ளவனாகவும் செய்வார். இதுதான் லக்ஷ்மியின் விருப்பம். பாயி! நீ சுகமாக இரு. எனக்கு விடைகொடு! இந்த ஊழியக்காரிக்காக எனது ஸ்வாமி காத்துக்கொண்டிருக்க வேண்டியிருக்கும்!' என்றாள்.

'நீ இன்றி இந்த உலகம் எனக்குத் துச்சமாகத் தோன்றுகிறது. இனி ரகுநாதனுக்கு உலகில் என்ன இருக்கிறது? லக்ஷ்மி, உனக்கு எப்படி விடையளிப்பேன்? நீ இன்றி எப்படி உயிர் வாழ்வேன்?' என்று கதறிக் கொண்டு பூமியில் வீழ்ந்தான் ரகுநாதன்.

லக்ஷ்மி அவனைத் தூக்கி எடுத்து அவனுக்கு ஆறுதல் கூறி, 'ரகுநாத்! நீ வீர புருஷன். வீரர்களுக்கு எது தர்மமோ அதைப் பாலனம் செய். நான் என் ஸ்திரீ தர்மத்தைப் பாலனம் செய்கிறேன். தாமதம் செய்யாதே. பார், கிழக்கே செவ்வானம் தெரிகிறது!' என்றாள்.

ரகுநாதன் தழுதழுத்த குரலில், 'லக்ஷ்மி! உனக்கு விடை கொடுக்கிறேன்! இந்த உலகம் எனக்குச் சூனிய மாகி விட்டது!' என்றான்.

சகோதரனிடம் விடைபெற்று, லக்ஷ்மி சிதையருகில் சென்று, கணவனின் பாதங்களில் சிரம் வைத்து, 'பிராணேசுவரா! வாழ்க்கையில் நீங்கள் தான் என் கடவுள்! இப்பொழுதும் அனுக்கிரகம் செய்யுங்கள். உங்கள் பாதங்களில் வணங்கி மீண்டும் தங்களுடன் வருகிறேன். ஜன்ம ஜன்மத்திற்கும் தாங்களே எனது கணவராக வாய்க்கவும், லக்ஷ்மி தங்கள் பாத சேவைக்குத் தகுதியாக ஆகவும் அனுக்கிரகம் புரியுங்கள்!' என்று சொல்லி, மெள்ள மெள்ளச் சிதையில் ஏறிக் கணவனின் காலடிகளில் அமர்ந்தாள். அவருடைய இரு பாதங் களையும் தன் ஹிருதயத்துடன் இருத்திக்கொண்டு இரு கண்களையும் மூடினாள்.

அக்னி எரியலாயிற்று. தீ நாக்குகள் வானத்தை எட் டின. முதல் தீ லக்ஷ்மியின் சரீரத்தைக் கவ்வியது. பிறகு வேகமாய்க் கொழுந்துவிட்டு, அவள் சிரத்தின் மேல் படர்ந்து, அவளைத் தன் ஜ்வாலைக் கரங்களால் தழுவிக்கொண்டது. ஸதியாகும் போது லக்ஷ்மியின் உடல் சற்றுக்கூட நடுங்கவேயில்லை.

அத்தியாயம் 35

மகாராஷ்ர ஜீவன் உதயம்

விடிய ஒரு நாழிகை நேரம்தான் இருந்தது. ரஜ புத்திரர்களின் விடுதியிலிருந்து சிவாஜி வெளியே வந்தார். பொழுது விடியு முன்பே அவர் முக்கியமான சேனாபதி களையும் மந்திரிகளையும் ஒன்றுகூட்டினார். சிறிது நேரம் அவர்களுடன் ஆலோசனை செய்துவிட்டுக் கூடாரத்தி லிருந்து வெளியே வந்து, தம் சேனைகள் யாவற்றையும் அழைத்துப் பின்வருமாறு பேசலானார்.

'மித்திரர்களே! நாமும் ஔரங்கஸீபும் சமாதானம் செய்துகொண்டு ஒரு வருஷமாகிறது! ஆனால் அவர் தம் கபடத்தினால் சமாதானத்தைக் குலைத்துவிட்டார். இன்று நாம் அவர் போன்ற கபடர்களுக்குப் பதில் செய்ய விரும்புகிறோம். முஸல்மான்களுடன் மீண்டும் போர் மூளும்.

'ஔரங்கஸீபின் பிரதான சேனாபதியுடன் நாம் சண்டையிடுவதை ஈசுவரி நிஷித்தமாக நினைத்தாள். அப் படிப்பட்ட மகாத்மாவான ராஜா ஜயஸிம்ஹர் நேற்றிரவு ஔரங்கஸீபின் கபடத்தினால் மனம் நொந்து உயிர் நீத்தார். சைனிகர்களே! டில்லி நமக்குச் சிறைக்கூட மாயிற்று. ஹிந்து வீரரான ஜயஸிம்ஹருடைய மரணம் நமது கோப ஜ்வாலையில் நெய் விட்டது போல் ஆகி

விட்டது! இவைகளுக்குப் பதில் செய்யவேண்டியது நமது கடமையாகும்!

'மரணப் படுக்கையில் இருக்கும் போது ஜயஸிம்ஹரின் திவ்ய நேத்திரம் திறந்துவிட்டது. ஔரங்கஸீபும் அவரது பாக்கிய நக்ஷத்திரமும் நாசத்தின் ஓரத்தை நெருங்குவதை அவர் கண்டுவிட்டார். டில்லிச் சிம்மாதனம் அவரிடமிருந்து பறிக்கப்படும்! வீரர்களே, தலை நிமிருங்கள்! பிருதிவி ராஜனின் சிம்மாதனத்தை நமது அதிகாரத்திற்குக் கொண்டு வாருங்கள்!

'கிழக்கே செவ்வொளி மின்னுகின்றது. அது உதயத்தின் செவ்வொளி! ஆனால் நமக்கு சாமானியமான உதயம் அல்ல! மஹாராஷ்டிரர்களே! இன்று நமக்கு ஜீவன் உதயம்! விழித்தெழுங்கள்!'

சேனைகளும் வீரர்களும் அந்த மகா வாக்கியங்களைக் கேட்டு, 'இன்றே நமது வாழ்க்கையின் மலர்ச்சி! இன்றே மஹாராடிஷ்ர ஜீவன் உதயம்!' என்று கர்ஜித்தார்கள்.

அப்பொழுது எழுந்த சில கிளர்ச்சிகளில் மொகலாய சாம்ராஜ்யம் நிலைகுலைந்தது என்பது சரித்திரப்பிரசித்தம். ஔரங்கஸீபுக்குப் பிறகு பாரத நாடு பூராவையும் ஒரு குடையின் கீழ் ஆள, டில்லிச் சிம்மாதனத்தில் எந்த மொகலாய சக்கரவர்த்தியும் வந்து அமரவில்லை. ஆனால் சிவாஜியின் கனவு பூர்த்தியாகு முன் கடவுள் அவரை அழைத்து விட்டார். அந்நிய ஆட்சி வந்து பாரத நாட்டைப் பிணித்துக்கொண்டது. சிவாஜியின் கனவு வெறும் கனவுதானா? இல்லை; கனவு நனவாகும் காலம் வருகிறது. அவருடைய கடைசி வார்த்தையான ஜீவன் உதயம் ஏற்படப்போகிறது. அதுதான் பாரத நாட்டின் ஜீவன் உதயம், மஹாராஷ்டிரத்தின் வாழ்க்கை உதயம்.

Checked
1-11-90

Checked
6 6 86